444

யுத்தகால

இந்து சீனமும் சயாமும்

கோ. இராமனாதன்

*

VIII:19

N48

108793

[விலை ரூ. 3—0—0.

யுத்தகால

இந்து சீனமும் சயாமும்

கோ. ராமனுதன்.

பிரசுரம்:

மதராஸ் ப்ரிமியர் கம்பெனி

முழு விற்பனை உரிமை:

தமிழ் நாடு வெளியீடு

3, பெரியண்ண மேஸ்திரி தெரு,

சென்னை.

முதற் பதிப்பு 1948,

விலை ரூ. 3.

Published by
The Madras Premier Co.,
3, Perianna Maistry St.,
G. T., MADRAS.

அத்தியாயம்	பொருளடக்கம்	பக்கம்

	முன்னுரை	i
1.	எங்கள் பாங்காக்பயணம்-செய்கோன் சு. இ. சங்கம்—இந்து சீனத்தில் வாழும் இந்தியர்கள்—இமிகிரேஷன் இன்னல்கள் ...	1
2.	ஜப்பானின் சரண் — இந்தியர்பால் அன்னாமியரின் துவேஷம்—அதன் காரணங்கள். ...	8
3.	இந்து சீனத்தின் அமைப்பு-தொங்கின்—அன்னாம் — லவோஸ் — இந்து சீன ஏற்றுமதி, ஜனத்தொகை, நாணய விபரங்கள்—மோய் ஜாதியினர்—சாம்காரர்கள்—போக்குவரத்து. ...	15
4.	இந்து சீனத்தில் பிரஞ்சாட்சியின் உதயமும் வளர்ச்சியும்—1945 மார்ச்சுக்கு முன் இந்து சீன ஆட்சிமுறை—நீதி பரிபாலனம்—பிரிட்டிஷ் நீதி பரிபாலன முறைக்கும் அதற்குமுள்ள வித்தியாசங்கள்—அரசியல் துறையில் இந்து சீன மக்களுள் ஐந்துவகை பிரிவுகள்—சுதேசிக்கல்வி, சர்க்காரின் வரவு செலவு. ...	24
5.	அன்னாமியர்களின் வரலாறு - நடை உடை பாவனை. ...	38
6.	அன்னாமியரின் குணதிசயங்கள் - பெண்களின் நிலைமை - திருமணம் பாஷை - மதப்பிரிவுகள்-ஈமச் சடங்குகள் - புதுவருடக் கொண்டாட்டம் - தொழில். ...	45
7.	கொச்சின் சைனா - அங்கு ஆதியில் இந்தியர், கம்போஜியர் ஆட்சி—	

சிதோஷ்ண நிலை—ஜனப்பிரிவு — செய்கோன் நகரம்—செய்கோனிலுள்ள தமிழ் கல்வெட்டு—சோலன் நகரம்—யுத்தகாலச் சேதங்கள். ... 64

8. பிரஞ்சுக்காரரின் குடியேற்ற திசயங்கள்—பிரஞ்சு காலனி ஆட்சி முறை. ... 75

9. அன்னமியரின் சுதந்திர கிளர்ச்சி—யுத்தகால நிலைமை—பிரஞ்சு ஆட்சி ஸ்தாபிதத்தை எதிர்ப்பதென யுத்தம் முடிந்ததும் அன்னமியரின் முடிவு ... 87

10. எங்கள் பொனம்பெங் பயணம்—பொனம் பெங் நகரம்—இந்திய ஜனத்தொகை—கம்போஜியா ராஜ்யத்தின் அமைப்பும் ஆட்சி முறையும். ... 92

11. கம்போஜியரின் உடலமைப்பு, ஒழுக்கம், விவாகமுறை, இசைக்கவர்ச்சி, திருவிழாக்கள், பாஷை, ஈமச் சடங்கு, தொழில். ... 107

12. கம்போஜிய சரித்திரம்—முற்காலப் பெருமை—இந்தியத் தொடர்பு—கம்போஜிய ராஜ்யத்தைப் பற்றிசீன சியு-த—குவானின் கி. பி. 1296 ம் வருடக் குறிப்பு—13-வது நூற்றுண்டுக்குப் பின் கம்போஜிய சரித்திரம்—கம்போஜிய சிற்பச் சின்னங்கள்—அங்கோர் வாட். ... 116

13. பொனம்பெங் பாங்காக் யாத்திரை—விமானப் போரால் விளையும் நாசம்—அதை தடுத்துக்கொள்ளும் முன்னேற்பாட்டின் அவசியம். ... 139

14. சயாம் ராஜ்யம்—அதன் அமைப்பு—ஜனசஞ்சிகை, ஏற்றுமதி இறக்குமதி விவரங்கள். ... 151

15. பாங்காக் நகரம்—சயாமில் வாழும் இந்தியர்கள்—தாய் பாரத கலாசாரக் கழகம். ... 163

17. சயாம் சரித்திரம்–13 வது நூற்றுண்டு வரை—சுகோதாய் பிரிவு (1238—1350)—அயுத்தியா பிரிவு (1350—1767)—பாங்காக் பிரிவு (1768—) 186

18. 1932 புரட்சி—சயாம், இந்து சினச் சண்டை—ஜப்பானின் நட்பு. ... 210

19. சயாமியரின் உடலமைப்பும் நடை உடை பாவனையும்—குணதிசயங்கள்—பெண்களின் நிலைமை — விவாகம் முதலிய சடங்குகள்—சயாம் மொழி. 222

20. புத்தமதத்தின் இரு முக்கிய பிரிவுகள் ஹீனயானு, மஹாயானு—சயாமிலும் கம்போஜியாவிலும் பௌத்த சமயம். 237

21. சரணுகதிக்குப் பின் பாங்காக்கில் குழப்பமான நிலைமை—சினப்பிரச்னை–1946 பிரிட்டிஷ் சயாம் சமாதான உடன்படிக்கை—புது அரசியலமைப்பு—மன்னர் ஆனந்த மஹிடோலின் மரணம்—இந்துசின எல்லைத் தகராறு—பொருளாதாரப் பிரச்னை. ... 243

22. ஜப்பானின் சரணுக்குப்பின் இந்து சினத்தில் குழப்பம்—வியட் நம் குடியரசு—6—3—46 உடன்படிக்கை—கொச்சின் சைனுவைப்பற்றி பிரஞ்சு வியட் நம் பிணக்கு. ... 261

நூல்களின் ஜாபிதா. ... 268

முன்னுரை

இச்சிறு நூலை தமிழன்பர்களுக்கு தயக்கத்துடன் சமர்பிக்கின்றேன்.

ஜப்பானின் சரண் உறுதியென 1945 மத்தியில் தெரியவந்ததும், நான் பத்துவருட காலமாக வாழ்ந்து வந்த இந்துசீனத்தைவிட்டு புறப்பட்டு சுதந்திர இந்திய கோஷ்டியொன்றுடன் சயாம் தேசத்தை அடைந்தேன். எங்களுடைய செய்கோன்—பாங்காக் யாத்திரையையும் அவ்வமயம் இந்துசீனத்திலும் சயாமிலுமிருந்து வந்த மிகவும் குழப்பமான நிலையையும் குறித்து சில கட்டுரைகள் வரையலாமெனத் துவக்கினேன். அவ்விரு நாடுகளைப் பற்றியும் ஆங்கு வாழும் மக்களைப் பற்றியும் ஓரளவாகிலும் சொல்ல வேண்டாமாவென பின்னர் தோன்றிற்று. அதன் பயனாக பயணக் கட்டுரை கதம்பமாகிவிட்டது; அளவுக்கு மீறி விரிந்துவிட்டது.

இந்நூல் 1946 முற்பகுதியில் எழுதி முடிக்கப்பட்டது; ஆயினும் காலத்தில் பிரசுரிக்க முடியாமல் பல இன்னல்கள் குறுக்கிட்டன. இந்நூல் எழுதியபின் அரசியலில் பெரும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நம் நாடு சுதந்திரம் பெற்று அன்னிய நாடுகளுடன் நேரடியான அரசியல் உறவை ஸ்தாபித்துள்ளது; மேலும் ஸ்தாபித்து வருகிறது. இனி நமக்கென ஒரு அன்னிய நாட்டுக்கொள்கை அவசியம் தேவை. அண்டைநாட்டு விவகாரங்களிலும் பிரச்னைகளிலும் நாம் முன்னைவிட அதிகம் சிரத்தை கொள்ள வேண்டும். இந்து சீனத்தையும் சயாமையும் பற்றி தமிழர்கள் சிறிதளவாகிலும் அறிந்துகொள்ள இந்நூல் பயன் படுமாயின் அதுவே எனக்கு போதிய வெகுமதியாகும்.

இந்து சீனத்தில் யுத்த நிலைமை இன்னும் நீடித்துக் கொண்டே போகிறது. அன்னமியரின் அபிலாஷைக்கு மன முவர்ந்து நேர்மையாக விட்டுக் கொடுக்காமல் பிரன்சுக்காரர்கள் இன்னும் இராணுவ வெற்றியிலும் பொம்மை அரசாங்கங்களை ஸ்தாபிப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். பிரான்சில் வலது சாரர்

வெற்றி யடைந்திருப்பது இந்துசீனத்தில் பரஸ்பர கௌருவ சமரசத்திற்கு மற்று மொரு இடையூருக யிருக்கிறது. பிற வல்லரசுகளின் உதவியின்றி அன்னுமியர்கள் ஏகோபித்து மிக்கத் துணிகரமாக பிரன்சு ஏகாதிபத்தியத்துடன் 29 மாதங்களாக விடாப்பிடியாய்ப் போராடி வருவது மிகவும் புகழத்தக்கதே. நம்முடைய அனுதாபமும் ஆதரவும் அவர்களுக்கு உரித்து.

சாயாம் ஐ. நா. வில் ஒரு அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட்டது. யுத்தத்தால் ஏற்பட்ட வெளிநாட்டு சிக்கல்கள் அந் நாட்டை பொறுத்த மட்டில் அத்துடன் ஒழிந்து விட்டன. இருப்பினும் அந்நாட்டில் அமைதியில்லை பொது நலனைப் பேணும் நிரந்தர சர்க்காரில்லை. மாஜி சர்வாதிகாரி பீபுல் சொங்ராம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிக்கொண்டிருக்கிறுர். விலைவாசிகளின் உயர்வை அவர் கட்டுப்படுத்துவாரா? லஞ்சப் பேயையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பாரா? பொருள் உற்பத்தியை உயர்த்துவாரா? சீன சமூகத்தின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறுவாரா? இவைகளை பொருத்திருக்கிறது அவருடைய செல்வாக்கும் பலமும் ஆட்சியின் நீடிப்பும்.

பிரன்சு, சயாம் பதங்களை அந்தந்த மொழிகளில் உச்சரிப்பது போல் இந்நூலில் எழுதியிருக்கிறேன்.

இந்நூலிலுள்ள குற்றம் குறைகள் பற்பல; சுவையற்ற நடையில் எழுதியிருக்கிறேனென்பதும் நான் அறிந்ததே. பிற நாடுகளைப்பற்றிய நூல்கள் தமிழில் மேலும் மேலும் வெளியிடப்படவேண்டுமென்ற ஆழ்ந்த அவாதான் குற்றம் குறைகளைக் கருதாமல் இந் நூலை வெளியிட என்னைத் தூண்டிற்று.

இந்நூலை யெழுதுவதற்கு எனக்கு பேருதவி புரிந்த இ. தே. ராவைச் சேர்ந்த சோழவந்தான் ஸ்ரீ. M. ராமன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ராணிபேட்டை
1-1-1948.

ஜேய்ஹிந்த்
கோ. ராமநாதன்.

யுத்த கால இந்துசீனமும் சயாமும்

அத்தியாயம் 1

நாங்கள் 1945-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி செய்கோனை விட்டு பாங்காக்குக்கு (Baugkok) பிரயாணமானோம். நாற்பத்தைந்து வயதுள்ள மௌல்வி கலிலூர் ரஹிமான் அவர்கள் முதல் இருபத்திரண்டு வயதான திரு முத்துச்சாமி வரையில் மொத்தம் இருபத்தைந்து நபர்கள் எங்கள் கோஷ்டியில் இருந்தனர்.

எல்லோரும் இந்திய சுதந்திர சங்க ஊழியர்கள்; மூவர் ஜம்பானிலிருந்து புறப்பட்டு வந்தவர்கள்; நால்வர் உள்ளூர்வாசிகள்; ஏனையோர் மலாயாவாசிகள். மாகாண வாரியாகப் பிரித்தால், இருவர் பஞ்சாபையும், ஒருவர் ஐக்ய மாகாணத்தையும், மூவர் சிந்துவையும், மூவர் வங்காளத்தையும், மற்றவர்கள் சென்னையையும் சேர்ந்தவர்கள்.

இந்து சீனத்திலிருந்து தொந்தரவு இன்றி சயாமுக்குப் போக முடியுமோவென்று நாங்கள் அவ்வமயம் அறிந்திலோம். சில வாரங்களுக்குமுன் செய்கோனுக்கு விஜயஞ்செய்து சுதந்திர இந்தியச் சங்க அலுவல்களை மேற்பார்த்துவந்த திரு. மேஜர் ஜெனரல் A. C. சாட்டர்ஜீ அவர்களின் உத்தரவுப்படி கோஷ்டியினர் பயணமானார்கள். உள்ளூர்வாசியாகிய நானும் கோஷ்டியுடன் கலந்து கொண்டேன்.

"ஜப்பான் ராசி கோரியுள்ளது; சரணுகதிப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கின்றன" என்று நாங்கள் புறப்படும் நாலைந்து தினங்களுக்கு முன்னிருந்து நகரில் ஏக அமளியாயிருந்தது. இந்த வதந்தி சுத்தக் கற்பனையென்றே நாங்கள் ஆதியில் எண்ணியிருந்தோம்.

எங்கள் பயணத்திற்கு முன் இரண்டு மூன்று மாதங்களாகத்தான் செய்கோனில் சு. இ. சங்க நிலையம் விஸ்தரிக்கப்பட்டு மும்மரமாய் வேலை செய்துவந்தது. இரண்டு மாதகாலத்தில் முன் வசூலிக்கப்பட்டிருந்த 48 லட்சம் வெள்ளிகள் (இந்து சீன நாணயத்திள் சரியான பெயர் பியாஸ்தர் (Pioseer). ஆனால் அங்குள்ள தமிழர்கள் மலேயா பழக்கத்தை யொட்டி அதை வெள்ளி யென்று அழைப்பார்கள்) நீங்கலாக 58 லட்சம் வெள்ளிகள் சுமார் 250 நபர்களிடமிருந்து நேத்தாஜீ நிதிக்கு நன்கொடையாக செய்கோனில் வசூலிக்கப்பட்டன. கம்போஜியா ராஜ்யத்தின் தலைநகரான பொனம் பெங்கில் (Pnom Penh) சு. இ. சங்கத்தின் கிளை ஆபீஸ் ஒன்று விமரிசையாய் 1945 ஜூலை மாதத்தில் திறக்கப்பட்டு அவ்வூரிலுள்ள சுமார் 400 இந்தியர்களிடமிருந்து இரண்டு லட்ச வெள்ளிகள் நன்கொடையும் வசூலிக்கப்பட்டது. மேலும் அகில இந்து சீனத்திற்கும் தலைநகராய் விளங்கும் அன்னேய் (Hanoi) பட்டணத்தில் சு. இ. சங்க இயக்கம் ஆரம்பமான தேதியிலிருந்து அலுவல்களை மேற்பார்ப்பதற்கும், துரிதப்படுத்துவதற்கும் செய்கோனிலிருந்தோ சிங்கப்பூரிலிருந்தோ மேலதிகாரிகள் வெகு காலமாக விஜயஞ் செய்யாமலிருந்தார்கள். ஆகஸ்டு மாத ஆரம்பத்தில்தான் மந்திரி திரு A. M. சஹாய் அவர்கள் இக் கடமையை மேற்கொண்டு அந் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். இவ்விதம் இந்து சீனத்

தில் சு. இ. சங்க அலுவல்கள் பலவகைகளிலும் சீராகக் கொண்டிருந்த சமயத்தில் சரணுகதிப் பேச்சு இருந்தாற் போல் திடீரென்று உலாவ ஆரம்பித்ததும் சங்க அதி காரிகள் மனமுடைந்தார்கள். சங்க அலுவல்கள் அனைத் தும் ஸ்தம்பித்துப்போயின. சரணுகதிப் பேச்சு வெறும் புரளியல்ல உண்மையே யெனத் தெரியவந்ததும் செய் கோன் சங்க ஆபீஸ் மூர்ச்சையுற்றுத் தலைசாய்ந்தது. தகாத பரபரப்புடன் ஆதரவுகளெல்லாம் (Reconds) கொளுத்தப்பட்டன. திரு. சாட்டர்ஜீ அவர்களும் சிங்கப் பூருக்கு ஆகஸ்டு 15-ம் தேதி காலையில் விமானத்தில் பயணமானுர்.

அகில இந்து சீனத்திலும் ஏறக்குறைய ஆருயிரம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர். புதுச்சேரி, காரைக்கால், மாஹி ஆகிய பகுதிகளிலிருந்து குடியேறி யுள்ளவர்கள் பிரஞ்சிந்தியர்களாவர். "சிட்டிசன்" என் றும் "சப்ஜக்ட்" என்றும் ஆக இரு பிரிவினராக அவர் கள் மொத்தம் சுமார் 3000 ஆட்களிருக்கின்றனர். ஆனுல் சரியான புள்ளி விபரங்கள் எனக்குக் கிடைக்கவில்லை. சிட்டிசன்களும் சப்ஜக்டுகளுக்கும் அதிக வித்யாசமில்லை. இரு பிரிவினரும் அரசாங்கத்தின் சலுகை பெற்றிருந் தார்கள். சிட்டிசன்களுக்கு சலுகைகள் அதிகம். கடமைகளும் அதிகம். சிட்டிசன்களில் மிக மிகச் சிலரே சு. இ. சங்கத்துடன் கலந்துழைத்து வந்தார்கள். ஏனை யோர் திட்டமாய்க் கலந்துழைக்க மறுத்துவிட்டார்கள்.

மதச் சட்டங்களைப் புறக்கணித்து பிரஞ்சுச் சட்ட திட்டங்களுக்கு, தான் கட்டுப்படுவதாக பிரமாணிக்கம் செய்யும் பிரஞ்சிந்தியரும் அவருடைய சந்ததிகளும் சிட்டிசன்களாக மாறிவிடுகின்றனர். இவ்விதம் சந்ததி யுள்பட பிரஞ்சு சிட்டிசனுக மாறும் பிரஜாவுரிமை

பிரஞ்சுக்காரர்களால் அன்னுமியர்களுக்கு வழங்கப் படவில்லை.

சிட்டிசனுக மாறிய பிரஞ்சிந்தியனும் அவனுடைய சந்ததியும் அசல் பிரஞ்சுக்காரர்களைப் போல் கட்டாய ராணுவப் பயிற்சி பெறவேண்டும். மார்ஷல் பெத்தன் ஆட்சி வரையில் அவர்களுக்கும் அசல் பிரஞ்சுக்காரர் களுக்கும் சட்டபூர்வமாய் எவ்வித வித்தியாசமு மிருக்க வில்லை. ஆனல் நடைமுறையில் பிரஞ்சிந்தியர்களில் ஒருவர் கூட இதுவரையில் இந்து சீனத்தில் கவர்னர், ரெசிடெண்ட், அப்பீல் கோர்ட்டு நீதிபதி போன்ற உயர் தரப் பதவி எதுவும் பெற்றதில்லை. மார்ஷல் பெத்தன் ஆட்சியில் இந்தியர்களுக்கும் அசல் பிரஞ்சுக்காரர்களுக் கும் சம்பள விகிதங்களில் பாகுபாடு செய்யப்பட்டது.

மதச் சட்டங்களைக் கைவிடாமல் அவைகளைக் கைப் பற்றிவரும் பிரஞ்சிந்தியர்கள் சப்ஜக்ட்களாவர். அவர் கள் கட்டாய ராணுவ சேவை செய்யவேண்டியதில்லை. ஆனல் அவர்கள் சிட்டிசன்களைப் போல் சர்க்கார் உத்தியோகங்களை வகிக்க முடியாது, பிரஞ்சிந்தியர்களில் பெரும்பாலோர் செய்கோன்-சோலனிலும், அடுத்தபடி யாக பொனம் பெங், அன்னேயிலும வசித்து வருகின்ற னர். நூற்றுக்கணக்கான ஹரிஜன்கள் சிட்டிசன்களா கவும் சப்ஜக்டுகளாகவும் இந்து சீனத்தில் நல்ல நிலைமை யில் கண்ணியமாக வசித்து வருகின்றனர்.

கல்வி வசதியும் பொருள் வசதியுமிருப்பின் அவர் கள் வெகு விரைவில் முன்னேறுவார்களென்றும், எந்தத் துறையிலும் அவர்கள் இதர வகுப்பினர்களுக்கு சளைத் தவர்களல்லவென்றும், நம் நாட்டில் ஹரிஜன பிரச்னை, பிரதானமாக ஒரு பொருளாதாரக் கல்வி பிரச்னையே என்றும் நான் இந்து சீனத்தில் கண்கூடாகக் கண்டேன்.

தனக்கென ஒரு தனிக் கட்டிடமில்லாமல் வெகு காலம் தவித்துவந்த செய்கோன் சு. இ. சங்கக் கிளை ஆபீஸ் 1945 மார்ச்சுக்குப் பின்தான், ஒரு கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடிந்தது. சில வாரங்கள் கழிந்து ஒரு ஹரிஜன தனவந்தரான திரு. புருசாந்தி அவர்கள் தம் வீட்டை வாடகையின்றி சங்க ஆபீசாகத் தந்துதவினர்.

3000 பிரஞ்சிந்தியர்கள் போக, மீதமுள்ள 2500, 3000 நபர்கள் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து குடியேறியுள்ளவர்கள். அவர்கள் ஹிந்துக்களென்றும், தென்னிந்திய, வட இந்திய முஸ்லீம்களென்றும் முப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு நாட்டாண்மைக்காரர் இரண்டு வருடங்களுக்கொருமுறை நியமிக்கப்பட்டு வந்தார். பிரிட்டிஷ் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள். தஞ்சை, இராமனாதபுரம், தென் ஆர்க்காடு, மதுரை ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். பஞ்சாபி சீக்கியர்களும் பஞ்சாபி முஸ்லிம்களும் பட்டாணிகளும் சேர்ந்து சுமார் 700 பேர்களும் சிந்து வியாபாரிகளும் சிப்பந்திகளுமாகச் சேர்ந்து நூறு ஆட்களுமிருந்தனர். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், சில்லரை வியாபாரம், வட்டித் தொழில், நில புலன்களைப் பராமரித்தல், பால் வியாபாரம், குடிக்கூலி வசூல், ஹோட்டல் தொழில், காவல் காக்கும் தொழில் ஆக இத் தொழில்களில் பிரிட்டிஷ் இந்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தத்திற்கு முன் கொச்சின் சைனாவில் பிரிட்டிஷ் இந்தியர்களின் மூலதனம் சுமார் 7 கோடி பியாஸ்தர்களிருக்கலாம். பிரிட்டிஷ் இந்தியர்கள் இந்து சீனத்தில் குடியேறும் விஷயத்தில் பிரஞ்சு ஆட்சியில் பல நிபந்

தனைகளிருந்துவந்தன, ஒவ்வொரு வரும் வருடா வருடம் செலுத்த வேண்டிய தலைவரி செலுத்துவதற்கும், (சுமார் 45 பியாஸ்தர்) நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை செலவிற்கும், இந்தியாவுக்குத் திரும்பச் செல்லும் கப்பல் செலவுக்கும், ரொக்க ஜாமீனோ, அல்லது ஆள் ஜாமீனோ கொடுத்தாலன்றி ஒரு இந்தியன் இந்து சீனத்தில் குடியேற முடியாது. அரசியல்வாதி என்று கொஞ்சம் சந்தேகம் தோன்றினாலும் அவன் உள்ளே நுழையாதபடி பிரஞ்சு சர்க்கார் தடுத்து வந்தார்கள். கப்பலிலிருந்து இறங்கியவுடன் இமிகிரேஷன் ஆபீசுக்குச் சென்று, பெயர், ஊர், தொழில், வயது விபரங்களைப் பதிவு செய்து, கைதிகளைப் போல் கைரேகைகளையும் வைக்க வேண்டும். பெரிய அறிஞர்களும், செல்வாக்கு மிகுந்த தலைவர்களும், கண்ணியமான வியாபாரிகளும் தனவந்தர்களும் உள்பட சகல இந்தியர்களும் இந்த இமிகிரேஷன் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டியிருந்தது. அதாவது சாதா வழிப்போக்கு பிரயாணிகளல்லாதார் அவர்கள் சில வாரங்கள் தங்க விரும்பினாலும் சரி, பல வருடங்கள் தங்க விரும்பினாலும் சரி, ரேகை வைக்க வேண்டியதுதான், மற்றச் சடங்குகளையும் பூர்த்திசெய்ய வேண்டியதுதான். ஐரோப்பியர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் மற்ற வெள்ளையர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் இந்த விதிகள் கிடையா. ஒருசமயம் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் செய்கோனுக்கு வந்திருந்தபோது இந்தச் சடங்குகளினின்றும் அவரை விலக்கி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதாம். இமிகிரேஷன் அதிகாரி விதிகளை பூரணமாக விலக்காமல், ரேகைத் தாள்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று வீட்டில் ரேகை வைத்தனுப்பலாமென்று உத்தரவ செய்தாராம். ஆனால் யுத்தகாலத்தில் ஜப்பானியர் அழைத்துவந்தவர்கள்

யாரையும் சீனரோ, இந்தியரோ அல்லது வேறு சாதியினரோ இந்த விதிகள் கட்டுப்படுத்தவில்லை. தலை வரி செலுத்திய பின் நம்மிடம் இரண்டு அடையாள கார்டுகள் கொடுக்கப்படும். 1945 இலிருந்து போட்டோ ஒட்டிய ஆள் அடையாள புத்தகம் அவைகளைப் போகுமிடங்களிலெல்லாம் எடுத்துச்செல்லாவிட்டால் போலீஸ் தாணுவில் சில மணிநேரங்கள் தங்கியிருக்கும் அசந்தர்ப்பம் நேரிடும். நேச நாட்டாரான சீனர்கள் கூட இவ்விதிகளுக்குக் கட்டுபட வேண்டியிருந்தது. அவர்களுக்காகத்தான் இவ்விதிகள் முக்கியமாக ஏற்பட்டன. ஆனால் விரோதியான ஜப்பானைக் கட்டுப்படுத்தவில்லை. ரேகைவாங்கும் பழக்கத்தை நம்மவர்கள் மிகவும் வெறுக்கின்றனர்.

இந்தியாவில் குடிபுகும் பிரஞ்சுக்காரர்களுக்கு இவ்விதத்தொல்லைகளிருப்பதாகவும், அவர்கள் இந்துசீன இந்தியர்களைப் போல் எதற்கெடுத்தாலும் இரட்டிப்பு வரி செலுத்துவதாகவும் தெரியவில்லை. இந்து சீனத்தில் வசிக்கும் இந்தியர்கள் அன்னியர்களென்று பலவகைகளிலும் அவர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தப்பட்டது. வியாபாரியானால் சாதாரண லைசென்ஸ் வரிக்குமேல் இன்னும் ஏறக்குறைய ஒரு பங்கு வரி அதிகம் செலுத்த வேண்டும். நிலச் சுவான்தாரானால் உள்ள வரிக்கு மேல் "கப்பித்தாசியம்" என்ற வரி செலுத்த வேண்டும். ரேஷன் சாமான்களை அவர்கள் சரிவரப் பெறவில்லை. பிரிட்டிஷ் இந்தியர்களில் சுமார் 2000 பேர் செய்கோன்-சோலன் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலவிதத் தொழில்களைச் செய்துவருகின்றனர்.

அத்தியாயம் 2

ஜப்பான் சரண் புகும் செய்தியை செய்கோன்-சோயன் வாசிகள் பல விதமாக வரவேற்றார்கள். பிரஞ்சுக்காரர்களும் பிரஞ்சு இந்தியர்களும் ஆனந்தப் பரவசமடைந்தனர். 'கபே''க்களிலும் (Cafe) ஓட்டல் களிலும் ஏகத் தாமாஷா. ஒருவரை யொருவர் கண்டதும் மகிழ்ச்சிப் பெருக்கால் கட்டி யணைத்துக் கொண்டனர். திமிர் பிடித்த' அன்னியர்களை இனி யொரு கைபார்த்து விடலாமென்று திண்ணங் கொண்டனர். இந்து சீனத் தில் வசித்துவரும் மூன்று அல்லது நான்கு லட்சம் சீனர் களும் மிக்க குதூகல மடைந்தனர், ஆனால் இந்தியர் களிடையே ஏகோபித்த மனப்பான்மை தென்படவில்லை. பிரஞ்சு இந்தியர்களைப் போல் சங்கத்தில் சிறிதளவும் சிரத்தை காட்டாமல் மற்றும் சில இந்தியர்தள் விலகி நின்று கொண்டிருந்தனர். "யுத்தம் நின்று போய்விட் டது; பணம் கொடுத்தமும் தொல்லையும் இனி நமக் கிராது'' என அவர்கள் நிம்மதி யடைந்தார்கள். இதற்கு நேர்மாறாக சங்க அபிமானிகளும், சங்க ஊழியர்களும் "அந்தோ! நம் தாயகம் மிக மிக துரதிர்ஷ்ட நாடா யிற்றே! விடுதலை பெற நாம் கையாண்டு வந்த முறை யும் வீண் போயிற்றே! தலைவர்களுக்கு என்ன கதி யாகுமோ? நம் வாழ் நாளில் விடுதலை கிட்டுமோ கிட் டாதோ'' என மன முடைந்து ஏங்கிக் கலங்கினர். "குண் டுக்குத் தப்பினோம். சுதந்திரம் தான் கிட்ட வில்லை. அடிமை நாடாயினும் தாயகமாயிற்றே; விரைவில் தாயகம் திரும்பிப் பல வருடங்களாகப் பிரிந்திருந்த உற் றார் உறவனரைப் பார்த்தாவது ஓரளவு சந்தோஷமடை

வோம்" என்றெண்ணினர் அநேகர். யுத்தமென்னும் பெரும் படுகொலை நின்று உலகில் அமைதி ஏற்படுவதை இந்தியர்கள் விரும்பாம லில்லை. ஆனால் தங்கள் தாயகம் விடுதலை யடையுமுன் அமைதி யேற்படுவதை அவர்கள் வெறுத்தார்கள்.

சரண் செய்தியைச கேட்டு சுதேசிகளாகிய அன்னுமியர்கள் (அவர்களை அன்னங்காரர் என்றும் அழைப்ப துண்டு) ஆழ்ந்த கவலையும் அளவற்ற பீதியும் பூண்டார்கள். யுத்த நெருக்கடியின் நிமித்த ஐந்து மாதங்களுக்கு முன், அதாவது 1945-ம் வருடம் மார்ச்சு மாதம் 9-ம் தேதி யன்று, இந்து சீன மெங்கும் பிரஞ்சு ஆட்சி அகற்றப்பட்டது. ஜென்ம தண்டனை பெற்றிருந்த நூற்றுக் கணக்கான ராஜீயக் கைதிகள் பூலோகெந்தோர் (Pouloocondore) தீவிலிருந்தும், மற்ற பிரஞ்சு சிறைக் கூடங்களி லிருந்தும் விடுவிக்கப்பட்டார்கள். அன்னுமிய சக்கிரவர்த்தி வசித்துவந்த ஊவே நகரில் தேச பக்தர்களடங்கிய புது மந்திரி சபை யொன்றும் தோன்றி அன்னுமியர்களுக்குப் புத்துயிரளித்து வந்தது. முக்கிய ஸ்தானங்களிலிருந்து பிரஞ்சு அதிகாரிகள் விலக்கப் பட்டனர். அவர்களை ஜப்பானியர்களை முழு விருப்பத் துடன் வேலையிலிருந்து விலக்கி விடவில்லை' இந்து சீனக் கடற்கரையில் நேச நாட்டார் இன்று அல்லது நாளை படை இறக்கக் கூடுமென்ற பேச்சு 1945 மே மாதத்தி லிருந்தே இந்து சீனத்தில் உலாவி வந்தது. இந் நெருக்கடியான தருணத்தில், முழுக் கவனத்தையும் ராணுவத் துறையிலும் தற்காப்புத் திட்டங்களிலும் செலுத்தி வந்த ஜப்பானியர்கள் சிவில் அரசாங்கம் ஸ்தம்பித்துப் போகாமல் முன் போல் நடந்து வரவேண்டுமென்று விருப்பங் கொண்டிருந்தார்கள். அது முற்றிலும் இயல்பே. அதே சமயத்தில் வெறும் பேச்சளவுடன்

நின்று விடாமல் கிரியாம்சையிலும் சுதந்திரம் பெறத் துடித்துவந்த அன்னுமியர்களின் நட்பும் அவர்களுக்கு மிகத் தேவையாயிருந்தது. அன்னுமியர்கள் தொடர்ச்சியாய்க் கிளர்ச்சி செய்த பின்பே எல்லாப் பிரஞ்சு அதிகாரிகளையும் அவரவர் வகித்து வந்த ஸ்தானங்களிலிருந்து விலக்குவதென முடிவாயிற்று. இச் சமயத்தில் அன்னுமியர்களிடையே புது மலர்ச்சி ஏற்பட்டு காட்டு வெள்ளம் போல் நாடெங்கும் பரவி வந்தது. நீதி மன்றங்களிலும், பள்ளிகளிலும் சர்க்கார் ஸ்தாபனங்களிலும் பிரஞ்சு பாஷையை யகற்றி அன்னுமியர்கள் தங்கள் தாய் பாஷையைக் கையாண்டு வந்தார்கள். அன்னுமிய சேனை யொன்றும் திரட்டப்பட்டு வந்தது. ஆனால் நல்லதும் தீயதும் கலந்து நிற்பது போல் வெறுப்புக்குரிய சில சம்பவங்களும் நிகழ்ந்தன. பல வருடங்களாய் மனத்தில் குடிகொண்டிருந்த பிரஞ்சு துவேஷம் வெளியிட சந்தர்ப்பங் கிடைத்தவுடன் தாண்டவமாடிற்று.

எவ்வித கஷ்டங்கள் ஏற்படினும் தாங்கள் ஏதாவது ஒரு வகையில் விமோசனம் பெற்று விடலாமென்றே அன்னுமியர்கள் தைரியம் கொண்டிருந்தார்கள். 1857-ல் சிப்பாய்க் கலகத்தின் போது நம் முன்னோர்களிடையே ஒரு தீர்க்க தரிசனம் தோன்றி அவர்களுக்கு ஊக்கம் அளித்து வந்ததுபோல், அன்னுமியர்கள் மத்தியிலும் ஒரு தீர்க்க தரிசனம் பரவி அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை யளித்து வந்தது. இச் சண்டையின் முடிவில் அவர்கள் சுதந்திரம் பெறுவார்கள் என்பதே தீர்க்க தரிசனத்தின் பொருளாகும்.

சுதந்திர இந்திய இயக்கத்திலும். காங்கிரஸ் நடத்தி வரும் விடுதலைப் போராட்டத்திலும் அன்னுமியர்கள் சிரத்தை காட்டி வந்தார்கள். அதாவது கற்றுணர்ந்த

அன்னுமியர்கள் "இந்தியா நலனடைந்தால் நாங்களும் நலம் பெறுவது திண்ணம்; எங்கள் விடுதலை இந்தியா வின் விடுதலையுடன் இணைக்கப்பட்டுள்ளது." என அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இருப்பினும், யுத்தத்திற்கு முன்னிருந்து பல வருடங் களாகவே, பொதுவாக இந்தியர்கள்பால் ஒரு வகை துவேஷ மனப்பான்மை அன்னுமியர்களிடையே நிலவி யிருந்தது. காரணங்கள் என்னவென்று நான் நிச்சய மாகக் குறிப்பிடுவதற்கில்லை. அடியில் கண்டவை சில காரணங்களாய் இருக்கலாமெனக் கருதி ஈண்டுக் குறிப் பிடுகிறேன், பிரஞ்சு ஆட்சி நடந்துவந்த காலத்தில் பிரஞ்சிந்தியர்கள் பலவித அரசாங்க சலுகைகள் பெற்று, அன்னுமியர்களின் நட்பையும் நன்மதிப்பையும் நாடி நின்றதில்லை. பிரஞ்சுக்காரர்களைப் பின்பற்றி அவர்களும் ஆளுவோர் போலவே நடந்து வந்தார்கள். அவர்களைக் கருப்பு பிரஞ்சுக்காரர்கள் என்று வடபகுதி யில் உள்ளவர்கள் சொல்வதுண்டு. பிரஞ்சு ஆட்சி அகற் றப்பட்ட பின்பும் அவர்கள் அன்னுமியர்களின் தேசீய அபிலாஷைகளைக் குறித்து நகைத்துப் பேசியும் பகிரங்க மாய் ஏளனம் செய்தும் வந்தார்கள். நடை உடை பாவனை, பாஷை, ஏகாதிபத்தியக் கொள்கை இவை போன்ற முக்கிய விஷயங்களில் அவர்கள் பிரஞ்சுக்காரர் களைப் பின்பற்றி பிரஞ்சு மயமாகி விட்டார்க ளென்றே சொல்ல வேண்டும். இரத்தத்தில் ஊறிக் கலந்துபோன மனோபாவத்தையும் கருத்துக்களையும் அவர்கள் எங்ங னம் திடீரென்று மாற்றி யமைத்துக் கொள்ள முடியும்? அதிலும் நேசத் துருப்புகள் இன்றோ நாளையோ இந்து சீனத்தில் இறங்கக் கூடுமென்று நம்பிவந்த காலத்திலா? அடுத்தபடியாக பிரிட்டிஷ் இந்தியர்கள் மீதும் அன்னு மியர்களுக்குச் சரியாகவோ தப்பாகவோ ஒருவகை மன

வருத்தம் இருந்து வந்தது, இந்தியர்கள் தங்கள் நாட்டில் குடியேறி ஏராளமான திரவியத்தைத் திரட்டிக்கொண்டு போகிறார்களென்று அன்னமியர்கள் ஒரு அரைகுறை அபிப்பிராயம் கொண்டிருந்தனர். அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு பத்திரிகைகளில் பிரசாரம் செய்யவோ, பிரஞ்சு அரசாங்கத்துடன் கலந்து பேசவோ இந்தியர்கள் வசம் அதிகாரமில்லை. இந்தியாவின் பெயரைக் கெடுக்கும் சில அடங்காப் பிடாரிகளைக் கண்டிக்கவும் அவர்கள் வசம் அதிகாரமில்லை. அன்னமியரிடையே இந்திய துவேஷம் மறைந்துபோகாமல் நிலைத்திருக்கும் பொருட்டு இந்து சீனத்தில் சில வட்டாரங்கள் பிரசாரம் செய்து வந்தன. "இந்திய பாங்கர்கள் கொடிய வட்டி வாங்குகின்றனர்; சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுகின்றனர். அகாரணமாக பிரஞ்சுக்காரர்கள் பிரஞ்சு இந்தியர்களுக்குச் சரி நிகரான சம்பளம் கொடுத்து அவர்களை கொழுக்க வைக்கின்றனர். இந்தியர்கள் வியாபாரத்தில் ஐரோப்பியர்களுடன் போட்டி யிடுகின்றனர்" என்றெல்லாம குறைகூறும் நூல்கள் ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த பிரசாரம் அன்னமியர் மனத்தில் கொஞ்சமாகிலும் படிந்துள்ளது.

அதுவுமன்றி, இந்தியர்கள் ஏனைய சாதியினரைப் போல் தாராளமாகச் செலவு செய்வதில்லை. பொதுவாகப் பேசுகிறேன். மிச்சம் பிடிக்கும் சுபாவம் நம்மிடம் அதிகம். இதைக் கண்டு அன்னமியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் நம்பால் வெறுப்புக் கொண்டனர். கலப்பு மணங்களில் பிறந்த குழந்தைகளை இந்தியர்கள் சரிவர ஆதரித்து வளர்ப்பதில்லை என்பது துவேஷத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

நம் நாட்டின் கலையைப்பற்றியும், வியாபாரம் கைத் தொழில்மிகுந்த நம் நாட்டுடன் நேசங் கொள்ளுதல் நல மென்பதுபற்றியும் நாம் இதுகாறும் இந்து சீனம்போன்ற நாடுகளில் விளம்பரம் செய்ததில்லை. நம் விடு தலையை விரும்புமளவு ஆசியாவிலுள்ள இதர அடிமை நாடுகளும் சீக்கிரத்தில் விடுதலையடைய வேண்டு மென்பது நம்முடைய அந்நிய நாட்டுக் கொள்கையின் மூல மந்திரம். என்பதையும் நாம் இதுவரையில பிர சாரம் செய்ததில்லை. யுத்தத்திற்குமுன் பிரஞ்சு கலோனிய லாட்சி நடைபெற்று வந்த காலத்தில் இந்து சீனத்தைப் பொறுத்த மட்டிலும் நாம் விளம்பர நோக் கத்தைக் கனவிலும் கருதமுடியாததாகவே இருந்து வந்தது. ஆனால் உலகப் போக்கின் பயனாக எதிர் காலத் தில் நிலைமை சாதமாக மாறும்பொழுது நாம் சந்தர்ப் பத்தை அவசியம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நம் கலா சின்னங்கள் நிறைந்துள்ள இந்து சீனம் போன்ற நாடுகளின் நட்பைப் பெறுவது எதிர் காலத்தில் கடுமை யான கடமையா யிருக்க மாட்டாது. விடுதலை யடைந்த பின் பக்கத்து நாடுகளில் மேற்சொன்ன வகையில் பிர சாரம் செய்தா லன்றி, ஆங்காங்கு காணப்படும் இந்திய துவேஷம் அறவே யொழிய மார்க்கமில்லை.

சுதந்திர இந்திய இயக்கத்தின் பயனாக இந்திய துவேஷம் இந்து சீனத்தில் சற்று மறைந்துவந்த தென் பதை யாவருமறிவர். மார்ச்சு 9-ம் தேதி மாறுதலுக்குப் பின் அன்னமியர்களுக்கும் இந்தியர்களுக்கு மிடையே ஏற்பட்ட சில சிக்கல்களை சுதந்திர இந்திய சங்கம் தலை யிட்டுத் தீர்த்து வைத்தது. பிரஞ்சு இந்தியர், பிரிட்டிஷ இந்தியர் என்ற வித்தியாசம் பாராமல் சங்கம் தன்னா லியன்ற உதவியைச் செய்துவந்தது. நாளடைவில் நிலைமை தெளிந்ததும் தொல்லை ஒழிந்தது. தொன்கின்

மாகாணத்தில் பஞ்சத்தில் கஷ்டப்பட்ட ஏழைகளுக்கு செய்கோன் சு. இ. சங்கம் நேத்தாஜீ சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பெயரால் 1945-ம் வருடம் ஜூலை மாதம் 4-ம் தேதி ஒரு லட்சம் வெள்ளிகள், தற்காலிக ஆஸாத் ஹிந்த் சர்க்காரின் பூரண அனுதாபத்துடன், நன்கொடையாக அளித்த காருண்ய மிக்க செயலைப் பாராட்டிப் புகழாத அன்னுமியர்கள் இல்லை யென்றே சொல்லலாம். நிற்க, அவர்களுடைய சுதந்திர அபிலாஷைக்கு ஆஸாத் ஹிந்த் சர்க்கார் அனுதாபமும் ஆதரவும் காட்டி வந்தது. இந்திய விடுதலைப் போரைப் பற்றியும், இந்தியாவின் உன்னத அரசியல் லட்சியங்களைப் பற்றியும் அன்னுமிய பத்திரிகைகளில் பல கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. நமது உன்னத லட்சியங்களை பத்திரிகை வாயிலாகப் பொது மக்கள் விளங்கிக் கொண்டதும் இந்திய துவேஷமும் சிறிது குறைந்து கொண்டே வந்தது. ஆனால் ஆகஸ்டு மத்தியில் சங்கம் மூடப்பட்டபின் மேற் சொன்ன அபிவிருத்தி நீடித்திருக்கவில்லை யென்று பின் நிகழ்ச்சிகள் தெளிவாக்கியுள்ளன. பிரஞ்சு ஆட்சியை மீட்டும் ஸ்தாபிக்க உதவியாய்வந்த பிரிட்டிஷ் இந்திய துருப்புகளைக் கண்டதும் அன்னுமியர்களிடையே இந்திய துவேஷம் பன்மடங்கு அதிகரித்ததாகக் கடிதத்தின் மூலம் அறிந்து உள்ள முருகினேன்.

அத்தியாயம் 3.

தென் கிழக்காசியாவில் ஒரு பெரிய "S" போல் வளைந்திருக்கும் தேசம் இந்து சீனம். அதைச் சுற்றி மேற்கே சயாமும் பர்மாவும், வடக்கே யுன்னான், குவாங்-சி யென்னும் இரு சீன மாகாணங்களும், கிழக்கே தொங்கின் விரிகுடாக் கடலும், தென்மேற்கே சயாம் விரிகுடாக் கடலுமிருக்கின்றன. (9-3-45 வரையில்) கொச்சின் சீனம் காலனி தொங்கின், அன்னம், கம்போஜியா, லவோஸ என்ற நான்கு சுதேசி சமஸ்தானங்கள் (Protectorates) ஆக ஐந்து பிரிவுகளைக் கொண்டது இந்து சீனம். மேலும் சீனவிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் குத்தகைக்குப் பிடித் திருந்த 300 சதுர மைல் விஸ்தீரணமுள்ள குவாங்-ச்யு-வான் (Kuang-Chow-wan) என்னும் ஒரு கடற்கரைப் பிரதேசமும் இந்து சீனத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. (1941-ல் சயாமுக்கு சில பிரதேசங்களை விட்டுக் கொடுக் கும் வரையில்) இந்து சீனத்தின் மொத்த நிலப்பரப்பு 283000 சதுர மைல்கள். சென்னை மாகாணத்தைப்போல் இரண்டு பங்கு.

இந்து சீனமெனும் பெயர் ஐரோப்பியர்களால் இடப் பட்ட புதுப் பெயராகும். இந்திய நாகரிகமும் சீன நாக ரிகமும் இத் தேசத்தில் சந்தித்துள்ளன வாதலால் இந்து சீனமென்ற காரணப் பெயரைப் பெற்றுள்ளது.

"இந்து சீனத்தில் இரண்டாயிரம் வருடங்களாகவே சீன நாகரிகமும் இந்திய நாகரிகமும் அக்கம்பக்கத்தில் பரவியுள்ளன. ஒன்று ஓங்கி பிரபலமாக வியாபித்தபோது மற்றொன்று பின்னடைந்ததே தவிர ஒன்றை யொன்று முற்றிலும் அகற்றி விடவில்லை" லெகௌர்-கம்போஜி சரித்

திரம்). வடபாகத்தில், சீன எல்லையை அடுத்துள்ளது தொங்கின் சமஸ்தானம். கடற்கரை ஓரமாக "தாய் பின்" அல்லது "செந்நதி" என்ற நதி பாயும் டெல்டாவும். உள்ளே போகப் போக பீட பூமிகளும் உயர்ந்த மலைச் சாரல்களும் கொண்டது தொங்கின் சமஸ்தானம். அதன் விஸ்தீரணம் 43,800 சதுரமைல்கள். ஜனத்தொகை 87 லட்சம். டெல்டாவில் ஜன நெருக்கமதிகம் அங்கு வெள்ள அபாயமும் அதிகம். உள்ளே மலைப் பிரதேசங்களில் தொங்கினின் பூர்வ குடிகள் வசித்து வருகின்றனர். நிலக்கரி, தத்தநாகம், ஈயம், இரும்புபோன்ற உலோகப் பொருள்கள் தொங்கின் கீழ்க் கரையோரமாக அமைந்துள்ள சுரங்கங்களில் மிகுந்துள்ளன, அவைகளில் நிலக்கரிதான் மிக முக்கியமானது. 20 லட்சம் டன்களுக்கு மேல் வருடா வருடம் வெட்டி யெடுக்கப்படுகிறது.

இந்து சீனத்தின் தலைநகர் ஹனோய் (Hanoi); தொங்கினின் தலை நகரும் அதுவே. ஹய்பாங் (Haiphong) என்னும் துறைமுகப்பட்டினமும், நம்டின் (Nam Dinh) என்ற நெசவாலை ஊரும் தொங்கினின் இதர முக்கிய நகரங்களாகும். அலோங் விரிகுடாக்கடல் என்றொரு பிரதேசம் தொங்கினின் கீழ்ப் பகுதியிலிருக்கிறது. இந்து சீனத்தின் சிறந்த இயற்கை வனக் காட்சிகளில் அலோங் கடற் கரை ஒன்றாகும். அங்குக் கடலில் வெகு தூரம் வரையில் மலைகள் விநோத ரூபங்களில் முட்டு முட்டாக நின்று கொண்டிருக்கின்றன.

இன்று இந்து சீனமெங்கும் பரவியிருக்கும் அன்னமியர்களின் ஆதி ஜென்ம பூமி (ஜென்ம பூமியாயில்லாவிடினும் சரித்திர காலம் தொட்டு தங்கியிருந்த இடம்) தொங்கின்தான்: தொங்கினியர்கள் (தொங்கினில் வசிக்கும் அன்னமியர்கள்) சிறந்த பாட்டாளிகள்

ஆனால் இயற்கை அன்னை அவர்களுக்கு அதிகம் உதவ வில்லை. ஜனத்திரளுக்குத் தகுந்த நிலவளமில்லை. வெள்ள அபாயமும் அதிகம். உணவுப் பொருள்களின் உற்பத்தி உள் நாட்டுத் தேவைக்குப் போதாது. 1944, 1945-இல் தொங்கினில் பெரும் பஞ்சமேற்பட்டது. ஆனால் தொங் கின் ஜனங்கள் கைத்திறன் படைத்துள்ளவர்களாதலால் தொங்கினெங்கும் குடிசைத் தொழில் பரவியிள்ளது அன்னமியர்களுக்குள் அவர்கள்தான் சிறந்த தேசாபி மானிகள்.

அன்னம் ஓர் மலை இராஜ்யமாகும். ஆங்கு சம வெளிப் பிரதேசம் அதிகமில்லை. காடுகள் அதிகம். வட கோடியிலிருந்து தென் கோடி வரையில் இந்துசீன மெங்கும் முதுகெலும்பு மாதிரி ஓடும் மலைத்தொட ரானது அன்னம் இராஜ்யத்தில் பரந்து கிடப்பதுடன், இடை இடையே கடற்கரை வரையில் கிளைத் தொடர் களையும் கொண்டதாகும். நத்ராங்கிலிருந்து தூரான்வரை யில் ஆங்காங்கே செங்குத்தான கற்பாறைகள் கடலோ ரம் வரையில் நிற்கின்றன. அன்னம் கடற்கரை வளைந்து வளைந்து பூமியைக் குடைந்து செல்லுகிறது. அன்னமில் நதிகள் பல. நீர்வீழ்ச்சிகள் அதிகம். கரையோரமாக கடல் ஆழமாயிருப்பதால், கப்பல்கள் கூட்டம் கூட்ட மாகத் தங்குவதற்கு அன்னமில் பல இயற்கைத் துறை முகங்களிருக்கின்றன. செய்கோனுக்கு 200 மைல்கள் வட கிழக்கேயுள்ள "கம்ரான் துறை" இவைகளில் தலை சிறந்தது. சிங்கப்பூர் அரண் மாதிரி கம்ரானிலும் ஒரு பெரிய கடற்படை அரணைக்கட்டிமுடிக்கவேண்டுமென்று பிரஞ்சுக்காரர்கள் திட்டம் வகுத்திருந்தார்கள். ஆனால் யுத்தம் குறுக்கிட்டபடியால் அவர்கள் அத் திட்டத்தைச் சரிவர ஆரம்பிக்கக்கூடவில்லை. கம்ரான் துறை யுத்த காலத்தில் ஜப்பானியர்களுக்குப் பேருதவியளித்தது.

அவர்கள் ஆங்கு அரண் ஒன்றைக் கட்டிக்கொள்ளாவிடினும் சில வசதிகளைச் செய்துகொண்டனர். எதிர்காலத்தில் கம்ரான் துறை இராணுவத் துறையில் பெரும் முக்கியத்துவம் பெறுமென்பதில் சற்றும் ஐயமில்லை. சீனாவுக்கும் ஜப்பானுக்கும் செல்லும் கப்பல்களெல்லாம் அதன் ஓரமாகத்தான் செல்லவேண்டும். அதற்கு நேர் எதிரே பிலிப்பைன் தீவுகள்; கொஞ்சம் தெற்கே தள்ளி போர்னியோ, செலுபீஸ் தீவுகள்.

அன்னாம் மலைத் தொடர்புக்கும் கடலுக்கும் இடையே, வால்போல் நீண்டும், குறுகலாயுமுள்ள சமவெளிப் பிரதேசத்தில் அன்னாமியர்கள் குழுமியுள்ளனர். அன்னாமின் நிலப்பரப்பு 55,800 சதுர மைல்கள். ஜனத்தொகை 57 லட்சம். நன்செய் சாகுபடியைவிடப் புன்செய் சாகுபடிதான் அதிகம். விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஜனங்கள் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். உப்பளங்களும், கொஞ்சம் சுரங்கக் கனிகளும் உள.

அன்னாமின் தலைநகர் ஊவே (Hue); அன்னாமிய சக்ரவர்த்திகள் தங்கியிருந்து மாடமாளிகைகளைக் கட்டிக் கொண்டிருந்த நகர். கடைசி சக்ரவர்த்தியின் பெயர் பாவ்-டாய் (Bao Dai). குடி அரசு ஸ்தாபிதமாகும் பொருட்டு அவர் சக்ரவர்த்தி பதவியிலிருந்து 30-8-45 இல் விலகிக்கொண்டார். ஊவே பட்டினத்தைச் சுற்றி மலை, காடு, நதி, தோப்பு முதலிய இயற்கை வனக் காட்சிகள் நிரம்பியுள்ளன. தூரான் (Tourane) நத்ராங் (Nhatrang) கிநோன் (Quinon), வின் (Vinh) முதலியவை அன்னாமின் இதர முக்கிய நகரங்களாகும். தூரான், நத்ராங், கிநோன் ஆக மூன்றும் பிரஞ்சுக்காரர்களுக்குக் குத்தகையாக விடப்பட்டிருந்தன. தலாத் (Dalat) என்ற சிறந்த மலைவாசஸ்தலமும் அன்னாமிலுள்ளது.

அன்னுமின் ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் அன்னுமியர்கள். மோய் (Moi) என்ற பூர்வ குடிகளும் சாம்காரர்களும் (Chams) தென் அன்னுமில் வசித்து வருகின்றனர்.

லவோஸ் சமஸ்தானம் மலையும் காடும் நிரம்பிய பிரதேசம்; கம்போஜியாவிலிருந்து யுன்னுன் எல்லைவரையில் வால்போல் நீண்டுள்ளது; அது உள்ளடங்கிய பிரதேசமாகும். கடற்கரை கிடையாது. மிக்காங் நதிதான் அதின் முக்கிய நீர்ப்பாதை. மிக்காங் நதியின்மீதுள்ள சிரத்தையால்தான் பிரஞ்சுக்காரர்கள் சயாமிடமிருந்து சில பிரதேசங்களைக் கைப்பற்றி லவோஸ் சமஸ்தானத்தை சிருஷ்டித்துள்ளனர். மிக்காங் சுமார் 800 மைல் தூரத்திற்கு சயாம்-இந்துசீன எல்லையாக இருக்கிறது.

லவோஸின் நிலப்பரப்பு 88,800 மைல்கள்: ஜனத்தொகை 10 லட்சம். அங்கு போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. சுகாதாரமும் குறைவு. நோய் நொடியும் அதிகம். லவோஸ் இன்னும் சரிவர அபிவிருத்தி அடையவில்லை; உலோகப் பொருள்கள் அதிகமிருப்பதாகச்சொல்லப்படுகிறது. தலைநகர் வியன்ஷியனும் (Veintienne) லுவங்பிரபாங்கும் (Luang Prabang) அதன் முக்கிய நகரங்களாகும். லாவ்காரர்கள் லவோசின் பிரஜைகளாவர். அவர்கள் சயாமியரைப் போல் "தாய்" இனத்தைச் சேர்ந்தவர்கள், பௌத்தர்கள்; மதம், நாகரிகம், நடை, உடை, பாவனை முதலிய பல விஷயங்களில் லாவ்காரர்கள் கம்போஜியர்களையும் சயாமியரையும் ஒத்திருப்பதால் அவர்களைப்பற்றி நான் தனித்துக் கூறவில்லை. கொச்சின்சைனுவையும் கம்போஜியாவையும் பற்றிப் பின் அத்தியாயங்களில் கூறுவேன்.

இந்து சீனத்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் அரிசி, சோளம், ரப்பர், நிலக்கரி, மரம் முதலியன

வாம். செய்கோன் முக்கிய துறைமுகம். அடுத்தபடியாக ஹய்பாங். அரிசி உற்பத்தி 63 லட்சம் மீட்ரிக் டன்; சோளம் 4½ லட்சம் டன்; நிலக்கரி 22 லட்சம் டன்; சக்கரை 41,000 டன்.

இந்து சீனத்தில் பொதுவாக மலைகள் பாதியும் சம வெளிகள் பாதியுமிருக்கின்றன. சமவெளிகளெல்லாம் ஒரு தரமன்று. மிக்காங் நதிபாயும் டெல்டாதான் மிக்க வளப்பமான பகுதி. அது வருடா வருடம் ஏராளமான வண்டலைச் சுமந்து வந்து சுற்றுப்புறத்தை வளமாக்கு கிறது. தொங்கினில் ஓடும் செந்நதி அவ்வளவு வண்டலைப் பரப்பவில்லை. காடுகள் இந்துசீனத்தில் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட அரைப்பங்கு அடர்ந்துள்ளன.

1936 ஜனசஞ்சிகைப்படி, இந்து சீனத்தின் மொத்த ஜனத்தொகை 2 கோடி 33 லட்சம். இப்போது மேலும் அதிகரித்திருக்க வேண்டும். மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய 72 சத விகிதம் அன்னுமியர்களாவர். பிரஞ்சுக்காரரின் ஜனத்தொகை 45,000 முதல் 50,000. அதாவது மொத்த ஜனத்தொகையில் 0·2 சத விகிதம் தான். இந்துசீனம் ஜனத்தொகையில் கவனிக்கத்தக்க முக்கிய அம்சமென்னவெனில் கடற்கரை ஓரமாக உள்ள சமவெளிகளில் ஜனநெருக்கம் அதிகமாகவும் உள் பிரதேசங்களில் ஜனநெருக்கம் குறைவாகவுமிருக்கிறது. நாற்பதாயிரம் சதுர மைல் பிரதேசத்தில் 1 கோடி 90 லட்சம் ஜனங்கள் குழுமியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது இந்து சீனத்தின் மொத்த நிலப்பரப்பில், 13 சத விகிதமுள்ள பிரதேசத்தில், 82 சத விகிதமுள்ள ஜனங்கள் திரண்டுள்ளனர்.

நாணயம் பியாஸ்தர்—100 சதம். பிராங் நாணயத்துடன் ஒரு பியாஸ்தர் 10 பிராங்குகளாக யுத்தம் முடி

யும் வரையில் இணைக்கப்பட்டிருந்தது. பியஸ்தரின் நாணய்மாற்று விகிதம் 100 பியாஸ்தருக்கு 180 ரூபாயி லிருந்து 48 ரூபாய் வரையில் சமீபகாலத்தில் மாறி யுள்ளது.

மோய் ஜாதியினர்:—இவர்கள் தென் அன்னுமிலும் கிழக்கு கொச்சின்சீனுவிலுமுள்ள காடுகளிலும் மலை களிலும் பரண்களைக் கட்டிக்கொண்டு வசித்து வரு கின்றனர். மோய் குப்பங்களுமிருக்கின்றன. இவர்கள் குறவர்களைப் போலிருப்பார்கள். ஈதே, ஜராய், செதாங், ஸ்டியங் எனப் பல பிரிவுகள் அவர்களிடையே உண்டு. போக்குவரத்து வசதியுள்ள பகுதிகளில் வசிக்கும் மோய் காரர்கள் பிரஞ்சாட்சிக் குட்பட்டுள்ளனர். உள்நாட்டில் அடர்ந்த காடுகளில் வாழும் மோய்காரர்கள் பிரஞ் சாட்சிக்கு இன்னும் கட்டுப்படவில்லை. மோய்காரர்கள் வேடுவர்கள்; காடுகளைக் கொளுத்தி நெற் சாகுபடியும் செய்கின்றனர். அவர்களுடைய காதிலும் கழுத்திலும் ஆபரணங்களுக்குக் குறைவில்லை, ஆனல் ஆடைகள்மட் டும் குறைவு. முற்காலத்தில் கம்போஜியர்களும் சாம் காரர்களும் அன்னுமியர்களும் லாவ்காரர்களும் இந்து சீனத்தில் திரள் திரளாகக் குடியேறி அவர்களை மலைக்கும் காடுகளுக்கும் விரட்டியடித்தனர். அங்கேயும் அவர்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. ஏனெனில் அவர்கள் வசித்துவரும் சில பிரதேசங்கள், முக்கியமாக டார்லக் பீடபூமியில் கித்தா மரங்கள் தழைத்தோங்கும் வளம் பெற்றுள்ளன. ஆகவே பிரஞ்சு தோட்ட முதலாளிகள் அவர்களை விரட்டியடித்தனர். நகர்ப் புறங்களுக்கு அருகாமையிலுள்ள மோய்க்காரர்கள் சிறுகச் சிறுக நாகரிகமடைந்து வருகின்றனர்.

சாம்காரர்கள்;-இவர்கள் தென் அன்னுமிலும் கொச்சின் சைனுவிலும் கம்போஜியாவிலும் வாழ்ந்து வருகின்றனர்.

சாம்காரர்களின் முன்னோர்கள் இந்திய நாகரிகத்தைக் கடைப்பிடித்தனர். இந்திய வியாபாரிகளுக்கும் இந்திய சமய ஆசிரியர்களுக்கும் அன்னும் புதிதல்ல. கிறிஸ்து பிறக்கும் முன்பே இந்திய வணிகர்கள் இக் கடற்கரைப் பிரதேசத்தில் குடியேறி வியாபாரம் செய்துவந்தனர். காலக்கிரமத்தில் இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டு பல நூற்றாண்டுகள் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்கள் நிகரற்ற கடலோடிகளாகவும் போர்க்களங்களில் வீரர் களாகவும் விளங்கினர். ஆனால் காலம் அவர்களுக்கு ஒத்தாசையாயில்லை. வடக்கேயிருந்து அன்னமியர்களும் மேற்கேயிருந்து கம்போஜியர்களும் அவர்களை நெருக் கினார்கள். பன்னிரண்டு நூற்றாண்டுகள் அவர்களுக் கும் அன்னமியர்களுக்கும் அடிக்கடி நடைபெற்ற பல போர்களில் அவர்கள் நசித்துப் போயினர்; அவர் களுடைய இராஜ்யமும் நாளடைவில் குன்றி இறுதியில் மறைந்தது. அவர்கள் ஒருசமயம் போர்க்களத்தில் தோல்வியுற்றபோது, பல்லாயிரக்கணக்கில் கப்பலேறி ஜாவா, சுமத்திரா தீவுகளுக்குச் சென்றுவிட்டதாக ஒரு சரித்திரக் குறிப்பு கூறுகிறது. எவ்வாறாயினும் ஆதி சாம் காரர்களுடைய சந்ததிகள் சொற்ப நபர்களே மத்தன் அன்னமிலும், கொச்சின்சைனாவிலும், கம்போஜியாவி லும் வாழ்ந்து வருகின்றனர். அன்னமில் பங்ராங் (பாண்டுரங்கம் என்ற பெயரின் திரிபு), பந்தியத் பகுதி களிலும், கொச்சின்சைனாவில் ஒரு பகுதியிலும் நாம் அவர்களைக் காணலாம். அவர்களில் பெரும்பான்மை யோர் இப்போது முஸ்லீம்கள்; வெகு சிலரே ஹிந்து ஆசாரங்களை அர்த்தமறியாது இன்னும் கடைப்பிடித்து வருகின்றனர். பங்ராங், பந்தியத், நத்ராங் முதலிய ஊர் களில் சாம்காரர்களின் முன்னோர் கட்டிய சிவாலயங்களை யும் அம்மன் கோயில்களையும்நாம் இன்றும் காணலாம்

அன்னுமின் ஆதிப் பேயர் சம்ப இராச்சியம்; பின்னர் கொஞ்சக் காலத்திற்கு கொச்சின்சைஞு. கொச்சின் சைஞுவென்று இப்போது அழைக்கப்படும் பிரதேசம் "கீழ்க் கொச்சின் சைஞுவென்றழைக்கப்பட்டு வந்தது. கொச்சின் சைஞு வென்ற பெயரைக் குறித்து கீழ்க் கண்ட விபரத்தைப் படித்தேன். தங்களுக்குத் தெரிந்திருந்த மலேயாளக் கடற்கரையைப்போல் அன்னும் கடற்கரை இருப்பதாக போர்ச்சுகேய மாலுமிகள் கண்டு கொண்டு அதற்கு சீனத்தின் கொச்சி அல்லது கொச்சின் சைஞுவென்று பெயரிட்டனராம். ஆனல் வேறு சில ஆசிரியர்கள் "கோ-செங்-சிங்" என்னும சீனப் பதத்தின் திரிபு கொச்சின்சைஞுவெனக் கருதுகின்றனர். "கோ-செங்-சிங்" யென்ருல் சீனபாஷையில் சம்ப இராஜ்யமென்ற பொருளாம்.

இந்துசீனத்தில் நதிமார்க்கம்தான் முக்கிய போக்குவரத்து சாதனமாகும். "கார்வே" என்னும் கட்டாய சேவை முறையைக் கையாண்டு பிரஞ்சுக்காரர்கள் மிகத் திறமையுடன் பல்லாயிர மைல்களுக்கு ரஸ்தாக்கள் அமைத்துள்ளனர். ஹனோய்க்கும் செய்கோனுக்கும் கடற்கரை யோரமாக ஓடும் இருப்புப்பாதை 1936—ல் பூர்த்தியாயிற்று. ஹனோயிலிருந்து யுன்னன்பூ வரையிலும் மற்ருெரு இருப்புப்பாதை ஓடுகிறது. யுத்த காலத்தில் இந்துசீன இருப்புப்பாதைகள் பெரிதும் சேதமடைந்தன.

அன்னும் பாஷையில் தொங்கினுக்கு பக்-கி யென்றும், அன்னுமுக்கு டூரூங்-கி யென்றும், கொச்சின் சைஞுவுக்கு நாம்-கி யென்றும், மூன்றும் சேர்ந்து வியட்-மின் என்றும் சொல்லப்படும்.

அத்தியாயம் 4

இந்து சீனத்தில் பிரஞ்சாட்சி தோன்றி 84 வருடங்களாகின்றன. பிரஞ்சுக்காரர்கள் கொச்சின்சைனுவை முதலில் கவ்விக்கொண்டனர்; பின்னர் கம்போஜியா, தொங்கின், அன்னும், லவோஸ் முதலிய பிரதேசங்களை ஜீரணம் செய்தனர். ராஜதந்திரமும், மிரட்டல் உருட்டலும், யுத்தமும் அவர்கள் உபயோகித்த சாதனங்களாகும்.

ஆசிய மக்களின் வீழ்ச்சியைக் குறித்து நாம் பிரஞ்சுகாரர்களையோ அல்லது மற்ற மேனுட்டார்களையோ அதிகம் குறை கூறுவதற்கில்லை. நம் சமுதாயங்கள் அக்காலத்தில் சீரழிந்திருந்தன; ஒற்றுமையில்லை; பரந்த தேசப்பற்றுதலில்லை; அறிவு வளர்ச்சியில்லை. இம் மூன்று குணங்களையும் படைத்திருந்த ஐரோப்பியர்கள் சொற்பவீரர்களுடைய உதவியால் பெரும் சாம்ராஜ்யங்களைத் தேடிக்கொண்டனர்.

அன்னுமிய அரசவமிசத்தினரிடையே அரச பதவியைப்பற்றி 18 வது நூற்றுண்டில் ஒரு தகராறு முளைத்தது. அவர்களில் ஒருவரான கியு-லோங் பிரஞ்சு பாதிரி ஒருவரின் யோசனையின்படி 1787-ல் பிரான்சுடன் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. ஆனல் பிரஞ்சுக்காரர்களின் மேலுதவி ஒன்றும் பெருமலேயே அவர் பட்டம் பெற்றுவிட்டார். அவர்காலத்திலிருந்து பிரஞ்சு பாதிரிகளும் பிரஞ்சு வியாபாரிகளும் அன்னுமில் அதிகம் குடியேறினர். பாதிரிகளும் ஐந்தாம்படை வேலையை மும்முரமாக ஆரம்பித்ததால் கியோ-லோங்குக்குப்பின் அன்

னுமில் பட்டம்பெற்ற மன்னர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர்கள் பாதிரிகளை இம்சிக்கலாயினர். இதற்கிடையில் பிரஞ்சுக்காரர்கள் நாட்டைப்பற்றிய வேண்டியஉளவுகளைச் சேகரித்துகொண்டு 1858-ல் அன்னுமை மீதுபோர்தொடுத்தனர். இப்போரில் ஸ்பெயின்.தேசமும் பிரான்சுடன் சேர்ந்துகொண்டது. முடிவில் 5-6-1862ல் அன்னுமுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. அன்னுமிய சக்ரவர்த்தி பிரஞ்சுகாரர்களுக்கு, கொச்சின்சைனுவில் செய்கோன், மித்தோ, பியன்வா ஆக மூன்று ஜில்லாக்களையும், பூலோகொந்தோர் என்னும் தீவையும் மேற்சொன்ன உடன்படிக்கை மூலம் விட்டுக் கொடுத்தார். மற்ற நாடுகளுக்கு பிரதேசமெதுவும் விட்டுக்கொடுப்பதில்லை யென்றும் வாக்களித்தார். அன்னுமளித்த நஷ்ட ஈட்டில் ஒரு பங்கைத் தவிர, ஸ்பெயினுக்கு வேறு ஒன்றும் கிடைக்க வில்லை. 1863-ல் கம்போஜியா பிரஞ்சு ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டது. 1867-ல் கொச்சின்சைனுவில் மற்றும் மூன்று ஜில்லாக்களை பிரஞ்சுக்காரர்கள் அன்னுமிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். இவ்வாறு மிங்காங் நதியின் முகத்துவாரம் பூராவும் அவர்கள் வசமாயிற்று. ஆயினும் தாங்கள் எதிர்பார்த்ததைப்போல் மிக்காங்வழியாக சீனுவுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. தொங்கினிலுள்ள செந்நதி வழியாகத்தான் போகமுடியுமென்று அறிந்துகொண்டனர். மேலும் தொங்கினில் சுரங்கக் கனிகள் பல மலிந்திருப்பதாக அவர்களுக்குத் தகவலும் கிடைத்தது. ஆகவே தொங்கினையும கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தனர். "கருப்புக் கொடி" என்னும் சீனப்படை தொங்கினில் தங்கியிருந்தது பிரஞ்சு லட்சியங்களுக்கு இடையூருக இருந்தது. பிரஞ்சு நாட்டாசையைக் கண்டு

கொண்ட அன்னமியர்கள் அப்படையை வரவேற்றனர். அப்படையைத் துரத்த வேண்டுமென்று பிரஞ்சுக்காரர்கள் 1881-ல் அன்னம் சக்கிரவர்த்தியை ஆக்ஞாபித்துத் தொங்கினில் போர்தொடுத்து 25—8—1883ல் ஓர் உடன்படிக்கையை அன்னமிடமிருந்து பெற்றனர். அதன்மூலம் அன்னம் பிரஞ்சாதிக்கத்திற்குக் கீழ்ப்படிந்தது. சீனு உள்பட சகல வல்லரசுகளுடனும் அன்னம் இனி நேர் ராஜதந்திர உறவு கொள்ளலாகாதெனக் கட்டுப்பாடாயிற்று! பிரஞ்சு ரெஸிடெண்டுகளை நியமித்து தொங்கினை பரிபாலிக்கும உரிமையையும், செந்நதி ஓரமாக நெடுந்தூரம் வரையில் கோட்டைகளைக் கட்டிக் கொள்ளும் உரிமையையும் பிரஞ்சுக்காரர்கள் பெற்றனர். சீனு இதைக் கண்டு கலக்கமுற்று அமெரிக்காவின் மத்தியஸ்தத்தை நாடிற்று. அன்னம் பல நூற்றாண்டுகளாகத் தனக்குட்பட்ட சிற்றரசென்பது சீனுவின் வாதம். ஆனால் பிரஞ்சுகாரர்கள் மத்தியஸ்தப் பேச்சை ஒப்புக்கொள்ளவில்லை. இறுதியில் இருநாடுகளும் பகிரங்கப் போர் செய்து 1885-ல் தான் சமாதானம் செய்துகொண்டன. தான் அன்னம்மீது முன் கொண்டாடிய பாத்தியதையைச் சீனு கைவிட்டதுடன், தொங்கின்– சீனு எல்லையில் சிற்சில இடங்களில் வியாபார வசதியுமளித்தது. மேலும் தொங்கின்-சீனு எல்லையை நிர்ணயிக்கும்போது போர்த்துறையில் இயற்கை வசதியுள்ள இடங்களையெல்லாம் பிரஞ்சுகாரர்கள் தொங்கின் எல்லைக்குள் சேர்த்துக்கொண்டனர். சயாமிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் சில பிரதேசங்களையும் பிடுங்கி இந்துசினத்துடன் சேர்த்துக் கொண்டனர். 1907-இல் முழு இந்துசீனமும் அவர்கள் வசமாயிற்று.

பிரஞ்சுக் காலனிகளில் மிக முக்கியமானது இந்துசீனம். பிரான்ஸ் ஒருமுக்கிய பசிபிக் வல்லரசாகக் கருதப்

படுவது இந்து சீனத்தால்தான். பசிபிக் பிராந்தியத்தில் பிரான்சுக்குச் சொந்தமான நியுஹீப்ரடீஸ், தகிடி, நியு கலிடோனியா என்னும் தீவுகளை பிரான்சிலிருந்து நேரடியாகப் பராமரிக்கமுடியாதென்று கருதி அவைகளை பிரன்சுக்காரர்கள் இந்து சீனத்தின் மேற்பார்வையில் விட்டுள்ளார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியர்களை, பிஜி தென் ஆபிரிகா முதலிய இடங்களுக்குக் கூலிகளாக அழைத்துச் சென்றதுபோல் பிரஞ்சுக்காரர்களும் ஆயிரக்கணக்கான அன்னமியர்களை மேற்சொன்ன தீவுகளுக்குக் கூலிகளாக அழைத்துச் சென்றுள்ளார்கள்

1945 மார்ச்சு மாறுதலுக்கு முன் இந்துசீனத்திலிருந்த ஆட்சி முறையை இப்போது சுருக்கமாக கவனிப்போம். அகில இந்து சீனத்துக்கும் தலைவராக பிரஞ்சு கவர்னர் ஜெனரலிருந்தார். சமீபகாலமாக அவருடைய பட்டப் பெயர் "இந்துசீனத்தின் கவர்னர்ஜெனரலும் பசிபிக் பிராந்தியத்தில் பிரஞ்சு ஹை கமிஷனரும்" என்பது. சிவில், இராணுவம், நிர்வாகம், சட்டமியற்றும் உரிமை ஆக எல்லாத் துறைகளிலும் அவருக்கு விரிவான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவருக்கு மேல் அதிகாரி பிரஞ்சு காலனி மந்திரி.

பிரஞ்சுகாரர்களும் சுதேசிகளும் அடங்கிய சபையொன்று (Grand Conseil economiques et finan cierl) கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறி வந்தது. வருடாவருடம் வரவு செலவுத் திட்டமும் மற்றும் சில விஷயங்களும் அச்சபையில் ஆஜர் செய்யப்படவேண்டும்: ஆனல் சர்க்கார் பிரேரேபிக்கும் திட்டங்களை நிராகரிக்கும் உரிமையோ, பிரியப்பட்ட சட்டங்களையும் திட்டங்களையும் இயற்றியவைக்கும் உரிமையோ அச்சபைக்குக் கிடையாது. இவ்வாறு பொது ஜனங்களின் சம்மதம் சிறிதுமின்றி பொது ஜனங்களின் அபிலாஷைகளைக் கொஞ்ச

மும் பொருட்படுத்தாமல் இந்துசீன சர்க்கார் கோடிக் கணக்கான பியாஸ்தர்களை வரிகளாக வசூலித்து செல வினங்களாகச் செலவிட்டது. மார்ஷல் பெத்தன் ஆட்சிக் காலத்தில் இந்த ஆலோசனை சபையும் ஒழிக்கப் பட்டது.

கொச்சின்சைனுவில் ஒரு கவர்னரும், அன்னும், கம்போஜியா, லவோஸ், தொங்கின் ஆக நான்கு சமஸ்தா னங்களிலும் தனித்தனி ரெஜிதான் சுபீரியர்களும் ஆட்சி புரிந்தார்கள். இந்த ஐந்து அதிகாரிகளுக்கும் விரிவான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஐந்து பிரிவுகளுக்கும் தனித்தனி வரவு செலவுத் திட்டங்கள் இருந்தன. ரெயில்வே, போஸ்டு, சுங்கவரி, இராணுவம் போன்ற முக்கிய விஷயங்கள் அகில இந்து சீன சர்க்கார் வச மிருந்தன. கொச்சின்சைனு பூரண காலனி. மற்றவை சமஸ்தானங்கள். தொங்கின் சமஸ்தானமுமல்ல; பூரண காலனியுமல்ல; பெயரளவில் அன்னம் சக்கரவர்த்திக்குக் கட்டுப்பட்ட பிரதேசம். ஆனுல் நடைமுறையில் நேரடி யான பிரஞ்சாட்சியிலேயே இருந்தது. அன்னுமில், சக்கரவர்த்தியின்கீழ், அன்னுமிய உத்தியோகஸ்தர்க ளான மாந்தரின் (Mandarin)கள் தேசபரிபாலனம் செய் தனர். ஆனுல் ஊவேயிலிருந்த ரெஜிதான் சுப்பீரியரின் வார்த்தைக்கு அன்னுமிய சக்கரவர்த்தி மறுத்துச் சொன்னதில்லை. அன்னுமில் நேர்முகமான கலோனிய ஆட்சியில்லை என்றுலும், முக்கிய விஷயங்களில், முக் கிய திட்டங்களில் அது பிரஞ்சுகாரர்களின் விருப்பத் தைப் புறக்கணிக்க முடியாது. இந்துசீனத்தின் இதர பகுதிகளுக்கும் அன்னுமுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் கவனியுங்கள்: படையொன்றுதான்; நாண யம் ஒன்றுதான்; சுங்கவரி ஒன்றுதான், ரெயில் போஸ்டு தந்தி ஒன்றுதான்; அன்னியநாட்டுக் கொள்கை ஒன்று

தான். உள்நாட்டு விவகாரங்கள் என்று கருதப்படும் விஷயங்களிலும் கூட பிரஞ்சுக்காரர்கள் தலையிடும் உரிமையைப் பெற்றிருந்தனர். அன்றும், கம்போஜியாவை விட இன்னும் அதிகமாக லவோஸ் பிரஞ்சு ஆட்சிக்குட் பட்டிருந்தது. சுதேசிகளுக்கு நீதி வழங்கும் உரிமை ஒன்றுதான் நான்கு சமஸ்தானங்களிலும், சமஸ்தானாதி பதிகளிடமிருந்ததென்று சொல்லலாம்.

பிரஞ்சு பார்லிமெண்டு சபையும், பிரஞ்சு ஜனாதிபதியும் அகில இந்துசீனத்துக்கும் சட்ட திட்டங்களை இயற்றிவந்தனர். பிரான்சில் இயற்றப்பட்ட சட்டங்களை வேண்டிய திருத்தங்களுடன் பிரஞ்சு ஜனாதிபதி இந்துசீனத்தில் அமுலுக்குக் கொண்டுவரலாம். இந்துசீனத்தில் அமுலிலிருந்த சட்ட திட்டங்களில் அரைவாசிக்கு மேல் பிரஞ்சு ஜனாதிபதி இயற்றிய டிக்ரிகளாகும். நிற்க, அகில இந்து சீனத்துக்கு கவர்னர் ஜெனரலும், அந்தந்த மாகாணங்களுக்கு மாகாணத் தலைவர்களும் சட்டங்களை இயற்றலாம்.

இந்தியாவைப்போல் இந்து சீனத்திலும் ஒரு சிவில் சர்வீஸ் நிர்வாகம் செய்து வந்தது. கவர்னர் முதற்கொண்டு உத்தியோகஸ்தர்களில் தர வித்தியாசமுண்டு. அனுபவத்தைப் பொறுத்தும் விசேஷ பரிட்சையில் தேர்ச்சி பெறுவதை பொறுத்தும் அதிகாரிகளின் பதவி உயர்த்தப்பட்டது. உயர்தர உத்தியோகஸ்தர்கள் அநேகமாக பிரான்சிலுள்ள காலனி பள்ளியில் (Ecole Coloniale) படித்துத் தேர்ந்தவர்கள். பிரான்சிலும் மற்ற பிரஞ்சு காலனியிலும் விட அவர்களுக்கு இந்துசீனத்தில் அதிகச் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே வேலை பார்க்கும் அன்னியரைவிட பிரஞ்சுக்காரன் மூன்று நான்கு பங்கு அதிகச்

சம்பளம் பெற்று வந்தான். செலவு அவர்களுக்கு அதிகமாம். அன்னமியர்களுக்கும் மற்ற சுதேசிகளுக்கும் குறைவாம். இந்தக் கொள்ளையில் பிரஞ்சிந்தியர்களும் கொஞ்சம் பங்குபெற்றுர்கள். பதவிக்கேற்ற பிரதானச்சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது பியாஸ்தராக மாற்றிச் சம்பளம் கொடுக்கும்போது ஒரு பியாஸ்தருக்கு 2½ பிராங்குகளாகக் கணக்கிடப்பட்டது. ஆனல் வெளியே வியாபார விஷயங்களுக்கும், மற்ற விஷயங்களுக்கும் சர்க்கார் மாற்று விகிதம் 1 பியாஸ்தருக்கு 10 பிராங்குகள். ஆகவே மார்க்கட்டு நாணய மாற்று விகிதத்திற்கு மேல் மூன்று பங்கு அதிகமாக உத்தியோகஸ்தர்களுக்குச் சாதகமாகச் சம்பளம் வழங்கப்பட்டது. காலனிபடி, ஸ்தலபடி, யுத்த படி, நபர்களுக்குத் தக்கவாறு குடும்பப் படி ஆகப் பல அயிட்டங்கள் கொண்டது உத்தியோகஸ்தனின் சம்பளம். சம்பளம், வரி செலுத்தல், இராணுவ சேவை, ரெயில் கட்டணம் போன்ற பல விஷயங்களில் ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களின் குடும்பப் பெருக்கமும் கவனிக்கப்பட்டது. குடும்பப் படி முறை சற்று சிக்கலாயிருப்பினும் பெருங் குடும்பமுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு நியாயமும் திருப்தியும் அளிக்கக் கூடிய முறையாயிருக்கிறது. ஜனத்தொகையை பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பிரான்சு இம் முறையைக் கையாண்டுள்ளது. சம்பளத்தைக் குறித்து இன்னுமொரு முக்கிய அமிசத்தை நாம் கவனிக்க வேண்டும். உயர்தர, கீழ்த்தர உத்தியோகஸ்தர்களிடையே நம் நாட்டில் காணும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமில்லை.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நீதி பரிபாலன முறைக்கும் இந்துசீனத்திலிருந்த பிரஞ்சு நீதிபரிபாலன முறைக்கும் பல வித்தியாசங்கள் உள. நீதி, நிர்வாகம்

இரண்டும் தனித்தனியே பிரிந்திருக்க வேண்டுமென்பது பிரஞ்சு ஆட்சி முறையாகும். அக் கொள்கை கொச்சின் சைனுவில் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டது. ஆங்கு நீதிபதிகள் வேறு; நிர்வாகிகள் வேறு; ஆனால் சமஸ்தானங்களில் ரெசிடெண்டுகள் நீதிபதிகளாவும் நிர்வாகிகளாகவுமிருந்து வந்தனர்.

நிர்வாகிகளைப்போல் நீதிபதிகளையும் பிரஞ்சுக்காரர்கள் இளமையிலிருந்து பழக்கி வந்தார்கள். காலனிப் பள்ளியில் நீதிப் பிரிவு என்ற பிரிவில் படித்துத் தேர்ந்தவர்களையே நீதிபதிகளாக நியமித்து வந்தனர்; அவர்கள் பிரபல வக்கீல்களை நீதிபதிகளாக நியமிக்கவில்லை. ஆனால் நீதிபதிகள் வக்கீல்களைப்போல் சட்டமும், காலனி சரித்திரம் முதலிய பாடங்களும் பயின்று பாரிசிலுள்ள நீதிமன்றங்களுக்குச் சென்று நீதி இலாகாவைப் பற்றிப் பல நடைமுறை விஷயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே நீதிபதிகளுக்கு பாலியத்திலிருந்தே பிரஞ்சுக்காரர்கள் விசேஷ பயிற்சி அளித்து வந்தனர்.

சட்ட திட்டங்களைச் சந்தேகமற நிர்ணயித்து அவைகளை கோடுகளாக திரட்டிவிட வேண்டுமென்பது பிரஞ்சுக்காரர்களின் அபிலாஷை. காலனிகளில் இந்து சட்டம் முகம்மதியர் சட்டம் போன்ற சுதேசி பழக்கச் சட்டங்களை காலதாமதமின்றி "கோட்"களாக இயற்றியுள்ளனர். நீதிமன்றங்களில் வீண் வழக்குகளைக் குறைப்பதற்கு இது ஒரு சிறந்த வழியாக விளங்கிற்று.

ருஜு விஷயத்தில், தஸ்தவேஜுகளுக்கு அவர்கள் நம்மைவிட அதிக மதிப்புக் கொடுக்கின்றனர். நீதிபதிகள் இரு பிரிவினர்: (1) தீர்ப்புக் கூறும் நீதிபதிகள். இவர்கள் நீதி மன்றத்தில் அமர்ந்திருப்பதால் அமர்ந்திருக்கும் நீதிபதிகள் எனப்படுவர். (2) குடி அரசின் பிரதிநிதிகளாகவும் சர்க்காரின் பிரதிநிதிகளாகவுமிருக்

கும் நீதிபதிகள். இவர்கள் நம் பப்ளிக் பிராசிகுயூட்டர், க்ரௌன் பிராசிகுயூட்டர், அட்வெகேட் ஜெனரல் முதலிய உத்தியோகஸ்தர்கள் செய்து முடிக்கும் அலுவல்களைப் கவனிப்பதுடன் வேறு சில விஷயங்களையும் கவனித்து வருகின்றனர். மைனர் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் பொது நல விஷயங்களிலும் அவர்கள் தலையிட்டு தங்கள் அபிப்பிராயங்களைக் கோர்ட்டுக்குத் தெரிவிப்பார்கள். இவர்கள் தங்கள் ஆசனத்திலிருந்து நின்று கொண்டு பேசுவதால் நிற்கும் நீதிபதிகளெனப்படுவர். ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு நீதிபதிகளை மாற்றுவார்கள். கடமையைப் பொறுத்துதான் அவர்களிடையே வித்தியாசம்.

சிவில் வழக்குகளும் வியாபார வழக்குகளும்:—வாதி வழக்குத் தொடுக்கும்போது வழக்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இறுதியில் தீர்மானத்தை ரிஜிஸ்டர் செய்யும்போது, வழக்குக் கட்டணத்திற்குப் பதிலாக ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் செலுத்தினல் போதுமானது. முன் கட்டணம் செலுத்தாததால் தீர்மானம் செய்யப்படும் வரையில் வழக்குகள் ராசியாக பெரும் தூண்டுகோலாயிருக்கிறது.

வாதி பிரதிவாதிகளும் சாட்சிகளும் ஒவ்வொரு வாய்தாவுக்கும் ஆஜராகி முழங்கால் சில்லை உடைத்துக் கொள்ள வேண்டாம். வக்கீல்கள் ஆஜரானல் போதுமானது. கட்சிக்காரர்கள் நேரில் ஆஜராகவேண்டுமாயின் கோர்ட்டார் விசேஷ வாய்தாப் போடுவார்கள்.

காலை 8 மணியிலிருந்து 10 அல்லது 10-30 வரையில் கோர்ட்டு நடைபெறும்; பிற்பகலில் கோர்ட்டில்லை. ஆலோசனையிலிருக்கும் வழக்குகளை நீதிபதிகள் பிற்பக

லில் ஆராய்வார்கள். வக்கீல்கள் கட்சிக்காரர்களுக்குப் பேட்டி அளிப்பார்கள்; அல்லது கட்சி வாதங்களைத் தயாரிப்பார்கள்.

கட்சி வாதங்களை யெல்லாம் எழுத்து மூலம் எதிரிக்குத் தெரிவித்த பின்பே வழக்குகள் ஆலோசனையில் ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே ஜூனியராயினும் சீனியராயினும் எதிரி வக்கீலின் வாதத்தை அவகாசமாகப் படித்துப் பார்த்து அதில் குறிப்பிட்டுள்ள விஷயங்களையும் சட்டங்களையும் ஆராய்ந்து தக்க பதிலளிக்க வசதியுண்டு. நம் நாட்டைப் போல் அந் நாட்டில் வாயடி அடித்து, திடீர் திடீரெனப் புதுப் புதுச் சட்ட புத்தகங்களை எடுத்துக் காட்டி எதிரி வக்கீலை மிரட்டிவிட முடியாது. வக்கீல்கள் சில முக்கிய வழக்குகளில் வாய்மொழியாக வாதித்தாலும், எழுத்து வாதமே பிரதானமானது. வாதங்களை எழுத்து மூலம் தெரிவிப்பதால் நீதிபதிகளுக்கும் தீர்ப்புக் கூற மிகவும் உதவியாயிருக்கிறது.

நிரந்தர நீதிபதி ஒருவருடன் இரண்டு வியாபாரிகளும் நீதிபதிகளாக உட்கார்ந்து கொண்டு வியாபார வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுகின்றனர். வியாபாரிகளைத் தவிர சாதா சிவில் நபர்களை இன்சால்வண்டாக ஆக்கமுடியாது.

அப்பீல் மன்றத்தில் மூன்று நீதிபதிகள் உட்கார்ந்து வழக்குகளை விசாரிக்கின்றனர். ஆனால் மெஜாரிட்டி மைனாரிட்டித் தீர்மானங்கள் கிடையா. மெஜாரிட்டி அபிப்பிராயமே பொதுத் தீர்மானமாக வழங்கப்படும். பிரஞ்சுத் தீர்மானங்கள் மிக சுருக்கமானவை. நமது நீதிபதிகளைப் போல் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு பக்கம் பக்கமாக பிரஞ்சு நீதிபதிகள் லாரிப்

போட்டுகளை நிரப்புவதில்லை. அதிலும் பிரஞ்சு கசாசியம் கோர்ட்டின் (பிரிவி கௌன்சிலுக்கு ஒப்பான உயர்ந்த மன்றம்) தீர்மானம் சரியாக ஒரு பக்கம் கூட வராது. பிரஞ்சுத் தீர்மானங்கள் சுருக்கமாயிருப்பினும் வழக்கின் முழு சரித்திரமும், வாதிக்கப்பட்ட பல விஷயங்களுக்குத் தீர்ப்பும் அடங்கினவைகளாயிருக்கும்.

அர்த்தமற்ற வித்தியாசங்களைப் புகுத்தி இந்தியாவில் "கேஸ் லா"டன் கணக்கில் வளர்ந்துள்ளது. வக்கீல்களின் ஆஸ்தியெல்லாம் கேஸ் லா புத்தகங்களில் முடக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமையை அடைந்துள்ளோம். பிரஞ்சு முறையில் கேஸ் லாவுக்கு மதிப்புண்டாயினும் வரைமுறையுடன் மதிக்கப்படுகிறது. கேஸ்லா மூலம் புதுச் சட்டங்களை இயற்றும் உரிமை பிரஞ்சு நீதிபதிகளுக்கு கிடையாது. சட்டமியற்றும் பொறுப்பும் உரிமையும் நீதிபதிகளுக்கில்லை. அக்கடமை அரசாங்கத்தின் வேறு உறுப்புக்களைச் சார்ந்ததாகும். மேலும், அநேகமாக எல்லாச் சட்ட திட்டங்களும் 'கோட்'களாக திரட்டப்பட்டுள்ளன. இஷ்டம்போல் அர்த்தம்' அனர்த்தம், குதர்த்தம் செய்யக்கூடிய "காமன் லா', இல்லை.

நிபுணர்களின் சாட்சியத்தை பிரஞ்சு முறையில் அதிகம் நாடுகின்றனர். வழக்குகளில் எதற்கெடுத்தாலும் நிபுணர்களை நியமித்துஅவர்களுடைய ரிப்போர்டுகளை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவது இந்து சீனத்தில் சர்வ சகஜம். இம்முறை சிறந்ததெனினும் பிரஞ்சு நீதிபதிகள் அதை அளவுக்கு மிஞ்சி உபயோகிக்கின்றனர்.

ஸ்தாவர சொத்துக்கள் யாருக்குச் சொந்தமென்ற விஷயத்தில் நம் நாட்டைப்போல் இந்துசீனத்திலும் முன்னர் ஏக சிக்கல்களிருந்தன. அவைகளை ஒழிக்க பிரஞ்

சுக்காரர்கள் பெரும் முயற்சி செய்து வெற்றி கண்டுள்ளனர்.

கிரிமினல் வழக்கு விசாரணை சம்பந்தபட்ட வரையில் பிரஞ்சு முறையை விட இந்திய முறை சிறந்ததென எனக்குத் தோன்றுகிறது. குற்றவாளி நியாயம் பெறுவதற்கோ, தப்பிக் கொள்ளவோ பிரஞ்சு முறையில் அதிக வசதி இல்லை.

பிரஞ்சு நீதி முறைக்கும் இந்திய நீதி முறைக்கும் இன்னும் எவ்வளவோ முக்கிய வித்தியாசங்களிருப்பினும் இடச் சுருக்கத்தின் காரணமாக ஈண்டு அவைகளைக் குறிப்பிடாமல் விடுகிறேன்.

*   *   *

அரசியல் உரிமைகளைப் பொறுத்தமட்டில் இந்து சீன வாசிகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்;—(1) பிரன்சு சிட்டிசன்கள் (2) பிரஞ்சு பிரஜைகள் (3) தொங்கின், கம்போஜியா. லவோஸ் இவைகளைச் சேர்ந்த ஆதரிக்கப்பட்ட பிரஜைகள் (Proteg.s) (4) ஆசிய அன்னியர்கள் (5) இதர அன்னியர்கள்.

இந்து சீனத்தின் சுதேசிகள் சுலபமாக சிட்டிசன்களாக மாறிவிடமுடியாது. கற்றவர்களை சிட்டிசன்களாக மாற்றி தங்கள் கட்சியில் இழுத்துக்கொள்ள வேண்டுமென்பது பிரஞ்சி சர்க்காரின் அவா. இதன் மூலம் சுதந்திரக் கிளர்ச்சி ஓரளவாகிலும் குறையுமென்பது அவர்களுடைய நம்பிக்கை ஆனால் பிரஞ்சு உத்தியோக வர்த்தகத்தின் தீவிர எதிர்ப்பால் சர்க்கார் தங்கள் மனப் போக்குப்படி நடந்துகொள்ளமுடியவில்லை. ஆகவே சுதேசிகள் சிட்டிசன்களாக மாறுவதற்குப் பல தடைகள் விதிக்கப்பட்டன. சுதேசிகள் சிட்டிசன்களானாலும் தலை முறை தலைமுறையாக சிட்டிசன் பாத்தியத்தை கொண்

டாட முடியாது. அவரவர் ஆயுள் பரியந்தம் தான் சிட்டிசன் உரிமையைப் பெறுவர்.

*　　*　　*

சுதேசிகளின் கல்வி விஷயத்தில் இந்து சீனத்தில் போதிய அபிவிருத்தியில்லை. ஆங்கு பிரஞ்சு ஆட்சியை ஸ்தாபித்து வெகு காலம் வரையில் கீழ்த்தர சிப்பந்திகளைத் தயாரிக்கும் விஷயத்தில் தான் இந்துசீன சர்க்கார் அதிக கவனம் செலுத்தி வந்தனர். பொதுஜனக் கல்வியில் சர்க்கார் அக்காலத்தில் அக்கரை கொள்ளவில்லை. இப்போது நிலைமை அவ்வளவு மோசமில்லை. ஆரம்பக் கல்வி விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தாய் மொழி பிரஞ்சு மொழி இந்து சீனத்தின் பூகோளம், பிரஞ்சு சரித்திரம், கணிதம், அறநெறி இவை ஆரம்பப் பள்ளிகளில் போதிக்கப்படுகின்றன. ஆனால், இன்றும் மத்திய கல்வியும் உயர்தரக் கல்வியும் சுதேசிகள் பயிலுவதற்குச் சரியான வசதியில்லை. மத்திய பள்ளிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும் பாடங்களெல்லாம் பிரஞ்சு மொழியில் போதிக்கப்படுகின்றன. சுதேசி பாஷைகளை மாணவர்கள் உப பாஷையாகப் பயிலலாம். சட்டம், வைத்தியம், ஆர்ட்ஸ், மருந்துகள் கூட்டும் முறை (Pharmacy) முதலியவிஷயங்களைப் போதிக்கும் சர்வ கலாசாலை யொன்று அகில இந்துசீனத்துக்கும் ஹனோய் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுங்க வரி, வருமான வரி, ஆதாய வரி, சம்பள வரி, ரெயில்வே, போஸ்டு, தந்தி, இவைகளில் வருமானம், சர்க்காரின் ஏகபோக உரிமைகளில் (Monopalies) கிடைக்கும் லாபம் இவை

மத்திய சர்க்காருக்கு வருமானமளிக்கும் காரியங்கள். பொதுவாக இந்து சீனத்தில் அன்னிய நாட்டுப் பொருட்களுக்கு சுங்க வரி விகிதம் மிகக் கடுமையானது. பிரான்சிலிருந்தும் மற்ற காலனிகளிலிருந்தும் இந்து சீனத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு சுங்க வரி மிகக் குறைவு. அபின், உப்பு, சாராயம் காய்ச்சுதல், இவை சர்க்காரின் ஏக போக உரிமைகள். கலால் வருமானம் இந்திய மாகாண சர்கார்களுக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்ததோ அதுபோல் அபின் உரிமை இந்துசீன சர்க்காருக்கு மிக முக்கியமாக இருந்தது,

நில வரி, மார்க்கெட்டுகளை ரொக்கக் குத்தகைக்கு விடுதல் முதலியவை மாகாண சர்க்கார்களின் முக்கிய வருமானங்களாகும். சுதேசிகளும், சீனர்களும், இந்தியர்களும் வருடா வருடம் செலுத்தும் தலைவரி கொச்சின் சைனு சர்க்காரின் மொத்த வருமானத்தில் ஏறக்குறைய சரிபாதித் தொகையாகும்.

அத்தியாயம் 5

இந்து சீன சுதேசிகளிக்குள் அன்னமியர்களே முற்போக்கானவர்கள்; தன் முயற்சியுடையவர்கள்; இதர சுதேசிகளை விட ஆள்பலத்திலும், மனவலிமையிலும் தலைசிறந்து விளங்குகிறார்கள்; சரித்திர காலந்தொட்டு அவர்களுடைய முன்னோர்கள் தொங்கின் மாகாணத்தில் வசித்து வந்தார்கள். சீன ஆட்சி அவர்கள்மீது சுமத்தப்படுவதும், கிளர்ச்சி செய்து அவர்கள் சிறிது காலத்திற்கு இடையிடையே சுதந்திரம் பெறுவதுமாக, பத்து நூற்றாண்டுகள், அதாவது கி. பி. 931 வரையில், காலம் கழிந்தது.

அவர்கள் பத்தாவது நூற்றாண்டின் இறுதியில் ஒன்றுபட்ட சுதந்திர மக்களாக தொங்கின் வட எல்லையிலிருந்து ஊவே வரையில் வாழ்ந்து வந்தார்கள். சீன ஆதிக்கத்தின் கீழேயே கி. பி. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து அவர்கள் தொங்கினிலிருந்து தெற்கு நோக்கிப் பரவ ஆரம்பித்தார்கள். நேர் அயற் குடிகளான சாம்காரர்களுடன் அவர்கள் பன்முறை யுத்தம் செய்து வந்ததில், மாறி மாறி ஜெயிப்பதும் தோற்பதுமாக பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழிந்தன. சம்பராஜ்யத்தில் ஏற்கனவே பிடிபட்டது போக மீதியிருந்த பிரதேசமும் கி. பி. 17-வது நூற்றாண்டில் அவர்கள் வசமாயிற்று. அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. கொச்சின்சைனவை நோக்கி முன்னேறி அங்கு வசித்து வந்த கம்போஜியர்களையும் மேற்கே விரட்டியடித்தனர்.

அவர்களுடைய இராஜ்ய பலமும் ஆதிக்கமும் இவ்வாறு விரிந்து கொண்டு வந்த சமயத்தில் பிரஞ்சுக்

காரர்களுக்கும் அவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. இதன் விபரத்தையும் முடிவையும் முன் அத்தியாய மொன்றில் கூறியுள்ளேன்.

அன்னுமியர்கள் உடல் மெலிந்தவர்கள். ஐரோப்பியர்களையும் கம்போஜியர்களையும் போல் உறுதியானதும் புஷ்டியானதுமான உறுப்புகளை உடையவர்களல்ல. சதைப் புஷ்டிக்குப் பதிலாக இஷ்டம்போல் கஷ்டமின்றி வளைந்து கொடுக்கும் சரீரத்தைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் அதிக உயரமுமில்லை; குட்டையுமில்லை. சராசரி உயரம் 5¼ அடி.

விரிவான சப்பை முகம்; சப்பை மூக்கு; வெளி நோக்கும் மூக்குத் துவாரங்கள்; பருத்த உதடுகள்; வெளியே புடைத்திருக்கும் கன்ன எலும்புகள்; சாய்ந்த சிறு விழிகள்; மயிர் அடர்த்தியில்லாத புருவங்கள்; நீளமான முன்வாய்ப் பற்கள். இந்த அங்க லட்சணங்களை நாம் அன்னுமியர்களிடையே சகஜமாய்ப் பார்க்கலாம். அவர்களுடைய கண்கள் குழிவாயில்லை. முகத்தில் ஆழமில்லாத கீறல் ஒன்றைக் கீறி அதனிடையே இரு சிறு விழிகளை மேலெழப் பதித்திருப்பது போலத் தோற்றம். முகத்தில் அடர்த்தியான மயிரில்லை. தலைமயிர் அடர்த்தியில்லையெனினும் வெகுநீளமாக இருக்கிறது. கணைக்கால் வரையில் தொங்கும் கரிய கூந்தலை சகஜமாய்ப் பார்க்கலாம். தொங்கின் அன்னும் இவ்விரு மாகாணங்களிலும் வசிக்கும் மாதர்கள் தங்கள் தலைமயிரைத் திரித்து பிரிமணைபோல் உருட்டித் தலையைச் சுற்றிக் கட்டிக்கொள்ளுகிறார்கள்; பற்களையும் அழியாக் கருப்புச் சாயமொன்றில் துவைத்துக் கொள்ளுகிறார்கள்; ஆனல் இப்பழக்கம் வரவர மறைந்துள்ளது. கொச்சின் - சீனப் பெண்கள் தங்கள் தலைமயிரைச் சேர்த்துப் பின்புறம்

கொண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் பற்களில் கருப்புச் சாயம் தோய்த்துக்கொள்ளுவ தில்லை. சடை பின்னுமல் ஊசியொன்றைப் பிடரி மயிரில் கோர்த்து மயிரைத் தொங்கவிட்டுக் கொள்ளுகிறார்கள். தலைமயிர் சுருட்டி கட்டாமல் தொங்கினல் விவாகமா காத கன்னிகையாவள். மயிரை வெட்டிச் சுருட்டிக் கொள்ளும் பழக்கம் அன்னமிய மாதர்களிடம் இன்னும் அதிகமாகப் பரவவில்லை.

சீனர்களைவிட அன்னமியர்கள் கொஞ்சம் மங்கிய மஞ்சள் நிறமுடையவர்கள். அவர்களுடைய கைவிரல்கள் மெல்லியதாயும் நீளமாயுமிருக்கின்றன. எல்லாவற்றையும் விட அவர்களுடைய விசேஷ அங்க லட்சணம் என்னவெனில் அவர்களுடைய கால் கட்டை விரல்கள் வெளிப்புறம் முற்காலத்தில் வளைந்திருந்தனவாம். அடிக்கடி மலையேறி வந்த பழக்கத்தின் அறிகுறி இந்த வளைந்த கட்டை விரல்கள் என்று அறிஞர்கள் அன்னமியர்களைக் குறித்து எழுதியுள்ளார்கள். எவ்வாருயினும் இந் நூதன அமைப்பை தொங்கினிலும் அன்னமிலும் நாம் இக்காலத்திலும் பார்க்கலாம். "கியோ-சி" (வளைந்த கால் விரல்கள்) எனும் பெயர் சீனர்களால் அன்னமியர்களுக்குத் தொன்று தொட்டுச் சூட்டப்பட்டுள்ளது. அன்னமிய சீமான் சீமாட்டிகள் கை விரல்களில் நீண்ட நகங்களை வளர்த்துக் கொள்ளுகிறார்கள்.

மேற்கூறியவை பொதுவாகக் குறிப்பிடக்கூடிய உடலமைப்பாகும். ஆயினும் மாகாணத்திற்கு மாகாணம் சில மாறுதல்கள் உள. மேலும் அவர்கள் தொங்கினிலிருந்து புறப்பட்டு பல நூற்றாண்டுகளாக மெல்ல மெல்ல தெற்குப் பிரதேசங்களை ஆக்கிரமித்து ஆங்கு குடியேறியுள்ளார்கள். ஆதலால், கலப்பு மணமும்

அவர்களிடையே சகஜமாகி, அவர்களுடைய உடலமைப்பும் ஆங்காங்கு மாறியுள்ளது.

உடையைப் பொறுத்த மட்டில் பழைய உடுபாவனையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சற்றேறக்குறைய ஒரே மாதிரி உடைதான். இடுப்புக்குக் கீழ், பிடிப்பில்லாத தாராளமானதொரு கால் சட்டையையும், இடுப்புக்கு மேல், மணிக்கட்டுகள் வரையில் மூடிக்கொண்டிருக்கும் சற்று பிடிப்பான சொக்காய் ஒன்றையும் அவர்கள் தரித்து வருகின்றனர். இரு சட்டைகளும் துணி அல்லது பட்டில் நெய்யப்பட்டு கருப்பு அல்லது சாகலெட் வர்ணமாயிருக்கும். முற்காலத்தில் வெள்ளை நிறம் அவர்களுக்கும் சீனர்களுக்கும் துக்கக் குறியாகும். கருப்பு நற்குறியாகும். ஆனால் கால மாறுதலில் ஆசாரமும் மாறிவிட்டது. அன்னமியர்கள் தற்காலத்தில் வெள்ளை ஆடைகளை சகஜமாய் தரித்துக் கொள்வதுடன், துக்கக் குறியாக கருப்புத் துண்டு ஒன்றையும் தரித்துக் கொள்ளுகின்றனர். வீட்டில் தங்கியிருக்கும் போது மேற் சொன்ன ஆடையைத் தான் அவர்கள் போட்டுக்கொண்டிருப்பார்கள். வெளியே செல்லும்போது முழங்கால் மட்டும் தொங்கும் கருப்பு அல்லது சாக்லெட் அங்கியொன்றை மேலே அணிந்துகொள்ளுகிறார்கள். ஆண்கள் மகாராஷ்டிரத் தொப்பியைப் போல் கருப்பு தலைப்பாகையொன்றையும், கொச்சின்சீனப் பெண்கள் முகத்தைச் சுற்றி ஒரு கைக்குட்டையையும் அணிந்து கொள்ளுகிறார்கள். மாதர்கள் புது உடு பாவனையில் கண்களைக் கவரும் பலவித வர்ணங்கள் கொண்ட ஆடைகளை பக்குவமாக வெட்டித் தைத்து அணிந்து கொள்ளுகிறார்கள் நகரங்களில் வசிக்கும் ஆண்கள் பெரும்பாலும் ஐரோப்பிய உடையையே தரிக்கின்றனர். உடையைப் பற்றிப் பேசும் போது அன்னமியரின் குடையை நாம் மறந்துவிடலா

காது. குடை பிடித்துச் செல்லா அன்னுமிய மாதை கொச்சின் சைனுவில் நாம் வெளியே சந்தித்தல் அரிது. தொங்கினிலும் அன்னுமிலும் குடைக்குப் பதிலாக, ஈச்ச மர ஓலையால் முடைந்த தொப்பிகளைத் தரிக்கின்றனர். அங்கியின் வர்ணத்தை யொத்திருக்கும் குடையின் வர்ண மும். மிதியடி யில்லாமல் வெறுங் காலுடன் நடக்கும் பழக்கம் நாட்டுப்புறங்களில் இன்னும் அறவே ஒழியாமல் நிலவியிருப்பினும், தேசமெங்கும் வர வரக் குறைந்துள் ளது. ஜனங்கள் செருப்பையோ அல்லது அழகிய மர மிதியடியையோ உபயோகிக்கின்றனர்.

அன்னுமியப் பெண்கள் நகைப் பைத்தியமுடைய வர்கள். வைரம் அல்லது போலி வைரக் கற்கள் பதித்த காதுப் பூக்களையும், காரையையோ சங்கிலி யையோ முத்து மாலையையோ கழுத்திலும், கைகளில் காப்புகளையும், விரல்களில் பற்பல மோதிரங்களையும் அவர்கள் அணிந்து கொள்ளுகிருர்கள். சீமாட்டிகளா யிருப்பின், அவர்கள் அணிந்திருக்கும் காப்புகளில் வைரம் பதித்திருக்கும்; விரலுக்கு ஒரு மோதிரமிருக்கும். நகம் வேறு வளர்த்துக் கொள்ளுவதால் சீமாட்டிகள் எந்த வேலையும் பார்க்க லாயக்கற்றவர்கள். நடுத்தர அந் தஸ்துள்ளவர்கள் சொக்கத் தங்க நகைகளையும் ஏழை கள் தங்க முலாம் பூசிய நகைகளையும் அணிந்துகொள் ளுகின்றனர். "ஜேட்" என்னும் ஒருவகை பச்சைக் கல் லில் காப்பு முதலிய ஆபரணங்களைத் தயாரித்து சீனர் களும் அன்னுமியர்களும் அணிந்து வருகிருர்கள்.

தனவந்தர்களைத் தவிர ஏனைய கிராமவாசிகள் கூரைக் குச்சுகளிலேயே வசித்து வருகின்றனர். காட்டு மரங்கள் அதிகம் கிடைப்பினும் மர வீடுகள் அதிக மில்லை. மண்சுவர்கள் எழுப்பி மேலே மூங்கில் அல்லது மரப் பிளாச்சிகளால் சாரங்கள் இறக்கி "அத்தாப்பு"

என்னும் ஒருவகை ஈச்சை மட்டைகளால் கூரை வேய்கின்றனர். ஏழை வீடாயிருப்பினும் சுற்றியும் ஒரு சிறு தோட்டமிருக்கும். அன்னுமியர்கள் தரையில் படுத்துறங்குவதில்லை. சக்திக்கியன்றவாறு கயற்றுக் கட்டிலிலோ, விசுப்பலகையிலோ, கட்டிலிலோ படுத்துறங்குவர்.

அரிசி, இறைச்சி வகைகளில் முக்கியமாகப் பன்றி, கோழி, வாத்து, மீன், கருவாடு, "நீக்மம்" என்ற மீன் ஊன், காய்கறி கனி வர்க்கங்கள் இவைகள் அன்னுமியர்கள் சாப்பிடும் உணவுப் பொருள்களாகும். மசாலையும், ஊறுகாயும் இந்தியர்களுக்கு எவ்வாறோ அதேபோல் அன்னுமியர்களுக்கு நீக்மம் முக்கியமானதொரு உணவுப் பொருளாகும். கறிவகைகளைத் தயாரிக்க நெய்யையும் எண்ணெயையும் நாம் உபயோகிப்பதுபோல் அவர்கள் பன்றி கொழுப்பை உபயோகிக்கிறார்கள். அவர்கள் புழுங்கல் அரிசியை உபயோகிப்பதில்லை. பச்சரிசியைப் பொங்கிச் சாப்பிடுகின்றனர். மாமிச வகையில் அவர்களுக்கு எதுவும் தள்ளுபடியில்லை. பாம்பு, ஆமை, நண்டு, நத்தை, நாய் உள்பட எல்லா ஜீவராசிகளையும் புசிக்கின்றனர். குழை தழைகளையும் சில காய் வகைகளையும் வேகவைக்காமல் பச்சையாய்ச் சாப்பிடுகின்றனர். வாழை, கொய்யா, மா, பலா, நார்த்தை, பம்பிலிஸ், மங்குஸ்தான், டொரியான், சீமை இலுப்பை, அன்னுசி, பப்பாளி முதலிய பழங்களையும் புசிக்கின்றனர்.

அவர்கள் உணவுவகைகளை கோப்பைகளில் வைத்துக்கொண்டு சீனர்களைப்போல் இரண்டு குச்சிகளால் வாய்க்குள் தள்ளிக் கொள்ளுகின்றனர். அவர்கள் நம்மைவிடக் குறைவான ஆகாரத்தையே புசிக்கின்றனர். ஆனால் இடைவேளைகளில் தெருக்களில் விற்கப்படும் பலகார வகைகளை அடிக்கடி வாங்கிப் புசிப்பார்கள். அவர்களுடைய

ஆகார வகைகளில் உப்பு அதிகம் சேருவதால் தாகம் மேலிட்டு பசி மந்தித்துப் போகிறதாம். மோர், தயிர், நெய் அவர்களுக்குப்பிடித்தமேயில்லை. பால் கறக்கும்விதங்கூட அவர்களுக்கு முற்காலத்தில் தெரியாது. நம் பால் வியாபாரிகளைப் பார்த்து சமீப காலத்தில் நகரவாசிகள் அப் பழக்கத்தைப் பயின்றுள்ளார்கள். பாலையும் ஆகாரமாக தற்காலத்தில் கொஞ்சம் உபயோகித்து வருகின்றனர். ஏழை விடாயிருப்பினும் தேத்தண்ணீர் எப்போதும் கொதித்துக் கொண்டிருக்கும். தாகசாந்திக்குத் தேத் தண்ணீரையே பருகுகின்றனர். வெற்றிலை போடும் பழக்கம் அவர்களிடையே குன்றிவருகிறது. ஆனால் வெற் றிலை உபயோகிப்பவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணா யிருந்தாலும் புகையிலையையும் உபயோகிக்கின்றனர். இரு பாலாரிடமும் அதிபாலியத்திலிருந்து சிகரட் குடிக்கும் பழக்கம் வேரூன்றியுள்ளது.

புறத் தோற்றத்தைக் கொண்டு அன்னமியர்களின் வயதை மதித்தலரிது. 30, 40 வயது வரையில் அவர்கள் வாலிபர்கள் போல் தோன்றி, திடீரென்று மூப்பெய்து கின்றனர். படிப்படியாய் முகம் சுருங்கி, விழிகள் ஒளி யிழந்து, மயிர் நரைத்து அவர்கள் கிழமாகிறதில்லை. இந்த அனுமானம் ஒருவேளை தவறுதலா யிருக்கக்கூடும்; இருப்பினும் அவர்களுடன் வெகுகாலம் நெருங்கிப் பழகி யுள்ளவர்கள் கூட புறத் தோற்றத்தைக் கொண்டு அன்னமியர்களின் வயதை மதித்தல் சுலபமல்லவென் பதை ஏற்றுக்கொள்ளுகின்றனர். மேலும் குழந்தை பிறந்த தினத்தன்றே, அதற்கு ஒரு வயதென அன்ன மியர்கள் கணக்கிடுகின்றனர். குழந்தை பிறக்கும்போது வருடத்தில் சென்றதுபோக மீதம் மூன்று மாதங்களிருக் கலாம். இருப்பினும் புது வருடம் பிறந்தவுடன் குழந் தைக்கு இரண்டு வயதென மதிக்கப்படுகிறது.

அத்தியாயம் 6

அன்னுமியர்களின் புறத் தோற்றத்தை விட்டு, இப்பொழுது அகத் தோற்றத்தை எடுத்துக் கொள்வோம். அவர்களுக்கு மிகுந்த சுயமரியாதை யுணர்ச்சியுண்டு. எவ்வளவு கஷ்டப்பட்டாலும், எவ்வளவு துன்பப்பட்டாலும், வெளியே காட்டிக் கொள்ளமாட்டார்கள். தங்கள் மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ளப் பெருமுயற்சி செய்பவர்கள்.

அவர்கள் பொறுமைசாலிகள். ஓய்வின்றி நாட்கணக்காக வேலை பார்க்கும் சக்தி வாய்ந்தவர்கள். ஆனால் தொங்கின், அன்னும் வாசிகள் தான் மேற்சொன்னவாறு சலியாமல் உழைக்கும் குணம் படைத்துள்ளவர்கள். கொச்சின் சைனு வாசிகள் கடுமையாக உழைப்பதில்லை. ஏனெனில் அந் நாடு அவ்வளவு வளப்பமாயிருக்கிறது. அன்னுமியர்களுடைய வீரத்தைப்பற்றி அபிப்பிராயபேதமிருந்துவருகிறது. அவர்களைச் சிலர் கோழைகளென்கிறார்கள். வேறு சிலர் தைரியசாலிகள் என்று வாதாடுகிறார்கள். தெருக்களில் நடைபெறும் சண்டைகளிலும், சச்சரவுகளிலும் அவர்கள் தலையிட்டு இரு கட்சியினரையும் விலக்கி விடமாட்டார்கள். ரிக்ஷாக்காரனையோ, வேறு தொழிலாளியையோ பிரஞ்சுக்காரன் உதைத்தால் உதையை வாங்கிக் கொண்டு அவன் சும்மா இருப்பான். அதாவது 1945 மார்ச் மாறுதல் வரையில் சும்மா இருந்தான். இவைகளை ஆதாரமாகக் கொண்டு அன்னுமியர்கள் கோழைகளென நாம் முடிவு செய்தல் கூடாது. உடல் மெலிந்திருப்பினும் அவர்கள் மனோதிடமுடையவர்களே. போராட்டம் நிரம்

பிய அவர்களுடைய சரித்திரமே இதற்கு போதிய சான்ருகும். நிற்க, அன்னமிய சிப்பாய்களின் வீரத்தை பிரஞ்சு தளகர்த்தர்கள் பன்முறை பாராட்டியுள்ளார்கள். அன்னமியர் வசம் போதிய போர்க் கருவிகளும் அவர்களை நடத்திச் செல்லத் தக்க தலைவரும் இருப்பின் அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து சுதந்திரப் போர் புரிவார்களென அனுபவம் பெற்ற பிரஞ்சு ராணுவ ஆபீசர் ஒருவர் முப்பது வருடங்களுக்கு முன்பேயே குறிப்பிட்டுள்ளார். மனக் கலக்கமின்றி அவர்கள் மரணத்தை ஒப்புக்கொள்ளுகிருர்களென்று பல தரப்பிலிருந்தும் திருஷ்டாந்தம் கிடைத்துள்ளது. சந்தேகமேதுமிருப்பின் 1945 ஆகஸ்டுக்குப் பின் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் அவர்களுடைய வீரத்தை எடுத்துக் காட்டியுள்ளன.

நற்குணமாயினும், தீய குணமாயினும் பிறருடைய குணங்களை கிரகித்துக் கொள்ளும் தன்மை அன்னமியரிடம் நிரம்பியுள்ளது. இது விஷயத்தில் அவர்கள் சீனர்களையும், நம்மையும் போல் ஐதீகவாதிகளாயில்லாமல் ஜப்பானியரையும், சயாமியரையும் போல் காலத்திற்கேற்றவாறு மாறும் சுபாவம் படைத்துள்ளார்கள். ஒரு ஆயிரம் வருடங்களாய்ச் சுமத்தப்பட்ட சீன ஆட்சியில் அவர்கள் சுதேசப் பற்றுதலை மறந்துவிடவில்லை. எனினும் தங்களுடைய நாகரிகத்தை விட மேலான சீன நாகரீகத்தை அந்த ஆயிர வருடங்களில் கிரகித்துக் கொண்டார்கள்; சீனர்களுடைய மதத்தையும், தேவதைகளையும், எழுத்தையும், அறநூல்களையும், கலாசாரத்தையும், அரசாங்க முறையையும் கைக்கொண்டார்கள். பிரஞ்சு ஆட்சியில் பிரஞ்சு நாகரிகத்தையும், கலாசாரத்தையும் நடை, உடை, பாவனையையும் பின்பற்றத்தொடங்கியுள்ளார்கள். விருந்தினரைப்பேணி

உபசரிக்கும் நற்குணம் வாய்ந்தவர்கள் அன்னமியர்கள். அவர்களுக்கு செய் நன்றியே இல்லையென்று அடிக்கடி குறை கூறப்பட்டுள்ளது. மார்ச் மாறுதலின் போது, 15-20 வருடகாலம் வரை ஒரே முதலாளியிடம் வேலை பார்த்து முதலாளியின் குடும்பத்துடன் குடும்பமாய் வாழ்ந்து வந்த அன்னமிய வேலைக்காரர்கள் தங்கள் முதலாளிகளை ஆபத்து சமயத்தில் கைவிட்டது மன்றி முதலாளியின் சாமான்களையும் கூச்சமின்றி எடுத்துச் சென்றுர்கள். யுத்த நெருக்கடி யெதுவுமில்லாத சமாதான காலத்திலுங் கூட அவர்கள் தங்கள் நன்றியறிதலை நடைமுறையில் வெளிக் காட்டிக்கொள்ளுவதில்லை. ஆதலால் அக் குணம் அவர்களிடமிருக்கிறதா இல்லையா வென்று நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய மனோ நிலையையும், உள்ளக் கிடக்கையையும், புறத் தோற்றத்தால் அறிந்து கொள்ளுவது சிரம சாத்திய மாகும்.

கல்வியில் அவர்களுக்கு மிகுந்த சிரத்தை யுண்டு. மிகக் கஷ்டமான சீன எழுத்துக்களை தலை முறை தலைமுறையாகக் கற்றுணர்ந்ததின் பயனுக அவர்களுடைய ஞாபக சக்தி அதிகரித்துள்ள தாம். ஆதலால் அவர்கள் பிரஞ்சுப் பாடங்களை நன்கு மனப்பாடம் செய்து அசல் பிரஞ்சு மாணவர்களையும் பரீட்சைகளில் தோற்கடித்து விடுகிறுர் களாம். ஆனுல் அவர்கள் வெறும் பாட புத்தகங்களைக் கற்று ஒப்பிக்கிறுர்களே யொழிய, புது நூதனங்களையும், புது உண்மைகளையும் ஆராய்ந்து பார்க்கக் கூடிய சக்தி அவர்களிடம் குறைவென்று பிரஞ்சு ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உலகமறிந்த விஞ்ஞான சாஸ்திரி. சரித்திர ஆசிரி

யர், எழுத்தாளர் ஒருவரும் அவர்களிடையே இது காறும் தோன்றவில்லையென்பது இதற்கு உதாரண மாகக் காட்டப்படுகிறது.

அன்னமியர்களிடையே பெண்களுக்கு செல்வாக்கும் ஓரளவு சுதந்திரமும் இருந்துவருகின்றன. குடும்ப விவ காரங்களில் கணவனைப் போல் மனைவியும் சமபங்கெடுத் துக் கொள்ளுகிறாள். தொங்கின் மாதர்கள் வியாபாரத் தில் கைதேர்ந்தவர்கள்; கடை முகப்பில் உட்கார்ந்து வியாபாரம் செய்பவர்களும் அவர்களே; ஆண்களல்ல. கணவனின் உத்தரவின்றி தங்களிஷ்டம்போல் வெளியே சென்று உலாவி வரும் உரிமையை அன்னமிய மாதர்கள் பெற்றுள்ளார்கள். ஆண் பெண் இரு சாராரும் பல வகைச் சூதாட்டங்களில் மிக்க பிரேமைகொண்டவர்கள். வேறு தேசங்களில் வருடம் பூராவும் குதிரைப் பந்தயம் பிடிக்கிறார்களோ இல்லையோ நான் அறியேன். ஆனால் மழை பெய்தாலும் வெயில் காய்ந்தாலும் வாரம் தவறாமல் வருடம் பூராவும் இந்து சீனத்தில் குதிரைப் பந்தயம் நடந்துவருகிறது.

குடும்ப வாழ்விலும் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதி லும் அன்னமியர்கள் கருத்துடையவர்கள். இருப்பினும் பிரஞ்சு ஆட்சியின்கீழ் அவர்களிடையே மண உறவு பல மிழந்து சீர்குலைந்துவருகிறது. முற்காலத்தில் கற்பொழுக் கத்தினின்றும் வழுவிய மாதையும் அவளுடைய ஆசை நாயகனையும் ஒரு மரத் துண்டில் ஏற்றி ஆற்றுவெள்ளத் தில் தனியே விட்டு வந்தனராம். ஒருவரும் அவர்களுக்கு உதவி செய்யக்கூடாதென்பது சமுதாயப் பழக்கமாக இருந்துவந்தது. ஆகவே அவர்கள் இறக்க வேண் டியதைத் தவிர முற்காலத்தில் வேறு வழியில்லை. இக் கொடூரச் சட்டம் இன்று அமுலில் இல்லை.

எனினும் முற்காலத்தில் அன்னுமியர்கள் கற்பொழுக்கத்தில் கொண்டிருந்த சிரத்தையைக் காண்பிக்கிறது.

கிறிஸ்துவரல்லாத அன்னுமியரின திருமணத்தில், மதச் சடங்குகள் எதுவுமில்லை. தரகர் மூலம் பெண் வீட்டாரின் மனோநிலை யறிந்து அவர்கள் உடன்பட்டால் ஜாதகத்தைக் கேட்பார்கள். இரு ஜாதகங்களும் ஒத்திருப்பின் மேலே விவாகப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும். ஆனல் இக்காலத்தில் பெரும்பகுதியோர் ஜாதக மெதுவும் பார்ப்பதில்லை. தாம்பூலம், கொஞ்சம் சாராயம் இவைகளை எடுத்துக் கொண்டு மணவாளன் பெண் வீட்டிற்கேகி, பெண்ணின் பெற்ருேர்களிடம் அவைகளைக் கொடுத்து வணங்கி நிற்பான். தாம்பூலத்தை ஒப்புக்கொண்டால் பெண்ணைத் திருமணஞ் செய்து கொடுக்கப் பெண்ணின் பெற்ருேர்கள் சம்மதித்ததாகப் பொருள்படும். பிறகு நல்ல நாளில் நிச்சயதார்த்தம் நடைபெறும். உற்ருர், சில பெரிய மனிதர்கள் மணமகன் ஆக எல்லோரும் சீர் வகைகளை எடுத்துக்கொண்டு பெண் வீட்டிற்கு ஊர்வலமாகச்சென்று முனேர்களைப் பூசிக்கும் பீடத்திற்கு முன் சீர் வரிசைகளை வைத்து மெழுகுதிரியும், ஊதுவத்தியும் ஏற்றி ஆராதனை செய்த பின் மணமகன் மணமகள் இருவரும் தங்கள்பெற்ருேரை நமஸ்கரிப்பார்கள். இச் சடங்கு முடிந்தேறிய பின். பிறழ முடியாத வகையில் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. திருமணம் முடிய தாமதமானலும் நிச்சயதார்த்த தேதியிலிருந்து இருவரும் தம்பதிகளாகவே கருதப்படுகிருர்கள். திருமணத்தின்போது முன்னேர்களைப் பூசிக்கும் பீடத்தின் முன், முன் கூறியதுபோல் ஆராதனை செய்து மணமகனும் மணமகளும் பெற்ருேர்களை வணங்கி நின்று ஆசீர்வாதம் பெறுகிருர்கள். பேரன் பேத்திகள் பெற்றெடுத்த கிழவனும், கிழவியும்

மண ஊர்வலத்தை நடத்திச் செல்வர். இரு தரப்பிலும் மரியாதை வார்த்தைகள் கூறக் கற்றோர்களை அழைத்து வந்திருப்பார்கள். இறுதியில் மண விருந்து நடைபெறும். ஏழைக் குடும்பங்களில் மேற் சொன்னவாறு இரண்டு மூன்று சடங்குகள் ஆடம்பரமாய் நடைபெறுவதில்லை யென்று கூற வேண்டிய அவசியமில்லை. மணம் நடை பெற்ற விபரத்தை "லாங்" அல்லது கிராம ஆபீஸ் ரிக்கார்டுகளில் பதிவு செய்தல் வேண்டும். ஆகையால் அன்னமிய சமுதாயத்தில், திருமணமானது தம்பதி களின் இச்சையை மட்டும் பொருத்திருப்பதல்லாமல் குடும்பத்தின் சௌகரியங்களையும் பொருத்திருக்கிறது. ஆனால்தற்காலத்தில் மணமகன் மணமகள் விருப்பத்தை அனுசரித்து நடைபெறாத திருமணங்கள் விபரீதமாய் முடிகின்றன. விவாக ரத்தும் விதவா விவாகமும் அன்ன மிய சமுதாயத்தில் அனுஷ்டானத்திலிருந்து வருகின்றன. இதர ஆசியாக்காரர்களைப் போல் அன்னமியர்களும் பல தாரம் கட்டிக் கொள்பவர்கள். ஆயினும் முதல் தாரமே பட்ட மகஷி ஆவள்; பின் தாரங்கள் அவளுக்குக் கீழ்ப் படிந்து நடத்தல்வேண்டும். எல்லாக்குழந்தைகளும் யாரு க்குப் பிறந்திருப்பினும், முதல் தாரத்தைத் தாயென்றும் மற்றதாரங்களை சிற்றன்னை யென்றும் அழைக்கிறார் கள். விவாகமெதுவுமின்றி ஆணும் பெண்ணும் தங்க ளுக்கு இஷ்டமுள்ளவரையில் கூடிவாழும் பழக்கம் அன் னமியர்களிடையே தற்காலத்தில் அதிகம் பரவியுள்ளது. இது பிரஞ்சு உறவின் எதிரொலியாகும்.

தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளல்லாமல் வளர்ப்புப் பிள்ளைகளும் அன்னமிய குடும்பங்களில் வளர்கின்றன. சொத்துரிமை முதலிய பல விஷயங்களி லும் வளர்ப்புப் பிள்ளைகளுக்கும் சொந்தப் பிள்ளை களுக்குமிடையே வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை.

மூதாதைகளிடமும் பெற்றோர்களிடமும் அன்னுமியர்கள் செலுத்திவரும் பயபக்தியும், மட்டு மரியாதையும் பணிவிடையும் ஒருவகை மதாச்சாரமென்றே நாம் சொல்லவேண்டும். இறந்துபோன பிதிர்களுக்கு அவர்கள் பூசை செய்கிறார்கள். குடும்பத்தில் ஏற்படும் முக்கிய நன்மை திமைகளுக்கெல்லாம்பிதிர்களை அழைத்துப் பூசிக்கின்றனர். பெற்றோர் வணக்கம் அவர்களுக்கு இளமையிலிருந்தே போதிக்கப்படுகிறது. அவர்கள் கற்கும் அற நூல்களும் இதன் மேன்மையைப் புகழுகின்றன.

அன்னுமிய பாஷை வெகுகாலம் சீன எழுத்துக்களில் எழுதப்பட்டு வந்தது. சீன எழுத்துகள் மிக விசித்திர மானவை என்று வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம் அவை அ, ஆ, இ, ஈ போன்ற சப்தங்களைக் குறிப்பிடுவதில்லை. சீன பாஷையிலிருக்கும் ஒவ்வொரு எழுத்தும் ஒரு தனிப் பதமாகும். உதாரணமாக மரம் என்னும் பொருளை அவர்கள் ம-ர-ம் என்று தனித்தனி எழுத்துகளை சப்தத்துக்கு தகுந்தபடி சேர்த்து எழுதுவதில்லை. அப்பொருளை குறிப்பிடுவதற்கு தனிச்சித்திரம் ஒன்றை வரைகின்றனர். மரக்கிளை யென்றால் அதுவும் ஒரு தனிச் சித்திரமாக அமைந்திருக்கும். இவ்வாறு சீன பாஷையில் 60,000 யிலிருந்து 90,000 வரையில் ஆயிரக்கணக்கான சித்திரங்களடங்கி யிருப்பதாகவும் இவை நிற்க நவீன பொருள்களையும் நவீன கருத்துகளையும் குறிப்பிட புது புதுச் சித்திரங்கள் மேலும் மேலும் தயாரிக்கப்படுகின்றனவென்றும் நாம் நூல்களில் படித்துள்ளோம்.

அன்னுமிய பாஷையில் உச்சரிப்பு மிகவும் முக்கிய மானது. ஒரே பதத்தை சிறிதளவு வித்தியாசமாக உச்சரிப்பதன்மூலம் அர்த்தபேதம் ஏற்பட்டுவிடும். உதாரணமாக "லா" என்னும் பதத்தைக் கூட்டிக் குறைத்து

உச்சரிப்பதன் மூலம் இலே, விந்தை, மூர்ச்சை, தண்ணீர், கண்ணீர் சொறிதல் இவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல அர்த்தங்களைக் கொடுக்கின்றனவாம்! நான் அன்னமிய பாஷையில் பயிற்சி பெற்றவனல்ல. அது மிக சிரமமான பாஷையென்றும் உச்சரிப்பு பேதம் அதில் மிக அவசியமென்றும் எனக்குத் தெரியும். அன்னமியர்கள் சீன எழுத்துக்களை சீனர் உச்சரிப்பதுபோல் உச்சரிப்பதில்லை. சீன எழுத்துக்களை சீனர், ஜப்பானியர், கொரியர், அன்னமியர் ஆக நான்கு வகுப்பினர்களும் உபயோகிக்கின்றனர். ஆனால் ஒருவர் உச்சரிப்பது போல் மற்ற மூவரும் உச்சரிப்பதில்லை. சீனர்களிடையேயே உச்சரிப்பு பேதமிருக்கிறது.

இக் காலத்தில் அன்னமிய பாஷை தொங்கினிலும் கொச்சின் சைனுவிலும் லத்தீன் எழுத்துக்களில் எழுதப்படுகிறது. 18-ம் நூற்றுண்டில் இந்து சீனத்தில் வசித்து வந்த போர்சுகேய பாதிரிமார்கள் கிராமிய பாஷையை லத்தீன் எழுத்துக்களில் அதாவது A, B, C, D எழுத்துகளில் எழுதி கொக் நூ'' (Quoc-Ngu) பாஷையை சிருஷ்டி செய்தார்கள். ஆனால் A, B, C, D எழுத்துக்களை பிரஞ்சு உச்சரிப்புபடியோ ஆங்கில உச்சரிப்புபடியோ கொக்நூ பாஷையில் உச்சரிப்பதில்லை, போர்ச்சுகேசிய உச்சரிப்புப்படி உச்சரிக்கப்படுகிறது. இந்த கொக்நூ பாஷையிலேயே பத்திரிகைகள், புத்தகங்கள் எல்லாம் இப்போது வெளியாகின்றன. பள்ளிகளில் போதிக்கப்படும் பாஷையும் அதுவே. உச்சரிப்பு வித்தியாசங்களை விளக்கும் பொருட்டு, லத்தீன் எழுத்துக்களின் மேலும், கீழும் புறமும் அடையாளங்கள் அடைக்கப்பட்டுள்ளன. பேச்சு நடையில் கொச்சின்சீனத்திற்கும், தொங்கின்-அன்னமுக்குமிடையே சில வித்தியாசங்கள் உள. வடக்கேயுள்ளவர்கள் பதங்களின்

பின் பகுதியை நீட்டிப் பேசுவதுடன் எழுத்துப்படியும உச்சரிக்கின்றனர். கொர்ச்சின்சீனப் பேச்சில் இசை ததும்பவில்லை. மேலும் எழுத்துப்படி உச்சரிப்பது மில்லை. இருப்பினும் ஒருவரை யொருவர் விளங்கிக் கொள்ளா வண்ணம் வட, தென் பகுதிகளில் பேச்சு வித்தியாசமில்லை.

அன்னமியர்கள் மதப்பித்துக் கொண்டவர்களல்ல— பரலோக ஆராய்ச்சியைவிட இகலோக விஷயங்களே அவர்களுக்கு முக்கியமாகத் தோன்றுகின்றன. அவர்கள் உலகாயுத வாதிகளல்லாது மதவெறி பிடித்த வைதீகர்களல்ல. தாங்கள் பௌத்தர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் அன்னமியர்கள் அச்சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில்லை. கம்போஜியா, சயாம், பர்மா முதலிய நாடுகளில் ஆயிரக்கணக்கான பௌத்த சந்நியாசிகளையும் அவர்கள் வசித்துவரும் பல மடங்களையும் நாம் பார்க்கிறோம். ஆனால் அன்னமியர் களிடையே அவ்வாறு காண்பதரிது.

சமயப் பிரிவுகளைப் பொறுத்த மட்டில் அன்னமியர்களை (1) கான்பூசியஸ் சமயத்தினர், (2) தாவ் சமயத்தினர், (3) கிறிஸ்தவர்கள். (4) காவ்டாய் சமயத்தினர், (5) இதரர் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆனால் இந்தியாவிலுள்ள ஹிந்து. முஸ்லீம், சீக், சமண, கிறிஸ்துவ மதப் பிரிவுகளைப் போல் அன்னமிய மதப் பிரிவுகள் ஆழ்ந்த பிரிவுகளல்ல. ஆறுப் புண்களல்ல. கிறிஸ்துவர்கள் மட்டும் கொஞ்சம் தனிப் பிரிவினராகக் காணப்படுகின்றனர். மற்றப் பிரிவுகளுக்கிடையே வித்தியாசங்கள் அவ்வளவு இல்லை.

(1) கான்பூசியஸ் சமயத்தினர்:—கான்பூசியஸ் என்னும் சீன சமயாசிரியர் வகுத்துள்ள நீதி தர்மத்தையும் முன்

ஞோர் வழிபாட்டையும் கடைப்பிடிப்பவர்கள். கடவுள், ஆத்மா போன்ற விஷயங்கள் மனிதனின் சிற்றறிவிற்குப் புலனாகாதவையென்று கருதி, இகலோக வாழ்க்கையில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளையும் அறிய வேண்டிய உண்மைகளையுமே அப்பெரியார் போதித்துள்ளார். குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் உத்தமராய் நடந்துகொள்ளும் விதத்தைப் போதித்துள்ளார். குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் கணவனும் மனைவியும் பிரியத்துடன் ஒற்றுமையாக வாழ்தல், பெற்றோரிடமும் பெரியோரிடமும் மரியாதையாக நடந்து கொள்ளுதல், இவைகளையும், சமூக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், தந்தையின் கடமை, பிள்ளையின் கடமை, குருவின் கடமை, சிஷ்யரின் கடமை இவ்வாறு மனித சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் செலுத்தவேண்டிய கடமைகளையும், அரசியல்வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் அரசர், அமைச்சர், பிரஜை, உத்தியோகஸ்தர், அறிஞர் முதலியவர்கள் செய்து முடிக்க வேண்டிய கடமைகளையும் கான்பூசியஸ் பெரியார் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். அன்னாருடைய போதனை அன்னிய சமுதாயத்தில் எல்லா மரபினரிடையேயும் வியாபித்துள்ளது தாய்ப்பாலுடன் அப்போதனையையும் அன்னியர் குடிக்கிறார்கள்.

கான்பூசியஸ் பெரியாரின் போதனையால் விளையும் நற்பயனையும் தீய பயனையும் கர்னல் டிகே என்னும் பிரஞ்சு ஆசிரியர் பின்வருமாறு சுருங்கக் கூறியுள்ளார்:-

"உபசரிக்கவேண்டும்; அன்பு மொழிகளைப் பகர வேண்டும்; யாராயிருப்பினும் அவர்பால்மட்டு மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற போதனையால் மானிட உறவு மேன்மையாகிறது. கான்பூசியசஸுடைய

இதர போதனைகளால் அரசாங்க உறுப்புக்கள் பலம் பெறுகின்றன. வரி வாய்தா வசூல் எளிதாகிறது. குடும்ப ஒற்றுமையுடன் குடும்ப பந்தமும் அதிகரிக்கிறது. பரந்து கிடக்கும் சீன சாம்ராஜ்யத்தின் பற்பலபகுதிகளும் கட்டவிழாவண்ணம் இணைக்கப்படுகின்றன. பெரும் புரட்சிகளும் மாறுதல்களும் நாட்டில் நிகழ்ந்தேறியும் இக்கட்டுக்கோப்புமட்டும் சீர் குலையவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல, மேற்சொன்ன நற்பயன்களோடு சில தீய அம்சங்களும் சீன சமூதாயத்தில் தோன்றலாயின. முன்னோர்களுடைய பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் சிரத்தையுடன் காப்பாற்ற வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கான்பூசியஸ் தம் கோட்பாடுகளை அமைத்துள்ளார். எகிப்து தேசத்திலுள்ள தைலமிட்ட அழிவற்ற பிரேதங்களைப் போல், அவருடைய போதனையும் அழியாமல் நிலைத்திருப்பினும், பிரேதத்தைப் போல் அதுவும் காலக்கிரமத்தில் விரைத்துப் போயிற்று. பழமை, பழமை யென்று போற்றிவருமிடத்தில் புதுமைக் கிடமில்லை; முன்னேற்றத்திற்கு வழியில்லை. மூட நம்பிக்கைகளும் மூட ஆசாரங்களும் முன்னேற்றத்திற்குத் தடைகளாயிருக்கின்றன'' அன்றைய சமூதாயத்தைப் பொறுத்தமட்டில் கான்பூசியஸ் பெரியாரின் போதனை மேற்சொன்ன அளவு தீய பயன்களை விளைவிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அன்னிய எழுத்தாளர்களில் எவ்வளவோ பேர்கள் அன்றைமியரின் கிரகிக்கும் குணத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அன்றைமியர் பழமைபழமை யென்று கட்டி அழாமல் புதுமையை, (நல்லதாயினும் தீயதாயினும், கைக்கொள்ளுகிறார்களென்றும அவர்கள் வர்ணித்துள்ளார்கள்.

''லாவ்-சு'' என்னும் சீன சமயாசிரியர் கி. மு. 6-வது நூற்றாண்டில் கான்பூசியஸ் காலத்தில் சீனத்தில்

வசித்துவந்தார். அவருடைய போதனைகள் ஏறக்குறைய பௌத்த சமயத்திற்கு ஒப்பாகும். ஒழுக்கத்தையும் மன அடக்கத்தையும் வற்புறுத்துகிறது "தாவ்" மதம். தியான வழியை காட்டுகிறது. ஆனால் விபரீதமாக அன்னுமியர்கள் கையில் அது வெறும் குறளி வித்தையாக மாறிவிட்டது. பாமரர்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு "தாவ்" மத குருக்கள் இந்து சீனத்தில் மந்திரம், மாயம் என்று ஏய்க்கின்றனர்.

பாமர அன்னுமியர் இயற்கை சக்திகளையும் வணங்குகின்றனர். பேய், பிசாசுகளில் கொம்மா யென்று சொல்லுபவர்களுக்கு நம்பிக்கையுண்டு. அதுமட்டுமல்ல. ஆறு குளம் குட்டை, மலை, மரம் இவைபோன்ற எவ்வளவோ வஸ்துக்களில் தேவதைகள் குடியிருப்பதாகவும் அவைகளைத் திருப்தி செய்யவேண்டுமென்றும் ஒரு வித நம்பிக்கை பாமர அன்னுமியர்களிடையே பரவியுள்ளது. காளி அம்மனையும் மாரியம்மனையும் "கருந்தாய்" என்று சிற்சில இடங்களில் வணங்கி வருகின்றனர். அவர்கள் காளி அம்மனைப் பூசிப்பதை நத்ராங்கில் நான் பார்த்தேன். நத்ராங்கில் சாம்காரர்கள் கட்டியுள்ள காளியம்மன் கோயில் ஒன்றிருக்கிறது. செய்கோனில் இக்காலத்தில் இந்தியர்களால் கட்டப்பட்ட மாரியம்மன் கோவிலில் ஹிந்துக்களைவிட சீனர்களும் அன்னுமியர்களும்தான் அதிகம். சில அன்னுமியர்கள் (முக்கியமாக கொச்சின்சைனுவில்) முகம்மதியர்களாகவும் மாறியுள்ளனர்; இவைகளிலிருந்து அன்னுமியர்களுக்கு எந்த மதத்திலும் ஆழ்ந்த விருப்பமோ வெறுப்போ இல்லையென்று நாம் ஒருவாறு உணரலாம்.

பிரஞ்சு ஆட்சியில் கிறிஸ்துவமதம் அன்னுமியர்களிடையே வெகு விரைவில் பரவியுள்ளது. அன்னுமியர்

களில் ஏறக்குறைய பதினைந்து பேரில் ஒருவர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியுள்ளனர். கிறிஸ்துவப் பாதிரிகளுக்கு நாட்டில் மிகுந்த செல்வாக்கிருப்பதால், கிறிஸ்து மதத்தைத் தழுவுவதில் எவ்வளவோ சௌகரியங்களிருக்கின்றன. அன்னுமியர்கள் இதை உணராமலில்லை.

காவ்-டாய் மதம் 1926-இல் லே-வான்-டுருங் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிரதான கோயில் கொச்சின்சைனுவிலுள்ள தைனின் என்னுமூரில் அமைக்கப்பட்டது. வேறு ஊர்களிலும் பல காவ்-டாய் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிலுவை கிறிஸ்துவ கோயிலைக் குறிப்பதுபோல் சுவஸ்திகா சின்னம் காவ்டாய் கோயிலைக் குறிக்கும். அன்னுமிய சமூதாயத்தில் வேரூன்றியுள்ள அர்த்தமற்ற சடங்குகளைக் களைந்து எளிய முறையில் இம்மதம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜாலவித்தைக்கும் குறளிவித்தைக்கும் காவ்டாய் மதத்தில் இடமில்லை. அவர்கள் சைவத்தை ஆதரிக்கின்றனர். அதிலும் பால், மோர், தயிர், நெய் இவைகள் கலப்பில்லாத சுத்த சைவம். கிறிஸ்துவரல்லாத ஏனைய அன்னுமியர்களும் சில குறிப்பிட்ட நாட்களில் புலால் புசிக்காமல் சைவத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்கள் பால், மோர், வகையறு கலப்பில்லாமல் அத்தினங்களில் புசிப்பர். பால், மோர், சேர்த்துக் கொண்டால் என்ன சைவம் வேண்டியிருக்கிறது என்று அவர்கள் நம்மைப் பார்த்து ஏளனம் செய்வார்கள்.

காவ்டாய் மதத்தில் புத்த மதம், தாவ்மதம், கிறிஸ்துவ மதம் எல்லாம் கலந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அரபிந்தோ ஆசிரமத்தைபோல் அம் மதத்தில் சேர்ந்து கொள்பவர்கள் சொத்துக்களை காவ்

டாய் பொது ஸ்தாபனத்தின் பெயரில் எழுதிவைத்து விட வேண்டும். அதைச் சேர்ந்தவர்கள் தூயவெள்ளை ஆடைகளைத் தரிக்கின்றனர். காவ்டாய் ஈமச்சடங்குகளில் மேளதாளம், வாத்திய கோஷ மெதுவுமில்லை. சில மந்திரங்களை ஓதி மிகவும் கண்ணியமாகவும் அமரிக்கையாகவும் ஊர்வலமாகச் செல்லுகின்றனர். இந்த காவ்டாய் ஸ்தாபனம் மத மென்னும் போர்வையை போர்த்துக் கொண்ட அரசியல் புரட்சி ஸ்தாபனமென்பது பிரஞ்சு அரசாங்கத்தின் தீர்ந்த அபிப்பிராய மாகும். ஆகவே 1935-ல் இதை பிரஞ்சு அரசாங்கத்தார் ஒருமுறை ஒடுக்கினார்கள். மார்ஷல் பெத்தன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அரசியல் குழப்பத்தின் பயனாக, பிரஞ்சு சர்க்கார் இரண்டாவது முறையாகவும் காவ்டாய் மதத்தை மிக்க கொடூரமாக ஒடுக்கினார்கள். அதன் தலைவர்களை ராணுவ மன்றத்தில் விசாரித்து கொடூர தண்டனைகளை விதித்தார்கள். 1945 மார்ச்சு மாறுதலுக்குப் பின் பிரஞ்சு சர்க்கார் மீது மிக்க வன்மை காட்டி வந்தவர்கள் காவ்டாய் மதத்தைச் சார்ந்தவர்கள்.

இவ்வாறு அன்னமியர் பல சமயங்களைப் பின்பற்றியிருப்பினும் நம் நாட்டைப் போல் வகுப்பு வகுப்பாகப் பிரிந்து ஒரு வகுப்பினர் இதர வகுப்பினர்களுடன் சச்சரவு செய்து கொள்ளுகிறதில்லை. சமய வித்தியாசமின்றி போஜனம் செய்வார்கள். மணம் செய்து கொள்கிறார்கள். தொழில் வித்தியாசம் எதுவும் பாரார். ஆகையால் நாட்டின் ஒற்றுமைக்கு இடையூறுகளாயிருக்கும் மத மாச்சரியமும் பாஷைப் பிரிவுகளும் அவர்களிடம் கிடையா.

சீனர்களைப் போல் அவர்களும் பிணங்களை தகனம் செய்யாது அடக்கம் செய்கின்றனர். அவர்களுடைய

ஆசாரத்தில் ஈமச் சடங்கு முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. நிலைமைக்குத் தகுந்தவாறு ஈமச் சடங்கில் பணம் செலவிடுகின்றனர். பிணத்தைக் கழுவி மாண்டவர் பிரியமாகத் தரித்து வந்த ஆடைகளை அணிவித்து பிணப் பெட்டிக்குள் வைத்து வாசனைத் திராவகம் ஊற்றி கொஞ்சம் பணத்தையும், ஜீவியத்தில் விருப்பமாய் உபயோகித்து வந்த சிறு சாமான்களையும் பக்கத்தில் வைத்து காற்று புகாமல் மூடியை அறைகின்றனர். பக்கத்தில் மெழு திரியும் ஊதுவத்தியும் கொளுத்தி பந்துக்கள் எல்லோரும் கூடியபின் பிணப் பெட்டியை ஊர்வலமாக வாத்திய முழக்கத்துடன் கல்லறைக்கு எடுத்துச் செல்லுகின்றனர். இறந்து போனவரின் செல்வத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு சிநேகிதர்கள், அனுதாப வாக்கியமொன்றையும் தத்தம் பெயரையும் சீன எழுந்துகளால் பட்டுத் துணியில் தைத்து அனுப்பிவைக்கின்றனர். இந்த அனுதாபக் குறிகளை ஊர்வலத்தில் முன்னே பிடித்துச் செல்லுகிறார்கள். இறந்தவரின் மனைவி மக்கள் பன்னாடை போன்ற ஒரு வெள்ளை ஆடையை மேலே போர்த்துக்கொண்டு பிணப் பெட்டியைப் பின் தொடர்கின்றனர். பந்துக்கள் கூடும் வரையில் ஒரு வாரமோ பல வாரங்களோ பிணப் பெட்டியைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லாமல் வீட்டிலே வைத்திருக்கின்றனர். அடக்கம் செய்த பின் மாண்டவரின் ஆத்மாவை திருப்தி செய்யச் சில சடங்குகளை அன்னியர்கள் செய்து உறமுறைக்குத் தகுந்தாற் போல் நீண்ட அல்லது குறுகிய காலத்திற்கு துக்கம் கொண்டாடுகிறார்கள். பெற்றோர்கள் இறப்பின் 27 மாதங்களும் தூர பந்துக்கள் இறப்பின் 3 மாதங்களும், உறவு முறைக்குத் தகுந்தாற்போல் கணக்குப்படி அவர்கள் துக்கம் கொண்டாடுகிறார்கள். துக்க காலத்தில் மணமோ

பாகப் பிரிவினையோ செய்து கொள்ளலாகாது. முன்னோர்களுக்கு வருடாந்தர சிரார்த்தாதிகளும் கிறிஸ்துவரல்லாத அன்னமியர்கள் செய்கிறார்கள்.

சீன பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வரும் அன்னமியர்களுக்கு பிப்ருவரி அல்லது மார்ச் அமாவாசை தினம் புது வருட தினமாகும். பணச் செலவு பாராது சிறப்பாக அன்னமியர்கள் புதுவருட தினத்தைக் கொண்டாடுகிறார்கள். முஸ்லீம்களுக்கு பக்ரீதும் ஹிந்துக்களுக்கு தீபாவளியும், சங்கராந்தியும் எவ்வாறோ, அவ்வாறே அன்னமியர்களுக்கு புது வருடக் கொண்டாட்டம். அது மகசூல் காலமாதலால் எல்லோர் உள்ளமும் பூரித்திருக்கும் நேரமாகும். பழைய வருட இறுதி நாட்களில் வீட்டையும் முன்னோர்களின் கல்லறையையும் சுத்தம் செய்து புது ஆடைகள் தைத்துக் கொண்டாட்டத்திற்கு தயாராகிறார்கள். புதுவருட தினமன்று வீட்டிலுள்ள முன்னோர் பீடத்தின்முன் ஆராதனை செய்து புது ஆடை தரித்து, உற்றார் உறவினரை வணங்கி வரப் புறப்படுகின்றனர். வருடப் பிறப்பன்றும் முதல் நாளிரவும் சீன வெடியின் சப்தம் தாங்க முடியாது. துராத்மாக்களையும் துஷ்ட தேவதைகளையும் இச்சப்தம் வீடுகளை யணுகாதபடி விரட்டிவிடுகிறதாம்! அன்னமியர்களைவிட அதிக தனம் படைத்துள்ள சீனர்கள் வருடப்பிறப்பை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்களென்று உரைக்க அவசியமில்லை. முற்காலத்தில் புது வருட விழாவையொட்டி ஜனங்கள் ஒருவாரம் ஓய்வெடுத்துக்கொண்டார்கள். பஜார் கடைகள் ஒன்றும் இந்த ஒரு வார காலத்தில் திறக்கப்படமாட்டா. நகர் வெறுமையாய்த் தோன்றும். இப்போது மூன்று நாட்கள் விடுமுறையாய் விழா சுருக்கப்பட்டுள்ளது. விழாவின் போது சூதாட்டம் மும்முரமாய் நடைபெறும்.

அன்னுமியர்களில் பெரும்பான்மையோர் விவசாயி கள். தாங்கள் ஜெனித்த கிராமங்களையும் தங்களுடைய வயல் வரப்புகளையும் ஆயுள்பரியந்தம் நேசிப்பவர்கள். கொச்சின்சீனத்தில் நீர்ப்பாசன வசதிக்கு முடையில் லாததால், பயிர்த் தொழில் ஆங்கு அதிக கஷ்டமானதாய் இல்லை. நெல், புகையிலை, கரும்பு, பருத்தி, பருப்பு வகை கள், வெற்றிலை, தேயிலை, தென்னை கமுகு முதலியவை களும், மா, கொய்யா, வாழை, அன்னுசி, நார்த்தை, மங்குஸ்தான் முதலிய கனி வகைகளையும் உற்பத்தி செய் கின்றனர். இந்து சீன ஏற்றுமதிக் கணக்கில் மூன்ருவது ஸ்தானம் வகிக்கும் ரப்பர் பிரஞ்சுக்காரர் வசம் பெரும் பாலுமுள்ளது. சிற்சில தோட்ட முதலாளிகளன்றி அன்னுமியர்கள் ரப்பர் தோட்டங்களில் கூலிகளாகவே சம்பந்தப்பட்டுள்ளார்கள்.

வயல்களில் வேலை செய்யும்போது சூரிய வெப்பத் தைத் தடுக்க ஒருவகை லேசான ஓலைத் தொப் பியை ஆண், பெண் இரு சாராரும் போட்டுக்கொள் ளுகிருர்கள். நெல் சாகுபடியை நோக்கிஞல் தென் னிந்தியாவிற்கும் இந்து சீனத்திற்கும் பெரும் வித் யாசம் எதுவுமில்லை. ஆனுல் பூமியின் வளப்பத்தின் கார ணமாக கொச்சின் சீனத்தில் நாற்றுகள் நெருக்கமாக நடப்படுகிறதில்லை. கந்தோ போன்ற சில மிகக் கொழுப் பான பகுதிகளில் ஒருமுறை நட்டு, பயிரைப் பிடுங்கி மறுபடியும் நடுகிருர்கள். அன்றேல் பயிர் மதாளித்து கதிர் பிரிவதில்லையாம். நெல் நம் நாட்டு நெல்லை விட சற்று நீளமாயுள்ளது; மேலும் "பூதலரிசி" என்னும் ஒருவகை பிசினரிசிப் பயிரும் இந்நாட்டில் சாகுபடி யாகிறது. சும் சும் என்ற நாட்டுச் சாராயமும் மேற் சொன்ன பூதலரிசியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அறு வடை செய்யும்போது அன்னுமியர்கள் பயிரை ஒட்ட

வெட்டாமல் கதிர்ப் புறத்தை மட்டும் வெட்டிச் சேக ரித்து, மூங்கிற் பாயால் பின்னப்பட்ட மேடையொன்றில் அடித்து நெல் வேறு வைக்கோல் வேறாகப் பிரித்தெடுக் கின்றனர். முன் பக்கம் வெட்டப்பட்டு நாலு கால்களில் நிற்கும் குதிருக்கு ஒப்பாகும் இந்த "மூங்கிற் களம்". வாய்க்கால் ஓடைகளுக்குக் கொஞ்சமும் பஞ்சமில்லாத இந்நாட்டில் நாற்று, கதிர், நெல் முதலிய எல்லா விவ சாயப் பொருள்களையும் தலையில் சுமந்து செல்லாமல் படகிலேற்றிச்செல்லுகின்றனர். தரையில் சாமான்களைத் தூக்கிச் செல்லவேண்டியிருப்பின் அவைகளைக் காவடி யாக எடுத்துச் செல்லுகின்றனர்.

பயிர்த் தொழிலுக்கு அடுத்தபடியாக செம்படவத் தொழிலையும் பலவிதக் கைத்தொழில்களையும் அன்னாமி யர்கள் கைக்கொண்டுள்ளார்கள். 2500 கிலோ மீட்டர் கள் நீளமுள்ள இந்துசீனக் கடற்கரையில் மீன் வகை கள் மிதமிஞ்சியிருக்கின்றன.

மரங்களில் சிப்பிகளைப் பதித்தும் சிற்பங்களைச் செதுக்கியும் தயாரிக்கப்படும் நாற்காலிகள், மேஜைகள், பேழைகள் முதலிய தளவாட சாமான்களையும், தையல் வேலைப்பாடுகளையும், மிருகக் கொம்புகளி லிருந்து பல சில்லறைச் சாமான்களையும் வர்ணம் தீட்டிய அழகிய மண் பாண்டங்களையும் அவர்கள்—முக்கியமாக தொங் கினியர்கள்—தயார் செய்கின்றனர்.

ஜில்லா (தின்), தாலுக்கா (பூ). மாகாணம் (உயன்), கான்டன் (தோங்), கிராமம் (தோன் அல்லது சா) என்று கிரமமாய் நிர்வாகத் துறையில் நாடு பிரிக்கப் பட்டுள்ளது. கிராம விவகாரங்கள் மூன்று கிராம பஞ்சாயத்தார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. படி

உயர உயர நிருவாகப் பொறுப்பு பிரஞ்சு அதிகாரிகள் வசமிருந்து வந்தது. பழைய அன்னமிய அரசியல் முறையில் அரசர் கடவுளுக் கொப்பாக மதிக்கப்பட்டு ஏகச் சக்கிராதிபதியாக ஆட்சிபுரிந்து வந்தார். பிரஜைகள் எல்லோருக்கும் தாயுமவரே; தந்தையுமவரே. ஆனல் அரசருக்கும் பிரஜைகளுக்கு மிடையே பரம்பரையான பிரபுக்கள் கூட்டமொன்று அன்னமிய சமுதாயத்தில் இருந்ததில்லை. மிக எளிய கிராம-வாசியுங் கூட போதிய படிப்பும் திறமையும் பெற்றிருப்பானயின் உயர்ந்த சர்க்கார் பதவிகளை வகிக்கத் தடைகளெதுவும் முற்காலத்தில் இல்லை.

அத்தியாயம் 7

"V" எழுத்தைப் போல் உள்ள கொச்சின் சீனவை (நிலப்பரப்பு: 25,400 சதுர மைல்கள்; ஜனத்தொகை 46 லட்சம், கீழ், மேல் பகுதிகளென பிரிக்கலாம். கீழ்ப்பகுதி மலை, காடு நிரம்பிய பிரதேசம். இங்கு அன்னம் மலைச் சாரல் தைனினிலிருந்து பரியா வரையில் நீண்டுள்ளது. மேற்கே மிக்காங், டொங்நாய் நதிகள் பாயும் மிகச் செழிப்பான டெல்டா பிரதேசம் உள்ளது. இந்து சீனத்திற்கு மட்டுமல்ல, உலகிற்கே முக்கியமொரு நெற் களஞ்சியமாகும் மேற் சொன்ன டெல்டா. பொன் போட்டால் பொன் விளையும் பூமி. நிடத தேசத்திற் கொப்பான மிகுந்த வளப்பான பிரதேசமாகும்.

பொனம்பெங்குக்கு அருகாமையில் மிக்காங் நதி "தியங் கியாங்" அல்லது முன் நதி என்றும் "ஹன்கியாங்" "பசாக்" அல்லது பின் நதி என்றும் இரண்டு கிளைகளாகப் பிரிந்து 150 மைல் தூரம் ஏறக் குறைய சம தூரமாக கம்போஜியா, கொச்சின்சைன ஆக இரு மாகாணங்களிடையே ஓடி கடலில் சங்கம மாகின்றது. இக் கிளைகளுக்கும், சற்று கிழக்கே ஓடும் டொங்நாய் நதிப் பிரிவுகளுக்கும் இடையே எண்ணற்ற கால் வாய்களும் அருவிகளும் ஓடைகளும் குறுக்கு மறுக்காக ஓடுகின்றன. ஓடையில்லாத பகுதி கொச்சின்சைனவில் இல்லையென்றே சொல்லலாம். மேலும் தினசரி இரு முறை நதிகளிலும் ஓடைகளிலும் கடல் நீர் பெருகி வடிகிறது. நதிகள் அதிகமிருப்பதால் கப்பல், படகு ஓட்ட மதிகம். ரஸ்தாக்கள் ஏற்படுமுன் ஜனங்கள் படகிலேயே போய் வந்தார்களாம். ரஸ்தாக்

கள் ஏற்பட்ட பின்பும் ஆற்றுப் பயணந்தான் அதிகமாக இருக்கிறது. குழந்தைகள் பால்யத்திலேயே தரையில் நடக்கக் கற்றுக் கொள்ளுவது போல் படகு வலிக்கவும் கற்றுக் கொள்ளுகின்றனர். கொச்சின் சைனுவில் பாய்காலுக்கு கவலையில்லை. வடி காலைப் பற்றியே ஜனங்களும் சர்க்காரும் சிரத்தை காட்ட வேண்டியிருக்கிறது.

மேற்கு கொச்சின்சைனுவில் இருக்கும் சில குன்றுகள் பல்லாயிர வருடங்களுக்கு முன்பு தனித் தனி தீவுகளாயிருந்தனவாம். இமய மலைச் சாரலிலிருந்து இந்து சீன கங்கையான மிக்காங் (கம்போஜியா பாஷையில் மே என்றால் தாய்; காங் என்பது கங்கையின் திரிபு; ஆக மிக்காங் என்னும் பதம் கங்கை மாதா என்று பொருள்படும்) வருடா வருடம் சுமந்து வரும் ஏராளமான வண்டல் யுகம் யுகமாகப் படிந்து மேற் சொன்ன தீவுகளும், கண்டமும் ஒன்ருய் இணைக்கப்பட்டன. கடலைத் தூற்று டெல்டாவை விஸ்தரிக்கும் நதியின் முயற்சி இன்றும் மேற்கே கமாவ் முனையிலும் திராவின் பக்கத்திலும் அமுலிலிருந்து வருகிறது.

கொச்சின்சீனம் பூராவும் கி. பி. 6-வது நூற்ருண்டிலிருந்து 17-வது நூற்ருண்டு வரையில் கம்போஜிய மன்னர்கள் வசமிருந்து வந்தது. 2000 வருடங்களுக்கு முன் இங்கு விஜயஞ் செய்த சீனர்கள், இந் நாட்டை இந்திய மன்னர்கள் ஆண்டு வந்தனரென்றும், இந் நாடு பூனன் (Founan) எனப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். 17-வது நூற்ருண்டில் அன்னுமியர்கள் கொச்சின்சைனுவில் பிரவேசித்து கம்போஜியர்களை மெல்ல மெல்ல மேற்குப் புறம் விரட்டியடித்து, அதற்கடுத்த நூற்ருண்டில் நாட்டைத் தங்கள் வசமாக்கிக்

கொண்டார்கள். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் மீண்டும் ஆட்சி மாறி, நாடு பிரஞ்சுக்காரர் வசமாயிற்று. அன்னமியர் ஆட்சியிலும் பிரஞ்சு ஆட்சி ஆரம்பத்திலும் இற்றைய கொச்சின் சீனம் "கீழ் கொச்சின் சீனம்'' என்று அழைக்கப்பட்டு வந்தது.

கொச்சின் சைனவின் சீதோஷ்ண ஸ்திதி ஏறக்குறைய நம்நாட்டை ஒத்திருக்கிறது. மழை, கோடைகாலங்களென்று இரு பருவங்களேயுள. வடக்கே தொங்கினில் உள்ள குளிர் காலம் இங்கு அவ்வளவு கடுமையாயில்லை. வருடத்தில் இரண்டு மூன்று நாட்கள் சீனத்திலிருந்து குளிர் வாடை வீசும். அவ்வளவுதான்; நீடித்த குளிரில்லை. ஏப்ரலில் சராசரி 86 டிகிரி பாரன்கீட்டும், டிசம்பரில் சராசரி 77 டிகிரி பாரன்கீட்டும் வெப்பநிலை யுள்ளது. மே பிற்பகுதியிலிருந்து அக்டோபர் வரையில் நல்ல மழை. மார்ச், ஏப்ரல், மே முற்பகுதி அருங் கோடை. இருப்பினும் நதிகளிலும் ஓடைகளிலும் தண்ணீர் வற்றுவதில்லை. கொச்சின் சைனவில் சுரங்கக் கனிகள் எதுவுமில்லை. செய்கோனுக்கும் ஹனோய்க்கும் கடல் ஓரமாக பிரஞ்சுக்காரர்களால் அமைக்கப்பட்டுள்ள இருப்புப் பாதையும் அன்னமிய அரசர்களால் அமைக்கப்பட்டுள்ள புராதன ரஸ்தாவும் உள. மற்றப் பகுதிகளுக்கு (மித்தோ நீங்கலாக) ரஸ்தா, நதி மார்க்கங்கள் தான் உள.

பதினெட்டு ஜில்லாக்களும் செய்கோன்-சோலன் நகரும் சேர்ந்தது கொச்சின்சீனம். தலைநகர், நகரக் கமிஷனர் ஆளுகையின் கீழும், ஜில்லாக்கள் கலெக்டர் ஆளுகையிலும் எல்லாம் சேர்த்து ஒரு கவர்னர் மேற் பார்வையிலும் பிரஞ்சுக் காலத்தில் 1945 வரையில் இருந்துவந்

தன. மேற் குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்களனைவரும் ஓரிருவரைத் தவிர மற்றையோர் பிரஞ்சுக்காரர்கள். 1945 மார்ச் மாறுதல் வரையில் சுயஆட்சி என்னும் அவா இந்து சீனத்தில் கனவினில் கருதினுலும் குற்றமாக மதிக்கப்பட்டு வந்தது.

கொச்சின் சைனுவின் மேற்கே, திராவின், சொக்த்ரான், பக்ளீவ், சொடக் ஜில்லாக்களில் சுமார் மூன்று லட்சம் கம்போஜியர்களேயும், கிழக்கே கொஞ்சம் மோய்க்காரர்களேயும் தவிர மீதி பெரும்பான்மையான சுதேசியினர் அன்னுமியர்களாவர். சீனர்களும் பிரஞ்சுக்காரர்களும் சற்றேறக்குறைய எல்லா நகரங்களிலும் பரவியிருக்கிறனர்.

கல்கத்தா, இரங்கூன் நகரங்களைப் போல் செய்கோனும் முக்கியமான மிக்காங் நதிக் கரையில் அமைக்கப்படாமல், டொங் நாய் நதியைச் சேர்ந்த செய்கோன் ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டுள்ள அழகிய சிறு பட்டணமாகும். இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள சோலன் நகருடன் செய்கோன் இப்போது இணைக்கப்பட்டுள்ளது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னுல் செய்கோனில் கோட்டை யொன்றும், சில வீதிகளுமே இருந்தன. இன்று சோலனேச் சேர்ந்து அதில் சுமார் மூன்றரை அல்லது நான்கு லட்சம் ஜனங்கள் வசித்து வருகின்றனர்; கீழாசியாவில் பிரஞ்சு ஆதிக்கத்தின் கேந்திரஸ்தானமாகும் செய்கோன்.

அதில் சோலை நிரம்பிய நேரான வீதிகள்; அவ் வீதிகளும் இரவில் பல விளக்குகளால் பிரகாசமாய் அலங்கரிக்கப்பட்டுள்ளன. நகரின் இடையிடையேயுள்ள காலி

இடங்களில் பூஞ்செடிகளால் சிங்காரிக்கப்பட்ட மைதானங்கள். முனிசிபல் சேவையும் திருப்திகரமாயுள்ளது. வீடு, கடை முதலாளிகளுக்கு நகரசபையின் சுகாதார இலாக்கா ஓய்வு கொடுப்பதில்லை. "இவ்வளவு நாளைக்குள் வெள்ளை பூசு, குழாயைச் சீர்செய், கக்கூஸை கவனி, இடிந்த சுவரைக் கட்டு" என்றிவ்வாறெல்லாம் நகரசபை ஆபீசிலிருந்து அடிக்கடி தாகீதுகளை முதலாளிகளுக்கு அனுப்பிக் கட்டாயம் செய்துவருவதால், இந்நகரம் சற்று செம்மையாக இருக்கிறது. வீட்டு முதலாளிகளின் இஷ்டத்திற்கு விட்டு விடுவோமானால் அவர்கள் வாடகையிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பார்களென்றும், ரிப்பேர் வேலையைச் சரிவர கவனிக்க மாட்டார்களென்றும், கண்டிப்பான தூண்டுதலின்றி நகர வாழ்வு மேம்பாடடையாதென்றும் பிரஞ்சுக்காரர்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அநேக மாடிகள் வைத்துக் கட்டிய பெருங் கட்டிடங்களும், புராதன சரித்திர சின்னங்களும் செய்கோனில் இல்லையெனினும், அது ஒரு நவீன சிறு நகரமாகும். விசாலமான பூங்காவனத்திலிருக்கும் கவர்னர் ஜெனரலின் மாளிகை, அதன் பக்கத்திலுள்ள நீதிமன்றம், கூத்துமேடை, பெரிய மாதா கோயில், இந்து சீன பாங்க் கட்டிடம், சுங்க வரி ஆபீஸ், வியாபாரிகளின் கழகம், பெரிய கோட்டை, பெரிய மார்க்கட்டு, நகரசபை, செயிண்ட்பால் ஆஸ்பத்திரி, பள்ளிவாசல், ஹிந்து கோயில்கள், கிறிஸ்துவ மடங்கள், கல்லூரி முதலியவை முக்கியமான கட்டிடங்களாகும். பிரஞ்சு கலோனிய ஆட்சி முறையில் முக்கியத்துவம் வகிக்கும் சிறைகளில் முக்கியமான சிறையொன்று எல்லோரையும் அச்சமுறுத்துவது போல் நகரின் நடுமத்தியில் கவர்னர் வீட்டிற்கடுத்தாற்போல் அமைந்துள்ளது.

வீடுகளை அழகாகக் கட்டி ஜோடிப்பதிலும், கோண லின்றி நேராக வீதிகளை யமைப்பதிலும், மற்றும் பல வகைகளில் நகரங்களை அலங்கரிப்பதிலும் பிரஞ்சுக் காரர்கள் திறமைசாலிகள். செய்கோனையும் அது போலவே நகர வருவாய் இடங்கொடுக்குமளவு சிறப்பித் துள்ளார்கள். இதர நகரங்களைப் போல் இங்கும் ஏழை கள் வாழும் சேரிகள் இருக்கத்தானிருக்கின்றன. ஆற்று ஓரமாக ஆயுதசாலை (ஆர்சினல்)யும், பக்கத்தில் நந்த வனமும் இருக்கின்றன. நந்தவனத்திலுள்ள மியூசியத் தில் மாஜி சம்ப ராஜ்யத்தில் பரவியிருந்த ஹிந்து மத சின்னங்களான கணேசர், விஷ்ணு, சிவன் முதலிய விக் கிரகங்கள் உள. "கருந்தாய்" என்று அன்னுமியர் களால் பூஜிக்கப்படும் காளியம்மன் கோயில்களும், பாழடைந்த சிவன் கோயில்களும் அன்னும் கடற்கரை யோரமாக, பிரசித்திபெற்ற சம்ப ராஜ்யத்தின் ஞாபகச் சின்னங்களாக இன்றும் இருந்து வருகின்றன. ஞாபக சின்னங்களைப் பற்றிப் பேசும்போது செய்கோனில் "கப்பித்தான்" தோட்டமென்ற ஒரு தோட்டத்திலிருக் கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று என் ஞாபகத்திற்கு வரு கிறது. இதன் விருத்தாந்தங்களை இதுவரையில் சரித்திரா சிரியர் யாரும் ஆராய்ச்சி செய்ததாய் எனக்குத் தெரிய வில்லை.

கல்வெட்டின் வாசகம் வருமாறு :—

"அர்சந்தர மகாருஜன் சூளயக (1111) ஆண்டு அன்னும் தேசத்தில் வந்து காடுச்சாம் தேசம் சுத்தினது.

காடு சுத்தும்போது இந்த இடமாகிறது கோயிலாக இருந்தது.

பூசை செய்து காணிக்கை
(கையொப்பம் புரியவில்லை)"

என்று குழந்தைகள் எழுதுவதைப் போன்று கோணல் மாணலாய் அதில் வெட்டியிருக்கிறது. நான் விசாரித்தளவில் அது உண்மையான புராதனக் கல் வெட்டேயென்றும் குடும்ப பரம்பரையாகத் தங்கள் வசம் அது இருந்துவருவதாயும் தோட்டத்தின் முதலாளி யான அன்னுமியர் என்னிடம் கூறினர்.

வேறு தமிழ்க் கல்வெட்டுகள் எதுவும் இதுவரையில் இந்துசீனத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. மேற்குறிப்பிட்ட கல்வெட்டு உண்மை யானதா, புராதனமானதா அல்லது போலிக் கல்வெட்டா வென்று நானறியேன். இந்திய ஆராய்ச்சியாளர்கள் இக் கல்வெட்டை கவனித்து ஆராயும் பொருட்டு ஈண்டு குறிப்பிட்டுள்ளேன்.

செய்கோன் துறைமுகப் பகுதியில் செய்கோன் ஆறு சுமார் 1300 அடி அகலமாயும், 30-லிருந்து 50 அடி ஆழமாயுமிருக்கிறது. வியாபாரத் துறைமுகத்திற்கு வடக்கே போர்த் துறைமுகமுள்ளது. தென் சீனக் கடலி லிருந்து காப் செயிண்ட் ஜாக்ஸ் வழியாக ஆற்றினுள் நுழைந்து சுமார் நான்கு மணிநேரம் வளைந்து வளைந்து யாத்திரை செய்தபின் செய்கோனை அடையலாம். இந்து சீனத்தின் பிரதான துறைமுகமான செயகோனிலிருந்து அரிசி, சோளம், ரப்பர் முதலிய மூலப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்கனவே செய்கோனி லிருந்த விமான தளத்தை ஜப்பானியர் பெரும் சிரமத் துடன் விஸ்தரித்துள்ளபடியால், தென் கிழக்கு ஆசி யாவிலுள்ள முக்கிய விமானதளங்களில் செய்கோன் தளமும் ஒன்ருகும்.

அன்னும் பாஷையில் "சாஹ்வெங்" (சோலன்) என்ருல் பெரிய மார்க்கட்டு. இப் பெயர் சோலனுக்கு

முற்றிலும் பொருத்தமாகும். அங்கு பல மைல்கள் தூரத்திற்கு குறுக்கு மறுக்காய் ஓடும் கால்வாய்களின் கரையில் பெரிய நெல் ஆலைகள் உள. வருடா வருடம் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 15 லட்சம் டன் அரிசியும் சோலனிலிருந்து படகுகளில் ஏற்றப்பட்டு செய்கோன் துறைமுகத்திற்கு அனுப்பப்படுகின்றன. சீனர்கள் குழுமியிருக்கும் நகரம் சோலன்; சீன நகரங்களைப் போன்ற தோற்றம்.

கால்வாய்களில் தங்கியிருக்கும் படகுகளிலிருந்து காலையிலிருந்து மாலை வரையில் மூட்டைகளை இறக்கிய வண்ணமும் அவைகளில் மூட்டைகளை ஏற்றிய வண்ணமும்தான். ஏகசந்தடியாயிருக்கும். கால்வாய்களை விட்டு உட்புறஞ் சென்றால் சிறு கடைகளையும் பெருங் கடைகளையும் சகலவிதமான தொழில் ஸ்தாபனங்களையும் காணலாம். சகலமும் சீன மயமாயிருக்கின்றன.

செய்கோனைப் போல் இரவு எட்டு மணிக்கெல்லாம் சோலன் ஊரடங்கி உறங்குவதில்லை. மூன்றும் சாமம் வரையில் தெருக்களிலும், ஓட்டல்களிலும், களியாட்ட ஸ்தலங்களிலும் ஜே ஜே என்று நிரம்ப நின்று தின்று, ஆடிப்பாடிக் களைத்துப்போன பின்பே சோலன்வாசிகள் உறங்கச் செல்லுகின்றனர்.

செய்கோன்—சோலனில் யுத்த காலத்திற்கு முன் இருந்துவந்த நிலைமையை மேலே குறிப்பிட்டேன். 1939-ல் போர் துவக்கியதும் "ப்ளாக் அவுட்" முறை அனுஷ்டிக்கப்பட்டது. வெளிச்சங்களை இழந்து இருண்டிருந்த தெருக்கள் விதவைகள்போலாயின. 1940 கடைசியில் சயாம் எல்லைத் தகராறு முற்றிப் போகவே நகரெங்கும் "டிரன்சுகள்" தோண்டப்பட்டன. 1941 மத்தியில்

ஜப்பானியர்கள் கொச்சின்சைனுவில் பிரவேசித்து மிகுந்த பரபரப்புடன் யுத்தத்திற்குத் தயாரானுர்கள். அவர்களுடைய வருகைக்குப் பின் இந்துசீனத்தில் விலைவாசிகள் உயர்ந்ததுடன் வீடுகளும் கிடைக் காமல் கிராக்கியாயின. ஆனால் யுத்தத்தின் இறுதி ஆறு ஏழு மாதங்கள் வரையில் விமான பயம் தென் இந்துசீனத்திலிருந்ததில்லை. பொருளின்மை, போக்கு வரத்தின்மை, தகாத விலை உயர்வு இவை போன்ற கஷ்டங்கள் இருந்தனவே யொழிய தென் இந்து சீனத்தில் உணவுப் பஞ்சமோ, அல்லது விமானம் பொழியும் திகிலும், நாசமுமோ இருந்ததில்லை. கணக்கின்றி நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு செலாவணியிலிருந்தன. ஈவு இரக்கமற்ற வியாபாரிகள் பொதுமக்களை ஏழைகளாக்கித் தாங்கள் குபேரர்களானுர்கள். கிராமங்களில் உடுத்தத் துணியில்லாமல் ஏழைகள் பரதவித்தனர். யுத்த முடிவில் விமானப்போரும் தென் இந்துசீனத்தை அணுகியது. பள்ளமும் படுகுழியுமாயிருந்த வீதிகளில் வர வர ஜப்பானிய ராணுவக் கார்களே காணப்பட்டன. கார் ஓடிந்தால் எதிரியின் கார் தானே ஓடுகிறதென்று பிரஞ்சுக்காரர்கள் வீதிகளை செப்பனிடவேயில்லை.

1944 டிசம்பரிலிருந்து விமானப் படையெடுப்பால் நகர அமைதி சீர்குலைந்தது. ஆங்காங்கு கட்டிடச் சேதமும், பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டன. பத்து இருபது விமானங்கள் சில தடவைகள் தாக்கிய போதே பெரும் சேதம் விளைந்திருக்கிறதென்றால் 500, 1000 விமானங்கள் வாரம் விடாமல் பெர்லின், டோக்கியோ நகரங்களைத் தாக்கியபோது எத்தகைய சேதம் ஏற்பட்டிருக்கும்! ஆரம்பத்தில் பிரஞ்சுக்காரர்களும் சீனர்களும் அபாயச்சங்கை அலட்சியஞ் செய்துவந்தனர். நேச விமானங்கள் தங்கள்மீது குண்டுகள் வீசாவென்று

வீட்டை விட்டுப் போகாமல் அலட்சியமா யிருந்துவந்தார்கள். ஆனால் ஏதோ தவறுதலினால் பிரஞ்சுப் படைகள் தங்கியிருந்த பெரிய கோட்டையிலும் சோலனில் சீனர்கள் வசிக்கும் பகுதியிலும் குண்டுகள் விழுந்து சீனர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் பெருஞ் சேதம் விளைந்தமையால், பின்பு எல்லா வகுப்பினரும் அபாயச் சங்கைக் கேட்டவுடன் திகிலடைந்தனர். அவர்களுடைய பரபரப்பையும், திக்கற்ற ஓட்டத்தையும், அவர்கள் முகத்திலிருந்த ஆருக் கவலையையும் விவரித்தலரிது.

சங்கு சப்தத்தைக் கேட்டவுடன் ஆடுமாடுகள் மருண்டு ஓடுவதுபோல், அவர்கள் குழந்தை குஞ்சுகளை வாரியணைத்துக் கொண்டு சந்து பொந்துகளிலும் ட்ரன்சுகளிலும் பதுங்கிக் கொண்டார்கள். நாலைந்து நிமிடங்களுக்கெல்லாம் நகர் "ஓ" வென்று நிசப்தமாகிவிடும். யமதூதர்களும் நகரை விரைந்து சூழ்ந்து கொண்டார்கள். அவர்க்ள் நகரவாசிகளில் யார் யாரை அன்று கொள்ளை கொண்டுபோக எண்ணியுள்ளார்களோ வென்று ஒருவருமறியார். பால் குடித்து வாயுலராத சிசுவோ, மழலைச் சொற்களைப் பேசும் குழந்தையோ, அல்லது காளையோ அல்லது தள்ளாத வயோதிகர்களோ, நேச நாட்டாரோ, விரோதிகளோ அல்லது எல்லோரையும் சேர்த்தோ யாருக்குத்தான் அன்று சீட்டுப் போட்டுள்ளதென்று ஒருவருமறியார். ஒவ்வொரு தடவையும் குழியில் இறங்கி ஏறினால் ஒரு புனர் ஜென்மமாகவே ஜனங்கள் கருதிவந்தார்கள். குழியிலிருக்கும் போது மறந்துபோன ஹிந்து மந்திரங்களும் கிறிஸ்துவ மந்திரங்களும் குரான் வாக்கியங்களும் மிக ஆர்வத்துடன் ஜெபிக்கப்பட்டன. படையெடுப்பால் சேதமடைந்த இடங்களைப் பார்க்கும்பொழுது குடல் நடுங்குந் தோற்றமா யிருந்தது.

தலை ஒருபுறம், கால் நாற்பது ஐம்பது மீட்டர்களுக் கப்பால், கைபோன இடந்தெரியாது இவ்வாறு உடல் உருக்குலைந்து கிடக்கும்.

ஒவ்வொரு படையெடுப்புக்குப் பின்பும் காய மடைந்தவர்களும் குற்றுயிராய் உள்ளவர்களும் நூற் றுக்கணக்கில் ஆஸ்பத்திரிகளில் கொண்டு சேர்க் கப்பட்டு வந்தார்கள். இக் கோர சம்பவங்களைப் பார்த்து மருண்டுபோன நகரவாசிகளும் நாளுக்குநாள் நகரைக் காலி செய்துவந்தார்கள்.

அத்தியாயம் 8

சமூக வாழ்க்கையில் பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலே யர்களைப் போல், தனித்து வாழாமல், சுதேசிகளுடன் சகஜமாய் கலந்து வாழ்கின்றனர். அவர்கள் யாதொரு வித்தியாசமுமின்றி சுதேசிகளுடன் கலந்து புசிக்கிறார் கள்; உரையாடுகின்றனர்; சுதேசிப் பெண்களை மணம் புரிந்து கொள்கின்றனர். அவர்களிடம் நிறத் திமிர் பார்ப்பதரிது.

அவர்கள் சல்லாபமாகவும் சந்தோஷமாகவும் வாழும் இயற்கை கொண்டவர்கள். பிரஞ்சு மாதர்கள் மிக அழகாகவும் நூதனம் நூதனமாகவும் ஆடைகளை உடுத்திக் கொள்வதிலும், தொப்பிகளைத் தயாரிப்பதி லும், பவுடரைப் பூசி சிங்காரித்துக் கொள்ளுவதிலும் உலகப் பிரசித்தி பெற்றவர்களாதலால் வெகு தொலையி லுள்ள இந்துசீனத்திலும் அதன் வாடை நிரம்ப வீசியுள்ளது. ஆண் பெண் இரு சாராரும் உல்லாசமாக வாழ விரும்புகின்றனர். வேலை பார்க்கும் நாட்களில் ஆங்காங்குள்ள "கபே"க்களின் வெளித் தாழ்வாரத் தில் மாலையில் நெடுநேரம் அமர்ந்து மதுபான மருந்தி போஜனமும் செய்கிறார்கள். தனவந்தர்கள் ஓய்வு நாட் களில் கடற்கரை, மலை வாசஸ்தலம், உள் நாடுகளி லுள்ள தோட்டங்கள் இவைகளுக் கேகி இளைப்பாறி வருகிறார்கள்.

தாங்கள் தயார் செய்யும் மது, போஜன வகைகளில் பெரும் பெருமை கொள்ளுபவர்கள். இருப்பினும் இந்தி யப் புலால் வகைகளிலும், சீன சூப்பிலும் பிரேமை கொண்டுள்ளார்கள்.

பொதுவாக அவர்கள் நல்ல மட்டு மரியாதையுடையவர்கள். உபசார மொழிகளும் அவர்களிடமதிகம். அவர்களுடைய பாஷையும் காதுக்கு அருவருப்பாயில்லாமல் இனிமையாயுள்ளது. விரோதியையும் அவர்கள் மலர்ந்த முகத்துடன் வரவேற்றுப் இனிய மொழிகளைப் பகருகின்றனர். கபடமாய் சமயத்துக்குத் தக்கவாறு நடிக்கின்றனரென்று கொள்ளலாகாது. இளமையிலிருந்து பெற்றோர், சிநேகிதர்களைப் பார்த்துப் பயிலும் நீடித்த பழக்கமே இதற்குக் காரணம். ஒருவரை யொருவர் சந்திக்கும் போது அவர்கள் கைகுலுக்கி சுகமறிவது பழக்கம். இப் பழக்கம் இந்தியர்கள் உள்பட இந்து சினத்திலுள்ள இதர ஜாதியினர் மத்தியிலும் சர்வ சகஜமாய்ப் பரவியுள்ளது. மேலும் தாங்கள் பெறும் சிறு உதவிகளுக்குக் கூட அவர்கள் உடனே நன்றி யறிதலைத் தெரிவிக்கின்றனர். ஆங்கிலேயர், ஜப்பானியர், சயாமியர், அன்னமியர் ஆகியவர்களும் அவ்வாறே செய்து வருகின்றனர். நமது தமிழ் மொழியிலும் நன்றியறிதலைக் குறிப்பிடுவதற்கு தனிப் பதமொன்றை வகுத்து அதை நாம் எல்லோரும் கையாண்டு வந்தால் பெருமையுண்டு. தங்கள் ஆதிக்கத்தை உலகில் பெருக்கிக் கொள்ளுவதற்குச் சென்ற நூற்றுண்டில் பிரஞ்சுக்காரர்கள் அனுஷ்டித்து வந்த வெறுப்பிற்குரிய முறைகளையும் உபாயங்களையும் நாம் கவனியாமல் விலக்கி விடுமோனல் மற்றப்படி அவர்கள் சிறந்த நாகரிகம் படைத்தவர்களென்றும் சரித்திர காலப் பெருமைவாய்ந்தவர்களென்றும் எல்லோருக்கும் தெரியும். கல்வி கேள்விகளினும் விஞ்ஞான சாத்திரங்களிலும் அவர்களுக்கு மிக்க ரத்தை யுண்டு. வாழ்க்கைத் துறைகளிலுள்ள பல கோணல் மாணல்களையும் சிக்கல்களையும் சீர் செய்யும் சுபாவமுடையவர்களென்று சொல்லப்படுகிறது. புதுப் புது

விஞ்ஞானப் புதுமைகளையும் புதுப் புதுக் கருவிகளையும் புதுப் புதுப் பொருட்களையும் கண்டுபிடிக்கும் சக்தி வாய்ந்தவர்கள்.

ஆங்கிலேயரின் இயல்பையும் பிரஞ்சுக்காரின் இயல்பையும் சீர்தூக்கி, பிரஞ்சு ஆசிரியர் விஞ்ஞோன் பின்வருமாறு எழுதியுள்ளார். பதத்திற்குப் பதம் மொழிபெயர்க்காமல் முக்கிய கருத்துக்களை மட்டும் தருகிறேன்:—

“பிரஞ்சுக்காரர் பிறருடன் சல்லாபமாய்ப் பழகி உரையாடுவர்; ஆங்கிலேயரோ நெருங்கிப் பழகாமல் தூரவிலகி நிற்பர். தமாஷாகவும் நையாண்டியாகவும் குத்தலாகவும் பிரஞ்சுக்காரர் பேசுவராயினும் அவர்களுடைய மனம் மட்டும் தங்கமானது. பிரசார மோகமும் அவர்களிடம் அதிகம். தங்கள் கருத்துக்களும் கூடுமானல் பழக்க வழக்கங்களும் அகிலமெல்லாம் பரவ வேண்டுமென்பது அவர்களுடைய அவா. பிரான்சில் புரட்சி ஏற்பட்ட காலத்திலும் பிரஞ்சு சாம்ராஜ்யம் தோன்றிய பின்பும் நவீன கருத்துக்கள், சட்ட திட்டங்கள், அரசியல் எல்லாம் பிரான்சிலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆங்கிலேயரின் இயல்போ வேறு விதமானது. அவர்கள் புறம் நோக்குவதில்லை; பொதுவாக உட் பார்வையுடையவர்கள். அவர்கள் சுய காரியப் புலிகள்; அகம் பாவிகள். அன்னியருடைய கருத்துக்களையும் மனோபாவங்களையும் அவர்கள் அறிய விரும்புவதில்லை. ஏதோ தீராப் பட்சம் அறிந்துகொள்ள வேண்டுமாயின் கஷ்டத்துடன் அறிந்து கொள்வர். அவர்கள் யாவரையுந் தாராளமாக வரவேற்பதில்லை. தீவு வாசிகளாகிய ஆங்கிலேயரைக் குறித்து எமர்சன் என்னும் அமெரிக்க

கவி 'ஒவ்வொரு ஆங்கிலேயனும் ஒரு தனித் தீவு' என்று ஒரு சமயம் கூறினார். தங்களுடைய இயல்பை யொட்டி ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்களைப் பார்க்கிலும் அதிகமாக, ஜாதி வேற்றுமைகளை உணர்கின்றனர். வாய் வேதாந்தத்தில் அவர்களுக்குப் பிடித்தமில்லை. காரியத்தில்தான் குறியுடைவர்கள்.

நூல் உபதேசங்களையும் கருத்துக்களையும் தர்க்க சாஸ்திரத்தின் முடிவுகளையும் கொஞ்சமும் பிறழாமல் அப்படியே நிறைவேற்றி வைக்க விரும்புவர் பிரஞ்சுக்காரர்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு சமயோசிதமாக விட்டுக் கொடுத்து காரியங்களை முடித்துக்கொள்வர். மனிதனுக்கு இயற்கை உரிமைகள் எதுவுமிருப்பதாக ஆங்கிலேயர்கள் கருதவில்லை. காலநிலையையும் சொத்துரிமைகளையும் தான் அவர்கள் முக்கியமாக அனுசரித்து நடந்து கொள்வர்.''

இந்த உவமை முற்றிலும் உண்மையென வாசகர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இவ்விஷயத்தில் பிரஞ்சுக்காரரின் அபிப்பிராயமென்னவென்று குறிப்புக் காட்டவிரும்பினேன்.

ஐரோப்பாவில் ஜெர்மானியர்களும் ஆசியாவில் ஜப்பானியாகளும் ஆட்டு மந்தைகளைப் போல் சுய பகுத்தறிவின்றி அவர்களுடைய அரசாங்கங்களால் நடத்திச் செல்லப்பட்டார்களென்று பல புத்தகங்ளில் நாம் வாசித்துள்ளோம். அவர்கள் அரசாங்கம் இடும் கட்டளைகளை கண் மூடித்தனமாக நிறைவேற்றிவைப்பார்களென்றும், சுய பகுத்தறிவைச்சிறிதளவும் உபயோகிக்கமாட்டார்களென்றும், இயந்திரங்களைப் போல் மேலதிகாரிகளின் உத்தரவுகளைக் கடைப்பிடித்து நடக்கும் சுபாவம் வாய்ந்தவர்களென்றும் புத்தகங்களில் படித்துள்ளோம்.

தாங்கள் அவ்வாறு ஆட்டு மந்தை போல் நடந்து கொள்ளுவதில்லை யென்றும், தாங்கள் சுயவுரிமை பாராட்டுபவர்கள் என்றும் பிரஞ்சுக்காரர்கள் சொல்லிக் கொள்ளுகின்றனர். அவர்களுடைய கூற்று உண்மைதானு வென்று மதிப்பிடுதல் கஷ்டமாகும். ஏனெனில் "சுயவுரிமை வாதி" என்னும் பதத்தை அந்தந்த தேசத்திற்கும் அவரவர் இஷ்டப்படி பொருள் செய்து முடிவில் தங்களுக்கு அப் பெயரைச் சூட்டிக் கொள்ளுகின்றனர். ஜெர்மனியரைப் பற்றிக் காலஞ் சென்ற பிஸ்மார்கின் முறையீட்டை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். ஜெர்மானியர்கள் சுயவுரிமை வாதிகளென்றும், ஜெர்மன் சமுதாயத்தின் பொது நலன்களை அவர்கள் சற்றும் பொருட்படுத்தவில்லை யென்றும் அவர் முறையிட்டதுடன், பிரான்சிலும், இத்தாலியிலும். ஜெர்மனிக்கு நேர் மாருக, சுயவுரிமை வாதிகள் குறைவென்றும், சமுதாயவாதிகளே அதிகமென்றும் அவ்விரு தேசங்களிலும் சமுதாய நலன்களே கருதப்படுகின்றன வென்றும் ஒரு சமயம் அவர் வெளியிட்டார். இதிலிருந்து "சுயவுரிமை வாதி" என்னும் பதம் குறிப்பான ஒரு அர்த்தத்தைக் கொடுக்கும் பதமல்ல வென்று புலனாகிறது. கட்டாய ராணுவ முறையை வெறுத்து வந்த நாடுகள் முற்கூறிய நாடுகளில் சுயவுரிமை பிடுங்கப்படுவதாகக் கருதி வந்தன. இவ்வாறு பல தரப்பட்ட அபிப்பிராய மிருந்துவருவதால் ஒரு நாட்டினர் சுயவுரிமையைப் பாராட்டுபவர்கள் அல்லது பாராட்டாதவர்கள் என்று திட்டமாகச் சொல்லுவது கஷ்டமான விஷயமாகும். மேலும் இந் நூற்றுண்டில் உலக மெங்கும் அரசாங்கங்கள் போலீஸ், பாதுகாப்பு, வரி வசூல், நீதி பரிபாலனம் இம் முக்கிய அலுவல்களல்லாது வேறு பல வகைகளிலும பிரைஜகளின் அன்றுட வாழ்வில்

குறுக்கிடுகின்றன. நாகரீகமும், செல்வாக்கும் வலிமையும் ஒரு தேசத்திற்கு அதிகரிக்க அதிகரிக்க ஆங்கு அரசாங்கத்தின் தலையீடும் அதிகரிக்கின்றமையால் அந்நாடு சுயவுரிமை வாதிகளடங்கிய நாடா இல்லையாவென்று திட்டமாக உரைப்பது துர்லபமாகும். பிரான்சில் சர்க்காரின் தலையீடு ஜா ஜதியே யொழியக் குறைவில்லை. குறைவாயிருப்பின் இக்காலத்தில் மேன்மையாக வாழமுடியாது. என்னுடைய சிறு அனுபவத்தில் தமிழர்கள் தான் கட்டுக்கோப்பாய் வாழாமல் விடாப்பிடியாய் சுயவுரிமையைப் பாராட்டுவதாகத் தோன்றுகிறது.

பிரஞ்சு மாதர்கள் ஆடவர்களைப் போல் சகல உரிமைகளையும் பெற்றுள்ளார்கள். அவர்கள் சம அந்தஸ்துடன் ஆண்களைப் போல் சுதந்திரமாக வாழ்ந்து வருகிறார்களென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. பெண்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் செலுத்தப்படுகிறது. ஆனால் சட்டசபைக்கும் முனிசிபல் சபைகளுக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அங்கத்தினராகவிருக்கும் உரிமையும் இந்த மகாயுத்தத்தின் முடிவு வரையில் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மாதர்கள் அரசியலில் தலையிடக்கூடாதென்றுவெகுகாலம் வரையில் பிரான்சில் கருதப்பட்டுவந்தது. பிரஞ்சுக்காரர்களிடையே மண உறவும் குடும்ப பந்தமும் நம்மைவிடப் பன்மடங்கு குறைவு. பிரஞ்சுக்காரர்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக் பிரிவைச் சேர்ந்தவர்கள். பாதிரிகளின் செல்வாக்கு இந்து சீனத்தில் அதிகமாயுள்ளது. இந்துசீனத்தை பிரஞ்சு அரசாங்கம் கைப்பற்ற அவர்கள் உதவியாயிருந்த காலந்தொட்டு வெறும் மதக்குருக்களாய் மட்டுமில்லாமல் அரசியல் விவகாரங்களிலும் தலையிடுகின்றனர். நெப்போலியன் பிறந்த கார்சிகா

தீவைச் சேர்ந்தவர்கள் இந்து சீனத்தில் போலீஸ், ஜெயில் இலாக்காக்களிலும் மாலுமிகளாகவும் பலர் இருக்கின்றனர். அவர்கள் மற்ற பிரஞ்சுக்காரர்களைப் போல் "நாசுக்"காரர்களில்லை. முரட்டு சுபாவமுடைய வர்கள். அவர்களுக்குள் பேசிக்கொள்ளும் பேச்சும் பிரஞ்சு பாஷையல்ல. அதேபோல் "காங்கோனை"ச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பாஷை யும் ஒரு தனிப் பேச்சாகும்.

பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் அளவு விடா முயற்சியுடையவர்களல்ல. இச் சண்டையில் உதைக்கு மேல் உதை வாங்கியும் ஆங்கிலேயர்கள் "புல் டாக்" குகளைப் போல் பல்லைக் கடித்துக் கொண்டு மிக வும் நெருக்கடியான நிலைமையை வெற்றிகரமாக சமா ளித்துக் கொண்டனர். பிரஞ்சுக்காரர்களோ, நாற்பது நாட்கள் சண்டையில் அதே எதிரியிடம் சரண் புகுந் தனர். தீவாயிருந்ததால் பிரிட்டன் எதிரியின் படை யெடுப்பிலிருந்து தப்பிக் கொள்ளும் இயற்கை வசதியைப் பெற்றிருந்த தெனினும், பிரான்ஸின் வீழ்ச்சிக்கும் இங்கி லாந்தின் பிடிவாதத்திற்கும் அது மட்டும் முழுக் காரண மாகாது. பிரஞ்சுக்காரர்களைவிட ஆங்கிலேயர்களிடம் ஒற்றுமையும் விடா முயற்சியும் அதிக மிருப்பதாகவே நாம் உணர வேண்டியிருக்கிறது. பல வருடங்களாகவே பிரான்சில் பிரிட்டனைவிடப் கட்சிப் பிளவுகளும், கட்சிக் பிணக்குகளும், கொள்கை முரண்பாடுகளும் அதிக முள்ளன. குறிப்பிட்ட எந்தக் கட்சிக்கும் பிரஞ்சு பார்லிமெண்டு சபையில் பூரண மெஜாரிட்டியில்லாத தால், கூட்டு மந்திரி சபைகளே நியமிக்கப்பட்டு வந்தன. அவைகளும் நெடு நாள் நீடித்திருக்கவில்லை. ஒன்றின் பின் ஒன்ருய் அமைக்கப்பட்ட பற் பல மந்திரி சபைகள் தொடர்ச்சியான திட்டங்களைக்

கையாள மார்க்கமில்லை. ஆனால் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களைப் பார்க்கிலும் தாங்கள் செல்லுமிடங்க ளெல்லாம் (ஆப்ரிக்காவோ, ஆசியாவோ, அமெரிக் காவோ) சுதேசிகளுடன் சகஜமாய்ப் பழகி, பல வித சீதோஷ்ண நிலைகளையும் பொறுத்துக் கொள் கின்றனர்.

பிரஞ்சு உத்தியோகஸ்தர்களுக்கு இந்துசீனத்தில் கொழுத்த சம்பளம் கொடுபட்டு வந்தது. அதே வேலை பார்க்கும் அன்னமியனைவிட பிரஞ்சு ஊழியன் மூன்று நான்கு பங்கு அதிகமாகச் சம்பளம் வாங்கி வந்தான்.

பிரஞ்சு வியாபாரிகளுக்கும், சம்பளகாரர்களுக்கும் தோட்ட முதலாளிகளுக்கும், பாங்குகளுக்கும், பெரிய கம்பேனிகளுக்கும் இந்து சீனத்தில் மிகுந்த சலுகை காட் டப்பட்டது. காலனிகளும் "ப்ரொடெக்டரேட்"களும், "மான்டேட்"களும் ஆளுபவர்களுக்கு இந்த உதவியைக் கூட செய்யாவிட்டால் வேறு எதற்காகத்தான் உள? சர்க்கார் உத்தியோக சலுகையில் பிரஞ்சிந்தியர்களும் சிறிது பங்கு பெற்றிருந்தார்கள்.

சமூகத் துறையில் பிரஞ்சுக்காரர்கள் எவ்வளவு சகஜமாயிருக்கிறார்களோ அவ்வளவுக்கு அரசியல் துறை யில் குரூரமானவர்கள்; பிரான்சையும் அல்லது மற்ற பிரஞ்சுக் காலனிகளையும் நான் ஈண்டு குறிப்பிடவில்லை. இந்து சீனத்தில் இருந்த பிரஞ்சு ஆட்சி முறையை மட்டும் குறிப்பிடுகிறேன். தனிப்பட்ட முறையில் சிநேகிதரா கவோ, குடும்பத் தலைவனாகவோ, அலலது முதலாளியா கவோ, பல பிரஞ்சுக்காரர்கள் நல்ல விதமாக நடந்து கொண்டாலும் அவர்கள் இந்துசீனத்தில் அமைத்திருந்த அரசியல் இயந்திரம் மோசமானது. "சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம்" என்னும் ஊக்கமளிக்கும்

மொழிகள் அரசாங்க ரிக்கார்டுகள் அனைத்திலும் காணப்பட்டாலும் அம் மூன்றும் இந்து சீனத்தில் நடைமுறையில் இருந்ததில்லையென்று குழந்தைகள் கூடச் சொல்லும். 18-வது நூற்றுண்டின் இறுதியில் பிரஞ்சு தாயகத்தில் புரட்சி செய்த பிரஞ்சு லட்சியவாதிகளுக்கும் இந்து சீனத்தில் குடியேறியுள்ள சந்ததியார்களுக்கும் அளவுகடந்த வித்தியாசமுளது.'' அதே இலட்சியவாதிகள்தான் இன்றும் பிரான்சிலும் அதன் காலனிகளிலும் உழைத்து வருகிறார்கள்; அதே இலட்சியங்களைத்தான் பிரான்ஸ் இன்னும் கடைப்பிடித்து வருகிறது என்று நாம் மதிமோசம் போகலாகாது. பிரிட்டனைப்போல் பிரான்சும் ஒரு நூற்றுண்டாக சாம்ராஜ்யப் பேராசையில் ஈடுபட்டு உலகத்தில் இரண்டாவது சாம்ராஜ்யத்தையும் தனக்குச் சம்பாதித்துக் கொண்டுள்ளது. சாம்ராஜ்யக் கனியைச் சாப்பிட்ட பிறகு, பிரஞ்சு மாதாவுக்கு சுதந்திர, சமத்துவ, சகோதரக் கொள்கையில் பிடித்தமில்லாமற் போய் விட்டது.

ஏறக்குறைய 60 வருட ஆட்சிக் காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இந்து சீனத்திற்கு சில நன்மைகள் செய்துள்ளார்களென்பது மறுக்கமுடியாத விஷயமாகும். ஆங்கு போக்குவரத்து சாதனங்களையும், வேளாண்மையையும், உலோக உற்பத்தியையும், கல்வியையும், சுகாதார வைத்திய வசதிகளையும் அவர்கள் அபிவிருத்தி செய்துள்ளார்கள். ஒருவகையில் நாகரிகச் சிறப்பு வாய்ந்த லட்சக்கணக்கான இந்துசீனர்கள் தங்களைவிட நிர்வாகத் திறமையிலும், போர் சாதனங்களிலும், கல்வி கேள்விகளிலும் சிறப்பான பிரஞ்சுக்காரர்களுடன் கலந்து உறவாடும் அவசியம் ஏற்பட்டது. இதன் பயனை அவர்கள் நன்மை பெற்றுள்ளார்கள் என்பதில் ஐய

மில்லை. இவ்வாறு இந்து சீனத்தில் நிலவியிருந்த பிரஞ்சு ஆட்சி நிர்வாகத் திறமைவாய்ந்ததெனினும் அது பொது ஜன ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. ஆங்கு வரி வசூல் முறை ஏழைகளுக்கும் "சுதேசிகளுக்கும்" பாதகமாயிருந்தது. சுதேசிகளை "ஆதரிப்பவர்களென்று" தமக்குத் தாமே பெயர் சூட்டிக்கொண்ட பிரஞ்சுக்காரர்கள் தங்கள் சுயநலனை முழு கவனத்துடனும் ஆதரித்துவந்தார்களே தவிர, ''ஆதரிக்கப்பட்டவர்களின்' நலனைப் பெரிதும் கவனித்தார்களில்லை. பிரான்சின் பொருளாதார, அரசியல், ராணுவ தேவைகளைப் பொறுத்தே இந்துசீன கலோனியல் ஆட்சி நடைபெற்று வந்தது. பேச்சுச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், சங்கங்களை அமைத்துக்கொள்ளும் சுதந்திரம், பிரயாணச் சுதந்திரம் இவைகளுக் கெதிராக இந்து சீனத்தில் சமாதான காலத்திலும் எவ்வளவோ தடைகளிருந்து வந்தன. பிரஞ்சுக்காரர்கள் கேட்கும் வரி வாய்தாக்களைக் கொடுத்தும் அவர்கள் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தும் அவர்கள் சிரமம் பாராது தங்களைப் பண்படுத்த உவந்தமைக்கு இந்து சீனவாசிகள் கடவுளுக்கு அனுதினமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்களென்றும் பிரஞ்சு அரசாங்கம் கருதி வந்தது.

"பிரான்ஸ் தாயகம், காலனிகள் பிள்ளைகள்" என்று பிரஞ்சுக்காரர்கள் அடிக்கடி பேசிக் கொள்வது வெறும் உவமையல்ல. கிரியாம்சையில் அமுலி லிருந்து வரும் மூல கலோனியல் கொள்கையாகும். பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களைவிடப் பன்மடங்கு அதிகமாகக் காலனிகளைத் தங்கள் தாயகத்துடன் இணைத்துள்ளார்கள். "தாய் பக்தி" குழந்தைகள் மனத்தில் வளரும் பொருட்டு பிரஞ்சுத்தாய் தன் பெருமையையும் சிறப்பையும், தன்னுடைய நாகரிக வாழ்வையும் பற்றிக் குழந்தைகளுக்கு போதித்து

வருகிருள். அண்டை வீடுகளைப் பார்த்து தேசிய லட்சியத்தைக் கடைப்பிடித்து, குழந்தைகள் குடும்பக் கலகம் செய்யாம லிருக்கும் வண்ணம், இம் மகா யுத்தம் துவக்கும் வரையில், மிகவும் ஜாக்கிரதையாய் கண்காணித்து வந்தாள். இனிய வார்த்தைகளில் அடங்கி ஒடுங்க மறுத்து வந்த குழந்தைகளை, பெற்றோரின் தொன்று தொட்ட உரிமையான தண்டமுறையைக் கூச்சமில்லாமல் உபயோகித்துவந்தாள். குழந்தைகள் உழைத்துத் தாயின் காணிக்கையை மாதம் வருடம் தவருமல் செலுத்தி வருவதில் மிகவும் எச்சரிக்கையா யிருந்தாள். தாயகத்தைப் போலவே குழந்தைகளின் வீடுகள் அமைப்பும். தயாயுத்திலுள்ள நெப்போலியன் இயற்றிய சட்ட திட்டங்களே, காலனிகளில் சில மாறுதல்களுடன் அமுலிலிருந்து வருகின்றன. புதிதாக இயற்றப்படும் சட்ட திட்டங்களும் ஏறக்குறையகாலனிகளெங்கும் அமுலுக்கு வந்தன. காலனிகளடங்கியபிரஞ்சுக்குடும்பத்தில் அயல்நாட்டுச் சரக்குகள் உட்புகாவண்ணம்உயர்ந்த சுங்கவரிகள்விதிக்கப்பட்டன. எவ்விதத்திலும் தாயின் சுகமும் பலமும் பாதிக்கப்படாமல் கவனமாய் பார்த்துக் கொள்ளப்பட்டது. குழந்தைகள் தாயிடம் பெற்ற சில சலுகைகளில் தாயகத்திலுள்ள சட்டசபைகளுக்கு (கீழ் சபை "ஷாம்ர் தே தெபுத்தே" யென்றும் மேல் சபை "செனட்" யென்றும் அழைக்கப்படுகின்றன) பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பும் சலுகை யொன்ருகும், இவ்வாறு பிரஞ்சு சாம்ராஜ்யத்தில் ஒரு உறுப்பு வேறு உறுப்புக்களுடன் கட்டவிழா வண்ணம் பிணைக்கப் பட்டிருந்தது. நடை உடை பாவனை, கல்வி, சட்டம், பாஷை, கலாசாரம் ஜீவ லட்சியங்கள் இவைபோன்ற முக்கிய விஷயங்களில் சுதேசிகளை பிரஞ்சு மயமாக மாற்றுவதன் மூலம், அவர்கள் புரட்சி செய்யாமல் தடுத்துக் கொள்ளலா

மென பிரஞ்சுக்காரர்கள் பெரும் முயற்சி செய்ப வர்கள். சுதேசிகளை பிரஞ்சு மயமாக்கும் முயற்சி சில பகுதிகளில் எவ்வளவு வெற்றிபெற்றுள்ளதென்று சர். ஹெங்கத் பெல் என்னும் ஆங்கில ஆசிரியர் Foreign Colonial Administration in the Far East என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். பிரஞ்சுகாரர்கள் 18 வது நூற்றுண்டில் சில வருடங்களுக்கு மேற்கிந்திய தீவுகளை ஆண்டு வந்தனர். அத் தீவுகள் இப்போது சுமார் 150 வருடங்களாக ஆங்கிலேயர் வசமிருப்பினும் அத்தீவு வாசிகளிடையே இன்னும் பிரஞ்சு பழக்க வழக்கங்கள் நீடித்துள்ளனவாம். மேற்கிந்திய தீவுகளை விட அவர் மொரீஷஸ் (மோர்சி) தீவை உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார். இத்தீவு இப்போது பிரிட்டிஷ் ஆட்சியி லிருப்பினும் பிரஞ்சு சட்டதிட்டத்தையும் பிரஞ்சு பழக்க வழக்கங்களையும் இன்றும் கடைப்பிடிக்கிறது. ஆனால் இம் மகா யுத்தம் சுதந்திர தாகத்தையும் சுதேச உணர்ச்சி யையும் எங்கும் கிளப்பியுள்ளது. இந்துசீனம் ஜாவா, பர்மா, மலாயா, கொரியா ஆகிய கிழக்காசியா தேசங் களில் நாம் காணும் குழப்பமும் ஆழ்ந்த மனக்கசப்பும் இதற்கத்தாட்சியாயுள்ளன. பழைய கலோனியலாட்சி முறை இப் புது சகாப்தத்தில் பழைய ரூபத்தில் எடுபடா தென்று ஏறக்குறைய எல்லோருக்கும் தெளிவாகியுள் ளது. இருப்பினும் இந்திர ஜால வித்தையையும்விட மிக மிகத் திறன்பட்ட மேனுட்டு ராஜ தந்திரம் பழைய கலோனியல் முறையை எளிதில் கைவிட சம்மதிக்கு மென்று எதிர்பார்ப்பதற்கில்லை. பழைய கலோனிய முறையை உருமாற்றி, உடைமாற்றி, பெயர்மாற்றிக் கையாள அது முழு முயற்சி செய்யு மென்பதில் சற்றும் ஐயமில்லை. இம் முயற்சியில் அது வெற்றி பெறுமா பெறுதா வென்று சரித்திரம் விடையளிக்கும்.

அத்தியாயம் 9

பிரஞ்சு ஆட்சியில் அன்னுமியர்கள் இடையிடையே சுதந்திரக் கிளர்ச்சிசெய்துவந்தார்களெனினும் ஒவ்வொரு முறையும் பிரஞ்சு சர்க்கார் கிளர்ச்சியை கொடூரமாக அடக்கி வந்தது. காங்கிரஸ் மகாசபையைப் போன்ற மகத்தான அரசியல் ஸ்தாபனம் ஏதுவும் அன்னுமியர்களிடையே கிடையாது. அதுபோன்ற ஒரு சபை ஸ்தாபிதமாகி பிரஞ்சு ஆட்சியின் கீழ் பகிரங்கமாக வேலை செய்யவும் மார்க்கமில்லை. பேச்சுச் சுதந்திரம், பத்திரிக்கை சுதந்திரம், கூட்டுறவு சுதந்திரம், போக்கு வரத்து சுதந்திரம் இவைகளுக்கு இந்து சீனத்தில் எவ்வளவோ தடைகள் இருந்தனவென்று முன்னரே குறிப்பிட்டுள்ளேன். அரசியல் குற்றத்திற்காகப் பன்முறை ஜெயில் வாசம் செய்து தண்டனை முடிந்தவுடன் விடுதலை பெற்று, மீண்டும் தேசத்திற்குத் தொண்டாற்றும் வசதியை பிரஞ்சு சர்க்கார் இந்து சீன தேசாபிமானிகளுக்கு அளித்ததில்லை. காந்திஜி, பண்டிதர் நேரு, சுபாஸ் சந்திரபோஸ், ராஜாஜி போன்ற சிறந்த தேச பக்தர்கள் அன்னுமியர்களிடையே தோன்றியிருந்தால், அவர்கள் பொது மக்களின் ஆதரவும் பலமும் நாளடைவில் பெறுவதற்குமுன், எந்த உபாயம் கொண்டாவது அகற்றப்பட்டிருப்பார்களென்று கருத இடமுண்டு. ஏனெனில் அரசியல் குழப்பம் முற்றிப்போக பிரஞ்சு சர்க்கார் கூடுமான வரையில் இடம் கொடுத்ததில்லை; முளையிலேயே கிள்ளிவந்தனராதலால் சுதேசிகளிடையே பெரும் அரசியல் ஸ்தாபனம் தோன்றி உரம்பெற மார்க்கமில்லை. உதாரணமாக மார்ஷல் பெத்தனின் ஆட்சிக் காலத்தில் இந்து சீனத்தில் ஏற்பட்ட சிறு குழப்பமொன்றை மிகப் பெரி

தாக வர்ணித்து அவ்வரிய சந்தர்ப்பத்தை வீண்போக விடாமல் பிரஞ்சு சர்க்கார் தங்களுடைய ராணுவ பலத்தையும் அடக்கு முறை உபாயங்களையும்பற்றி சுதேசிகளின் மனத்தில் ஊன்றிப் பதியும்படியானதொரு அத்தாட்சியைக் காட்டினர். படகுகளில் மிஷின் பீரங்கிகளைப் பூட்டி ஓடைகளின் இரு புறங்களிலும் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த சிவில் ஜனங்களை இந்து சீன சர்க்கார் பொசுக்கினர். சில பகுதிகளில் ஜனங்களை அவரவர் வீடுகளிலிருந்து வெளியேறவிடாமல், கிராமம் கிராமமாக வீடுகளைக் கொளுத்தினர்; விமானங்களில் தாழப் பறந்து மிஷின் பீரங்கிகளால் ஜனங்களைச் சுட்டு வதைத்தனர், இவையெல்லாம் மேனாட்டு நாகரிக தூதில் ஒரு முக்கிய அம்சமாகும். "சுதேசிகளை ஆதரிப்பவர்களின்" விசேஷ சலுகைகளில் ஒன்று. நிராயுதபாணிகளான பொதுமக்களைத் தாங்கள் சுட்டு வதைத்தால் அது குற்றமல்ல; அமைதியை நிலைநாட்டுவதற்காக! சுதேசிகள் உபயோகித்தாலோ பெரும் குற்றம். அமைதியைக் குலைக்கும் குழப்பம் தொன்று தொட்டு சாம்ராஜ்யங்களின் ராஜதுவேஷம். சுயநல வாதமாகும் மேற்சொன்னவை. ஆட்சி முறையைக் குறித்து இந்து சீனத்தில் மனக் கசப்புக் காண்பித்தவர்கள் அனைவரும் அபாய பொதுவுடமைக் காரர்களாக அரசாங்கத்தால் கருதப்பட்டுவந்தனர். அவர்களைச் சமயம் பார்த்து நசுக்கிவிட சர்க்காரின் முழு இயந்திரமும் எந்த நேரமும் தயாராக இருந்தது.

1940 ஜூனில் பிரான்ஸ் வீழ்ச்சியுற்று ராசி கோரியது; இந்துசீன கிராமவாசிகள்மீது தாங்கள் காட்டிய இராணுவ பலத்தை பிரஞ்சு சர்க்கார் ஜப்பானியர்கள்பால் ஏனோ காட்டாமல் பின்னவர்கள் இந்து சீனத்தில் தங்கி இராணுவ வசதிகள் செய்துகொள்ள இடம் கொடுத்தனர். ஜப்பானிய

ருடன் அவர்கள் ஒத்துழைப்பதுபோல் முதலில் நடித்து வந்தார்கள், பல முக்கிய விஷயங்களில் ஒத்துழைத்தும் வந்தார்கள். அவ்வமயம் கீழாசியாவில் பிரஞ்சுக்காரர்களைத் தவிர வேறு ஐரோப்பியர்கள் சுதந்திரமாகவும் சுகபோகமாகவும் வாழவில்லை யென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தாங்கள் சுகபோகத்துடன் வாழும் பொருட்டு ஜப்பானியரின் கோரிக்கைகளுக்குதாங்கள் எவ்வளவு குறைவாக விட்டுக்கொடுத்து சமாளித்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு குறைவாக விட்டுக் கொடுத்து சமாளித்துக் கொண்டார்கள். அன்னமியர்களையும் கொஞ்சம் தட்டிக் கொடுத்தார்கள். அன்னமியர்களை சுதேசிகள் என்று இனிச் சொல்லக் கூடாது; இந்து சினர் என்று சொல்லவேண்டு மென்று புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இவைகளுக்கிடையே ஜப்பானியர் பிரஞ்சுக்காரர்மீதும், பிரஞ்சக்காரர் ஜப்பானியர்மீதும் சதா உளவு விசாரித்து வந்தார்கள்; ஆனால் வெளி வேஷத்தில் இரு தேசத்தினரும் ஒத்துழைப்பதான பாவனை. அன்னமியர்கள் இங்குமில்லாமல் அங்குமில்லாமல் திண்டாடினார்கள். இவ்வாறு 1942 இறுதி வரையில் கழிந்தது. யுத்தமும் அதுசமயம் நேச நாட்டாருக்குச் சாதகமாக மாறிவந்தது. 1942 நவம்பரில் அட்மிரல் தார்லனின் உதவியுடன் அமெரிக்கத் துருப்புகள் பிரஞ்சு வட ஆப்ரிக்காவில் இறங்கி எதிர்ப்பு எதுவுமின்றி வெகு விரைவில் முன்னேறி பிரஞ்சு வட ஆப்ரிக்கா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அக்காலந்தொட்டு இந்து சினத்திலிருந்த பிரஞ்சுக்காரர்கள் உற்சாகமடைந்தனர்; நேசக் கட்சி ஜெயம் பெறுமென உறுதி கொண்டனர். ஆகையால் புறத்தில் ஜப்பானியருடன் ஒத்துழைப்பதுபோல் நடித்து வந்தாலும் உள்ளத்தில் அவர்களைக் கவிழ்க்கவே பிரஞ்சுக்காரர்கள்

அல்லும் பகலும் சூழ்ச்சி செய்தனர். நாளடைவில் புறத் தோற்றமும் அகவிருப்பத்தை ஒட்டி நின்றது. ஜப்பானியர்களுக்கு உதவிபுரியும் கூலிகளையும், வியாபாரிகளையும் வாலன்டியர்களையும் தாங்கள் மிகக் கடுமையாக தண்டிக்கப் போவதாக அவர்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். அரசியல் துறையில் ஈவு இரக்கமின்றி கொடூரமான சிட்சைகள் விதிக்கும் சுபாவம் பிரஞ்சுக்காரர்களிடம் குறைவின்றி நிரம்பியுள்ளதென்று அன்னமியர்கள் அனுபவபூர்வமாய் நன்கறிந்தவர்கள். "தூக்குமேடை, சிறை, தீவாந்தர சிட்சை இவைகள் ராஜத்துவேஷத்தின் வெகுமதிகள்" என்று இந்துசீனத்தில் பிரஞ்சு ஆட்சியைக் குறித்து ஒரு அமெரிக்க ஆசிரியர் பல்லாண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டுள்ளார். "இந்துசீன தேசாபிமானிகள் சந்துபொந்துகளிலெல்லாம் தேடிப் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அல்லது தப்பி எங்காயினும் அவர்கள் ஒளிந்துகொள்ள வேண்டியிருந்தது. கடுமையான முறைகள் கையாளப்பட்டமையால் குரோதம் அதிகரித்துள்ளது." என்று மற்றொரு அமெரிக்க ஆசிரியர் சமீபகாலத்தில் எழுதியுள்ளார். 1945 மார்ச்சு மாறுதலுக்குப் பின் பிரஞ்சு துவேஷம் அதிகரித்தது. அன்னமியர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்குமிடையே பற்பல சச்சரவுகள் நாடெங்கும் நடந்திருந்தமையாலும் அன்னமியர்கள் ஜப்பானிய சரணாகதியின்போது பெரிதும் அஞ்சினார்கள். அச்சம் அதிகமானால் ஒருவகை முரட்டு தைரியம் ஏற்படுவது சகஜமாதலால், பிரஞ்சு ஆட்சி தங்கள் மத்தியில் மீண்டும் ஸ்தாபிதமாகாமல் தடுத்துக் கொள்ள வேண்டுமென்று அன்னமியர்கள் முடிவுசெய்தார்கள். பிரஞ்சு ராணுவபலத்தை எதிர்த்துப்போராடத் தங்கள் வசம் ஆயுதங்களும் விமானங்களும் இல்லையென்றும் அவைகளை உபயோகிக்கக்கூடிய பயிற்சி பெற்ற

நிபுணர்கள் தாங்கள் மத்தியிலில்லையென்றும் அன்னியர்கள் உணர்ந்து கொண்டிருந்தார்கள். இருப்பினும் அவர்கள் ஐக்கிய நாடுகளின் ஆதரவில்—முக்கியமாக அமெரிக்காவின் ஆதரவில்—முழு நம்பிக்கை கொண்டிருந்தார்கள் அட்லாண்டிக் பிரகடனத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர். சிரியா தேசம் விஷி சர்க்காரிடமிருந்து கைப்பற்றப்பட்டபோது, பிரஞ்சு ஆட்சி ஆங்கு பழைய முறையில் ஸ்தாபிதமாகுவதற்கு இடையூறுகள் ஏற்பட்டதைப் பார்த்து இந்து சீனத்திலும் அவ்வாறு ஏற்படலாமென்று எண்ணி ஊக்கங் கொண்டனர். எனவே கையிலுள்ள ஆயுதங்களை வைத்துக் கொண்டு "கொரில்லா' போர் செய்வோம்" என்று நாங்கள் இந்து சீனத்தை விட்டுப் புறப்படு முன்னரே அவர்களிடையே கோஷம் முழங்கிற்று.

அத்தியாயம் 10

நாங்கள் இரவு 8 மணிக்கு கரி விசையில் ஓடும் மோட்டார் லாரிகள் இரண்டில் ஏறிக்கொண்டு செய்கோனிலிருந்து 150 மைல் வடமேற்கேயுள்ள பொனம்பெங்குக்குப் பயணமானோம். வீதிகளெங்கும் நிசப்தமாயிருந்தது. எங்களை வழியனுப்ப வந்த நண்பர்களிடம் ஜேஹிந்த் கூறி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு பனும் என்ற ஊரை நடுநிசியிலடைந்தோம். இங்கு மிக்காங் நதியின் கிளையை லாஞ்சில் கடந்து அதிகாலையில் பொனம்பெங்கை அடைந்தோம். பொனம்பெங் ரஸ்தா சமவெளி வழியாகச் செல்லுவதால் குன்று, மலை, காடுகள் போன்ற இயற்கைவளம் மிகுந்த பிரதேசத்தின் வழியே செல்லவில்லை. ரப்பர்த்தோட்டங்களும், நன்செய் புன்செய் நிலங்களும், கனிவர்க்கத் தோட்டங்களுமே சாலையின் இரு பக்கங்களிலும் உள்ளன. பொனம்பெங் நகரை யடையும் இரண்டு மூன்று மைல்களுக்கு முன்பே ரஸ்தாவின் இரு புறமும் வீடு வாசல்களும் கோயில்களும் உள. மரத் தூண்களை ஊன்றி பூமி மட்டத்தைவிட ஐந்து ஆறு அடிகள் உயரமாக வீடுகள் மரத்தால் கட்டப்பட்டுள்ளன. ஆற்று வெள்ளம் கரை புரண்டோடும் மாதங்களில் வெள்ளத்தினின்றும் தப்பிக்கொள்ளவே கம்போஜியாவில் வீடுகள் உயர்த்தி அமைக்கப்படுகின்றன. கொச்சின் சீனத்திலும் கம்போஜியாவிலும் நகரங்களைத் தவிர கிராமப் பகுதிகளில் கல் வீடுகளைப் பார்ப்பதரிது. பெரும்பாலும் அத்தாப்புக் குடிசைகளும் பலகை யடைப்பு வீடுகளுமே தென்படுகின்றன. பொனம்பெங் கம்போஜியா ராஜ்யத்

தின் தலைநகராகும். அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 80,000. 1867-ல் நோர்தம் மன்னர் பொனம்பெங்கை ராஜ்யத்தின் தலை நகராகக் கொள்ளும்முன், ஆங்கு கம்போஜிய அதிபதிகள் வசித்து வந்துள்ளார்கள். அந் நகர் நான்கு நதிகள் கூடும் சந்தியில் அமைக்கப்பட்டிருப் பதுடன் சயாம், கொச்சின் சைனு, லவோஸ் ஆகிய பிர தேசங்களுக்குச் செல்லும் ரஸ்தாக்களும் அங்கு சந்திக் கின்றன. செய்கோன் குட்டி பாரிஸ் நகரமாயின் பொனம் பெங்கும் குட்டி பாங்காக்காகும். ஏனெனில் பொனம் பொங்கிலுள்ள அரண்மனையும் ஆலயங்களும் "ப்ரா செடி" (முன்னோரின் அஸ்தி சேமிக்கப்பட்டிருக் கும்ஸ்தூபிகள்)களும்பாங்காக்கிலுள்ளவைகளைப்போல் அமைக்கப்பட்டுள்ளன. பொனம்பொங்கின் புராதா னப் பகுதி ராஜாவின் கோட்டையைச் சுற்றியும் நவீ னப் பகுதி புது மார்க்கட்டுவைச் சுற்றியும் "வில்லா" பகுதி கொஞ்சம் எட்டியும் அமைந்துள்ளன. ஆற்றோர மாயுள்ள கோட்டைக்குள், மரகத புத்தர் கோயிலும், ராஜ வம்சத்தின் பண்டைய கிரீடங்கள், நகைகள், உடுப்புகள், மந்திர வாட்கள் இன்னும் இதர புராதன மான அரசசின்னங்கள்வைக்கப்பட்டிருக்கும கண்காட்சி சாலையும், கொலு மண்டபமும் பார்க்கத் தகுந்த வையாகும்.

மரகத புத்தர் கோயிலின் தளம் வெள்ளித் தகடுகளால் பாவப்பட்டுள்ளது. இங்குள்ள மரகத புத்தர் சிலையைப்போல் மற்ெருரு சிலை பாங் காக்கின் பெரிய அரமனைக் கோயிலிலுள்ளது. கோயிலின் அமைப்பு, ஜோடனை, மதம், ஆசாரம், ஐதீகம், ஆராதனை, சங்கீதம், நடனம், குடியிருப்பு போன்ற எவ்வளவோ விஷயங்களில் தற்கால கம்போஜி யர்களும் சயாமியர்களும் ஒன்றுபட்டுள்ளார்கள்; அவர்

களுக்கிடையே சில வேற்றுமைகளும் உள. ஆனால் வேற்றுமையைவிட ஒற்றுமையே பிரத்யட்சமாய்த் தெரிகிறது. கம்போஜியாவிலும் சயாமிலுமுள்ள நூற்றுக் கணக்கான புத்தர் கோயில்களைப் பற்றிப் பின் அத்தியாயமொன்றில் கூறுகிறேன். பொனம்பெங் ராஜகோட்டையிலுள்ள கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில், ராமாயணப் படலங்கள் பல, அழகாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளனவென்று மாத்திரம் இவ்விடம் குறிப்பிடுகிறேன். "ராம்கீர்த்தி' என்னும் பெயரால் சயாமியரும் கம்போஜியர்களும் ராமாயணத்தை நாடக ரூபமாக சர்வசாதாரணமாக நடித்து வருகின்றனர்.

கொலு மண்டபத்தில் ஏழு அடுக்குகள் கொண்ட குடையின்கீழ் பெரிய சிம்மாசனமொன்றும் அதன் பக்கத்தில் சிறு சிம்மாசனமொன்றும் இருக்கின்றன. பட்டாபிஷேகத்தின்போது அரசர் பெரிய சிம்மாசனத்தில் அமர்கிறார். கோட்டைக்குள் அந்தப்புரமும் இருக்கிறது. காலஞ்சென்ற சிசோவாத் மன்னருக்கும் அவருடைய முன்னோர்களுக்கும் மனைவிமார்கள் குறைவாயிருந்ததில்லை.

நகரின் புராதனப் பகுதியில் இந்திய நாகரிகச் சின்னங்கள் நிரம்பியுள்ள "அல்பர் சரோ" மியூசியமுள்ளது. புது மார்க்கட்டைச் சுற்றியுள்ள விசாலமான வீதிகளின் ஓரத்தில் இரண்டு மூன்று மெத்தைக் கட்டிடங்கள் அழகாய்ச் சென்ற ஐந்தாறு வருடங்களுக்குள் கட்டப்பட்டு விரைவில் வியாபாரப் பகுதியாய் மாறிவருகின்றன. செய்கோனைப் போல் பொனம்பெங்கிலும் வீட்டுக் கிராக்கி சொல்லி முடியாது. நகர அமைப்புத் திட்டமொன்றை சரிவரக் கடைப்பிடித்து பிரஞ்சுக்காரர்கள் மிக்கத் திறமையுடன் பொனம்பெங்கை சிருஷ்டி

செய்துள்ளார்கள். அந்நகர் அமைக்கப்பட்டுள்ள இடம் நதிகளும் ரஸ்தாக்களும் கூடும் முச்சந்தியென்று குறிப்பிட்டேன். ஆகையால் எந்தவிதத்திலும் தலைநகரை ஆங்கு ஸ்தாபிக்க வேண்டுமென முடிவுசெய்தனர். ஆனால் கஷ்டங்கள் பல இருந்தன. பூமி மிகவும் பள்ளமாயிருந்தது. இயந்திரங்களை உபயோகித்து நதிகளிலிருந்து மண்ணை வாரியெடுத்து நகரப் பகுதியை 20, 30 அடிகள் உயர்த்தினார்கள். இத்திட்டம் இன்னும் அனுஷ்டானத்திலிருக்கிறது. சுற்றுப்புறமுள்ள சதுப்பு பூமியை மேலும் மேலும் தூற்று நகர் நாளுக்குநாள் விசாலமாக்கப்படுகிறது.

ஆற்றோரமாயுள்ளது "ரெஜிதான் சுப்பீரியரின்" மிக அழகான அரமனை. இங்கிருந்துதான் கம்போஜியா ராஜ்யம் முழுவதும் 1945 மார்ச்சு மாறுதல் வரையில் ஆளப்பட்டு வந்தது. கம்போஜியாவில் மன்னர் பதவி பெயரளவே யல்லாது அதிகாரம் எதுவும் பொருந்திய பதவியல்ல. ஏனென்றால் பிரஞ்சு ரெஜிதான் சுப்பீரியர்கள் ஆட்டிவைத்ததுபோல ஆடினார்கள் அரசர்கள். இருப்பினும் வெளிப்பகட்டுக்கும், ஆடம்பரத்துக்கும் பஞ்சமில்லை. ஆடம்பரம் அதிகமாயிரும்பின், பொய்த் தோற்றம் மெய்போல் தோன்றி அரச பரிபாலனமும் எளிதாகிவிடும். இக் கருத்தைக் கொண்டே சில அவசரக் குடுக்கைகள் விரும்பியது போல், பிரஞ்சு ராஜதந்திரிகள் கம்போஜியா ராஜ்யத்தை சம்பூரண காலனியாய் மாற்றிவிடாமல் புரொக்டெக்டரேட்டாகவே நடத்தி வந்தார்கள். இன்னும் அது புரொக்டெக்டரேட்டாகவே இருந்து வருகிறது.

ரெஜிதான் சுப்பீரியரின் அரண்மனை மைசூர் சமஸ்தானத்திலுள்ள லலிதாமகாலை ஒக்கும் என்று மௌல்வி

கலிலூர் ரஹிமான் சாகிப் என்னிடம் ஒரு சமயம் தெரி வித்தார். சு. இ. சங்கத்தின் பொனம்பெங் கிளை ஆபீ சைத் திறந்து வைப்பதற்காக 1945 ஜூலையில் ஆங்கு விஜயஞ் செய்திருந்த திரு சாட்டர்ஜி அவர்கள் மேற் சொன்ன அரண்மனையில் தங்கியிருந்தார். அன்றுடைய விஜயத்தை ஒட்டித்தான் அக்கட்டிடம் கம்போஜிய அர சாங்க விருந்தினர் இல்லமாக முதன் முதல் மாற்றப்பட் டது. ஆஸாத் ஹிந்த் சர்க்கார் சார்பில் ஒரு விருந்து உப சாரமும் கம்போஜிய சர்க்கார் தரப்பில் பதில் விருந்தும் ஆங்கு அவ்வமயம் நடைபெற்றன. அவ்விரண்டு விருந்து களிலும் கோமகன் மோனிரத் அவர்களும் அந்நிய நாட்டு மந்திரி திரு சொங்நோக்தன் அவர்களும் இன்னும் பல முக்கிய கம்போஜிய பிரமுகர்களும் கலந்து கொண்டார் கள். தொன்று தொட்டு கபோஜியாவுக்கும் இந்தியாவுக்கு முள்ள சரித்திர, மத, கலா தொடர்புகளைப்பற்றி இரு தரப்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்ட பின், எதிர் காலத்தி லும் அவ்வண்ணமே நடந்துகொள்ள வேண்டுமென்றும், ஒருவர்க் கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டுமென் றும் இரு தரப்பிலும் கோரப்பட்டது. தற்காலிக ஆஸாத் ஹிந்த் சர்க்காரின் அனுதாபச் சின்னமாக கம்போஜிய க்ஷேம நிதிக்கு 50,900 வெள்ளிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

மோகன் மோர்னிரத் பட்டத்திற்குரியவர்; சகஜ மாயும் வாஞ்சையாகவும பேசும் சுபாவம் படைத்தவர். ஆசியா விடுதலையடைய வேண்டுமென்ற அபிலாஷையை எங்கள் மத்தியில் தாராளமாக வெளியிட்டார். அவ ரிடம் அவநம்பிக்கை கொண்டிருந்த பிரஞ்சுக்காரர்கள் அவருக்குப் பட்டமளிக்காமல், இப்போது ஆளும் நெரொதம் சிகானூக் என்னும் வாலிப மன்னருக்குப் பட் டம் அளித்தார்கள்.

திரு. சொங்நோக்தன் நல்ல தேசபக்தர்; அவருடைய தேசாபிமானமும் நவீன கருத்துகளும் கம்போஜிய பொதுமக்களினடையே பரவியிருக்கவில்லை. காலம் அவருக்கு ஒத்தாசையா யிருக்கவில்லை. அரசியல் விழிப்பு கம்போஜியர்களிடம் மிகக் குறைவு. பிரஞ்சுக்காரர்கள் தாங்கள் கம்போஜியாவைத் திருப்பி பிடித்துக்கொண்டபின் அவரைக் கைது செய்தார்கள்.

பொனம்பெங் இந்தியர்களிடைரே 1945 ஜூலை மாதத்தில் இருந்துவந்த உற்சாகத்திற்கும் நான் அடுத்த மாதத்தில் திரும்பி வந்தபோது கண்ட நிலைமைக்கும் வித்தியாசம் அதிகம்; ஜூலையில் சு. இ. சங்கம் இந்து சீனத்தில் உன்னத நிலையிலிருந்துவந்தது. மெய்யாகவோ அல்லது பொய்யாகவோ, சுபாவமாகவோ அல்லது கபடமாகவோ சங்கத்தின்பால் அனுதாபமும் சங்க நடவடிக்கைகளில் சிரத்தையும் இந்திய பொதுமக்களால் காட்டப்பட்டு வந்தன. ஆனல் ஆகஸ்டு மத்தியில் இடிவிழுந்தாற்போல் சங்கம் திடீரென்று தலைசாய்ந்தது. உண்மை அன்பர்கள் மனமுருகினார்கள். கபடர்கள் வேஷத்தைத் துறந்தார்கள். விரோதிகள் பகிரங்கமாய் நகைக்க ஆரம்பித்தார்கள். பெரும் இயக்கமொன்று வீழ்ச்சியடையும்போது இம்மாதிரி வேறுபாடுகளும் குழப்பமும் மாறுதலும் ஏற்படுவது இயல்பே. ஆதலின் பொனம்பெங்கிலும் லிக் ஆபீஸ் நாங்கள் வருமுன்னரே மூடப்பட்டுவிட்டது. எதிர்காலத்தைப் பற்றியும் அங்கு இந்தியர்களிடையே ஒருவகை அச்சமும் தோன்றியிருந்தது. நேதாஜி நிதிக்காக அந்நகரில் திரப்பட்டிருந்த சுமார் இரண்டு லட்சம் வெள்ளிகளில் செலவு போக மீதமுள்ள தொகையை அவ்வூர் நன்கொடையாளர்களுக்குத் திருப்பிக்கொடுப்பதென நல்ல முடிவாகியிருந்தது. பிரஞ்சு ஆட்சி மீண்டும் ஸ்தாபிக்கப்படுமாயின்

எப்படிப்பட்ட இடையூறுகளும் கஷ்டங்களும் தங்களுக்கு சம்பவிக்குமோவென்ற பயம் மட்டும் எல்லோர் மனத்திலும் குடிகொண்டிருந்தது.

பொனம்பெங்கிலும் அதன் சுற்றுப்புறத்திலும், பெரும் ஜவுளி வியாபாரியிலிருந்து சிறு பால் வியாபாரி வரையில் மொத்தம் சுமார் 400 இந்தியர்கள் வசித்து வருகின்றனர். தமிழ் ஜனம் மிகக் குறைவு. கம்போஜியாவில் தேடும் திரவியம் ஆறு கடப்பதில்லை என்று செட்டியார்கள் கொஞ்சம் நகைப்பாகவும் கொஞ்சம் உள்ளபடியும் சொல்லுகிறார்கள்.

கம்போஜீயா ராஜ்யத்தின் நிலப்பரப்பு 1940-ல் 69,200 சதுர மைல்கள். ஜனத்தொகை (1936) 30 லட்சம் நாம் அதை மூன்று முக்கிய இயற்கைப் பிரிவுகளாகப்பிரிக்கலாம். (1) வடக்கேயுள்ள மலைச்சாரங்களும் மேட்டுப் பூமியும். (2) அவைகளுக்குத் தெற்கேயுள்ள விசாலமானதொரு சமவெளியில் மிக்காங் நதி ஓடுவதுடன் "தொன்லேசாப்" என்ற பெரிய ஏரியொன்றுமிருக்கிறது, தனித்தனி குன்றுகளல்லாது தொடர்ச்சியான மலைச்சாரல் ஒன்றும் இச் சமவெளிப் பிரதேசத்தில் இல்லை. (3) கடற்கரையோரமாக "கம்போட்"டிலிருந்து சயாமைச் சேர்ந்த "சந்தபூன்" வரையில் ஒரு மலைத் தொடர்பும் ஆங்காங்கு சிறு சமவெளியும் இருக்கின்றன,

கம்போஜியாவின் தென் மேற்குப் பகுதியில் சயாம் விரிகுடாக் கடலும் மற்றப் பகுதியில் பூமியும் சூழ்ந்துள்ளன. கம்போட்டைத் தவிர வேறு இயற்கைத் துறைமுகமெதுவும் கம்போஜியாவிலில்லை. ஆனால் ஆற்று மார்கமாக செய்கோனிலிருந்து சிறு கப்பல்களும் நடுத்

தரமான கப்பல்களும் பொனம்பெங்குக்கு அடிக்கடி போய் வருகின்றன.

மேற் கூறிய சமவெளியைப் பற்றிச் சற்று விரிவாகக் கூற விரும்புகிறேன். மலைகள் மிகுந்த லவோஸ் சமஸ்தானத்தில் மிக்காங் நதி பெரும்பாலும் நெருக்கடியான மலைச் சுவர்களிடையே இடி முழக்கத்துடன் தாவித் தாவித் குதித்து ஓடுகிறது. அங்கு பூமி வடக்கேயிருந்து தெற்கு நோக்கிச் சரிவாயிருப்பதால் நதியில் பிரவாகம் அதிகரித்து வெள்ளப் பெருக்கு ஏற்படுவதில்லை. ஆனால் நீர்வீழ்ச்சிகள் அதிகம். கம்போஜியா சமவெளி சாய்வற்றுச் சமமாயிருப்பதால் நதி ஆங்கு துள்ளிக் குதிக்காமல் அமரிக்கையாய்ப் ஊர்ந்து செல்லுகிறது. மாரி காலத்தில் மிக்காங் நதியிலும், அதனுடைய கிளைகளிலும் பிரவாகம் அதிகரித்து சீக்கிரம் கடலில் வடிய மார்க்கமின்றி, சுற்றுப் பிரதேசத்தைத் தெப்பமாக்கி விடுகின்றன. வெள்ளக் காலத்தில் இச் சமவெளியிலுள்ள சாலைகள் பல மூழ்கி விடுகின்றனவாதலால் அவ் வமயம் ஜனங்கள் வீட்டுக்கு வீடு, கிராமத்திற்கு கிராமம் படகுகளிலேயே போய் வருகின்றனர். வெள்ளம் அக்டோபர் ஆரம்பத்தில் வடிய ஆரம்பித்து, ஜனவரியில் பூராவும் வடிந்து விடுகிறது.

பொனம் பெங் நகர் நான்கு நதிகள் கூடுமிடம். சொடுமுகோ அல்லது சதுர் முகமென்று இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே பூகோள சாஸ்திரிகள் அதை நூல்களில் குறித்துள்ளார்கள். ஆங்கு மிக்காங் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. மூன்றாவது கிளை. அல்லது நான்காவது முகம் கடலை நோக்கி ஓடாமல், நேர் எதிர்ப்புறமாய் வடமேற்கே ஓடி தொன்லேசாப் ஏரியில் சங்கமாகிறது. இக் கிளையைப்போல் இதர

நதிகளும் ஏரியில் சங்கமாகிறபடியால், வெள்ளக் காலத்தில், ஏரி இரண்டு மூன்று மடங்கு பெருகி சுற்றியுள்ள காடுகளையும் வெட்ட வெளியையும் ஓரே தெப்பக் காடாய் ஆக்கிவிடுகிறது. வருடா வருடம் மூன்று மாத காலம், கண்கள் கூசும்படியான அளவு சூரிய கிரணங்கள் ஜொலிக்கிற நீர் மட்டம் அடி வானத்தில் கண்ணுக்கு எட்டிய தூரம் ஏரிப் பகுதியில் பரவியிருக்கிறது. அக்டோபரிலிருந்து வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக ஏரியிலிருந்து பெருகினவழியாக வடியஆரம் பித்து ஜனவரியில் வற்றி விடுகிறது. பெருக்கு காலத்தில் ஏரி 95 மைல்கள் நீளமாயும் 60 மைல்கள் அகலமாயும் 20-35 அடிகள் ஆழமாயும், வடிவுகாலத்தில் 95 மைல் கள் நீளமாயும், 28 மைல்கள் அகலமாயும் 3-6 அடிகள் ஆழமாயுமிருக்கிறது. வருடா வருடம் கோடானு கோடி மீன்கள் ஏரியில் உற்பத்தியாகி வளர்கின்றன. வருடா வருடம் கோடையில், பல்லாயிரம் செம்படவர்கள் அங்கு கூடாரமடித்து வலை வீசுகின்றனர். உள்நாட்டுத் தேவை போக பாக்கி மிஞ்சும் மீன்கள், உலர்ந்த கருவாடாக மலாயாவுக்கும் கிழக்கிந்திய தீவுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குடலைப் பிடுங்கும் நாற்றம், குழை, தழை அசையாத புழுக்கம், கண்களைக் குத்தி வருத்தும் சூரிய கிரணங்களின் ஜொலிப்பு, குடி தண்ணீ ரின்மை இவ்வித சிரமங்களை சகித்துக்கொண்டு பல ஜாதியினரும் செம்படவத் தொழிலை ஆங்கு நடத்தி வரு கின்றனர். இச்சம வெளியிலுள்ள எண்ணிறந்த ஓடை களில் தாமரை ஏராளமாக புஷ்பிக்கிறது. தாமரைக் கொட்டைகளை இங்கிருந்து வியாபாரிகள் ஏற்றுமதி செய்கின்றனர்.

கொஞ்சம் இரும்பு நீங்கலாக உலோகப் பொருள் எதுவும் கம்போஜியாவில் விளையவில்லை. நீலம் சிகப்பு,

புஷ்பராகம் முதலிய நவரத்தினங்கள் விளைகிற பயிலின் மலை சயாமியர்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது.

ஆட்சி முறை; 1884 இல் பிரஞ்சுக்காரர்கள் நோர்தம் மன்னரின் பல்லைப் பிடுங்கி விட்டார்கள். கம்போஜிய இராச்சிய பரிபாலனம் சம்பந்தமாக பிரஞ்சு சர்க்காருக்கும் நோர்தம் மன்னருக்கும் அந்த வருடத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. நிர்வாகம், நீதிபரிபாலனம், வரவு செலவு வியாபாரம் சொத்துரிமை முதலிய பற்பல அரசியல் பொருளாதார விஷயங்களைக் குறித்து பிரஞ்சுக்காரர்கள் தங்கள் இஷ்டத்திற்கு கம்போஜியாவில் சட்டதிட்டங்களையும் முறைகளையும் மாற்றி அமைத்துக்கொள்ளலாமென்று நோர்தம் அந்த உடன்படிக்கை மூலம் சம்மதித்தார். நிற்க வரிவசூல், போஸ்டு, பராமரிப்பு இலாகா முதலிய விஷயங்களை பிரஞ்சதிகாரிகள் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இராச்சிய எல்லைக்குள் ஆங்காங்கு ரெசிடெண்டுகளை (ஜில்லா கலெக்டர்கள்) பிரஞ்சுக்காரர்கள் நியமித்துக்கொள்ளலாமென்றும், பிரஞ்சு சர்க்காரின் அனுமதியின்றி கம்போஜிய மன்னர் கடன் வாங்கக்கூடாதென்றும் 1884 உடன்படிக்கையில் காணப்பட்டன. இவ்வாறு இராஜாங்க அதிகாரங்களை யெல்லாம் பிரஞ்சுக்காரர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். 1884லிலிருந்து 1945 மார்ச்சு வரையில் கம்போஜியா மன்னர்கள் பெயரளவில் மன்னர்களே தவிர, அதிகாரம் பெற்ற தலைவர்களல்ல. மன்னருக்கும் இதர அரசவமிசத்தினருக்கும் கம்போஜிய பொக்கிஷத்திலிருந்து வருடா வருடம் கிராண்ட் தொகை அளிக்கப்பட்டது. அரமனை, ராஜ தர்பார், பட்டங்கள் வழங்குதல் இவைபோன்ற இராச சின்னங்களும் அரசரிடம் பிரஞ்சுக்காரர்கள் சாமர்த்தியமாக விட்டுவைத்தார்கள்.

ஆனால் உண்மை அரசன் பொனம் பெங்கிலிருந்து வந்த பிரெஞ்சு ரெஜிதான் சுப்பீரியர். பழைய கம்போஜிய அதிகார வர்க்கம் ஒழிக்கப்பட்டு பிரஞ்சுக்காரர்களிடம் விசுவாசம் கொண்ட புது அதிகார வர்க்கம் நாடெங்கும் நாளடைவில் சிருட்டிக்கப்பட்டது.

கம்போஜியா இராச்சியம் எட்டு ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பிரஞ்சு ரெஜிடெண்டு, ஜில்லா கலெக்டராகவும் நீதிபதியாகவும் இருந்து வந்தார். நிர்வாகத்தை கவனித்து நடத்தவும், நீதி வழங்கவும், வரிவசூலை மேல் பார்க்கவும் உதவி அதிகாரிகள் ஒவ்வொரு ரெஜிடெண்டின் கீழும் சேவித்து வந்தனர்.

நிற்க, சுங்கவரி, பராமரிப்பு, கஜானா, முதலிய ஒவ்வொரு இலாக்காக்களின் அலுவல்களையும் ரெஜிடெண்டு கவனித்து வந்தார். வரி வசூல் சம்பந்தமாக ரெஜிடெண்டுக்கு ஆலோசனை கூற சுதேசிகள் அடங்கிய சபை ஒன்று ஒவ்வொரு ஜில்லாவிலும் இருந்து வந்தது. ஆனால் அவை அதிகாரம் பெற்ற சபைகள் அல்ல; வெறும் ஆலோசனை கூறும் சபைகளே.

பொனம்பெங் நகர நிர்வாகம் ஒரு பிரஞ்சு நகர கமிஷனர் வசம் இருந்து வந்தது. ஐந்து பிரஞ்சுக்காரர்களும், மூன்று கம்போஜியர்களும், ஒரு அன்னமியனும், ஒரு சீனனும் அடங்கிய முனிசிபல் சபை ஒன்றும் பொனம் பெங்கில் இருந்தது. ஆனால் ரெஜிதான் சுபீரியரின் சம்மதமின்றி முனிசிபல் சபை எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றிவைக்க முடியாது.

மேற்சொன்ன எட்டு ஜில்லாக்களல்லாமல் சியம்ரிப்—பத்தம் பாங்—சிசோபோன் பிரதேசத்தில் ஒரு

விசேஷ பிரஞ்சு கலெக்டர் நிர்வாகம் செய்து வந்தார்; இப்பிரதேசம் சயாமால் 1907-ல் பிரஞ்சு சர்க்காருக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது; பின்னர் ஜப்பானியரின் மத்தியஸ்தப்படி 1941-ல் திரும்ப சயாமியர் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

கம்போஜியாவில் வசூலிக்கப்பட்ட வரிகளைக் கொண்டும் இந்துசீன மத்திய சர்க்கார் கம்போஜியாவுக்கு அளித்து வந்த உதவியைக் கொண்டும் அரசாங்கச் செலவுகள் செய்யப்பட்டன. தலைவரி, சொத்துவரி, லைசென்ஸ் கட்டணம், ரெஜிஸ்டிரேஷன் வரி, காட்டுப் பொருள்களின்மீது வரி, மீன் குத்தகை முதலியவை கம்போஜியாவில் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் முக்கிய வரிகளாம். மத்திய சர்க்காரால் வருடா வருடம் கொடுக்கப்பட்ட தொகையானது மொத்த சுங்க வரி வசூலில் கம்போஜியாவுக்குச் சேரவேண்டிய பங்காகும். கவர்னர் ஜெனரலின் அனுமதியின்றி புது வரி ஒன்றையும் கம்போஜியாவில் விதிக்கமுடியாது. பிரஞ்சுக்காரர்கள் மீதும் அன்னியர்கள்மீதும் வரி விதித்து வசூலிக்கும் உரிமை பிரஞ்சுக்காரர்களிடம் இருந்தது.

பிரஞ்சு சிவில் நிர்வாகிகளின்கீழ் கம்போஜிய நிர்வாகிகள் வேலை பார்த்து வந்தார்கள். கிராமங்கள் (கும் கம்போஜிய ராஜ்யத்தின் அஸ்திவாரமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மணியக்காரர் இருக்கிறார். அவர் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் அல்ல. நிரந்தர சம்பளம் எதுவும் அவர் பெறவில்லை. சர்க்காருடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் பிரதிநிதியாவர். ஜனன மரண சர்டிபிகேடுகளை வழங்குவது, கிராம போலிசை கண்காணிப்பது, ரஸ்தாக்களைப் பழுது பார்க்கும் பொறுப்பை கிராம வாசிகளுக்கு சரிவரப் பங்கிடு

தல், வரிவசூல், படைக்கும் போலிஸிக்கும் ஆள்திரட்டு தல், குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைதுசெய்து பூர்வாங்க விசாரணை செய்தல், சம்மன்களை சார்வுச்செய் தல்போன்ற எவ்வளவோ கடமைகளை ஒவ்வொரு மணிய காரரும் செய்து முடிக்க வேண்டும். பல கிராமங்கள் சேர்ந்த குப்பத்தை "கண்ட" என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு கண்டின் எல்லைக் குட்பட்ட கிராம அலுவல் களை கவனிப்பதும், அமைதியைக் காப்பாற்றுவதும், வரி வசூலை மேற் பார்ப்பதும், ரஸ்தா பராமரிப்பும் கன்ட் அதிகாரியின் கடமைகளாகும். பல கன்ட்கள் அடங்கி யது "சுரோக்", சுரோக்குக்கு மேலுள்ள நிர்வாகப் பிரிவு "கேட்" அல்லது தாலுக்கா. கேட் அதிகாரிகள் கம்போஜிய உயர்தர உத்தியோகஸ்தர்கள். நமது கலெக்டரைப்போல் மிகுந்த செல்வாக்குப் படைத்த வர்கள்.

கம்போஜிய மன்னர்கள் வெளியிடும் சட்டங் களுக்கு கம்போஜியப் பிரஜைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். சட்டங்களைப் பிரசுரிக்குமுன் ரெஜிதான் சுபிரியரின் சம்மதம் பெறவேண்டும். அதற்கு அத் தாட்சியாக அவரும் புதுச் சட்டத்தில் கையொப்பம் செய்யவேண்டும். ரெஜிதான் சுபிரியருக்கு உதவியாக மந்திரிசபை ஒன்றும் ஆலோசனை சபை ஒன்றும் இருந் தன. மந்திரிசபைக்கு ரெஜிதான் சுபிரியர்தான் தலைவ ராவர், அவர் சம்மதமின்றி மந்திரிசபை எந்தத்தீர்மானத் தையும் அரசர் கையொப்பத்திற்கு அனுப்பிவைக்கக் கூடாது. நாற்பது ஐம்ப துவருடங்களுக்குமுன் இந்தி யாவிலிருந்த சட்ட சபைகளை ஒக்கும் மேற்சொன்ன ஆலோசனை சபை. அதற்கு நேர்ந்தெடுக்கும் வாக்குரிமை வெகு சிலருக்கே உண்டு. வோட்டர்கள் பெரும்பாலும்

அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். தேர்ந்து எடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் நியமன அங்கத்தினர்கள் சிலரும் அடங்கியது ஆலோசனை சபை. வரவு செலவுத் திட்டமும் மற்றும் முக்கியமெனக் கருதப்படும் சில விஷயங்களும் அச் சபையில் சமர்ப்பிக்கப்படும். நிற்க, அங்கத்தினர்கள் மற்ற விஷயங்களைப் பற்றியும் பிரஸ்தாபிக்கலாம். ஆனால் இரண்டு முக்கிய நிபந்தனைகள். (1) அரசியல் பிரச்சனைகளை விவாதித்தலாகாது. (2) ரெஜிதான் சுபீரியரின் முன் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். சபையின் யோக்கியதைகளையும் உரிமைகளையும் இதிலிருந்து வாசகர்கள் அறிந்து கொள்ளலாம். நீதி பரிபாலனத்தைப் பொறுத்த மட்டில் இரண்டு வித நீதிமன்றங்கள் கம்போஜியாவில் இருந்து வந்தன. பிரஞ்சுக்காரர்களும் அன்னியர்களும் சம்பந்தப்பட்ட வழக்குகள் பிரஞ்சு நீதி மன்றங்களில் பிரஞ்சு சட்ட திட்டங்கள்படி விசாரிக்கப்பட்டன. ஆனால் வாதி, பிரதிவாதி இருவரும் கம்போஜியரானால் கம்போஜிய சட்டப்படி கம்போஜிய நீதிபதிகளால் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்புக் கூறப்படும். அதன்மீது அப்பீலும் அப்பீலுக்கு மேல் க்காசியமும் கம்போஜியாவிலேயே இருந்தன. நீதிபரிபாலனம் சரிவர நடக்கும் பொருட்டு கம்போஜிய சட்டதிட்டங்கள் நிபுணர்களால் ஆராயப்பட்டு "கோட்"களாக தொகுக்கப்பட்டுள்ளன. பிரஞ்சு சட்டதிட்டங்களை கம்போஜிய சட்டதிட்டங்களும் கூடிய வரையில் ஒத்திருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பமாகும்.

கம்போஜியாவில் பிரஞ்சு ஆட்சி ஸ்தாபிதமான பின் பிரஞ்சுக்காரர்களுக்கும் பிரஞ்சு கம்பெனிகளுக்கும் பிரஞ்சு பாங்குகளுக்கும் நிரம்ப சலுகை காட்டப்

பட்டது. ஏராளமான சொத்துக்கள் பிரஞ்சுக்காரர்களுக்கு "கன்செஷன்"களாக விட்டுக் கொடுக்கப்பட்டன.

1945-மார்ச்சு மாறுதலுக்குப் பின் நிர்வாகப் பொறுப்பு அனைத்தும் கம்போஜியர் வசம் மாறிற்று. கம்போஜிய மந்திரிசபையும் வெறும் பொம்மை சபையாயில்லாமல் செல்வாக்கும் அதிகாரமும் பெற்ற சபையாய் மாறிற்று. பிரதமர் சொங் - நோக் - தன் அவர்களின் தலைமையில் இராச்சிய அலுவல்கள் சீராகிக் கொண்டிருந்த சமயத்தில் யுத்தம் முடிந்தது.

அத்தியாயம் 11

பொனம்பெங்கில் கம்போஜியர்களுக்கு அடுத்தபடி யாக சீனர்களும் அன்னமியர்களும் அதிகம். வியாபாரம் பெரும்பாலும் சீனர், பிரஞ்சுக்காரர், அன்னமியர், இந்தியர் போன்ற அயல் நாட்டார் வசமுள்ளது. கம்போஜிய வியாபாரிகள் மிக சொற்பமானவர்களே.

வாழ்க்கையில் அபிவிருத்தி அடைய வேண்டுமென்ற ஊக்கமும், அதற்குதவியான மனோவேகமும் தற்கால கம்போஜியர்களிடம் அதிகமில்லை. எது காரணம் பற்றியோ தெரியவில்லை. ஆனால் பார்வைக்கு நல்ல கட்டு மஸ்தான சரீரமுடையவர்கள். அவர்கள் விரும்பினால் ஆயாசமின்றி உழைப்பார்கள். ஆனால் முன்னேறும் விருப்பம் நீடித்திருப்பதுதான் அவர்களிடையே துர்லபமாயிருக்கிறது.

கம்போஜியாவில் வசித்து வந்த பூர்வ குடிகளின் ரத்தத்துடன் இந்தியர், மலாய்க்காரர், சீனர் இவர்களுடைய ரத்தம் கலந்ததின் பயனாக இற்றைய கம்போஜீரர்கள் தோன்றியுள்ளனர்.

நடுத்தரமான உயரம்; விசாலமான முகம்; சாய்வில்லாத நேரான விழிகள்; மயிர் அடர்ந்த புருவங்கள். அவர்களுடைய மூக்கு சற்று விரிவாயிருப்பினும் சீனர்களைப் போல் அவ்வளவு சப்பையாயில்லை. கை, கால், மார்பு போன்ற உறுப்புகள் அந்தமாய்ப் பொருந்தியிருப்பதுடன் உளியால் செதுக்கிய விக்கிரகங்களின் அவயங்களைப் போல் இருக்கின்றன. அவர்களுடைய

அங்க லட்சணங்களையும், ஏற்பத் திறமையையும் புகழ்ந்துள்ள சில ஐரோப்பிய எழுத்தாளர்கள் அவர்களை கிரேக்கர்களுக்கு ஒப்பிட்டுள்ளார்கள். ஒரு விசேஷமான அமைப்பு என்னவென்றால் அவர்களுடைய முழந்தாள்கள் இரு உலக்கைகளைப் போல் உருண்டு திரண்டுள்ளன. அவர்கள் மஞ்சள் நிறமுடையவர்களல்ல; மாநிறத்திலிருந்து கறுப்பு வரையில் வகுப்புக்குத் தக்கவாறு, தொழிலுக்குத் தக்கவாறு, பலவிதக் கலப்பு நிறங்கள் அவர்களிடையே காணப்படுகின்றன.

இந்திய ரத்தம் அவர்களிடையே கலந்துள்ளதாகப் பொதுவாக பார்த்தளவில் சொல்லலாம். ஐதிகம், நாகரிகம், ஒழுக்கம், சமுதாய அமைப்பு, ஆசாரம் இவ்விஷயங்களில் அன்னமியர்கள் சீனர்களைப் பின்பற்றி யுள்ளது போல், கம்போஜியர்கள் இந்தியர்களைப் பின்பற்றி யுள்ளார்கள்.

ஆண், பெண் இருவரும் தலை மயிரைக் குறுகக் கத்தரித்துக் கொள்ளுகின்றனர். சிறு குழந்தைகளுக்கு உச்சிக் குடுமியோ அல்லது முன் குடுமியோ வைக்கும் பழக்கம் பூரணமாக மறைந்து விடாமல், கம்போஜியர்களிடமும், அன்னமியர்களிடமும், சாமியர்களிடமும் இன்னும் ஏக தேசத்தில் தென்படுகிறது.

முற்காலத்தில் கம்போஜியப் பெண்கள் இந்திய பெண்களைப் போல் மேலார்ப்பு ஒன்றையும் இடுப்புக்குக் கீழ் மூலைக்கச்சமும் தரித்து வந்தார்களாம். ஆனால் மேலார்ப்பு இப்போது முற்றிலும் மறைந்து அதற்குப் பதிலாக முழங்கை யளவு நீண்டிருக்கும் சொக்காய் ஒன்று தரிக்கப்படுகிறது. மூலைக்கச்சம் இன்னும் பூரணமாக மறையவில்லை; வைதீகர்களால் இன்றும் உடுத்தப்படுகிறது. நவீன முறையில், ஆண்கள் ஐரோப்பிய

ஆடையும், பெண்கள் சித்திர வேலைப்பாடு நிரம்பிய கைலி ஒன்றையும் தரிக்கின்றனர். கைக்குட்டையாகவும், சூரிய வெப்பத்தினின்று காப்பாற்றிக் கொள்ளவும் ஒரு சிறு துண்டு உபயோகிக்கப்படுகிறது.

கம்போஜியர்களுக்கு உணவு பதார்த்தங்களில் எதுவும் தள்ளுபடியில்லை. அரிசி, சோளம், காய்கறி, மீன், பலவகை மாமிசம், மீன்ஊன், கனிவர்க்கங்கள் முதலியவைகளைப் புசிக்கின்றனர். பெரும்பாலும் கைகளால் சாப்பிட்டு, உணவு முடிந்தபின் வாய்சுத்திசெய்கின்றனர். பௌத்த சன்னியாசிகளுக்கு பிக்ஷையிடாமல் வைதீகர்கள் சாப்பிடுவதில்லை. போசன மருந்தியபின் தாம்பூலம் தரிக்கின்றனர்; பலர் புகையிலையும் உபயோக்கின்றனர்.

ஒழுக்கத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் சாந்தமாயும், அடக்க ஒடுக்கமாயும், பெற்றோர், முதியோரிடம் மரியாதையுடனும், உபசரிப்பாளர்களாயும் இருக்கின்றனர்; அவர்கள் மிகுந்த மதப்பற்றுதலுடையவர்கள்; மூடநம்பிக்கைகளும் பல அவர்களிடம் குடி கொண்டுள்ளன. அரசாங்க மதம் பௌத்தமத மெனினும் ஹிந்து தேவதைகளையும் அருத்தமறிந்தோ அறியாமலோ அவர்கள் இன்றும் பூஜித்து வருகின்றனர். பௌத்த மதமும் ஹிந்து மதமும் ஏக காலத்தில் பல நூற்றாண்டுகளுக்கு கம்போஜ்யாவில் பரவியிருந்தமையால் அவர்களுடைய முன்னோர்கள் யாதொரு விகற்பமுமின்றி, இவ்விருமத ஆசாரங்களையும் ஆராதனையையும் கடைப்பிடித்தார்களென்று கல்வெட்டுகள் தெளிவாக்குகின்றன.

நன்னெறியைப் போதிக்கும் பழமொழிகள் பல கம்போஜிய பாஷையில் உள. பிறரைத் தூற்றும் சுபாவமோ பொய் பித்தலாடகம் பேசும் பழக்கமோ அவர்களிடம் குறைவு. பிறஜாதியினருடமிருந்து நற்குணங்களையும்,

குறைபாடுகளையும் விரைவில் கிரகித்துக் கொள்ளும் இயல்பும் அவர்களிடம் மிகக் குறைவாயுள்ளது. தங்களுடைய பழக்க வழக்கங்களையும் ஆசாரத்தையும் எளிதில் கைவிட அவர்கள் மனமிசைவதில்லை.

சோம்பேறிகளென்றும், மந்த புத்தியையுடையவர்களென்றும் அவர்கள் பழிக்கப்பட்டுள்ளனர். இப்பழிக் கூற்றிற் கேற்ப, கம்போஜிய ராஜ்யம் இன்று உயிரற்ற சோகம் நிரம்பிய நாடாய் விளங்குகிறது. அதன் பிரஜைகள் மிகவும் நிர்ப்பாக்கியமான தரித்திர நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர். சண்டைபோட்டுத் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ளும் ஆண்மை அவர்களிடம் குறைவாக இருக்கிறது. "நீண்டகாலத் திட்டம்' எதுவும் அவர்களிடம் தனித்த முறையிலோ தேசியத் துறையிலோ இல்லை. சிலவேளை வயிற்றுக் கஞ்சிக்கு இருப்பின் போதும், பின் யோசனை யில்லை. இருப்பினும் தேக பலத்திற்கும் போர் வீரத்திற்கும் குறைவில்லை. சாகவும் துணிந்தவர்களே. ஆனால் பூசனம் கிழங்கை சாப்பிடுவதுபோல், அவர்களுடைய மனமும் புத்திக் கூர்மையும் 'எல்லாம் விதியின் பயன்; எல்லாம் விதியின்பயன்" என்ற போதனையால் மழுங்கி விட்டன.

அவர்களுடைய விவாகமுறை ஏறக்குறைய நம் விவாக முறையை ஒத்திருக்கிறது. சமைந்த கன்னிகை வீட்டை விட்டு தனித்து வெளியோ செல்லுவதில்லை. பிறர் மூலம் பெண் வீட்டாரின் சம்மதமறிந்து பின் நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது. பின்னர் "ஆச்சர்', (ஆச்சாரியார்) ஆல் குறிப்பிடப்படும் சுபதினத்தில், பௌத்த சன்யாசிகளின் பிரார்த்தனை உள்பட, மேளதாளத்திற் கிடையே திருமணச் சடங்குகள் நடைபெறுகின்றன

சட்டப்படி பல தாரங்களை மணம புரிந்து கொள்ளலாமெனினும், அரசரையும், சீமான்களையும் தவிர, ஏனையோர் பெரும்பாலும் ஒரு தரத்திற்குமேல் மணம் புரிந்து கொள்ளுவதில்லை. இரண்டு மூன்று தாரங்களிருப்பின், மூத்த தாரத்திற்குத்தான் உரிமைகள் அதிகம்,

அண்டை நாட்டுப் பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் கம்போஜியப் பெண்கள் கற்பரசிகளென்றே சொல்லவேண்டும். உடை மாற்றுவதுபோல் அவர்கள் கணவனை மாற்றிக் கொள்வதில்லை. கூடிய வரையில் ஆயுள் பரியந்தம் கணவனுடன் ஒத்து வாழும் இயல்புடையவர்கள். குறிப்பாக, விபசாரம் கம்போஜியர்களிடையே குறைவாயுள்ளது. குடும்பத்தில் பெண்கள் தகுந்த மதிப்பைப் பெற்றிருக்கின்றனர். விதவா விவாகமும் விவாகரத்தும் பழக்கத்திலிருக்கின்றன.

நதி, ரஸ்தா ஓரமாய் உள்ள வீடுகள் கொஞ்சம் வசதியாய் கட்டப்பட்டுள்ளன. போக்கு வாத்து வசதிகளில்லாத இடங்களில் பெரும்பாலும் பனங் கூரைக் குச்சுகளும் மரவீடுகளுமே பூமி மட்டத்தை விட உயரமாகக் கட்டப்பட்டுள்ளன. ஓடுகளையும், கற்களையும் சுடுவதற்கு விறகுக்கும் மண்ணுக்கும், பஞ்சமில்லை. எனினும், வாழ்க்கையை மேன்மைப் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விருப்பக் குறைவாலும் பொருள் வசதிக் குறைவாலும் ஓட்டு வீடுகளும் கல்வீடுகளும் மிகக் குறைவே.

சங்கீதத்திலும் நடனக் கலையிலும் அவர்களுக்குள்ள கவர்ச்சி அளவிடற்பாலதன்று. வகுப்பு பேதமின்றி பெரும்பாலும் அனைவரும் வாத்தியங்களை வாசிக்கவோ,

அல்லது இசை பாடவோ கற்றுக்கொண்டுள்ளனர். அவர்களுடைய சோகரசம் ததும்பும் இசைக்கலையில் ஏழு சுரங்களும் பற்பல இராகங்களும் இருக்கின்றனவாம்.

வடமொழியிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் அவர்களுடைய பாஷையில் இருப்பதாகவும் அவர்களுடைய இலக்கியம் அதிக வளர்ச்சி பெறவில்லையென்றும் இந்திய புராணங்களையும் இதர இந்திய நூல்களையுமோ அவர்களுடைய இலக்கியம் திரும்பித் திருப்பிக் கூறுகிறதென்றும் அறிஞர்கள் எழுதியுள்ளார்கள். பிரஞ்சு நூல் ஒன்றிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடும் ஜாப்தாவிலிருந்து அவர்களுடைய பாஷையில் இந்தியப் பதங்கள் பல கலந்திருப்பதாக நன்கு விளங்கும்.

அக்ஷர் - அக்ஷரம்; அபிஷேக் - அபிஷேகம்; ஆகாஸ் -ஆகாயம்; ஆயுஸ் - ஆயுள்: ஆகார் - ஆகாரம்; கால் - காலம்; கார் - காரியம்; கீர் - கீர்த்தி: குல் - குலம்: கோ - பசு: குருவ் - குரு; சண்டாள் - சண்டாளன், வேசி; ஜன் - மனிதன், சமுதாயம்; ஜீவித் - ஜீவிதம்; ஜே - ஜெயம்; சுக் - சுகம்: ஸ்ரீ - அழகு, ஆனந்தம், பெண்; பந் - பந்து; பிபா - விவாகம்; மாதா; மாயா; மித்ர் - மித்ரன்; யோஜ் - யோஜனை தூரம்: ரக்ஷ் - ரக்ஷித்தல்; ராஜ் - ராஜ்யம்; ரூப் - ரூபம்; விவாத் - விவாதம்:

கம்போஜிய பாஷயை அன்னமிய பாஷயைப் (கொக் நூவை) போல் லத்தின் எழுத்துகளில் எழுதவேண்டுமென்ற முஸ்தீப்பு பிரஞ்சுக்காரர்களால் கடந்த சில வருடங்களாகச் செய்யப்படுகிறது.

காலப் பிரிவைப் பொறுத்தமட்டில், நமது ஞாயிறு, திங்கள் போன்ற அதே பெயர்களுடைய ஏழு நாட்கள்

கொண்ட வாரக்கணக்கும், 29, 30 தினங்கள் கொண்ட சந்திரமாதத்தையும் கம்போஜியர் அனுட்டிக்கின்றனர். சூரிய வருடக் கணக்குப்படி வருடாவருடம் மிஞ்சும் நாட்களைச் சேர்த்து, 2, 3 வருடங்களுக்கொருமுறை தனி மாதமாக வகுத்து அவ்வருடத்தை "13 மாத வருட" மாகக் கொண்டாடுகின்றனர். 19 வருடங்களில் 13 மாத வருடங்கள் ஏழு உள்ளனவாம். அவர்கள் மூன்று வித அப்தத்தை (வருட கணக்குமுறை) கையாண்டு வருகின்றனர். (1) கி. பி. 78 விருந்து ஆரம்பமாகும் சகனுண்டு அல்லது சகாப்தம். (2)கி. மு. 543 விருந்து ஆரம்பமாகும் புத்த சகராஜ். (3) கி. பி. 638 விருந்து ஆரம்பமாகும் குலசகராஜ்.

அன்னமியர், சயாமியரைப்போல், கம்போஜியரிடம் குடும்பப் பெயரில்லை (Family name).

ஏப்பரலில் நிகழும் புதுவருட விழாவையும் புரட்டாசியில் "கத்தின்" விழாவையும், கார்த்திகையில் தண்ணீர்ப் பெருக்கு நாளையும் இதர சில்லறைத் திருவிழாக்களையும் அவர்கள் கொண்டாடுகின்றனர். புதுவருட விழாவின்போது அவர்கள் வீடுவாசல்களைச் சுத்தம் செய்து பிக்ஷுக்களுக்கு ஆகாராதிகள் முதலியன அளித்து ஆலயம் சென்று வணங்கி பலவித விளையாட்டுகளிலும் தமாஷுக்களிலும் சில தினங்களைக் கழிக்கின்றனர். பிக்ஷுகள் வருடா வருடம் ஆடியிருந்து மூன்று மாதங்கள் காலையில் பிச்சை வாங்குவதைத் தவிர மற்ற நேரங்களில் அதிகம் வெளியே திரியாமல் மடங்களிலேயே காலங்கழித்து, புரட்டாசியில் மீண்டும் வெளியே உலாவ ஆரம்பிக்கின்றனர். அதுசமயம் ஒரு மாதகாலத்திற்கு பொதுமக்கள் புது ஆடை முதலிய பல வெகுமதிகளை பிக்ஷுக்க

ளுக்கு அளிக்கும் திருவிழாத்தான் கத்தின் திருவிழா. தண்ணிர்ப் பெருக்கு விழாவின் போது மூன்று நாட்களுக்கு பொனம்பெங்கில் ஏகக் கொண்டாட்டமா யிருக்கிறது.

கம்போஜியர்கள் பிணங்களைப் புதைக்காமல் எரிக்கின்றனர். பிணத்தைக் கழுவி, புது வெள்ளைத் துணியால் மூடுகின்றனர். பிக்ஷுக்கள் இறந்த வீட்டிற்கு வந்து மந்திரங்களை ஓதுகின்றனர். மயானத்தில் தீயிடும் முன் மும்முறை பிணத்தை அப்பிரதட்சிணமாகச் சுற்றுகின்றனராம். இறந்தவரின் சந்ததிகள் தலையை மொட்டை யடித்துக் கொண்டு பாந்தத்திற்குகந்த வாறு துக்கம் கொண்டாடுகின்றனர் மறு நாள் சஞ்சயனத்தன்று நீறு பொறுக்கி மண் பாண்டத்திலடைத்து அவைகளை ஆலயங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ வைக்கின்றனர். அரசரின் தகனம் மிகத் தாமதமாயும் தடபுடலாயும் நடத்தப்படுகிறது. மேலும் அரசரின் தகனத்துக்குப் பின் நீறை யெடுத்து தங்கக் கலசமொன்றிலடைத்து, சில வருடங்களுக்கப்பால் (ஹிந்துக் கோயில்களில் உபயோகிக்கப்படும் கைமணியின் உருவம் போன்ற) ஸ்தூபிக்குள் வைக்கப்படுகிறது.

செய்கோன் தெருக்களில் ஒரு புத்த பிக்ஷுவைக் கூட சந்திப்பதரிது. பொனம்பெங்கில் ஆயிரக்கணக்கானவர்களையும் அவர்கள் தங்கியிருக்கும் மடங்களையும் பார்க்கிறோம். சின்னஞ்சிறு கிராமமாயிருப்பினுங் கூட கம்போஜியர் வசிக்குமிடத்தில் ஒரு புத்த ஆலயமிருக்கிறது. கம்போஜியாவிலும் சயாமிலும் பௌத்த சன்னியாசிகள் நன்கு உபசரிக்கப்பட்டு பொது ஜனங்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளனர்.

கம்போஜியர் பெரும்பாலும் விவசாயிகள். மாடு, பன்றி, பட்சியினங்கள் இவைகளை வியாபாரத்திற்காக வளர்ப்பதிலும், மரம், விறகு, அரக்கு, தேன். சாயப் பட்டை போன்ற காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதிலும், தொன்லேசாப் ஏரிப்பகுதியில் செப்படவத் தொழிலையும் அவர்கள் விவசாயத்திற் கடுத்தபடியாகக் கைக்கொண்டுள்ளார்கள். ஒரு சிறுபான்மையோர் கம்மாளர்களாகவும் நெசவுகாரர்களாகவும் ஓடாவிகளாகவும் இருக்கின்றனர். கம்போஜியர் வீடுகளிலுள்ள தட்டுமுட்டு சாமான்களிலும் பாத்திரங்களிலும் சித்திர வேலைப்பாடுகள் நிரம்பியுள்ளன. விவசாயத்தில் நெல், சோளம் எண்ணெய் வித்துக்கள், மிளகு, பனை வெல்லம், பருத்தி முதலிய பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்கின்றனர்.

அத்தியாயம் 12

I

கம்போஜிய இராச்சியம் இன்று பலமிழந்து, சுதந்திர மிழந்து, பிரதேசமிழந்து சீரழிந்துள்ளது. மனோ வேகமிழந்த அதன் பிரஜைகளும் வாழ்க்கைப் போராட்டத்தில் பிரயாசையுடன் முயலவில்லை. இருப்பினும் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் கம்போஜிய வேந்தர்கள் இராசாதி இராசர்களாய் ஆட்சிபுரிந்து வந்தனர். கி. பி. 9-வது நூற்றுண்டிலிருந்து 13-வது நூற்றுண்டு வரையில் நிலப்பரப்பிலும் குபேர சம்பத்திலும் அரசதர்பாரிலும் சிற்பத் திறனிலும் இந்துசீன தீபகற்பத்திலிருந்த பற்பல இராச்சியங்களில் கம்போஜியா மகோன்னதமாய்த் துலங்கிற்று.

பேரறிஞர்களின் சலியா ஆராய்ச்சியால் அதன் சரிதையையும் அதன் வளர்ச்சியையும் பின் நிகழ்ந்த வீழ்ச்சியையும் நாம் சிறுகச்சிறுக அறியலானோம். "எக்கோல் பிரான்செய்ஸ் தெக்ஸ்டிரீம் ஓரியான் "L' Ecole Francaise d'Extreme Orient என்னும் பிரஞ்சு ஆராய்ச்சி கழகத்தினர் இது சம்பந்தமாக பெருந்தொண்டாற்றி வருகின்றனர். மும் மாதங்களுக்கொரு முறை அவர்கள் பிரஞ்சு மொழியில் வெளியிட்டுவரும் சஞ்சிகையில் சரித்திரம், கலை, மொழி, மதம், ஆசாரம் முதலிய விஷயங்களைப்பற்றி — முக்கியமாக கீழாசியா நாடுகளைக் குறித்து — பற்பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் பிரசுரிக்கின்றனர்.

" கி. பி. 7 வது நூற்றுண்டினிறுதியில் இன்று சீனத்தில் இந்தியா மட்டற்ற செல்வாக்கைப் பெற்றிருந்தது.

ஏனெனில் அதை நாளடைவில் நாகரீகமாக்கிய ஏறு குடிகள் இந்தியர்களாவர் ; ஆங்கு முடிதரித்த இராசவமிசத்தினர் இந்தியர்களாவர் அல்லது இந்தியர்களெனச் சொல்லிக் கொண்டனர்; ஆங்கு பரவியிருந்த ஹிந்து, பௌத்த சமயங்களிரண்டும் இந்திய சமயங்களாகும். கம்போஜியாவிலும் சம்ப இராச்சியத்திலும் வர்மர்களென்னும் பட்டப் பெயருடன் இராச குலத்தினர் ஒரு சமயம் ஆட்சி புரிந்து வந்தனர். அதே பட்டப் பெயரைத்தான் தென்னிந்தியாவிலிருந்த சில ஹிந்து மன்னர்களும் (அதாவது காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்ட பல்லவர்கள்) தரித்திருந்தனர். மேலும் கம்போஜியர்களுடைய சட்டதிட்டங்களும் பழக்க வழக்கங்களும் இந்தியாவிலிருந்து வந்தவையாகும். அவர்கள் இந்திய தேவதைகளை பூசித்து வந்தனர். இந்திய நூல்களைப் பயின்று வந்தனர்'' (திருலெகௌளர் என்னும் பிரஞ்சு ஆசிரியர் எழுதியுள்ள கம்போஜியாவின் சரித்திரம் 1914 பதிப்பு).

நம் மூதாதைகள் முற்காலத்தில் ஆயிரக்கணக்கில் கம்போஜியாவில் குடியேறினரென்றோ, ஆங்கு ஹிந்து பௌத்த மதங்கள் செழித்தோங்கினவென்றோ, ஆங்கு வடமொழி சமஸ்தான பாஷையாய் வழங்கிவந்ததென்றோ, ஆங்கு பிருமாண்டமான ஹிந்து ஆலயங்களும் கோட்டை கொத்தளங்களும் நூற்றுக்கணக்கில் கட்டி முடிக்கப்பட்டன வென்றோ நம்நாட்டில் கற்றோரைத் தவிர பொதுமக்கள் அறியார். நிற்க, நமது குடியேற்ற சரிதையில் முக்கிய அம்சமொன்று என்னவெனில், நம் மூதாதைகள் தாங்கள் குடியேறிய நாடுகளில் வசித்து வந்த பூர்வகுடிகளை மிருகங்களைப்போல் வேட்டையாடி ஒழிக்கவில்லை. அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களில் குடியேறிய ஐரோப்பியர்கள் ஆங்கு வசித்துவந்த

பூர்வ குடிகளை எவ்விதம் ஒழித்தனரென்று நேயர்கள் அறிந்த விஷயமாகும். அடுத்தபடியாக, நாம் குடியேறிய நாடுகளில், நமது நாகரிகத்தையும் பழக்க வழக்கங்களையும், சட்டதிட்டங்களையும் இராணுவ பலம்கொண்டு நாம் புகுத்தவில்லை. சுதேசிகளின் பழக்க வழக்கங்களையும் சட்டதிட்டங்களையும் நாம் அடியோடு ஒழிக்கவில்லை. அக்காரணம்பற்றியே, நாம் குடியேறிய நாடுகளில் பழக்க வழக்கங்களிலும் சட்டதிட்டங்களிலும் ஒன்றுக்கொன்று பல வித்தியாசங்கள் நிலைத்துள்ளன. இந்துசீனத்தில் குடியேறிய சீனர்களும் இந்தியர்களும் தத்தம் நாகரீகத்தை சுதேசிகளிடையே பரப்புவதற்கு கையாண்ட முறைகளையும் உபாயங்களையும் ஆராய்ந்த பிரஞ்சு நிபுணர்கள் இத்துறையில் நம்முன்னோர்களின் சிறப்பையும் பெருமையையும் புகழ்ந்துள்ளனர்.

கம்போஜியா முதலிய கிழாசியா நாடுகளுக்கும் நம் தேசத்திற்கும் முன்னிருந்துவந்த ஊடாடுதலும் உறவும் போக்குவரத்தும் முஸ்லிம்கள் நம் தேசத்தின்மீது படையெடுத்த பின் அற்றுப்போனதாக ஒரு காரணம் கூறப்படுகிறது. காலக்கிரமத்தில் அந்நாடுகளின் நினைவுகூட நம் தாயகத்திலிருந்து மறைந்தே போயிற்று. எனினும் நாம் அவைகளுடன் நெருங்கி ஊடாடிய காலம் அற்ப சொற்பமல்ல, பல நூற்றாண்டுகளாகும். எனவே அவைகளைப் பற்றி நம் இந்திய மொழிகளில் விசேஷ குறிப்புக்கள் பற்பல இருக்கவேண்டுமென நாம் எதிர்பார்த்தல் விந்தையோ? இந்தியாவைவிட கம்போஜியாவுடன் பன்மடங்கு குறைவாக உறவாடிய சீனத்திலிருந்து கம்போஜியாவைப் பற்றிப் பல முக்கிய குறிப்புக்கள் கிடைத்துள்ளன. அவைகளை ஆதாரமாகக்கொண்டு சரித்திர ஆசிரியர்கள் பண்டைய கம்போஜிய சரிதையைத் தொகுத்துள்ளனர் அல்லது ஒத்துப்பார்த்துள்ளனர். சீன சரித்

திர ஆதரவுகள் மூலமாயும் இதர சீன நூல்கள் மூலமாயும் கம்போஜியாவின் பண்டைய வாழ்க்கையை யும் பழக்க வழக்கங்களையும் இராசரிகத்தையும் பற்றி நாம் ஓரளவாகிலும் அறியலானோம். ஆயினும் வருந்தத் தக்கதோர் நூதன மென்னவெனில் சீனத்தை விட கம்போஜியாவுடன் நெருங்கி உறவாடி வந்த இந்தியாவி லிருந்து மட்டும் கம்போஜியாவைப் பற்றி விசேஷ குறிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதற்கு காரண மென்ன? குறிப்பின்மையா அல்லது குறிப்புக்களிலிருந்து பின்னர் அழிந்துபோயினவா அல்லது நவீன ஆராய்ச்சிக் குறைவா? நானறியேன். ஆயினும், ஒன்றுமட்டும் ஏறத் தாழ நிச்சயமெனக் கூறலாம். பொதுவாக சீனர்கள் நம்மைவிட உலகாயதவாதிகள். அவ்வப்போது கவனத் துடன் சரித்திர ஆதரவுகளை தயாரிப்பதிலும் காலப் பிரிவுகளை உள்ளது உள்ளதுபோல் குறிப்பிடுவதிலும் சிரத்தையுடையவர்கள்; சாதா விஷயமாயினும் அலட்சி யம் செய்யாமல் அதை குறித்திடும் இயல்புடைய வர்கள். அதற்கு நேர்மாருக, நாம் சிறந்த சரித்திர அபிமானிகளல்லவென்றும் காலப் பிரிவுகளையும் சரித் திர சம்பவங்களையும் உள்ளது உள்ளதுபோல் குறித் திடும் இயல்பு நம்மிடம் குறைவென்றும் மனக்கசப் புடன் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது உண்மையே யாகும். கல்பங்களிலும் யுகங்களிலும் மனம்போன போக்கில் விளையாடும் நமக்கு அற்பகாலப் பிரிவுகளில் போதிய சிரத்தையில்லை. அவ்வாறே "ஏழைகளின் அன்ருட வாழ்க்கை விபரங்களை குறித்திடலாம், குறித் திட வேண்டும்" என்ற மனக்கவலையும் நம் முன்னோர்க ளிடம் குடிகொண்டிருந்ததாகத் தெரியவில்லை. பெரும் புகழும் பதவியும் செல்வமும் படைத்த பெரியோரையே அவர்கள் மிதமிஞ்சிப் போற்றிவந்தனர்; அப் பெரியோர்

களைக் குறித்து உண்மைக்குகந்த உத்தம சரிதைகளும் எழுதப்படவில்லை. கற்பனை நிறைந்த "ஜாடகா" கதை களே சோடிக்கப்பட்டன.

அற்புதங்களையும் மாயா விநோதங்களையும் போற்றி வழிபடும் சுபாவம் நம்மிடம் வேரூன்றி யுள்ளதாதலால் வாழ்க்கையில் வெற்றி கண்ட வீரனையும் சமய ஆசிரி யரையும், அரசனையும் அமைச்சனையும் கவியையும்பற்றி யதார்த்தமான சரித்திரங்கள் எழுதப்படாமல் பாமர மக்களுக்கு திருத்தியளிக்கும் முறையில் அதிசயம் நிறைந்த கதைகளே பெரும்பாலும் சோடிக்கப்பட்டன.

கி. பி. 1296-ல் கம்போஜியாவுக்கு குப்ளேகான் என்னும் மங்கோலிய சக்கிரவர்த்தி அனுப்பிவைத்த தூது கோஷ்டியுடன் விஜயம் செய்த சியு-தா-குவான் என்னும் சீனன் எழுதி வைத்துள்ள குறிப்புகளிலிருந்து அக் கால கம்போஜியானவப் பற்றிப் பல விஷயங்கள் தெளிவாகியுள்ளன. ஆனால் ஆங்கு ஆயிரக் கணக்கில் குடியேறி, பற்பல உத்தியோகங்களை வகித்து அரசபாரம் செலுத்தி வந்த இந்தியர்களின் வாயிலாக நாம் எதிர் பார்க்குமளவு விபரம் ஏதும் கிடைக்கவில்லை. இச் சிற் றுரைக்குப் பின் கம்போஜிய சரிதையின் முக்கிய அமி சங்களை இனி கவனிப்போம்.

II

கம்போஜியா தேசம் முற் காலத்தில் எந்தப் பெய ரால் இந்தியாவில் வழங்கி வந்தது? (1) ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்ருன "காம்போசம்" இற்றைய கம் போஜியாவா ? (2) இந்தியாவின் எந்தப் பகுதி அல்லது பகுதிகளிலிருந்து இந்தியர்கள் கம்போஜியாவுக்கு குடி போனர்கள் ? இக் கேள்விகளுக்குச் சரித்திரம் இன்னும் இறுதி விடைகளைப் பகரவில்லை.

56 தேசங்களில் ஒன்றான "காம்போசம்" வடமேற்கு இந்தியாவிலிருந்த தேசமென்றும் இற்றைய கம்போஜியாவுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்றும் சரித்திர ஆசிரியர்களின் கருதுகின்றனர். கம்போஜிய மொழியில் கம்போஜியரை "கெமர்" என்றும், கம்போஜிய தேசத்தை "சுரேக்-கெமர்" என்று மழைப்பர். "சகத் திவீபா" அல்லது தேக்கு உற்பத்தியாகும் நாடென கம்போஜியா இந்தியாவில் வழங்கி வந்ததாக ஆசிரியர் லெக்ளார் கூறுகிறார். சீன சரித்திர ஆதரவுகளில் "சன்-ல" அல்லது பழைய உச்சரிப்புப்படி "சியான்-லாப்" என்னும் பெயரால் கம்போஜியா தேசம் குறிக்கப்பட்டுள்ளது. இவைகளன்றி இன்றைய ஆராய்ச்சி நிலைமையில் கம்போஜியா தேசத்தின் பெயரைக் குறித்து நமக்கு வேறு விபரங்கள் கிடைக்கவில்லை.

அடுத்தபடியாக இந்தியாவின் எந்தப் பகுதி அல்லது பகுதிகளிலிருந்து இந்தியர்கள் கம்போஜியாவுக்குக் குடிபோனார்களென்னும் விஷயத்தைக் குறித்து சரித்திர ஆசிரியர்களிடையே அபிப்பிராய பேதம் தோன்றியுள்ளது. ஆனால் மற்றப் பகுதிகளைவிட தென்னிந்தியாவிலிருந்துதான் இந்தியர் அதிகம் குடிபோனதாகப் பெரும்பாலோரின் அபிப்பிராயமாகும்.

தென்னிந்தியரின் செல்வாக்கு கம்போஜியாவில் மிகுந்திருந்ததென்பதற்குக் கீழ்க்கண்டவை அத்தாட்சிகளாகும்: (1) கம்போஜிய கல்வெட்டுகளில் காணும் வடமொழி யெழுத்துக்கள் தென்னிந்தியாவில் பல்லவர் காலத்தில் வழங்கிய யெழுத்துகளாம் (2) கம்போஜியாவிலுள்ள ஆதி புத்தர் சிலைகள் அமராவதி சிலைகளையும் கம்போஜிய கோயில்களின் தோற்றம் மாவல்லி

புறக்கோயில்களின் தோற்றத்தையும் ஒத்திருக்கின்றனவாம் (3) நிற்க, பல்லவர்கள் தமக்கு சூட்டிக்கொண்ட "வர்மர்" என்னும் பட்டப் பெயரைத்தான் கம்போஜிய வேந்தர்களும் பலர் தமக்குச் சூட்டிக்கொண்டனர். (4) தமிழ் வருடப் பிறப்பு தினத்தைதான் கம்போஜியரும் தங்கள் வருடப் பிறப்பு தினமாகக் கொண்டாடுகின்றனர். (வடக்கே பஞ்சாபியரும் இதே தினத்தை வருட பிறப்பு தினமாக கொண்டாடுவதால் இதை ஒரு முக்கிய முகாந்திரமாக நாம் கொள்ளலாகாது). (5) மாலாய்க்காரர்களும் கம்போஜியர்களும் இந்தியர்களனைவரையும் "கிள்ளங்கி' களென அழைப்பர். கலிங்கரின் திரிபு கிள்ளங்கி யென்று சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். (6) கம்போஜிய அதிபதிகளிடம் சேவித்து அவர்களுடன் கொள்வனை கொடுப்பனை செய்துகொண்ட புரோகிதர்கள் மருமகதாய வார்சு முறையைப் பின்பற்றி வந்தனர்.

வட இந்தியாவிலிருந்து இந்தியர்கள் கம்போஜியாவுக்குக் குடிபோனார்களென்பதற்கும் அத்தாட்சிகள் உள:-கம்போஜியா யென்னும் பெயரும் இந்த பிரஸ்தா யென்னும் பழைய கம்போஜிய நகரும் காம்போசத்தையும் சரித்திர பிரசித்திபெற்ற இந்திர பிரஸ்தத்தையும் நமக்கு நினைவூட்டுகின்றன. பிரபல சீன யாத்திரிகர்களான பா—ஹியானும் யி—சிங்கும் வங்க நாட்டைச் சேர்ந்த தாமர லிப்தியென்னும் துறைமுகத்தில் கப்பலேறி சைனு திரும்பியதாகச் சரித்திர ஆதரவுகள் கூறுவதால், தாமரலிப்திக்கும் கீழ் நாடுகளுக்கும் முற்காலத்தில் அதிகக் கப்பல் போக்குவரத்து இருந்திருக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் இந்தியர்கள் கம்போஜியாவில் குடியேறவில்லை யென்பதை நாம்

மறந்துவிடலாகாது. இந்தியாவின் பல பகுதிகளிலும் அவ்வப்போது இருந்து வந்த உள்நாட்டு நிலைமையைப் பொருத்து, பல நூற்றுண்டுகள் காலம் வரை அலை அலையாய், இந்தியர்கள் கம்போஜியாவிலும் மற்றக் கீழ்நாடுகளிலும் குடியேறினர். இவ்வாறு அலை அலையாய்க் குடிபோனதற்குகாரணமென்ன? (1)பொன், சந்தனம், வாசனை திரவியங்கள் இவைகளைத் தேடி கீழ் நாடுகளில் குடிபுகுந்த இந்திய வணிகர் அநேகர். அவர்களுக்கு உதவியாகச் சென்ற மற்ற சிவில் நபர்களும் அநேகர். (2) உள்நாட்டு மாறுதல்களை யனுசரித்தும் இந்தியர்கள் கீழ்நாடுகளுக்குக் குடிபோயினர். முக்கியமாக கி. மு. 3 வது நூற்றுண்டில் அசோக சக்கரவர்த்தி கலிங்க தேசத்தின்மீது கோர படையெடுப்பு செய்ததாலும், 700 வருடங்களுக்குப் பின் சமுத்திர குப்தர் தென்னிந்தியா மீது மீண்டும் படை யெடுத்ததாலும், தென்னிந்தியர்கள் ஆயிரக்கணக்கில் கப்பலேறி கீழ் நாடுகளுக்குச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. (3) பௌத்த சமயம் அக்காலத்தில் இந்தியா வெங்கும் வியாபித்திருந்தமையால், கப்பலேறக் கூடாதென்னும் ஜாதிக்கட்டுப் பாடுகள் வலியிழந்தன; கூச்சமின்றி மக்கள் கப்பலேற அது ஒரு தூண்டு கோலாயிருந்தது.

III

நமக்கு இதுவரை கிடைத்துள்ள சரித்திர ஆதரவுகள் கி. பி. 6-வது நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்துதான் கம்போஜியா இராச்சியத்தை குறிப்பிடுகின்றன; அதற்கு முன் பல நூற்றுண்டுகளுக்கு பூனன் என்னுமொரு இந்திய சாம்ராஜ்யம் இந்து சீனத்தின் தென், மேற்குப் பகுதிகளில் (அதாவது கொச்சின் சீனமும் கம்போஜ்யாவும் சேர்ந்த பாகம்) நிலவியிருந்தது. 6-வது நூற்றுண்டின் பிற்பகுதியில்,

முதல் பாவவர்மனின் ஆட்சி முதற்கொண்டு முதல் ஜயவர்மனின் ஆட்சி முடிய சுமார் 50 வருடகாலளவில் பூனன்சாம்ராஜ்யம் சீரழிந்து கம்போஜியா உரம் பெற்றது.

மலைப் பிரதேசமென்றும் மிக்காங் நதி பாயும சமவெளியென்றும் இருவகை இயற்கைப் பிரிவுகளடங்கியது கம்போஜியா தேசசமன்று 10-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளேன். கம்போஜிய மன்னர்களின் ஆதி இருப்பிடம் முற்சொன்ன மலைப்பிரதேசமாகும். மிக்காங் டெல்டா சமவெளியும் அம் மலைப்பிரதேசமும் ஒரே இராச்சிய எல்லைக்குட்பட்டிருத்தல் அவசியமென கம்போஜிய மன்னர்கள் உணர்ந்துகொண்டு அவர்கள் பூனன்மீது படையெடுத்து தங்கள் இராச்சியத்தை தெற்கு நோக்கி விஸ்தரித்துக் கொண்டனர்.

கம்போஜியர் கி. பி. 7-வது நூற்றுண்டில் நடத்தி வந்த வாழ்க்கை விபரங்கள் சிலவற்றை (Histoire ancienne des Etats Hindouises d Exteme.orient) என்னும் நூலின் 90-9௨ பக்கங்களில் காணலாம்.

கி. பி. 8-வது நூற்றுண்டில் கம்போஜியா ராஜ்யம் நிலைகுலைந்தது; வட, தென்பகுதிகளென இரண்டாகத் துண்டிக்கப்பட்டதுடன், ஜாவாவில் ஆட்சி செய்த செய்லேந்த மன்னர்களுக்கு அது கீழ்ப்படிந்ததாகவும் தெரிகிறது.

கி. பி. 802-ல் கம்போஜியாவில் சிம்மாசனமேறி 52 வருடகாலம் ஆட்சிபுரிந்த 2-வது ஜயவர்மன் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஒடுக்கப்பட்டன; ஜாவாவுக்கு கப்பம்கட்டும் தொல்லையும்தீர்ந்தது. தொன்லேசாப்ஏரிக் கரையில் அங்கோருக் கருகாமையில் அவர் தம் இராசதானியை அமைத்துக்கொண்டார். "தேவராஜா" என்

லும் தாந்திரிக ஆராதனையையும் அவர் கம்போஜியாவில் முதன்முதல் துவக்கிவைத்தார். மிகப் புனிதமான சிவலிங்கமொன்றில் அரசரின் அந்தராத்மா குடிகொண்டிருப்பதாகவும் அவ்வற்புத லிங்கத்தை விசேஷ காபந்துடன் அனுதினமும் பூசித்துவருவதால் அரசரின்பலமும் கீர்த்தியும் ஓங்குமென்பது "தேவராஜா" கிரியையின் மூல லட்சியமாகும். வர்மர்கள் ஆண்டகாலத்தில் கம்போஜியாவில் புரோகிதர்களின் செல்வாக்கு மிகுந்திருந்ததற்கும் நூற்றுக்கணக்கான சிவாலயங்கள் கட்டப்பட்டதற்கும் மேற்சொன்ன தேவராஜா வழிபாடு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்.

ஒன்பதிலிருந்து பதிமூன்ரும் நூற்ருண்டு வரையில் கம்போஜிய அதிபதிகளின் பலமும் கீர்த்தியும் வளர்பிறையைப்போல் ஓங்கி வளர்ந்தன; கம்போஜியா, கொச்சின்சைனு, சயாமில் ஒரு பகுதி இவை அவர்களுடைய இராச்சியத்திற்குட்பட்டிருந்தன. செல்வமும் பராக்கிரமும் அதிக்ரிக்க அதிகரிக்க இராச பவுசும் படாடோபமும் அதிகரித்தன. கம்போஜிய மன்னர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டு மாடமாளிகைகளையும் கோட்டை கொத்தளங்களையும் பிரம்மாண்டமான ஆலயங்களையும் கட்டி முடித்தனர். இச் சிற்ப சின்னங்களால் மட்டுமே நாம் அவர்களுடைய நாகரிக சிறப்பை அறியலானேம். இந்திரவர்மன் (877-889) காலந்தொட்டு 7-வது ஜயவர்மன் (1181-1200) காலம் வரையில் கம்போஜியர்களுக்கும் சாம்காரர்களுக்கும் அடிக்கடி யுத்தம் மூண்டது. வெற்றியும் தோல்வியும் ஒரு தரப்பில் நிலைத்திராமல் கைமாறின. சில முறை சாம்காரர்கள் கம்போஜிய தலைநகரை நோக்கி முன்னேறி அதைச் சூரையாடினர். மற்றச்சமயங்களில் கம்போஜியர் போரில் வெற்றிபெற்று தங்களுக்குப் பிரியமானவர்களை

சம்பாதிபதிகளாய் நியமித்தனர். அக்காலத்தில் சயாமிய ரிடமிருந்தோ, அன்னமியரிடமிருந்தோ கம்போஜியருக்குத் தொல்லையில்லை. சாம்காரர்களே அவர்களின் பெரிய விரோதிகளாய் விளங்கி வந்தனர். 877-லிருந்து 1200 வரையில் கம்போஜியாவில் ஆட்சிபுரிந்த மன்னர்களில் யசோவர்மன் (889-918) ரஜேந்திரவர்மன் (944-968) 2-வது உதயாதித்யவர்மன் (1050–1066) 2-வது சூர்யவர்மன் (1113-1145) 7-வது ஜயவர்மன் (1181-1200) இவர்கள் பிரசித்தி பெற்றவர்கள். யசோதரபுரம் (அல்லது அங்கோர்தோம்) என்னும் நகரை ஸ்தாபித்த பெருமை யசோவர்மனைச் சார்ந்ததாகும். 600 வருடங்களுக்கு கம்போஜியாவின் தலை நகராக அந் நகர் விளங்கிற்று. 2-வது சூர்ய வர்மன் சிறந்த போர் வீரர். பெரும் படைகளைத் திரட்டி நப்போலியனைப் போல் நாலா பக்கங்களிலும் படையெடுத்தார். அங்கோர் வாட்டை கட்டி முடித்தவரும் அவரே. 7-வது ஜயவர்மன் சாம்காரரை ஒடுக்கியது மன்றி அங்கோர்தோம் என்னும் நகரக் கோட்டையையும் வலுப்படுத்தினர்.

IV

இன்று, அங்கோர் தோம் இடிந்து பாழடைந்துள்ளது. ஆங்கு "டூரிஸ்டு"களைத் தவிர இதர மனித சஞ்சாரமில்லை: சுற்றி வெறும் வனாந்தரம்தான். இந்து சீன தீபகர்ப்பத்தில் மகோன்னதமாய் விளங்கிவந்த அந்நகரை பகைவரும் இயற்கையையும் ஒன்று கூடி அழித்து விட்டனர். ஆயினும் சியு-த-குவான் கி. பி. 1296-ல் விஜயம் செய்த காலத்தில் அங்கோர் தோம் சிறப்பாகவே விளங்கிற்று. ஆங்கிருந்த கோயிலையும் அரச மாளிகையையும் அவர் வானளாவிப் புகழ்ந்துள்ளார்.

13-வது நூற்றாண்டில் கம்போஜியரின் சிவிய முறையையும் பழக்க வழக்கங்களையும் வருணிக்கும் சரித்திர

ஆதரவுகளில் சியு-த-குவானின் கூற்றே மிக முக்கிய யானது. அதன் சாரம் வருமாறு:—

கம்போஜியாவில் உயர் குலத்தோரைத் தவிர ஏனை யோர் கரு நிறத்தினர். ஆண் பெண் இரு பாலரும் சிகை தரிக்கின்றனர். அவர்களுடைய புயங்கள் நீருவாணமா யுள்ளன. அவர்கள் பாதரட்சையின்றி வெறும் காலுடன் நடக்கின்றனர்; மூலக்கச்சமின்றி அவர்கள் வேறு உடை தரிப்பதில்லை. பெண்கள் மார்பை மூடிக்கொள்ளு வதில்லை. கம்போஜியர் உடுத்தும் பட்டாடைகள் சயாம் சம்ப நாடு இவைகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. கம்போஜியாவில் நூல்நூற்கக் கைராட்டினமில்லை! கைக் கதிர்களைக் கொண்டே அவர்கள் நூற்கின்றனர்! நெசவு செய்யத் தறியுமில்லை! தையல் வேலையையும் இந் நாட் டுப் பெண்கள் அறிகிலார். அவர்கள் காப்பு, மோதிரம் போன்ற பல ஆபரணங்களை அணிந்து கொள்ளுகின்ற னர். சந்தனம், கஸ்தூரி, புனுகு, சவ்வாது முதலிய வாசனை சமான்களில் பெரும் பான்மையோர் நாட்டம் கொண்டுள்ளனர். சாதாக் குடிகளின் வீடுகளில் எளி யத் தளவாடச் சாமான்களே உள. மேஜை, விசுப் பலகை முதலியவை கிடையா. அவர்கள் மண் பாண் டங்களில் பொங்குகின்றனர். பரிமாற கொட்டாங் கச்சி அகப்பையையும் செப்புப் பாத்திரத்தை உண்கல மாகவும் அவர்கள் உபயோகிக்கின்றனர். புலி, சிறுத்தை, மான் இவைகளின் தோலையோ, பிரப்பம் பாயையோ அவர்கள் தரையில் விரித்து அமர்கின்றனர். சீனர் தயாரிக்கும் மேஜையையும் கட்டிலையும் அவர்கள் சமீபகாலமாக உபயோகித்து வருகின்றனர். வியாபாரி கள் பெரும்பாலும் பெண்களே. சாசுவதமான கடை களில்லை. தரையில் பாயை விரித்து வியாபாரம் செய்கின் றனர். சர்க்காருக்கு வியாபார கட்டணமும் செலுத்து

கின்றனர். மொத்தமாக வாங்கும்பொழுது தங்கம் அல்லது வெள்ளி கொடுத்து சாமான்களைப் பெறுகின்றனர். சில்லறை வியாபாரங்களில் பண்ட மாற்றுமுறையைக் கையாளுகின்றனர்.

கம்போஜியர் முக்கியமாக பூதலரிசி நெல்பயிரையும் பலவிதக் காய்கறிகளையும் பயிரிடுகின்றனர். மிகவும் அழகான புஷ்பங்கள் கம்போஜியாவில் பரிமளிக்கின்றன. தேனீக்களும் தேனும் மிகுந்துள்ளன. தொன்லேசாப் ஏரிப்பகுதியில் வருடந்தோறும் வெள்ளம் பெருகி வடியும் இயற்கை அமைப்பையும் மிக்காங்கின் இரு கரைகளிலுமிருந்த மூங்கில் காடுகளையும் கம்போஜியர் உபயோகித்து வந்த போக்குவரத்து சாதனங்களையும் சியு-த-குவான் தம் கட்டுரையில் வர்ணித்துள்ளார்.

தங்க உப்பரிகையொன்றில் அரசர் படுத்துறங்குகிருர். பரிவாரம் விருதுகள் சூழ அரசர் நகரபவனிவரும் இடம்பக் காட்சியையும், கொலுமண்டபமும் கோயிலும் பளபளவென்று ஜொலிக்கும் காட்சியையும் சியு-த-குவான் விவரித்துள்ளார். தங்க கிரீட மொன்றையும், கழுத்தில் பல முத்துமாலைகளையும், காப்புகளையும் மோதிரங்களையும் அரசர் அணிந்துள்ளார். இருப்புக் கவச மொன்றை தாம் வெளியே செல்லும் போதெல்லாம் அரசர் தரித்துக்கொள்ளுகிருர். அரசரின் மனைவிமார்கள் ஐந்து பேர். அவர்களன்னியில் வைப்பாட்டிகள் நூற்றுக் கணக்கானவர்.

இராச்சியம் 90 மாகாணங்களைக் கொண்டது. கோயில் அல்லது ஸ்தூபியில்லாத கிராமமேயில்லை. சின்னஞ் சிறு கிராமமாயினும் ஆங்கு மெய்-சி யென்னும் போலீஸ் தலைவன் ஒருவன் இருக்கிருன். உயர்தர உத்தியோகங்களனைத்தும் இராச குடும்பத்தினர் வசமும் பிர

புக்கள் வசமுள. வழிப்போக்கர்கள் இளைப்பாறுவதற்குச் சாலைகள் ஓரமாய் சாலாக்கள் (மண்டபங்கள்) கட்டப்பட்டுள்ளன.

நிதி வழங்கவும் இதர அரசாங்க அலுவல்களை மேற்பார்க்கவும் அனுதினமும் இருமுறை அரசர் சபை கூட்டுகிறார். ஆனால் அலுவல் அட்டவணையொன்றும் முன்னர் தயாரிக்கப்படுவதில்லை. அரசரை முன்னர் பேட்டி காண விரும்பும் நிருவாகிகளும் பிரசைகளும் சன்னிதானத்தை எதிர்பார்த்து முன் உட்காருகின்றனர். அற்பவழக்காயினும் அரசரே நேரில் நீதி செலுத்துகிறார். பெருங்குற்றம் செய்த குற்றவாளிகளை உயிருடன் புதைக்கின்றனர்; அல்லது விரல்களைத் துண்டித்து விடுகின்றனர். சவுக்கடியும் அபராதமும் சிறு குற்றங்களுக்குத் தண்டனைகளாகும். சிக்கலான வழக்குகளில் பின் குறிப்பிடும் முறை கையாளப்படுகிறது. அரமனைக்கு முன்புறத்தில் பன்னிரண்டு சிறு உப்பரிகைகள் உள. உப்பரிகையில் வழக்காளிகளிருவரும் எதிரும் புதிருமாகவும் அடிதளத்தில் அவர்களுடைய குடும்பத்தினர் எதிரும் புதிருமாகவும் உட்கார்ந்து கொண்டு இமைகொட்டாமல் எதிரியைக் கவனித்து வருகின்றனர். 1, 2, 3 அல்லது நான்கு தினங்களுக்குள் அநீதன் ஏதாவது ஒருவகையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுகிறான். சிலங்கி, பரு, தடிமல், சுரம் அல்லது வேறு உபாதிகளால் அநீதன் இச் சோதனையில் பிடிக்கப்படுகிறான். இதைத் தெய்வ நீதியெனக் கருதுகின்றனர்.

புத்த மதமும் சைவ சமயமும் கம்போஜியாவில் பரவியுள்ளன. குஷ்டநோய் இந்நாட்டில் பரவியுள்ளது. ஆணும் பெண்ணும் வாசனை திரவியங்களை மிகுதியாய் உபயோகித்து வருவதாலும் விகற்பமின்றி கலந்து நீராடுவதாலும் இந்நோய் கம்போஜியர்களிடையே அதிகம் பரவியுள்ளது.''

V

கி. பி. 13-வது நூற்றுண்டிலிருந்து கம்போஜியா வரவரத் தாழ்வுற்றது; புற இந்தியாவின் பேரசு பதவியி லிருந்து படிப்படியாய் சீரழிந்து இறுதியில் சென்ற நூற்றுண்டில் பிரஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அது அடி பணிந்தது.

அடியில் குறிப்பிட்டவை இவ்வீழ்ச்சிக்குச் சில முக்கிய காரணங்களாகும்:—(1) கம்போஜிய வேந்தர்கள் சாம்காரர்களுடன் அடிக்கடி தொடுத்துவந்த போர்களாலேற்பட்ட பெரும் சேதமும் அயர்வும். (2) பிரமிக்கத் தகுந்த கோயில்களையும் கோட்டைகளையும் தொடர்ச்சியாக ஆட்சி மாறி ஆட்சி கட்டி முடித்ததால் பிரசைகளடைந்த சோர்வும் மனக்கசப்பும் (3) சிங்காதனமேறுவது விஷயமாய் வார்சுகளிடையே ஏற்பட்ட பிணக்குகளும் அவைகளால் விளைந்த உள்நாட்டு குழப்பமும். (4) கம்போஜியாமிது படையெடுத்த பகைவர்கள் ஒவ்வொரு தடவையும் கம்போஜியரை ஆயிரக்கணக்கில் சிறை செய்து பலவந்தமாய் தத்தம் தேசங்களுக்கு அழைத்துச் சென்றமையால் கம்போஜியாவிலேற்பட்ட ஜனக்குறைவு. (5] விராசையையும் சாந்தத்தையும் போதிக்கும் புத்த மதம் மக்களிடையே அதிகம் பரவப் பரவ போர் ஊக்கம் குறைந்துபோதல். (6) அறிவாளி வகுப்பில் ஏற்பட்ட ஈடற்ற நஷ்டம். (7) இந்தியாவி லிருந்து புது ஏறு குடிகள் வராமை.

ஒரு கட்டிடத்தின் உறுதிக்கு அதன் அஸ்திவாரம் எவ்வாறு இன்றியமையாததோ. அவ்வாறே அரசியலில் குடிகளின் மனத் திருப்தியும் ஒற்றுமையும் சுதந்திர வாழ்வுக்கு இன்றியமையாதவையாகும். உறுதியான அஸ்திவாரமற்ற கட்டிடம் வெளியே பகட்டாய் தோன்றினும், காலக்கிரமத்தில் அது இடிந்து அழிந்து

போவது நிச்சயம். அதுபோன்று குடிகளின் நலன்களைப் பேணாத சர்க்கார் எவ்வளவு பகட்டாய்த் தோன்றினாலும் நிலைத்திருக்காது.

வர்மர்கள் காலத்தில் கம்போஜியாவில் ஆடம்பரமும் அதிகாரமும் வெளித் தோற்றத்தில் அதிகமாயிருந்தாலும் பொதுமக்களிடையே ஆழ்ந்த மனக்குறை பரவியிருந்தது; ஜனங்கள் அலுத்துப் போய்விட்டனர். உள்நாட்டில் இராணுவ பலம் குன்றிற்று; கட்டுக்கோப்பும் சீர்குலைந்தது. சர்க்கார் ஊழியர்களும் தளகர்த்தர்களும் முன்போல் அரசரை விசுவாசத்துடன் சேவிக்கவில்லை. இந்நிலையில் பகைவரின் தொல்லையும் அதிகமாயிற்று. மேற்கிலிருந்து சயாமியரும் கிழக்கிலிருந்து அன்னமியரும் கம்போஜியாவை ஒடுக்க ஆரம்பித்தனர். பர்மியருடன் விட்டுவிட்டுப் போரிடவேண்டியிருந்தமையால், சயாமியர் கம்போஜியரை ஒரு மூச்சில் தாக்கி ஒடுக்கிவிடவில்லை. அவ்வாறே அன்னமியரும் கம்போஜியரை நேரடியாகத் தாக்க ஆரம்பிக்குமுன் நடுவிலிருந்த சம்ப இராச்சியத்தை ஒடுக்கவேண்டியிருந்தது. இவை கம்போஜியாவின் வீழ்ச்சியை தாமதபடுத்தினவே ஒழிய அறவே விலக்கிவிடவில்லை.

சயாமியர் கம்போஜிய ஆதிக்கத்திலிருந்து 13-வது நூற்றுண்டில் சுதந்திரம் பெற்றதுமன்றி, தங்களுடைய வலிமை ஓங்க ஓங்க கம்போஜியாவையும் அடிக்கடி தாக்க ஆரம்பித்தனர். அயுத்தியா சயாமின் தலைநகராக ஆன காலந்தொட்டு—1350-இலிருந்து—சயாமியரின் படையெழுச்சிகளும் உக்கிரமாயின. ஏனெனில் சுகோதாயை விட (பழைய சயாமிய தலைநகரம்) அயுத்தியா அங்கோர் தோமைக் கிட்டியுள்ளது. 13-வது நூற்றுண்டிலிருந்து 400 வருடகாலத்திற்கு சயாமியருக்கும் கம்போஜியருக்குமிடையேவெம்போர்மூண்டது. அங்கோர்தோமை சயாமி

யர் நான்கு முறை அதாவது 1352, 1393. 1431, 1460-இல் கைப்பற்றிக் கொண்டதாக ஓராசிரியர் குறிப்பிடுகிறார். இப் படையெழுச்சிகளின் பயனாக அந்நகரும் உருவம் தெரியாமல் அழிவுற்றது. பௌத்த சமயமும் முக்கிய மாக சயாமியர் பின்பற்றும் ஹீனயான பிரிவு கம்போஜி யாவில் அதிகம் பரவலாயிற்று.

சயாமியரின் தொந்தரவை பொறுக்க முடியாமல் கம் போஜ்யர் தம் தலை நகரைப் பல இடங்களுக்கு மாற்றிக் கொண்டனர். 16-வது நூற்றாண்டில் பாபூர் என்னும் ஊருக்கும் பின்னர் லோவக் என்னும் நகரக் கோட்டைக் குத் தலைநகர் மாற்றப்பட்டது. அடுத்த நூற்றாண்டில் உடோங் தலை நகராக விளங்கிற்று.

கி. பி. 1055-லிருந்து 1555 வரையில் கம்போஜியா வில் ஆட்சி புரிந்த அங்சாவ் என்னுமரசர் பெருமைக்கு வந்தவர்; சிறந்த போர் வீரர்; லோவக் அரணைக் கட்டி முடித்தவர். கம்போஜியா மீது இரு முறை படையெடுத்த சயாமிருக்கு அவர் படுதோல்வியளித் தார். அவருடைய மகன் பரோம ராஜா சயாம் மீது படை யெடுத்து அயுத்தியா வரை முன்னேறி 70,000 கைதி களுடன் ஊர் திரும்பினார். இருப்பினும் கம்போஜியரின் வெற்றி நீடித்திருக்கவில்லை. ஏனெனில் பர்மியரின் தொல்லை சற்று அகன்றபோது 1581-இல் சயாமியர் ஒரு லட்சம் வீரர்களுடனும் 800 யானைகளுடனும் 1500 குதிரைகளுடனும் படையெடுத்து கோரட் சந்தபூன் அங்கோர் முதலிய பகுதிகளைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு, லோவக் கோட்டையையும் முற்றுகையிட்ட டனர். ஆனால் அவ்வமயம் அவர்களால் லோவக் கோட் டையைக் கைப்பற்ற முடியவில்லை. 6 வருடங்கள் கழிந்து சில சதிகாரர்களின் உதவியால் அவர்கள் அக்கோட்டை யைப் பிடித்துக் கொண்டனர்.

அன்று முதல் 1863-ல் பிரெஞ்சுக்காரர்கள் கூறுக்கிடும் வரையில் கம்போஜியா சயாமின் சிற்றரசாயிற்று. ஙிற்க. அன்னுமியரும் கம்போஜியரை மெல்ல மெல்ல நெருங்கி, 18-வது நூற்றுண்டில் கொங்சின்சீனத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். வார்சு விஷயமாய் அடிக்கடி அரமனையிலேற்பட்ட பிணக்குகள் இராச்சியத்தில் பிளவுகளை மூட்டி பகைவர்களை ஒரு முகமாக எதிர்க்கப் பெரும் தடைகளாயிருந்தன.

VI

இந்த அத்தியாயத்தை முடிக்கும் முன் கம்போஜியாவிலுள்ள சிற்ப சின்னங்களைப் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். சிற்பத்திறனுக்கும் அழகிய வேலைப்பாட்டிற்கும் அவை உலக பிரசித்தி பெற்றவை. ஏறக்குறைய கம்போஜியா வெங்கும் புராதனச் சின்னங்களை கெமர்கள் விட்டுச் சென்றுள்ளார்களெனினும் தொன்லேசாப் ஏரிக்கரையில் அங்கோர் தோமை சுற்றியுள்ள பல ஆலயங்களும் இதர கட்டிடங்களும் குளங்களும் தான் இவைகளில் முக்கியமானவை. அதிலும் 2-வது சூர்யவர்மனல் (1113-1145) கட்டப்பட்ட அங்கோர் வாட் ('வாட்' என்றுல் கம்போஜிய சயாம் பாஷைகளில் கோயில் என்ற பொருள்) மிக முக்கியமானது.

இதரச் சின்னங்கள் இடிந்து பாழடைந்துள்ளன. கொடிய விலங்குகள் திரியும் அடர்ந்த காடுகள் அங்கோர் வாட் உள்பட எல்லாச் சின்னங்களையும் சூழ்ந்துள்ளன. 1907-ல் சயாமியரிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் இச் சின்னங்களைப் பிடுங்கிக் கொண்டனர். இவை மேலும் அழியா வண்ணம் பிரஞ்சுக்காரர்கள் அன்று முதல் கவனம் செலுத்தி வருகின்றனர். இச் சின்னங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக நடுக்

நாட்டில் ரஸ்தாக்களை அமைத்துள்ளனர். சின்னங்களை யும் சிறப்பாய்ச் செப்பனிட்டு பந்தோபஸ்து செய்துள்ள னர். அவைகளைக் காண வரும் யாத்ரிகர்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்துள்ளனர்.

இருபுறமும் அடர்ந்துள்ள காடுகளிடையே சிறுநாடா வைப் போல் ஓடும் பாதை வழியாக, மூன்று மைல்களுக் கப்பாலுள்ள சியாம் ரீப் என்னும் ஊரிலிருந்து அங்கோர் வாட் அளிக்கும் தோற்றம் மிக்க வசீகரமானது: பார்ப் போர் மனத்தில் அத்தோற்றம் என்றும் குடிகொண்டிருக் கும். கோயிலை அணுக அணுக, அதன் அமைப்பும் தோற் றமும் அலங்காரமும் அழகும் எல்லோரையும் பரசவப் படுத்துகின்றன.

உலக அற்புதங்களில் ஒன்ருன எகிப்திலுள்ள பிரமிடுகள் அவைகளின் பருமனுல் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பருமனுல் மட்டுமல்ல, சுந்தர வடிவாலும் ஒப்பு உயர்வற்ற சிற்பத்திறனுலும் அங்கோர்வாட் நம் மைப் பரவசப்படுத்துகிறது. மனிதனின் மட்டற்ற முயற் சியை உருவாக்கிக் காட்டுவன போன்று நடுப்பாலையி னின்று பிரமிடுகள் வானளாவி நிற்கின்றன. ஆனுல் அங்கோர்வாட்டோ, மனிதனின் சிற்பத் திறனையும் அவன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் எழில் வணக் கத்தையும் குறித்துக் காட்டுகிறது.

நான் ஒரு கலை விமர்சகன் அல்ல. நம் தாயகத்தி லுள்ள அழகிய கட்டிடங்களுடன் அதை ஒப்பிடும் சக்தி பெற்றிலேன். அதைப்பற்றி சில விபரங்களை மட்டும் கண்டு தருகிறேன். அங்கோர்வாட் கோயிலைச் சுற்றி 630 அடிகள் அகலமுள்ள பேரகழி; அகழியின் வெளி நீளம் 5,500 கஜங்கள். கோயிலும் அகழியும் சேர்ந்து சச்சவுக்கமாயிருக்கின்றன. நான்கு திக்குகளிலுமுள்ள

நான்கு வாசற்படிகளில் மேல வாசற்படியே மிக முக்கிய மானது. யானைகளும் விருதுகளும் அகழியைக் கடக்கக் கூடியதொரு விசாலமான பாட்டை மேலவாசற்படியி லுள்ளது. சவுக்கத்தின் நடு மையத்திலுள்ள கோயி லானது ஒன்றின்மேல் ஒன்றாய் மூன்று அடுக்குகள் கொண்ட பிரமாண்டமான கட்டிடமாகும். சுற்றியுள்ள சமவெளியிலிருந்து கோயிலின் உச்சி 215 அடிகள் உயர முள்ளது.

அங்கோர் வாட்டை எந்தத் திசையிலிருந்து நோக்கி னும் மனோரம்மியமா யிருக்கிறது. அதன் வடிவும் ஒப்புமையும் சிறந்த வேலைப்பாடும் பார்ப்போர் மனதை கொள்ளை கொண்டு போகின்றன. மூலஸ்தானத்திலிருந்த சிவலிங்கத்தை வெகுதூரத்திலிருந்தும் கூட எந்த திக் கிலும் தரிசிக்கும்படியாக கோயில் அமைக்கப்பெற்றிருந் தது. ஆனால் ஜி. சேதேங் என்னும் பேராசியர் அங்கோர் வாட் ஒரு விஷ்ணு ஆலயமெனக் கருதுகிறார், கோயிலி லுள்ள மைதனேத்திலிருந்து சுமார் இரண்டு லட்சம் பக் தர்களாவது மூலவிக்கிரகத்தை தரிசிக்கலாம்.

கோயிலின் ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு திசைகளி லும் நான்கு வாசற்படிகள் உள. அகழியிலிருந்து முதல் பிரகாரத்துக்குச் செல்லும் பாட்டை 1240 அடிகள் நீள முள்ளது. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடையும் வரலாற்றை அப்பாட்டையினிருபுறமுமுள்ள உயரமான சிலைகள் சித்தரித்துக் காட்டுகின்றன. கம் போஜியர்கள் இவ் வரலாற்றை அநேகமாகக் கோயில் தவறாது சிற்பித்துள்ளார்கள்.

மூன்றாவது உச்சிப் பிரகாரத்தில் நான்கு மூலைகளில் நான்கு கோபுரங்களும் மூலஸ்தானத்தின்மீது அவைகளை விட உயரமான கோபுரமொன்றும் ஆக ஐந்து கோபுரங்

கள் உள. அங்கோர்தோம் நகரிலுள்ள பயோன் என்னும் கோயிலில் கோபுரங்களுக்கு பதிலாக ஆங்காங்கு கோபுர வடிவில் ஐந்து முகங்கள் படைத்த சிவன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் மேரு மலையில் வசித்து வருவதாகக் கூறும் ஐதீகத்தைப் பின்பற்றி கம்போஜியர்கள் தங்கள் ஆலயங்களைக் குன்றுபோல் உயரமாக கட்டி அமைத்துள்ளனர். ஒருமண் மலையையாயினும் குவித்து அதன்மீது சிவாலயத்தைக் கட்டியுள்ளனர். தாங்கள் பௌத்த சமயத்தைத் தழுவிய பின்பும் கம்போஜீயரும் சயாமியரும் தங்கள் புனித க்ஷேத்திரங்களை குன்றுகளின்மீது அமைத்து வருகின்றனர்.

அங்கோர் வாட்டின் சிறந்த அமைப்புக்கொப்ப அதிலுள்ள வேலைப்பாடும் சிறந்ததென்று கூறுவேன். தேர்ச்சி பெற்ற சிற்பிகள் மிக்க கவனத்துடன் எண்ணிறந்த சிலைகளை அக் கோயிலில் கொத்தியுள்ளனர். முதல் பிரகாரச் சுவர் முழுவதும், அதாவது சுமார் 26000 அடிகள் நீளத்திற்கு, அடுக்கு அடுக்காக மேற்கூறிய சிற்ப அலங்காரம் தான். இராமாயணத்திலிருந்து யுத்தகாண்ட காட்சிகளும், சூரன் வதைப் படலமும், பரமேஸ்வரன் குடும்ப சமேதராய் வீற்றிருத்தலும், அமிர்தம் கடைந்தெடுத்தலும், கம்போஜிய சரித்திரப் படலங்களும், மைல் கணக்குக்கு மிக மிகத் திறமையுடன் உருவாக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டு சிற்பங்களின் மீது 700 வருடங்களுக்கு முன் பூசப்பட்ட வர்ணம் சிற் சிலப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் பூரணமாக அழிந்துபோயிற்று. இருப்பினும் அவைகளைப் பார்த்துப் புகழாதவர் உலகில் இல்லை யென்றே சொல்லலாம். சிற்பங்கள் ஒவ்வொன்றும் தனித் தனிக்

கற்களில் கொத்தப்படவில்லை. துணி விரித்தாற் போல் தொடர்ச்சியாக, கற்களின் இணைப்புகளிலும் கூட, அவை கொத்தப்பட்டுள்ளன. மேலும் அக் கோயிலி லுள்ள நூற்றுக் கணக்கான கல் தூண்களின் நான்கு முகங்களிலும் அப்ஸர ஸ்திரீகள் நடனமாடும் உருவம் மிக அழகாய் செதுக்கப்பட்டுள்ளது. கருங்கல்லுக்கும் மாக்கல்லுக்கும் இடையே நடுத்தரமான உறுதிகொண்ட கற்களில் மேற் கூறிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள் ளன. முதல் பிரகாரத்தின் நான்கு வாயில்களிலும் நான்கு பெரும் நந்திகள் இருந்திருக்க வேண்டும். ஆங்கு தற்சமயம் நந்திகளுக்குப் பதிலாக எண்ணெய் தோய்ந்த குழிகளேயிருக்கின்றன. இரண்டாவது பிரகாரத்தில் திருக்குளங்களும் உச்சிப் பிரகாரத்தில் மூலஸ்தானமும் உள. அங்கோர் வாட் ஆதியில் சிவாலயமாக அமைக்கப் பெற்று, பின்னர் கம்போஜிய மன்னர்கள் பௌத்த சம யத்தைத் தழுவியபோது, பௌத்த ஆலயமாக மாற்றப் பட்டது. நான்கு பக்கங்களிலும் சுவர்களால் மூடப்பட் டுள்ள மூலஸ்தானத்தில் சிவலிங்கம் இன்றும் இருப்ப தாகவே நான் கருதுகிறேன். சுவரின் வெளிப் புறத்தில் நான்கு திக்குகளிலும் புத்தர் பெருமான் சயனித்திருக் கும் வடிவில் சிலைகள் இப்போது நிறுவப்பட்டுள்ளன: கம்போஜியாவில் வாழும் இந்தியர்கள் இச் சிலைகளை திருமாலெனக் கொண்டாடி தீபம் போட்டு வருகின்ற னர். நிகரற்ற சிற்பிகளான கம்போஜியர்கள் கொத்து வேலையில் சிறந்தவர்களெனச் சொல்லுவதற்கில்லை. வளைவான மண்டபங்களைக் கட்டவும், ஏறுவதற்கு சிரமமில்லாத மாடப்படிகளைக் கட்டவும் அவர்கள் அறிந்திலர். அங்கோர் வாட்டின் உச்சிப் பிரகாரத் தையோ, அங்கோர் தோமிலுள்ள பயோன் கோயிலி லோ, அரச மாளிகையிலோ, நாம் ஏறும்பொழுது, மிகக்

குறுகிய செங்குத்தான படிகளின் காரணமாக நம் முழந்தாள் சில் தெரித்துப்போகும். அது போல், விசால மான வளைந்த மண்டபங்களைக் கட்ட வழி அறியாது, கம்போஜிய கொற்றர்கள் கற்களை மையத்தை நோக்கி சிறிது நீட்டிய வண்ணம் ஒன்றின் மேல் ஒன்ருய்ப் பரப்பி குறுகிய மண்டபங்களைக் கட்டியுள்ளனர்.

அங்கோர் வாட் நீங்கலாக அதன் சுற்றுபுறமுள்ள இதர சின்னங்கள் இடிந்து பாழடைந்துள்ளன. தென் கிழக்கு ஆசியாவில் ஒரு காலத்தில் மகோன்னதமாய் விளங்கிய அங்கோ தோம் நகரம் மனித வாடைகூட யில்லாத வனாந்தரமாயிற்று; வர்மர்களின் தர்பாரும் ஆடம்பரமும் மறைந்தன; நிகரற்ற சிற்பத் திறனும் மறைந்தது; ஆயிரக் கணக்கான கிராமங்களின் வரும் படியைக் கொண்டு மிக்க பய பக்தியுடன் காலந் தவருது பூஜை நடந்த கோயில்களும் மறைந்தன; ஒரு சிறந்த நாகரீகமே மறைந்து போயிற்று.

அத்தியாயம் 13

நாங்கள் ஆகஸ்டு மாதம் 16உ காலையில் பொனம் பெங்கை யடைந்ததும் நேரே ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ருேம். ரெயில் அதிகாரிகளை விசாரித்ததில் அன்றிரவே ஒரு குட்ஸ்வண்டி பாங்காக்குக்கு புறப்படுவதாக அறிந்துகொண்டு அதில் யாத்திரை செய்ய ஏற்பாடு செய்துவிட்டு நாங்கள் கடைத் தெரு பக்கம் சென்ருேம். நகரிலுள்ள சிநேகிதர்களுடன் அன்றையப் பகலைக் கழித்தோம், சரண்புகும் செய்தியை பொனம்பெங் இந்தியர்கள் எவ்வாறு வரவேற்ருர்களென்று முன்பே கூறியுள்ளேன். இங்கு வசிக்கும் பிரஞ்சிந்தியர்கள் சங்கத்துடன் ஒத்துழைத்திருந்தமையால் கலக்கமடைந்தனர். மார்ச்சு 9உக்கு பின் பிரஞ்சுக்காரர்கள் இந் நகரின் கண் தனிப் பகுதி யொன்றில் வசித்து வந்தமையால் அவர்களுடைய குதூகலத்தை நாங்கள் நேரில் பார்க்க முடியவில்லை.

மாலை 5-30 மணிக்கு சிநேகிதர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, ஒரு குட்ஸ் வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டியில் பாதி உயரத்துக்குமேல் வாசற்படிகளை விட்டு தள்ளி இருபுறமும் அரிசி மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. மூட்டைகளின் உச்சியில் எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த 25 நபர்களும், 4, 5 ஜப்பானிய சிப்பாய்களும் தொற்றிக் கொண்டோம். வண்டிக்குள் வெளிச்சம் எதுவுமில்லை; காற்று வசதியுமில்லை; கக்கூசுமில்லை. டிரெயின் சுமார் 6 மணிக்குப் புறப்பட்டு மெல்ல ஓடிற்று. சந்தி வெளிச்ச மிருந்தவரையில், எங்களுடைய மனக் கவலையை வெளியே காட்டிக் கொள்ளாமல், தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தோம். இரண்டு, மூன்று நபர்

கள் மது போதையி லிருந்தமையால் கூச்சலுக்கும், சிரிப்புக்கும், ஆடல் பாடல்களுக்கும் குறைவில்லை. மணி ஆக ஆக அரிசி மூட்டைகள் பாராங்கல் போல் இறுகியதின் பயனாக எங்களுடைய பின்புறங்க ளெல்லாம் புண்ணுயிற்று. குட்ஸ் வண்டியைத் தவிர வேறு பிரயாண வசதி அவ்வமயமில்லை: பொனம் பெங்கிலிருந்து பாங்காக்கை யடைய 30 லிருந்து 36 மணிகள் பிடித்தது. குட்ஸ்வண்டி பயணத்தின் கஷ்டங்களையும், ஆயாசத்தையும் பற்றி நாங்கள் முறையிட சற்றும் முறைமையில்லை. ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளிகளும் இ. தே. ராவைச் சேர்ந்த சிப்பாய்களும் ஆபீசர்களும் சங்க ஊழியர்களும் சிரமம் பாராது ஒரு தேசத்திலிருந்து ஒரு தேசத்தற்கு, கடந்த இரண்டு வருடங்களாக பெரும்பாலும் குட்ஸ் வண்டியிலேயே யாத்திரை செய்துள்ளார்கள். அரிசி மூட்டையின் மீது சவாரி செய்வதாவது மோசமில்லை: வீச்சம் எதுவுமில்லை. ஆனல் கால் நடைகளுடனும், உப்பு மூட்டைகளின் மீதும், மிகவும் வசதி குறைவுடன், பலர் சவாரி செய்துள்ளனர். தாங்கள் மேற்கொண்டிருந்த தியாக லட்சியத்தையும் யுத்த காலத்தில் போக்குவரத்து வசதியின்மையையும் கருதி மன ஆயாசமெதுவுமின்றி அவர்கள் கஷ்டங்களையும் அலட்டுகையையும் பொறுத்துக் கொண்டார்கள். பெரும் சிரமத்துடன் பல தடவைகள் குட்ஸ் வண்டியில் யாத்திரை செய்திருந்த சில நபர்கள் சு. இ. சங்க நலனுக்காக சுயக்கமின்றி மீண்டும் யாத்திரை செய்யவும் சித்தமாயிருந்தனர். பசி தாகம் தரித்திரம், உடையின்மை உழைப்பு இவை போன்ற கஷ்டங்களைப் பொறுத்திருப்பதின் மூலம் தாங்கள் மேற்கொண்டுள்ள லட்சியம் கைகூடிவிடுமாயின் கிழாசியாவிலுள்ள இந்தியர்கள் மேற்கொண்டுள்ள சுதந்திர லட்சியம் கைகூட வேண்டும்.

எல்லைப்புறத்தைக் கடக்கும்போது ஏதாவது இடையூறுகள் ஏற்படுமோ வென்று நாங்கள் அஞ்சியிருந்தோம். ஆனால் யாதொரு சிரமமுமின்றி நடுச்சாமத்தில் எல்லையைக் கடந்து சயாமுக்குள் பிரவேசித்தோம். அதிகாலையில் பத்தம்பாங் என்னும் சிறு நகரையடைந்தோம். ஜப்பானியர்களின் மத்தியஸ்தப்படி, பிரஞ்சுக்காரர்களால் சயாமியர்களுக்கு 1941-ம் வருடத்தில் விட்டுக் கொடுக்கப்பட்ட பிரதேசத்திலுள்ளது பத்தம்பாங்.

இந்து சீனத்திலுள்ள பல நகரங்களைப் போல் பத்தம் பாங்கிலும் பிரஞ்சு வாடை வீசுகிறது. மார்க்கட்டைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள இச் சிறு நகரத்தின் வீதிகள் ஒடுக்கமாயிருப்பினும் நூல் பிடித்தாற்போல் நேராயுள்ளன. சுற்றுப் புறங்களில் காணக் கிடைக்காத கல்வீடுகள் இங்கு காணப்படுகின்றன. கலெக்டர் வீடு, முசுப்பதி. சுங்க விடுதி, மின்சார நிலையம், ஆஸ்பத்திரி இவைபோன்ற கட்டிடங்கள், மற்ற இந்து சீன நகரங்களிலிருப்பதுபோல் இந் நகரிலு மிருக்கின்றன. இந் நகரிடையே ஓடும் சிறு நதி தொன்லேசாம் ஏரியில் சங்கமமாகிறது. பத்தம்பாங் பகுதியில் விளையும் அரிசிக்கு பிரான்ஸில் மிகுந்த கிராக்கியிருந்து வந்தது.

நாங்கள் வண்டியை விட்டு இறங்கி, நகரில் குடியிருக்கும் சிநேகிதர் ஒருவரை சந்திக்கப் புறப்பட்டோம். ஆனால் அவரைக் காண முடியாமல் ஓட்டலில் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு ஸ்டேஷனுக்குத் திரும்பினோம். ஓட்டலில் மூன்று, நான்கு அனைத் தமிழர்களைச் சந்தித்தோம். சீவனம்செய்ய இந்து சீனத்திற்கு அவர்கள் போக விரும்பியதாகவும் சர்க்கார் உத்தரவின்றி சிவில் ஜனங்கள் எல்லையைக் கடக்க முடியவில்லையென்றும் அவர்கள்

எங்களிடம் கூறினார்கள். இந்த நான்கு வருட கிழாசியாச் சண்டையில் நம் தமிழ் மக்கள் பட்ட கஷ்டமும் துன்பமும் நோயும் இழந்த உயிர்ச் சேதமும் அளவிடற்பாலதன்று. உடுத்த உடையின்றி செலவு நடைக்கு கால் அணா கூடயில்லாமல் நம் மக்கள் தேச சஞ்சாரிகளாய் மலாயாவிலிருந்து ஆயிரக்கணக்கில் சயாமை யடைந்தனர். சிலர் இந்து சீனத்தையும் அடைந்தனர்.

ட்ரெயினும் எட்டுமணிக்கு அவ்விடமிருந்து புறப்பட்டது. முதல் நாள் இரவு எங்கள் மனத்தில் இருந்த கவலை விலகிவிட்டது. எல்லையைத் தொந்தரையின்றி கடந்து விட்டோமென்ற திருப்தியையும், குடல் நிரம்பப் புசிப்பதிலேற்படும் நிம்மதியையும் நாங்கள் பூண்டிருந்தோம். மேலும் எங்கள் வசமிருந்த இந்து சீன பியாஸ்தர்களையும் சிரமமின்றி திக்கலாக மாற்றிக்கொண்டோம். ஜப்பானிய சிப்பாய்கள் எங்களுடன் அதிகம் உரையாடாமல் அவர்களுக்குள் பேசி நகைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் கவலையோ, விசாரமோ, பரபரப்போ எள்ளளவும் காணப்படவில்லை. சரணைப் பற்றி மனதுக்குள் என்ன நினைத்தாலும் அவர்கள் வெளிக் காட்டிக் கொள்ளாமல் மேலதிகாரிகளிட்ட கட்டளைகளைத் தயக்கமின்றி நிறைவேற்றி வந்தனர்.

கொஞ்சங் கூட மேடு பள்ளமில்லாத வெட்டவெளியில் வண்டி ஊர்ந்து சென்றது. மிக்காங், மீனும், டெல்டாக்களிலுள்ள எண்ணிறந்த கால்வாய்களையும் ஓடைகளையும் நதிகளையும் இங்கு கண்டிலோம். தென்பட்ட சிற் சில நதிககளும் ஜீவ நதிகளல்ல. இருப்புப் பாதையின் இரு புறமும் கண்ணுக்கு எட்டிய தூரம் சாகுபடியெதுவும் தென்படவில்லை. ஜன சஞ்சாரமும் வீடு வாசலும் குறைவா யிருந்தன. நடுப்பகலில் ஆரண்யப் பிரதேசத்தை அடைந்தபோது மணிதவாடை சற்று வீசியது.

1941-ம் வருடத்திற்கு முன் ஆரண்யப் பிரதேசம் தான் சயாம்—இந்து சீன எல்லேயாயிருந்து வந்தது. இங்கிருந்து பொனம்பெங்குக்கு இருப்புப் பாதை தொடர்ச்சியாய் முன்னிருந்ததில்லே. இங்கிருந்து சுமார் 60 மைல் தூரம் மொங்கல்பரே என்னும் ஊர் வரையில் ஏற்கனவே இருப்புப் பாதையிருந்ததில்லே. யுத்த தேவையின் நிமித்தியம் ஜப்பானியர்கள் பொனம் பெங்-ரங்கூன் இருப்புப் பாதையை அமைத்துக் கொண்டனர்,

ஸ்டேஷனுக்கு அருகாமையில் யுத்த கைதிகளின் முகாம் இருந்தது. துறைமுகம், ரெயில்வே ஜங்ஷன், ராணுவகிடங்கு இவைபோன்ற முக்கிய ராணுவ தளங்களுக் கருகாமையில் ஜப்பானியர்கள் பெரும் பாலும் யுத்த கைதிகளே வைத்திருந்தார்கள். நேசநாட்டு விமானிகளுக்கும் இது விபரம் தெரிந்திருந்தமையால் அவர்களுடைய கடமை மிகவும் சிக்கலாயிற்று. பல யுத்த கைதிகளே நாங்கள் ஆரண்யப் பிரதேசத்தில் பார்த்தோம் அவர்களுடைய உடல் நிலே மோசமாகத் தோன்றவில்லே. சரண் செய்தியை அவர்கள் அவ்வமயம் விளங்கிக்கொண்டிருந்தார்களா வென்பது சந்தேகமே. யுத்த கைதிகளின் கஷ்ட நஷ்டுரங்களேப்பற்றி பிரமாதமாக பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனல் நம் தமிழ் மக்கள் பட்ட கஷ்டத்தை எடுத்துக்கூற பிரசார இயந்திரம் எதுவுமில்லே. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பும் பின்பும் ஒரு சுகமும் அறியாதவர்களும், திமிர் பிடித்த எந்த ஏகாதிபத்தியத்தையும் நிலேநாட்டத்துணியாதவர்களுமான தமிழ் கூலிகள் இச்சண்டையில் யுத்த கைதிகளேவிட எவ்வளவோ மடங்கு மெலிந்து கெட்டுப் போயிருந்தார்கள்; ஆயிரக கணக்கானவர் உயிரையும் பரிகொடுத்தார்கள்.

இராமாயணத்தில் பிரியம் கொண்டுள்ள சயாமியர்கள் இப்பகுதியை ஆரண்யப் பிரதேசமென்று அழைப்

பது பொருத்தமாகும். இங்கிருந்து நெருக்கமில்லாத காடு கள் ஆரம்பிக்கின்றன.

சயாமின் மொத்த நிலப்பரப்பில் 100க்கு 60 சத விகிதம் காட்டுப் பிரதேசமாக யிருக்கிறது. மிதமிஞ்சிய மழை பெய்யும் பிரதேசங்களான தென்சயாமிலும் வட சயாமின் ஒரு பகுதியிலும் மிகவும் அடர்த்தியான காடு கள் இருக்கின்றன. செடி வர்க்கம் வளர்வதற்கான நீர், வெப்பம். நெய்வான பூமி ஆக மூன்றும் மேற்கூறிய பிர தேசங்களில் மிகுதியாயிருப்பதால் ஆங்கு கதிரவனின் கிரணங்கள் பூமியில் விழாவண்ணம் அவ்வளவு அடர்த் தியாக மரங்கள் பணைத்து கிளையுடன் கிளை பின்னிக் கொண்டு, வான் நோக்கி உயிருக்கு பன்ருடுகின்றன. 100 லிருந்து 180 அடிகள் வரையில் உயரமுள்ள பிர மாண்டமான மரங்கள் தென் சியாம் காடுகளிலுள்ளன. இக்காடுகளிலுள்ள புல்லுருவி வர்க்கங்கள் எண்ணிடற் பாலன. கற்பாறைகளிலும் கூட பாசி படர்ந்துள்ளது. ஆனால் கிழக்கு சயாமிலுள்ள காடுகள் அடர்த்தியா யில் லாமல் இடையிடையே வெட்டவெளியா யிருக்கிறது. அவைகளில் வளரும் மரங்களும் உயரமாகயில்லை. இடை யிடையேயுள்ள வெட்ட வெளியில் புற்களும் புதர்களும் வளர்ந்துள்ளன. இப் பகுதியில் தேக்கு மிகக் குறை வாகவே காணப்படுகிறது. காட்டிற் கப்பால் வடக்கே ஒரு குட்டையான மலைத்தொடர்பு சில இடங்களில் இருப்புப் பாதையை அணுகுவது போலவும் வேறு இடங் களில் அதை விட்டு விலகுவது போலவும் தூரத்தில் காணப்படுகிறது.

மாலையில் க்ராபின்புரி என்னும் ஊரைச் சேர்ந் தோம். இந்த ஊரில் ஒரு வீடாவது பூமி மட்டத்தில் கட் டப்படவில்லை. பொனம் பெங் சுற்றுப்புறத்தைப் போல் இங்குள்ள வீடுகளும் மரத்தூண்களை யூன்றி 4, 5 அடி

உரயத்தில் பலகைத் தளமடித்து பலகைச் சுவர்க ளால் கட்டப்பட்டுள்ளன. வடிகால் வசதி சரிவரயில் லாத இப்பிரதேசம் மழை காலத்தில் தெப்பமாகி விடுகிறது.

இப்பகுதியிலுள்ள நதிகளைக் குறிப்பிடும்பொழுது ஒரு விபரத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். அதாவது நேச நாட்டாரின் விமானப் படையெடுப்பால் பர்மா, மலாயா, வடசயாம், தென்சயாம் ஆகிய பிரதேசங்களி லுள்ள ரெயில்வே ரஸ்தா பாலங்கள் அடைந்திருந்த அபார நாசமும், ஆங்கிருந்து வந்த போக்குவரத்து தடை யும் கிழக்கு சயாமிலில்லை. இருப்பினும் யுத்தத்தின் படிப்பினையால், ஜப்பானியர்கள் கிழக்கு சயாமில் இருப் புப் பாதையின் நெடுக, மரப் பாலங்களைக் கோர்த்து ஒவ் வொரு பாலத்திற்கு அருகாமையிலும் தயாராக வைத் திருந்தார்கள். பெரும் பாலமாயிருந்தால், 2, 3 ஜோடி களைக்கூட தயாரித்திருந்தார்கள். அதேபோல் புது பாலத்திற்குச் செல்லும் கிளைப்பாதைகளும் தயாரிக்கப் பட்டிருந்தன. குண்டு வீச்சிற்குப் பின் புது பாலத்தைப் பூட்டி யமைக்கவேண்டியதுதான் தாமதம். மற்றெல்லாம் தயாராகயிருந்தன.

ஆகஸ்டு 17ம் தேதி இரவை வண்டியிலேயே கழித் தோம். சுமார் 11 மணியிருக்கும்: எங்களுடன் பிரயா ணம் செய்த ஜப்பானிய சிப்பாய்கள் ஸ்டேஷனுக்குச் சென்று திரும்பிவந்து குசுகுசுவென்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். விளைவினதில், பாங்காக்கி லுள்ள பல்லாயிரக்கணக்கான சீனர்கள் பெரும் கலகம் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் அந்நகரில் எந்த நிமி டமும் அமளி ஏற்படலாமென்று அவர்களுக்கு ரிபோர்டு கிடைத்திருப்பதாகவும் தெரிந்து கொண்டோம். இச்

செய்தியைக் கேட்டு மனம் கலங்கி நாங்கள் கூடி ஆலோசித்தோம். எது நேரிடினும் நடுவழியில் இறங்காமல் பாங்காக்குப் போவதே நலமென இறுதியில் முடிவு செய்து சற்று அயர்ந்தோம். யாதொரு விபத்துமின்றி அதிகாலை 4 மணிக்கு பாங்காக்குட்ஸ் ஸ்டேஷனை யடைந்து, நிலம் தெளிந்தவுடன் வண்டியைவிட்டு கீழே யிறங்கினோம்.

இறங்கினதும் இறங்காததும் நாங்கள் ஸ்டேஷனைச் சுற்றிக் கண்டது மயானக் காட்சியைத்தான். யுத்தத்தின் இறுதியில் பாங்காக் அதிகம் பாதிக்கப்பட்டது. இஞ்சின் கொட்டகை, குட்ஸ்யார்டு, ரெயில்வே ஊழியர்களுடைய வீடுகள் இவையெல்லாம் விமசனப் படையெடுப்பால் இடிந்து பாழாய்ப்போயின. எலும்புக் கூடுகளைப் போல் வெறும் சுவர்கள் மட்டும் நின்றுகொண்டிருந்தன. பீறிட்ட பிணங்களைப் போல் இஞ்சின்களும், குட்ஸ்வண்டிகளும் டஜன் கணக்கில் உருவிழந்திருந்தன. உடைசல் இடிசல்களை அகற்றி ஸ்டேஷனை சுத்தம் செய்ய யுக்த முயற்சி யெதுவும் செய்யப்பட்டதாக அறிகுறி தென்படவில்லை. இடிந்து கீழே வீழ்ந்த கூரைகள்; சுவற்றின் கற்கள்; நொறுங்கிய ரெயில்வே தளவாட சாமான்கள் எல்லாம் சிதறிக் கிடந்தன. போரின் இறுதி மாதங்களில் ஜனங்கள் சலித்துப் போய்விட்டார்கள் போலும். அல்லது இந்துசீனத்தைப் போல் இங்கும் மறைமுகமாக இருந்துவந்த ஜப்பானிய துவேஷத்தின் பயனோ இந்த அசட்டை நான் அறியேன். இந்த குட்ஸ் ஸ்டேஷனை ஜப்பானியர்கள் மட்டும் தங்கள் ராணுவ தேவைகளுக்கு அதிகமாக உபயோகித்து வந்தார்கள். நேச விமானப் படையெடுப்பால் பாங்காக் நகரின் இதர பகுதிகளும் சேதம் அடைந்துள்ளதாக நாங்கள் பின்னர் அறிந்து கொண்டோம்.

நவீனப் போர் முறையில், விமானப் போரைப்போல் அதி பயங்கரமானதும் மிதமிஞ்சிய நாசம் விளைவிப்பதும் வேறு எந்த சாதனமும் இருக்க முடியாதென்று இச் சண்டையில் நிதர்சனமாய் ருசுப்பிக்கப் பட்டுள்ளது. விரோதியின் யுத்த தளவாட உற்பத்தி, சிவில்தேவைக்கு உற்பத்தி செய்யப்படும் நானுவித பொருள்கள் இவைகளையும் விரோதியின் போக்குவரத்து சாதனங்களையும் விமானங்கள் சின்னுபின்னமாக்குவது போல் வேறெந்த போர்க் கருவியும் நாசமாக்குவதில்லை. விமானப் போர் விரோதியை குடல் நடுங்க மருட்டி அவனை ஈரல்கருக்கி சீக்கிரத்தில் பணியவைப்பது போல் வேறெந்த போர்க் கருவியும் அவனைப் பணியவைப்பதில்லை. தற்காப்புக்கும் தாக்குதலுக்கும் விமானம் மிகவும் இன்றியமையாததென்று இந்த யுத்தம் படிப்பித்துள்ளது. எனவே, நிகரற்ற விமான பலம் பொருந்திய வல்லரசு, அல்லது கூட்டு வல்லரசுகள் எதிர்கால உலகைக் காக்கவும், அழிக்கவும் மட்டற்ற சக்தி பெற்றிருக்கும் என்று இச் சண்டையில் நிதர்சனமாகியுள்ளது. நிற்க. அணுக்குண்டுவைப் பற்றிய ஆராய்ச்சி சில வருடங்களாகத் தான் தொடங்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி முதிர முதிர அதன் நாச சக்தியும் பன்மடங்கு அதிகரிக்குமென்பதில் ஐயமில்லை.

இந் நிலைமையில் ஜன நருள் மிருந்த நம் நாட்டையும், கடற்கரையோரமாய் அமைந்துள்ள நம் முக்கிய நகரங்களையும் தொழிற்சாலைகளையும் விமான தாக்குதலிலிருந்து எதிர் காலத்தில் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தை நாம் எல்வளவு சீக்கிரம் உணர்ந்து கொண்டு அதற்கான பரிகாரங்களை சுதந்திரம் பெற்றவுடன் கால தாமதமின்றி தேடிக் கொள்ளுகிருேமே

அவ்வளவுக்கு பயனுண்டு. பின் காலத்தில் வருந்த வேண்டிய அவசிய மிராது. அதிர்ஷ்டவசமாக இந்த யுத்தத்தில் கல்கத்தாவும் கிழக்கு வங்காளமும் நீங்கலாக மற்ற பகுதிகள் விமான தாக்குதலிலிருந்து தப்பிக் கொண்டன. எதிர்காலத்திலும் இம்மாதிரி சாதகமான நிலைமை இருக்குமென நாம் நம்புவதற்கில்லை. இந்த யுத்தம் நம் நாட்டின் எல்லையைத் தொட்டு முடிவடைந்தது. மூன்ருவது உலக யுத்தமொன்று ஏற்படுமானுல் அது நம் நாட்டின் எல்லையில் ஆரம்பமாகலாமென நாம் உத்தேசிக்க இடமுண்டு. மேலும் பல்லாண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள ராணுவ பலமும் நம் தேசத்தின் அருகாமையில் செலவிடப்படுமென்றும் நாம் மதிப்பிட்டு எந்த நிலைமைக்கும் தயாராக வேண்டும். ஆகையால் சுதந்திரம் கிடைத்தவுடன் தாமதமின்றி சர்க்கார் தற்காப்பு திட்டங்களை வகுத்து கையாள வேண்டிய அவசியம் தெளிவாகிறது. சுதந்திரம் பெற்றவுடன் சுதந்திர சர்க்கார் பொதுஜனங்களுக்குச் செய்யவேண்டிய பல முக்கிய கடமைகளில் இது ஒன்ருகும்.

ஜனநாயகம், சுய ஆட்சி சகோதர வாஞ்சை, "மனிதர் எல்லோரும் ஓர் குலம்" என்ற பேச்சுகள் எதிர்கால உலகிலும் வாய் புளிக்க, காது கூச, பேசப்படுமென்று சொல்ல வேண்டியதில்லை. உலக அமைதியை நிலைநாட்டுவதற்காக சுதந்திர இந்தியா சர்வ தேச கூட்டுறவில் முழு சிரத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டிய தவசிய மெனினும் எந்த நெருக்கடியையும் சமாளித்துக் கொள்வதற்கான தற்காப்புத் திட்டங்களையும் அதே காலத்தில் கையாளவேண்டும். சுதந்திரம் பெறுவதற்கு முன் நான் இவ்வாறு எழுதுவது வெறும் மனக்கோட்டைக் கொப்பாகும் என்று நான் உணர்ந்துள்

ளேன். இச் சண்டையில் ஏற்பட்டுள்ள அளவற்ற சேதத்தில், கடுகளவு சேதத்தையே நான் இந்து சீனத்தி லும் சயாமிலும் பார்த்தேன். அதைப் பார்த்த மாத்தி ரத்தில் தற்காப்பின் அவசியத்தை உணர்ந்தபடியால் அதை நான் அறிவுறுத்த விரும்பினேன்.

வண்டியை விட்டு நாங்கள் கீழே இறங்கிய பின்னர் எங்கள் கோஷ்டியைச் சேர்ந்த நண்பர்கள் நாங் கள் நகரில் தங்குவதற்கான விபரம் விசாரித்து வர லீக் ஆபீசிற்கு சென்றார்கள். ஏனையோர் ஸ்டேஷனில் காத் துக் கொண்டிருந்தார்கள். எங்களுடைய யூனிபாரங் களைப் பார்த்து அந்த அதிகாலையிலும் ஒரு சீனர் கூட் டம் எங்களைச் சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்திற் கெல்லாம் அதிசயமான இரண்டு வதந்திகளை நாங்கள் கேள்விப்பட்டோம்.

ஸ்ரீஜத் சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் 24 மணி நேரம் பாங்காக்கில் தங்கியிருந்துவிட்டு ஆகஸ்டு 17-ம் தேதி (அதாவது நாங்களடைந்த முதல் நாள்) பயண மானதாகவும், விடை பெற்றுக் கொள்வதற்கு முன் அவர் லீக் ஆபீசர்களுக்கும் பௌஜ் ஆபீசர்களுக்கும் சில புத்திமதிகளைக் கூறியதாகவும் முதல் வதந்தி அறி வித்தது. இது உண்மையெனபின்னர் விளக்கமா யிற்று. இரண்டாவது வதந்தி மிகவும் அதிசயமா யிருந்தது. நேசநாட்டுக் கமிஷனுடன் பண்டித ஜவ ஹர்லால் நேரு அவர்கள் ஒரு வாரத்திற்குள் பாங் காக்கிற்கு விஜயம் செய்வாரென பாங்காக் சீனர் கள் ஓர் வதந்தியை கிளப்பி விட்டிருந்தார்கள். யுத்தத்தில் கலந்து கொள்ள திட்டமாக மறுத்து வந்த நேருஜீ ஜப்பானியரிடம் சரண் ஒப்புக்கொள்ள இந்தியாவின் பிரதிநிதியாக வரப் போகிறார் என்ற

செய்தி முற்றிலும் ஆதாரமற்றதெனினும் பண்டிதர் மீது சீனர்கள் கொண்டுள்ள விசேஷப் பற்றுதலை அது அறிவுறுத்தியது.

1945 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பாங்காக்கில் எதைச் சொன்னாலும் ஜனங்கள் நம்பக்கூடிய காலமாயிருந்தது. மறுநாளன்று என்ன சம்பவிக்கும் என்றறியாத நிலைமையில் ஜனங்கள் காலங்கழித்து வந்தனர். அவர்கள் பல வதந்திகளைக் கற்பித்தும், பரப்பியும் நம்பியும் வந்தார்கள்.

அத்தியாயம் 14

இந்துசீன தீபகற்பத்தின் நடு மத்தியிலிருக்கிறது சயாம் ராஜ்யம். அதன் மேற்கேயும் தெற்கேயும் பிரிட்டிஷ் பர்மாவும், பிரிட்டிஷ் மலாயாவும், வடக்கே சீனமும் பிரஞ்சு இந்துசீனமும், கிழக்கே பிரஞ்சு இந்துசீனமும் இருக்கின்றன. தென் சயாமின் மேற்கு கரையில் இந்து மகா சமுத்திரமும் கிழக்கு கரையில் சயாம் விரிகுடாக்கடலு மிருக்கின்றன. நாடு பிடிக்கும் பேராசையில் பலத்த போட்டி போட்டு வந்த பிரிட்டிஷ், பிரஞ்சு சாம்ராஜ்யங்களால் சயாம் சென்ற நூற்றாண்டில் முழுதும் விழுங்கப்படாமல் ஒருவாறு சமாளித்துக் கொண்டது. இருப்பினும் கிழக்கேயும் வடக்கேயும் 1867 லிருந்து 1907 வரையில் பிரான்சுக்கு பன்முறை பெரும் பிரதேசங்களை விட்டுக் கொடுத்தும், தெற்கேயும் வடமேற்கேயும் பிரிட்டனுக்கு கொஞ்சம் பிரதேசங்களை விட்டுக் கொடுத்தும் மீதமுள்ள மத்திய பகுதியை சுதந்திர நாடாக சயாம் சிரமத்துடன் காப்பாற்றிக் கொண்டது. சயாம் முழுதும் விழுங்கப்படாமல் கொஞ்சம் பிரதேசத்துடனுவது அது சுதந்திர நாடாக தப்பித்ததுக்கு நான்குவித காரணங்கள் கூறப்படுகின்றன. (1) சென்ற நூற்றாண்டில் சயாமில் உள்நாட்டு நிலைமை அண்டை நாடுகளைப்போல் படுமோசமாய் சீர்கெட்டிருக்கவில்லை. அதனால் மேனாட்டாரின் பிரித்தாளும் கொள்கை ஆங்கு பலிக்கவில்லை. (2) பெரும் சேனையை இறக்கி அவர்களுக்கு குண்டு மருந்து, உணவுப் பொருள் முதலிய சாமான்களை சரிவர சப்ளை செய்யத் தகுந்த இயற்கைத் துறைமுகம் சயாமி

லில்லே. மீறும் நதியின் முகத்துவாரத்தை மணல் மேடுகள் அடைத்துக் கொண்டிருந்தமையால், அக்காலத்தில் பெரும் கப்பல்கள் கடலிலிருந்து நதியினுள் பிரவேசிக்க தடைகளாயிருந்தன. (3) சயாமின் சுற்றுப்புறங்களை ஜீரணம் செய்தபின், போட்டியிட்ட இரு மேனாட்டு வல்லரசுகளும் தங்கள் சாம்ராஜ்யங்களுக்கிடையே ஒரு சிற்றரசு இருப்பின் நலமெனவும் கருத ஆரம்பித்தனவாம். (4) கடைசியாக இரண்டு கழுகுகளில் ஒன்று, முக்கியமாக பிரான்ஸ் மேற்கூறிய ஏற்பாட்டை மீறி மேலும் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ள எத்தனம் செய்யுமின், மற்றொன்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல் சயாமுக்கு பக்க உதவியாக விரைந்து செல்லக்கூடிய அளவுக்கு சயாம் ராஜ்யம் குறுகிவிட்டதும் ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. எக் காரணம் பற்றியோ, தப்பித்தது தம்பிரான் புண்ணியம் என்பதுபோல சயாம் பூராவும் விழுங்கப்படாமல் சென்ற நூற்றாண்டில் அன்னிய அடிமைத்தளையிலிருந்து தப்பித்துக் கொண்டது. இப்போது தென்கிழக்கு ஆசியாவில் சுதந்திர நாடாய் விளங்கும் தேசம் சயாம் ஒன்றே. ஹிற்க பௌத்த மன்னர் உலகில் ஆண்டுவரும் தனித்த நாடும் அதுவே. பிரிட்டிஷ் மன்னர் எவ்வாறு இங்கிலீஷ் மாதா கோயில் பிரிவைக் கட்டாயம் சேர்ந்திருக்கவேண்டுமோ, அவ்வாறே சயாம் மன்னரும் அதன் அரசியல்படி கட்டாயம் பௌத்தரா யிருத்தல் வேண்டும்.

அமைப்பில் ஒரு பட்டம் போல் ஏறக்குறைய சதுரமான பகுதி யொன்றும், அதன் கீழ் நீண்ட வால் ஒன்றும் அடங்கிய நாடு சயாம். வால் உள்பட அது மொத்தம் 1020 மைல்கள் நீளமும் அதிகமாக விரிந்துள்ள இடத்தில் 480 மைல்கள் அகலமும் கொண்டது. அந

னுடைய நிலப் பரப்பு **1941-க்கு** முன் **200148** சதுர மைல்கள்; 1941-ல் ஜப்பான் முடித்துவைத்த இராசி பிரகாரம் (**9–5–41 உடன்படிக்கை**) விஷி சர்க்கார் சயாமுக்கு கம்போஜியாவில் பத்தம்பாங் பகுதியையும், லவோஸ் மாகாணத்தில் கொஞ்சம் பூமியையும் ஆக மொத்தம் **15,000** பதினையாயிரம் சதுர மைல்கள் அடங்கிய பிரதேசத்தை விட்டுக் கொடுத்தது. இதைத திருப்பிகைப்பற்ற பிரான்ஸ இப்போது நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளது.

1937 ஜன சஞ்சிகைபபடி சயாமின் மொத்த ஜனத்தொகை ஒரு கோடி நாற்பத்தைந்து லட்சம் அதற்கு பின் இந்த 9 வருடகாலத்தில் குறைந்தபட்சம் 10 சதவிகிதமாவது ஜனத்தொகை அதிகரித்திருக்குமென நாம் நியாயமாக மதிக்கலாம். ஆனால் திட்டமானப் புது புள்ளி விபரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கவில்லை.

இயற்கை யமைப்பைப் பொறுத்தமட்டில், சயாமை வட, மத்திய, கீழ், தெற்கு பகுதிகளென நான்கு பிரிவுகளாக நாம் பிரிக்கலாம். பர்மா எல்லையை ஒட்டி நெடுக மலைகளும் அடர்ந்த காடுகளும் உள. யுத்தத் தேவையின் நிமித்தியம் ஜப்பானியர்கள் அமைத்த இரண்டு இருப்புப் பாதைகள் நீங்கலாக 1 சும்போன்—கராபுரி 2 கான்புரி—மோல்மீன்) சயாமுக்கும் பர்மாவுக்குமிடையே இருப்புப்பாதை போக்குவரத்து முன்னர் கிடையா; காடுகள் வழியாக சில ரஸ்தாக்கள் மட்டும் இருந்தன. ஏறக்குறைய 800 மைல்கள் தூரத்திற்கு சயாமுக்கு வடக்கேயும் கிழக்கேயும் மிக்காங் நதி சயாம்-இந்துசீனம் எல்லையாயிருந்து வருகிறது.

(1) வட பாகம். வடக்கேயிருந்து தெற்கு நோக்கி சமதூரமாய்ச் செல்லும் பல மலைச்சாரல்களும் அவைகளுக்

இடையே நான்கு நதிகள் பாயும் பள்ளத்தாக்குகளும் கொண்ட பீடபூமி வட சயாம். சயாமின் கங்கையான மீனும் சாவ்ப்யா (அது மீனும் என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது) ஜீவநதியும், அதன் கிளைகளான மெ-பிங், மெ-வாங், மெ-யோம் என்ற மூன்று நதிகளும் வடசயாம மலைச் சாரல்களில் உற்பத்தியாகின்றன. வெள்ள காலத்தில் கடற்கரையிலிருந்து செங்மாய் வரையில் சுமார் 400 மைல்கள் தூரத்திற்கு படகுகள் மீனும் நதியில் நடமாடுகின்றன.

சயாமிலே மிக உயர்ந்த குன்றான டோய்-அங்-கா (8587 அடிகள், உயரமானது) செங்மாய்க்கு 50 மைல்கள் தென் மேற்கேயுள்ளது. இக் குன்று அல்லாமல் வேறு உயர்ந்தகுன்றுகளும்வடசயாமில்உள. மேலும் பலகந்தக ஊற்றுகளும் வட சயாமிலிருக்கின்றன. செங்மாய் வட சயாமின் தலைநகராகும்; 11-வது நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு பிரபல "லாவ்" சமஸ்தானத்தின் இராசதானி பட்டிணமாக அது பல நூற்றாண்டுகள் துலங்கிற்று. இன்றும் பழைய கோட்டை முதலியப் புராதனச் சின்னங்கள் சியங்மாயிலிருக்கின்றன. கடல் மட்டத்திலிருந்து 900 அடிகள் உயரத்தில் அமைந்துள்ள அந்நகரம் பங்களூரைப் போல் ஆரோக்கியமான வாசஸ்தலமாகும். தேக்கும், கருங்காலியும் வளரும் காடுகளும், சதுப்பு பூமியும், யானைகளும் மிகுந்த பிரதேசம் வடசயாம்: ஆங்கு நெற் சாகுபடி குறைவு. நெல் வகைகளிலும் பூதலரிசிப் பயிர்தான் அதிகமாய் ஆங்கு சாகுபடி செய்யப்படுகிறது. தலைநகரான பாங்காக்குடன் செங்மாய் இருப்புப் பாதையில் இணைக்கப்பட்டுள்ளது. "தாய்" இனத்தின் ஒரு உட்பிரிவான "லாவ்" ஜாதியினர் இங்கும் வடகிழக்கு சயாமிலும் வசித்துவருகின்றனர். அவர்கள் தென் சயாமியர்களைவிட உயரமாக

வும் வெண்ணிறமாகவும் இருக்கின்றனர். அவர்களுடைய பாஷையும் அரிவரியும் வேறு. இருப்பினும் மலையாளத்துக்கும் தமிழுக்குமுள்ள சிறு வித்தியாசங்களைப் போல் தான் "லாவ்" பாஷைக்கும் சயாம் பாஷைக்குமுள்ள வித்தியாசம். போக்குவரத்து வசதியும் கல்வி வசதியும் அதிகரிக்க அதிகரிக்க சயாம பாஷை "லாவ்" ஜாதியினரிடமும் வெகுவாய் பரவி வருகிறது. "லாவ்" காரர்களும் அசல் சயாமியர்களும் காலக்கிரமத்தில் பல துறைகளிலும் ஐக்கியப்பட்டுள்ளனர். வடசயாமில் லாவ்காரர்கள் அன்றி, கொஞ்சம் ஷான்காரர்களும், கச்சின்காரர்களும் மலை காடுகளில் சில பூர்வகுடிகளும் வசித்து வருகின்றனர். சீனர்கள் குடியேருத நகரங்களும் குப்பங்களும் சயாமில் இல்லை; அவர்களுடைய கண்களுக்கு அற்பமாகத் தோன்றும் வியாபாரமும் வையகத்திலில்லை. ஆதலால், வடசயாமிலும் அவர்கள் எல்லாவித தொழிற்றுறையிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

வட சயாமில் மூன்று பருவப் பிரிவுகள் நிலவி வருகின்றன. (அ) ஏப்ரல் கடைசியிலிருந்து நவம்பர் மத்திமம் வரையில் தென்மேற்கு பருவக் காற்று பொழியும் மாரிகாலம். (ஆ) நவம்பர் பிற்பகுதியிலிருந்து பிப்ரவரி மத்திமம் வரையில் குளிர்காலம், (இ) பிப்ரவரி பிற்பகுதியிலிருந்து ஏப்ரல் இறுதி வரையில் அருங்கோடை. கடுங் குளிருக்கும் கொடிய வெக்கைக்கும் வட இந்தியாவைப் போலுள்ளது வட சயாம்.

(2) மத்திய சயாம். இது மீனும் நதிபாயும் வளப்பமான சமவெளி டெல்டாவாகும். சுமார் 200 மைல்கள் நீளமும் 30 லிருந்து 90 மைல்கள் அகலமும் கொண்டது. சயாமில் விளையும் நெல்லின் பெரும்பகுதி இந்த டெல்டா பிரதேசத்தில் விளைகிறது. பக்-நாம்-போ என்னும் இடத்தில் மீனும் நதியும் மேற்சொன்ன

மூன்று கிளை நதிகளும் கூடி டெல்டா ஆரம்பமாகிறது, ஒன்று சேர்ந்த நதி 30 மைல்கள் தெற்கே செய்-நாடு என்னுமிடத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிந்து 60 மைல்கள் தூரத்துக்கு தனித் தனியாய் ஓடி மீண்டும் ஒன்றுசேர்ந்து பாங்காக் வழியாக ஓடி சயாம் விரிகுடாக் கடலில் சங்கமமாகிறது. கிழக்கே பெட்சபுரி மலைச்சாரலில் உற்பத்தியாகும் மீனும் பசாக் என்னும் கிளை நதி மீனைமுடன் பழைய தலைநகரான அயோத்தியாவுக்கு அருகே (சயாம் பாஷையில் அயுத்தியா Ayudhya) என்றழைப்பர் சேருகிறது. இந்த டெல்டா சமவெளிகடல் மட்டத்திலிருந்து அதிகம் உயரமில்லாததால், மழைகாலத்தில் ஆங்கு வெள்ள அபாயம் ஏற்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து பாங்காங்கின் வீதிகள் 6 அடிகள் உயரமும், அயுத்தியா 14 அடிகள் உயரமும், பக்-நாம்-போ 75 அடிகள் உயரமுமுள்ளன. மீனாம், மெக்லொங், நதிகள் கடலில் சங்கமமாகும் இடங்களில் கடல் தூர்ந்து பூமி வளர்ந்துகொண்டு வருகிறது.

டெல்டா சமவெளிக்கு மேற்கே, பர்மா எல்லைப்புறத்தில் காடுகள் அடர்ந்த மலைகள் தென் சயாம் வழியாக மலாயா வரையில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு முதுகெலும்பு போல் ஓடுகின்றன. இம் மலைத் தொடரின் முக்கிய பகுதியான தெனஸெரிம் (Tennasserim) 2000 அடிகளிலிருந்து 5000 அடிகள் வரையில் உயரமுள்ளது. மெக்-லோங் என்னும் நதி இம் மலைச்சாரல்களில் உற்பத்தியாகி பாங்காக்குக்கு மேற்கே சயாம் விரிகுடாக் கடலில் சங்கமமாகிறது. இந்நதியின் உற்பத்தி ஸ்தானமானது நீர்வீழ்ச்சுகளும்,காடுகளும்,செங்குத்தான மலைப் பாறைகளும், பட்சி இனங்களும் நிரம்பிய இயற்கை வளம்பொருந்திய பகுதியாகும். மெக்லோங் நதி மீனாமைப் போல் அதிக நீளமில்லை. ஆனால் மழைகாலத்தில்

அதில் பிரவாகம் அதிகம். பாங்காக்குக்கு கிழக்கே சில சிறு நதிகளும் ஓடுகின்றன. இந்த டெல்டாவில் ஓடும் பல நதிகளின் நீர்மட்டம் ஏறக்குறைய சமமாயிருப்பதுடன், பல கால்வாய்களால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. நீர்ப் பாசனத்துக்காக பல கால்வாய்கள் சயாமில் வெட்டப்பட்டிருப்பினும், இன்னும் எவ்வளவோ அணைக்கட்டுகளும் கால்வாய்களும் அமைத்து வேளாண்மையைப் பெருக்க சயாமில்-முக்கியமாக கீழ் சயாமில் இடமுண்டு; அதுபோல் பர்மா எல்லைப்புறத்திலும் வட சயாமிலும் உள்ள பல நீர்வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரமெடுத்து தொழிலைப் பெருக்கவும் ஏராளமான வசதியிருக்கிறது. சயாமில் விவசாயத்தையும் கைத் தொழிலையும் பெருக்கி, பொது மக்களின் வாழ்க்கை தரத்தை அதிகரிப்பதற்கு நீண்டகாலத் திட்டங்களும், அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு துணிகரமாய் பொதுநலம் பேணும் சர்க்காரும் தேவையாயிருக்கின்றன.

கொச்சின்சீனம், கம்போஜியாவைப் போல் சயாம் டெல்டா பகுதியிலும், ஆற்றுப் புழக்கம் தான் அதிகமாயுள்ளது. இங்குள்ள ஆறுகளிலும் கால்வாய்களிலும் எண்ணிறந்த மோட்டார் போட்டுகளும், புகைக் கலங்களும், தோணிகளும், படகுகளும், சோங்குகளும், சம்பான்களும் ஓய்வு ஒழிவுயின்றி இரவும் பகலும் புழங்குகின்றன. சில இடங்களில் நதி, கால்வாயின் இரு கரைகளும் தெரியா வண்ணம் கூட வரிசை வரிசையாய் படகுகள் மூடிக் கொண்டிருக்கின்றன. சில படகுகள் ஓடித்திரியும் கடைகளாய் விளங்குகின்றன; அவைகளுடன் வியாபாரம் செய்ய சம்பான்களில் ஜனங்கள் வந்து போகின்றனர். குழந்தைகள் உள்பட ஆணும் பெண்ணும் துடுப்பையும் சவளையும் சுக்கானையும் சாதுர்ய

மாய் உபயோகிக்க பயின்றுள்ளனர். மீனும் ஆற்றிலும் அதிலிருந்து பிரியும் கால்வாய்களிலும் கடலிலிருந்து அயுத்தியா வரையில் தினசரி கடல் வெள்ளம் பெருகி வடிகிறது.

அசல் சயாமியர் இந்த டெல்டா சம வெளியில்தான் பிரதானமாக வசித்து வருகின்றனர்: இங்குகுளிரும்வெப் பமும் வடசயாமைப்போல் அவ்வளவு கடுமையாயில்லை யெனினும், சென்னையைவிட அதிகமென்றே சொல்ல வேண்டும். மார்ச்சு, ஏப்ரல், மே முற்பகுதி இம்மாதங் களை சயாம் டெல்டா வெளியில் கழிப்பது மிகவும் பிர யாசை. அம்மாதங்களில் காற்று கொஞ்சங்கூட அசைவ தில்லை. வெய்யலும் உக்கிரமாயுள்ளது. பகலில் வெளியே தலைநீட்ட முடியாது. மே பிற்பகுதியிலிருந்து குளிர்ந்த பருவக் காற்று வீசி மழை பெய்வதால், சூரிய வெப்பம் தணிந்து பூமியும் குளிர்கிறது. ஐப்பசி, கார்த்திகை மாதங் களில் தமிழ் நாட்டில் அடைமழை பொழிவதுபோல் இங்கு மழை பொழிவதில்லை. எப்போது மழை பெய்யு மென்று உறுதியாகச் சொல்லவும் முடியாது, முற்பகலில் வானம் சுத்தமாக வெளுத்திருக்கும். மழைத் தோற்றமே யிராது; திடீரென கருமுகில் திரண்டு மழை பொழிந்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மறுபடியும் வானம் வெளுத்துவிடும்; ஏக தேத்தில் மழை தாரை தாரை யாய் வர்ஷிப்பதுமுண்டு. ஆனல் தமிழ் நாட்டைவிட இங்கு மழை காலமும் மழைப்பருமனும் அதிகம்; இந்த டெல்டா வெளியில் வருடா வருடம் சராசரி 45 இன்சு கள் மழை பொழிகிறது.

(3) தென் சயாம் இது மலை, காடுகள் மிகுந்து வால் போல் நீண்டுள்ள பிரதேசமாகும்; 470 மைல்கள் நீளமும் 10 லிருந்து 120 மைல்கள் அகலமும் கொண்டது. கிழக்கே சயாம் விரிகுடாக் கடலும்

மேறகே பர்மாவும் வங்காள குடாக்கடலும் அதைச் சூழ்ந்துள்ளன. ஆங்கிலேயர்களுக்கு வெகுகாலமாய் தலை வலியைக் கொடுத்து வரும் "க்ரா" பூசந்தி தென்சயாமி லுள்ளது. அதிகம் மழை பெய்வதால் 90 லிருந்து 180 அடிகள் உயரமுள்ள பிருமாண்டமான மரங்கள் அடர்ந்த காடுகள் தென்சயாம் மலைச்சாரல்களில் உள் ளன: நூற்றுக்கணக்கான தாவர வர்க்கங்களும் புல்லு ருவிகளும் இக்காடுகளில் செழிக்கின்றன. ஈயம், உல் பரம் போன்ற உலோக பொருட்கள் தென் சயாமில் வெட்டி எடுக்கப்படுகின்றன. உலகில் ஈயம் விளையும் நாடுகளில் சயாம் மலாயாவுக்கு அடுத்தபடியாக இரண் டாம் ஸ்தானம் வகிக்கிறது. சயாமின் ஏற்றுமதிக் கணக் கிலும் அரிசிக்கு அடுத்தபடியாக ஈயம் இரண்டாம் ஸ்தானம் வகிக்கிறது. சயாமில் வெட்டி யெடுக்கப்படும் ஈயம் அனைத்தும் தென் சயாமிலிருந்து வருகிறது. ரப்பர் தோட்டங்களும், தென்னந் தோட்டங்களும் தென்சயா மில் அபிவிருத்தியடைந்துள்ளன. ஆனால் நெற்சாகுபடி மட்டும் குறைவு. தென்சயாமின் தெற்குப் பகுதியில் விசாலமான இரண்டு சமவெளிகள் கடற்கரை யோரமா யிருக்கின்றன. தென் சயாமில் குட்டையான நதிகள் பல மேல்கீழாய் ஓடுகின்றன. "தாலேசாப்" என்ற பெரிய உவர்ப்பு ஏரி கீழ்கரையிலும் புக்கேட் என்னும் தீவு மேல் கரையிலும் உள. நீண்ட கடற்கரை யிருப்பி னும், தென்சயாமில் பெரும் கப்பல்கள் தங்கக்கூடிய இயற்கைத் துறைமுகங்கள் இல்லை. ஈய உற்பத்தியின் கேந்திர ஸ்தானமான புக்கேட் தீவில் நடுத்தர கப்பல் களும் சிறு கப்பல்களும் பிடிக்கின்றன. தென்சயாமின் சீதோஷ்ண ஸ்திதி மலாயாவுக்கு ஒப்பானது. மலாயாவை யடுத்து சட்டுல், (Satul) பட்டானி, (Pattani) பங்நாரா, (Bangnara) யாலா (Yala) என்னும் ஜில்லாக்களில் 6,25,000

(1937 சஞ்சிகை) மலாய்க்காரர்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் சயாமிய பிரஜைகளென்றும் முஸ்லிம்களென்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தென் சயாம் காடுகளில் செமாங் என்னும் பூர்வ குடிகள் வசிக்கின்றனர். உவாஹின் என்ற கடற்கரை வாசஸ்தலமும் சுந்தரமான சிங்கோரா என்னும் நகரமும் தென் சயாமில் பேர்பெற்றவையாகும். சயாமின் சிங்காரத் தோற்றங்களில், அதனுடைய சுக்கான் கற்பாறை மலைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவை தென், வடசயாமியிலுள்ளன. மழையும் வெப்பமும் சேர்ந்து மிருதுவான அம் மலைகளை சும்மா விடவில்லை. செங்குத்தான பாறைகளையும் விநோத உருவங்களையும் நாம் அம்மலைகளில் பார்க்கக் கூடும். தென் சயாம் வழியாக பாங்காக்-பினங்கு இருப்புப்பாதை அமைந்துள்ளது. சும்-போன் என்ற ஊரிலிருந்து மேற்கே கராபுரிக்கு ஜப்பானியர்கள் ரெயில் போட்டுள்ளார்கள். கராபுரிக்கும் பர்மாவின் தென் கோடியான விக்டோரியா முனைக்கும் இடையே ஒரு நதி ஓடுகிறது.

(4) கீழ் சயாம்:—இது தென்கிழக்கு திசையை நோக்கி சாய்ந்திருக்கும் பீடபூமியாகும். இதன் வடக்கேயும் கிழக்கேயும் 800 மைல்கள் தூரத்திற்கு மிக்காங்கும், மேற்கே பேச்சபுரி, டோங்-பயா-யென் மலைச் சாரல்களும், தெற்கே இரு மலைச்சாரல்களும் சூழ்ந்துள்ளன. சயாமின் நான்கு இயற்கைப் பிரிவுகளில் இதுதான் மிக விசாலமானது. ஆனால் ஜனநெருக்கமில்லை. டோங்-பயா-யென் மலையில் உற்பத்தியாகும் நம்மூன் நதியும் நம்சி என்ற அதன் கிளையும் அப் பீடபூமி வழியாக கிழக்கு நோக்கி ஓடி, மிக்காங்-கில் சங்கம்மாகின்றன. சுற்றியுள்ள மலைகளிலும் பீட பூமியிலும் தேக்கு, கருங்காலி, செம்மரம்

முதலிய மரங்கள் வளரும் காடுகள் நிரம்பியுள்ளன. பாங்காக்கிலிருந்து கோரட் வழியாக வடகிழக்கே இந்து சீன எல்லையிலுள்ள யுபோலுக்கு செல்லும் இருப்புப் பாதையைத் தவிர ரஸ்தா புழக்கம் இப் பீடபூமியில் மிகக் குறைவு. மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் அவைகள் அவ்வமயம் பெரும்பாலும் உபயோகப்படுவதில்லை. கோடையில் பூமி வரண்டு குடிதண்ணீருக்குக் கூட கஷ்டமாயிருக்கிறது. அணைக்கட்டுகள் கட்டிவெள்ளத்தை தேக்கி, இப்பகுதியில் சாகுபடியை அபிவிருத்தி செய்யுமின் பெருத்தநன்மை பயக்கும். இப் பீடபூமிக்கு வடக்கே சதுப்பு பூமி வால்போல் கொஞ்சம் ஓடுகிறது. "நோங்-லபான்" என்னும் பெரிய நல்ல தண்ணீர் ஏரியும் (70 சதுர மைல்கள் பரப்பு) ஆங்குள்ளது. கீழ் சயாமில், சயாமியரும் "லாவ்"காரரும் கம்போஜியரும் கொஞ்சம் அன்னமியரும் வசித்து வருகின்றனர். கோரட்-டுக் கருகாமையில் பழைய கம்போஜிய ஆதிக்கத்தின் சின்னங்கள் உள.

1937-38 ஜனசஞ்சிகை விபரங்கள் :

சயாமின் மொத்த ஜனத்தொகை 1,44,64,489. அவர்களில் சயாம் பிரஜைகள் 1,38,41,304. சீனர்கள் 524,062. படித்தவர்கள் ஆண் 23,77,348 பெண் 7,34,422. ஆகமொத்தம் 31 11,771 அல்லது 31 சதவிகிதம்.

தொழில் வாரியாக :

விவசாயமும் செம்படவத் தொழிலும் செய்பவர்கள் 60,28,793. வியாபாரம் 3,57,336. கைத்தொழில் வகையரா 1,29,954. வீட்டுச் சேவை 82,590. பப்ளிக் செர்வீஸ் 62,876. போக்குவரத்து 58,857. காடு 20,407. சுரங்கத் தொழில் 15.071. சமயப் பிரிவுகள்படி பௌத்

தர்கள் 1,37,52,091; முகம்மதியர் 6,26 907, கிறிஸ்துவர்கள் 69.227, பிறர் 15,880.

1941-ல் ஏற்றுமதி இறக்குமதி விபரம் :

மொத்த ஏற்றுமதி 29 கோடி 8 லட்சம் திக்கல் பொருமானமுள்ள பொருள்கள்.

மொத்த இறக்குமதி 16 கோடி 88 லட்சம் திக்கல் பொருமானமுள்ள பொருள்கள்.

ஏற்றுமதியில் அரிசி 14 கோடி 88 லட்சம் திக்கல் ஈயமும் ஈய லோபமும் 4 கோடி 44 லட்சம். தேக்கு 59 லட்சம். ரப்பர் 58½ லட்சம். மொத்த இறக்குமதியில் துணிமணி 16·9 சதவிகிதம். உணவுபொருள் 12·5 சதவிகிதம். எண்ணெ 8 சதவிகிதம். சாக்கு 3·0 சத விகிதம்.........

சயாம் ராஜ்யம் 1938-ல் 74 மாகாணங்களாக (சங்வாட்) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சங்வாடும் ஒரு கவர்னர் மேன்பார்வையிலிருந்தது. 1941-ல் பிரான்ஸ் சில பிரதேசங்கள் விட்டுக்கொடுத்த பின் சில புது சங்வாடுகள் நிறுவப்பட்டன.

மொத்த இருப்புப்பாதை நீளம்—3100 கிலோ மீட்டர்கள்.

நாணயம் 1 திக்கல்—100 சத்தாங்.

1941-லிருந்து ஆங்கில வருடம் மாதம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவ சகாப்தமில்லை; புத்த சகாப்தம். கிறிஸ்துவ சகாப்தத்துடன் 543 வருடங்கள் கூட்டிக்கொள்ள வேண்டும். உதாரணமாக 1946 சயாமில் 1946X543—2489.

அத்தியாயம் 15

நாங்கள் காலை சுமார் 9 மணிக்கு குட்லை ஸ்டேஷனை விட்டு வெளியேறி ஒன்றரை மைல் தூரத்தில் சிபியா ரோடிலிருந்த லீக் ஆபீசுக்குச் சென்று பாங்காக் லீக்கின் தலைரான சர்தார் இஷர் சிங் அவர்களையும், சப்ளை மந்திரியும் சு. இ. சங்கத் தலைமைக் காரியாலயத்தின் உப தலைவருமான திரு பரமானந்த் அவர்களையும், ஜனப் டி. எம். கான் அவர்களையும் சந்தித்து செய்கோன் சங்க நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடை யளித்தோம்.

எங்கள் கோஷ்டி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு நாங்கள் மூன்று லீக் "மெஸ்"களில் தங்கியிருக்க ஏற்பாடாயிற்று. "க்ளோங் தோய்" என்னும் நகரின் ஒரு மூலையிலுள்ள பிரசார இலாகா மெஸ்ஸில் சில நண்பர்களுடன் நான் தங்கினேன்.

நகர மின்சார நிலையம் குண்டு வீச்சால் சேதமடைந்திருந்தமையால், நாங்கள் வந்த சமயம் மின்சார உற்பத்தியில்லை; மின்சார மின்மையால் டிராமில்லை; வீதிகளில் வெளிச்சமுமில்லை. தண்ணீர் சப்ளை மட்டும் கொஞ்சம் கொஞ்சமிருந்து வந்தது. பாங்காக் ஒலியிழந்து சோபித்திருந்தது. பூமி மட்டத்தின் மேல் ஆங்காங்கு முட்டு முட்டாய் நின்று கொண்டிருந்தமரடிரன்சுகள் தெருக்களை உருவழித்தன. திருட்டு அபாயத்தால் மாலை 4 மணிக்கெல்லாம் கடைகள் மூடப்பட்டன. கருகு மாலையில் ஜனப் புழக்கம் அறவே நின்று வீதிகள் நிசப்தமாகி விட்டன. சீனர்களைத் தவிர மற்ற நகர வாசிகளின் முகத்தில் அருளு

யில்லே; சந்தோஷமுமில்லே. மற்ற தேசங்களைப் போல் இங்கும் விலே வாசிகளும், வண்டி வாடகையும், குடிக் கூலியும் சண்டையின் பயனுக எல்லே மீது உயர்ந்திருந் தன. யுத்தத்துக்குப் பின் திக்கலின் மதிப்பு பத்தில் ஒரு பங்காக குறைந்து விட்டது. தொழிலாளிகள் உயர்ந்த கூலியை சம்பாதித்தாலும், தங்களுக்கு வேண் டிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவு அவர்கள் கூலி பெறவில்லே. யுத்த காலத்திலும் யுத்தம் முடிந்த பின்பும் வியாபாரிகளுக்கும் சொத்துக் காரர்களுக்கும்தான் பெரும் வேட்டை; இதர வகுப்பி னர்—முக்கியமாக சம்பளகாரர்களின்-நிலேவை திண் டாட்டமாயிற்று.

பல வீதிகள் செப்பனிடப்படாமல் பள்ளமும் படு குழியுமாயிருந்தன; அதிலும் நாங்கள் தூரத்தில் தங்கி யிருந்த "மெஸ்' வீதி படுமோசமாயிருந்தது. அதில் வாடகைக்குச் சென்று வந்த கட்டை வண்டியை மெஸ் நண்பர்கள் "எலும்பு குலுக்கி" என மிக வும் பொருத்தமாய் பெயரிட்டிருந்தனர். அவ் வீதி யின் வழியாக புது துறைமுகத்துக்குச் செல்ல வேண்டுமாதலால், நேச துருப்புகள் பாங்காக் கில் இறங்கிய பின், அவ் வீதியும் சிமிண்டு வீதியாக திருத்தி யமைக்கப்பட்டது, மீனும் நதியின் கீழ் கரை யில் 1885-ல் அமைக்கப்பட்ட ஜனநருள் மிகுக்கதும் பல சாதியினரும் வசித்து வரும் விசாலமான பட்டினமாகும் சயாமின் தலே நகரான பாங்காக்; அது கடலிலிருந்து 20 மைகள் உள்ளே தள்ளி யுள்ளது. ஆனுல் மீனும் நதி வளைந்து ஓடுவதால், நதி மார்க்கமாக கடலிலிருந்து 30 மைல்களுக்கு மேலுள்ளது. தலேநகரின் முழுப் பெயர் "குருந்தேவ மகா நகர ஸ்ரீ அயுத்திய மகாதிலோக ராஜஸ்தான்' ; சுருக்கமாக குருந்தேப் என அழைக்கப்

படும். பாங்காக்கின் எதிர்புறமாய் நதியின் மேல் கரையில் தோன்புரி அல்லது தனபுரி அமைந்துள்ளது.

தேச நிர்வாகம், வியாபாரம், நாணய வர்த்தகம், கல்வி, நகாகரீகம், கட்டிடச் சிறப்பு போன்ற சகல துறைகளிலும் பாங்காக் சயாமின் உயிர் நிலையாகும். ஏனெனில் சயாமிய வாழ்க்கை அம்சங்களனைத்தும் ஆங்கு ஒருங்கு கூட்டப்பட்டுள்ளன. அரமனை, சட்ட சபை, சர்வகலாசாலை, சுப்ரீம் கோர்ட்டு, படைக் காரியாலயம், ரெயில்வே காரியாலயம், விமானதளம், வானொலி நிலையம் எல்லாம் ஆங்கு அமைக்கப்பட்டுள்ளன. சயாமின் மொத்த ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் 90 சதத்துக்கு மேல் பாங்காக் துறைமுகம் வழியாக வருடா வருடம் செல்லுகிறது; ஜனத்தொகையிலும், சயாமின் மொத்த ஜனத்தொகைக்கு பொறுத்தமில்லாத அளவு பாங்காக்கிலும் அதைச் சேர்ந்த தோன்புரியிலும் நருள் மிகுந்துள்ளது. பாங்காக்கில் 685,000 நபர்களும் தோன்புரியில் 205,000 நபர்களும் வசித்து வந்ததாக 1937 ஜனசஞ்சிகை ரிப்போர்ட்டு கூறுகிறது. இப்போது இவ்விரண்டு நகரங்களிலும் குறைந்தபட்சம் பத்து லட்சம் ஜனங்களாவது வசிக்கின்றனரென்று மதிக்கப்படுகிறது. தோன்புரியும் பாங்காக்கும் தனித் தனி முனிசிபல் நிர்வாகங்களுக்கு அடங்கியிருப்பினும் இரண்டுக்கும் நடுவில் ஆறு குறுக்கிடுவதைத்தவிர வேறு வித்தியாசமில்லை. சயாமின் மொத்த ஜனத்தொகையை 160 லட்சங்களாக நாம் மதிப்பிடுமுன் பத்து லட்சம் ஜனங்கள் ராஜதானியின் எல்லைக்குள் குழுமியிருப்பதின் ஒவ்வாமை தெளிவாகும்.

நிற்க, தென்கிழக்கு ஆசியாவில் கல்கத்தாவிலிருந்து காண்டன் வரையில் ஏறக்குறைய 3000 மைல்கள் நீள

மான கடற்கரைப் பிரதேசத்தில் பாங்காக்குதான் மிகப் பெரிய நகரமாகும்: அதில் சோலையும் குடியிருப்பும் கலந்துள்ளதைப் போல் வேறெந்த பெரிய நகரத்திலும் கலந்திருக்கவில்லை. மைல் கணக்கான நீளத்திற்கு ஆங்கு பல வீதிகள் கோணலின்றி நேராக ஓடுகின்றன. ஆனால் பாங்காக்கின் முக்கிய அமிசம் யாது எனில் அதனிடையே குறுக்கு மறுக்காய் ஓடும் குளோங்குகளும் (கால்வாய்) அவைகளின் மீதுள்ள நூற்றுக்கணக்கான பாலங்களும் நகரை சிறப்பிக்கின்றன. இக் கால்வாய்களில் நடமாடும் படகுகளும் தோணிகளும் |சம்பான்களும் ஆயிரக்கணக்கானவை. பெரிய ரெயில்வே ஸ்டேஷனை ஒட்டியுள்ள கால்வாயிலும் இன்னும் இதர கால்வாய்களிலும நீர் மட்டம் கூட கண்ணுக்குத் தெரியாவண்ணம் படகுகள் எந்நேரமும் மூடிக்கொண்டுள்ளன. தரை நடமாட்டத்திற்கடுத்தபடியாக நகரில் நதி நடமாட்டம் அதிகமாயுள்ளது. இருபது வருடங்களுக்குமுன் வீதிகள் குறைவாயிருந்தமையால் தரைப் புழக்கத்தை விட நதிப் புழக்கமே மேலோங்கி யிருந்ததாம். தரை மார்க்கட்டுகளைப் போல் கால்வாய்க் கரைகளிலும் படகு மார்க்கட்டுகள் இருக்கின்றன. இக் காரணங்கள் பற்றி பாங்காக் "கீழ் வெனிஸ்' என அழைக்கப்படுகிறது. திருக் கார்த்திகை தீபம்போல் இரவில் ஆயிரம் விளக்குகளுடன் மின்னும் படகுகளையும் அவைகளில் வசிக்கும் மரியாதை மிகுந்த மக்களையும் நாம் ஏதாவது ஒரு பாலத்தின்மீதிருந்து பார்க்கும் சமயமெல்லாம் நம்மை அறியாமல் ஒருவித அழியாத மனப் பரவசமடைகிறோம். உண்மை கூறின் பகலைவிட இரவில்தான் பாங்காக் மனோகரமாயுள்ளது.

பாங்காக்கில் கடைகளுக்கு குறைவில்லை. செய்கோன், சிங்கை, ரெங்கூன் போன்ற கீழாசியா நகரங்களில் எவ்வளவு விலை கொடுப்பினும் யுத்தகாலத்தில் கிடைக்கக்

கூடாத பொருள்கள் பற்பல பாங்காக் கடைகளில் வாங்கலாம். விலை மட்டும் அதிகிராக்கி. அதாவது நேசத் துருப்புகள் வந்து இறங்குவதற்கு முன்னிருந்த நிலைமையை ஈண்டு குறிப்பிடுகிறேன். பாங்காக் வீதிகளின் இரு வரிசைகளிலும் மைல் கணக்கான தூரத்திற்கு சிறு கடைகளும் பெரும் கடைகளும் நிரம்பியுள்ளன. பெரிய ஸ்டோர்களில் குடியிருப்பு இல்லை. மற்ற கடைகளின் பின்புறமும் மாடம் இருப்பின் மாடமும்—குடியிருப்பாய் உபயோகம் ஆகின்றன: வீட்டின் முகப்பில் ஸ்திரமான கடை ஒன்று இல்லாவிடினும் மாலை நேரத்திலாவது பணியாரம் சிகரட், கரும்பு, பழவகை, பானக வகை முதலியவை விற்கப்படும் அஞ்சடிக் கடையாவது ஒன்று பெரும்பாலும் இருக்கும். இக் காலத்தில் எந்த வியாபாரத்திலும் மெத்த லாபம் கிடைப்பதின் பயனோ அல்லது விலைவாசிகள் உயரவே வருவாயையும் உயர்த்திக் கொள்ள ஏழை மக்கள் தேடிவரும் உபாயங்களில் ஒன்றோ நான் அறியேன். எக்காரணமாயினும் பாங்காக்கில் ஈசல் பூத்தாற்போல் அஞ்சடிக் கடைகள் பெரிய வீதி, சிறிய வீதி, சந்துபொந்து எங்கும் முளைத்துள்ளன.

1932 புரட்சிக்குமுன் சயாமில் வியாபாரம் பெரும்பாலும் சீனர் வசமும் மிகுதியான கொஞ்சம் பங்கு இதர அன்னியர் வசமும் இருந்து வந்ததாம். சயாமியர் வியாபாரத்தை நாடவில்லை; உத்தியோக வேட்டையிலும், வேளாண்மையிலும், படை சேவகத்திலும் அவர்கள் முழு கவனத்தையும் செலுத்தி வந்தார்கள். மேலும் வியாபாரத்தில் வெற்றிபெறுவதற்கான நாணயமும், செட்டும், சுறுசுறுப்பும் சயாமியரிடம் குறைவாயிருந்தன. வியாபாரமனைத்தும் அன்னியர் வசம் திரண்டிருந்ததை, புரட்சிக்குப் பின் ஏற்பட்ட ஜன சர்க்

கார் விரும்பவில்லை. ஆகவே சுய பிரஜைகளுக்கு தொழிற் கல்வியையும் பொருளுதவியையும் சர்க்கார் அளித்து அவர்களை மேலும் மேலும் வியாபாரத்தில் ஈடுபட தூண்டிற்று. சிற்சில வியாபாரங்களும் சயாமியரைத் தவிர அன்னியர் செய்யலாகாதென சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் இத் திட்டம் நாளது தேதி வரையில் திருப்திகரமான பலனொன்றையும் அளிக்கவில்லை. சயாமியர் இப்போது முன்னைவிட அதிகமாக வியாபாரிகளா யிருப்பினும் இன்றும் மொத்த வியாபாரமும், சர்க்கார் தடையில்லாத ஏற்றுமதி இறக்குமதி வியாபாரமும் சீனரைப் போன்ற அன்னியர் வசமே பெரும்பாலும் இருந்து வருகிறது. மெத்த வியாபார அனுபவமும், திறமையும், பொருள் பலமும், கட்டுக் கோப்பாயுமுள்ள சீன வியாபாரிகளுடன் கை பழகும் சயாமியர் வியாபாரத்தில் சரிசமனுக போட்டியிட இன்னும் பல்லாண்டுகள் பிடிக்கும்.

சீன வியாபாரிகள் முக்கியமாக ஙியூ ரோட். சாம் பெக், எரவாட், வாட்கோ, வாட்சம்பேங், சொங்வாட், சக்கரவாட் இவைகளுக்குட்பட்ட பகுதியில் குழுமியுள்ளனர். ஆயினும் பாங்காக் நகரில் அவர்கள் குடியிராத பகுதியும் வியாபாரம் செய்யாத பகுதியும் ஈடுபடாத தொழிலும் இல்லையென்று திண்ணமாக உரைக்கலாம். அதுபோன்று சயாமிலுள்ள சிறு நகரங்களிலும் பெரும் குப்பங்களிலும் கூட, சீன காவடி வியாபாரிகளாவது இருக்கிறார்கள். மேற்சொன்ன சீனர் குழுமியுள்ள பகுதி தான் பாங்காக்கில் முக்கிய வியாபார ஸ்தலமாகும். பாங்காக்கிலுள்ள வானுரைசிகள் ஆங்குள்ளன. எந்த நேரமும் வியாபார சுறுசுறுப்பும் முன்னிரையும் (பெருங் கூட்டம்) இரைச்சலும்; சீன சங்கீதமும் ஆங்கு நிரம்பி யுள்ளன. சயாமில் சீன சமூகமே மிக தனவந்தராவர்;

அவர்களில் பெரும் கோடீசுவரர்கள் பாங்காகவில் வசிக்கின்றனர். சீனர்களிடம் உற்சாகமும், உழைப்பும், ஊக்கமும் வற்ரு ஊற்றுக் கண்போல் ததும்புகின்றன.

ஒவ்வொரு கடை முகப்பிலும் சீன பாஷையிலோ, அல்லது ஆங்கிலத்திலோ கடை விலாசம் எழுதியிராவிடினும் சயாம் பாஷையில் அவசியம் எழுதப்பட்டுள்ளது. இது போல் வீதிகளின் பெயர்களும் சர்க்கார் ஆபீஸ்களின் பெயர்களும் ரெயில்வே ஸ்டேஷன்களின் பெயர்களும் நாடெங்கும் சயாம் பாஷையிலேயே எழுதப்பட்டுள்ளன. சுயஆட்சி நடைபெறுவதால் சுய பாஷையைக் கொண்டாடவும் வற்புறுத்தவும் இயலுகிறது. இங்கு குடியேறியுள்ள சீன, இந்திய வர்த்தகர்களில் பலர் சயாமிய பாஷையை எழுதவும் படிக்கவும் கற்றுள்ளனர்.

மேனாடுகளைப் பார்க்கிலும் சயாமில் சர்க்காரின் தலையீடும் கண்காணிப்பும், பொருளாதார கட்டுப்பாடுகளும், ரேஷன் அனுஷ்டானமும் நாங்கள் வந்த சமயம் மிக்க குறைவாயிருந்தன. மிற்க, உயர்தர உத்தியோகஸ்தரிலிருந்து கீழ் சிப்பந்தி வரையில் லஞ்சப் பழக்கம் நாடெங்கும் சகல ஆபீஸ்களிலும் வியாபித்திருந்தது. இவ்விரு குறைபாடுகளின் காரணமாக சயாமில் வியாபாரிகள் யுத்த காலத்திலும் பின்பும் பொது மக்களின் இரத்தை உறிஞ்சி கொழுத்த லாபத்தை சம்பாதித்துள்ளார்கள். அமுலிலுள்ள சொற்ப கட்டுப்பாடு விதிகளும் மீறப்படுகின்றன: கறுப்பு வியாபாரம்; தாங்கள் சம்பாதித்துள்ள லாபத்தில் பத்தில் ஒரு பங்குகூட வருமான வரி கணக்கில் காட்டாமல் லஞ்சம் கொடுத்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களை சரிக்கட்டி கொள்ளுதல் இவ்வாறு

மிகவும் இழிவான தன்னல சூழ்ச்சிகளில் ஏறக்குறைய எல்லா வியாபாரிகளும் சாயமில் மட்டுமல்ல கீழாசியா நாடுகளெங்கும் யுத்த காலத்தில் கையாண்டு அட்டைகள் போல் பொது மக்களை உருஞ்சியுள்ளார்கள்.

இவ்வித சுயநல அட்டைகளினின்றும் பொது மக்களை காப்பாற்ற வேண்டுமாயின், இருவித நிபந்தனைகள் பூர்த்தியாகவேண்டும். (1) ஒழுங்கான தகுந்த சட்ட திட்டங்களை வகுத்தல். (2) அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கான மனச்சாட்சி நிரம்பிய நேர்மையான சிவில் அதிகார வர்க்கத்தை அமைத்தல். ஒன்று இருந்து மற்றொன்று இல்லையானால் பிரயோஜனமில்லை; இரண்டும் இல்லையானால் நாட்டில் அராஜரீகம் குடிகொள்ளும்.

காய்கறி, கனிவகை, மாமிசமீன் வகைகள் முதலிய தீனிச் சாமான்கள் முடையின்றி கிடைக்கும் நிரந்தர மார்க்கட்டுகள் பற்பல பாங்காக்கின் பல பகுதிகளிலும் இருப்பதுடன், வேறு இடங்களிலும் நகரவாசிகளின் சௌகரியத்திற்காக சில வீதிகளின் ஓரமாய் காலையில் மட்டும் பஜார்கள் கூடுகின்றன. கால்வாய்க் கரைகளும் சந்தைகளென முன்னர் தெரிவித்தேன். இவ்வாறு சந்தைகளுக்கும் தினிச் சாமான்களுக்கும் பாங்காகில் முடை இல்லை. பஜார் வியாபாரிகள் தாங்கள் விற்கும் சாமான்களை வாழை இலையில் வைத்து மூடி கோபுர வடிவில் தென்னை ஈர்க்கால் தைத்துக் கொடுக்கின்றனர்; அல்லது காகிதப் பைகளில் போட்டுக் கொடுக்கின்றனர். பஜார்களைச் சுற்றி குப்பையும் கழிவும் நாற்றமெடுக்கின்றன. மூன்று நான்கு வருடங்களுக்குமுன் பீபுல் சொங்ராம் ஆட்சியில் பஜார்களும் வீதிகளும் சுத்தமாயிருந்தனவாம்.

பாங்காக்கிலுள்ள சில முக்கிய கண்காட்சிகளை இப்போது சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன். ஆற்றோரமாய் "பாங்காக் நோய்"க்கு எதிரே (பாங்காக் நோய் என்றால் சின்ன பாங்காக் என்று பொருள்). மிக விசாலமான மைதானம் ஒன்றுள்ளது. அதைச் சுற்றி பெரிய அரண்மனையும் சர்க்கார் ஆபீசுகளும் அமைந்துள்ளன. 1782-ல் பாங்காக் நகரம் முதல் ராமர் என்னும் அரசரால் ஸ்தாபிக்கப்பட்டபோது, ஒரு சதுரமைல் விஸ்தீரணமுள்ள பெரிய அரமனையும் கட்டப்பட்டது, பின்பு நகரம் கிழக்கேயும் வடக்கேயும் தெற்கேயும் நோக்கி விரிந்துள்ளது. நான்கு பக்கங்களிலும் உயரமான மதில்கள் சூழ்ந்த பெரிய அரமனையில் அரசர் மாளிகையையும் துசித் மகா பிரசாத் என்ற கொலு மண்டபமும் வாட்-ப்ரா-கியோ என்னும் மரகத புத்தர்கோயிலும் அரச சமாதிகளும் உள. சயாமியருக்கு மிகமிகப் புனிதமானக்ஷேத்திரமாகும் வாட்-ப்ரா-கியோ. அதன் சுற்றுப் பிரகாரத்தில் ராமாயணத்தின் முக்கிய படலங்கள் யாவும் நான்கு பக்கச் சுவர்களிலும் பளபள வென்று மின்னும் வர்ணங்களால் தீட்டப்பட்டு அடிக்கடி புதிப்பிக்கப்படுகின்றன. கோயிலினுள் சுமார் 12 அடிகள் உயரமான பீடத்தின் மீது இரண்டடிகள் உயரமும் முக்காலடி அகலமுமுள்ள மரகத புத்தர் சிலையொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஏழு அடுக்குகள் கொண்ட தங்க குடையொன்று அந்த விக்கிரகத்தின் உயரே உள்ளது. பீடத்தின்கீழ் முன்புறமாக மூலாம் பூசிய புத்தர் சிலைகள் பல வைக்கப்பட்டுள்ளன. கோயிலின் உட்சுவர்களில் கௌதமரின் வாழ்க்கையில் சில முக்கிய சம்பவங்கள் வர்ணத்தால் சித்தரிக்கப்பட்டுள்ளன.

அரசனிலிருந்து பாமரன் வரையில் பெருமித சயாமியர்கள் இச் சிலையின்பால் பூண்டுள்ள உறுதியும் பக்தியும் அளவிடற்பாலன. "மிகப் புனிதமாய் இருப்பதுடன் உலக அற்புதங்களில் ஒன்றாகும் இம் மரகத புத்தர்" என ஒரு சயாமிய நண்பர் மிக்க உற்சாகத்துடன் என்னிடம் தெரிவித்தார். அவர்மேலும் காரணம்கூறியதாவது. "மோதிரங்களிலிருக்கும் சிறு பச்சை கூட நல்ல நீருடன் உடைசல் கீறல் இல்லாமல் சுத்தமாய் இருப்பது அரிது. இச் சிலையைப் போல் உடைசலில்லாத பெரிய மரகத இரத்தினம் உலகிலேயே வேறெங்கும் இல்லை. எனவே உலக அற்புதங்களில் எங்கள் மரகத புத்தரையும் ஒன்றாக சேர்த்துக் கொள்ளவேண்டும்,'' என்றார்.

எவ்வாறாயினும், சியங்மாயி-லுள்ள சில பாலி ஏட்டுச் சுவடிகளிலிருந்து தொடுக்கப்பட்டுள்ள இச்சிலையின் வரலாறு மிகவும் விநோதமாயுள்ளது. கற்பனையும் சரித்திரமும் அதில் கலந்துள்ளன. சுமார் கி. மு. 150-வது ஆண்டில் மிலிந்தர் அரசர் காலத்தில் பிரபல பௌத்த பிக்ஷுவான நாகசேனரின் விருப்பத்திற்கிணங்க தேவேந்திரனின் உதவியால் விபுல பர்வதத்திலிருந்து மாசற்ற இரத்தினமொன்று கொண்டு வரப்பட்டு, தேவதச்சனால் இச் சிலை செதுக்கப்பட்டு, பாடலிபுரத்தில் மிகவும் சிறப்பாக பிரதிஷ்டை செய்யப்பட்டதாம். அவ்வமயம் நாகசேனர், வெளியே சில கலசங்களில் வைக்கப்பட்டிருந்த கௌதமரின் அஸ்தி அச் சிலையினுள் புகுந்து அதை புனித மாக்குமாறு செபித்தாராம்! அதே போல் அஸ்தியும் உடனே சிலையின் கைகால் தலை போன்ற உறுப்புகளினுள் புகுந்து விட்டதாம்!! பின்னர்முன்னூறு வருடங்கள்கழிந்தன. மகத தேசத்தில் ஏற்பட்ட உள்நாட்டுச் சண்டையின் நிமித்தியம் இச் சிலை இலங்கைக்கு பந்தோபஸ்தாக மாற்றப்பட்டதாம்.

கற்பனை யின்று கி. பி. 1434-லிருந்து சரித்திரம் ஆரம்பமாகிறது. இச் சிலை முதலில் (அதாவது கி. பி. 1434 வில்) சியங்ராய் இலும் பின்னர் சியங்மாய் இலும், வியன் சியன் இலும் (இந்து சீனத்தைச் சேர்ந்த லவோசின் தலைநகரம், இச் சிலையிருந்து வந்து 1779-ல் முதல் இராமர் என்னும் சயாமிய மன்னரால் கைப்பற்றப்பட்டு பாங்காக்கில் 1785-ல் ப்ரா கியோவில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ் வரலாற்றின் முற்பகுதி முழுதும் கற்பனையல்லவென்றும் இச்சிலை உண்மையில் இந்தியாவில் தயார் செய்யப்பட்டதென்றும் சில சயாமிய அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

1779-லிருந்து இச்சிலை சயாமியர் வசம் இருந்து வருகிறது. இதைப் பாதுகாக்கவும் கைப்பற்றவும் பௌத்த மன்னர்கள் போட்ட சண்டைகள் பல; நாடிய உபாயங்கள் பல. இது ஒப்புயர்வற்ற இரட்சையாக மதிக்கப்பட்டது. இன்னும் அவ்வண்ணமே கருதப்படுகிறதென்பதற்கு கீழ்க்கண்ட அறிக்கை சிறந்த உதாரணமாகும். யுத்தகால குற்றங்களுக்காக மாஜி பிரதமர் பீபுல் சொங்ராம் விசாரிக்கப்பட்ட காலத்தில் அவர் கூறியதின் சாரமாவது :—"நான் பிரிட்டன்மீதும் ஐக்கிய அமெரிக்காமீதும் யுத்தப் பிரகடனம் செய்யாதிருப்பின், ஜப்பானியர்கள் உச்சிதமான இம் மரகத புத்தரை தயக்கமின்றி தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். அதன்மூலம் நம் தேசம் ஈடற்ற நஷ்டத்தை அடைந்திருக்கும் அத்தகைய பேராபத்தினின்றும் தப்பித்துக்கொள்ளவே நான் யுத்த பிரகடனம் செய்யத் துணிந்தேன்."

ப்ரா-கியோவின் பக்கத்தில் உள்ள ஒரு கட்டிடத்தில் குட்டி அங்கோர்வாட் கோயில் குழந்தைகள் விளை

யாடும் செப்புவைப் போல் மிகப் பிரயாசையுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும் ப்ரா-கியோ கோயிலின் பிரகாரத்தில் கருடாழ்வார்களும், துவார பாலகர்களும், யாளிகளும், முனிவர் சிலையொன்றும், கம்போஜியர்களால் பல நூற்றுண்டுகளுக்கு முன் கருங்கல்லில் தயாரிக்கப்பட்ட சுந்திரமான புத்தர் சிலைகளும் உள்ளன.

சயாமிய அரச பரிவாரத்தில் சேர்ந்துள்ள சில அந்தணர் குடும்பங்களும் இப் பெரிய சோட்டைக்குள் வசித்து வருகின்றனர். அவர்கள் அரசரின் புரோகிதர்களாவர்; முக்கிய சமஸ்தான வைபவங்களுக்கு மங்கள நாட்களை குறித்து அவ் வைபவங்களில் தாங்களும் கலந்துகொள்ளுகின்றனர். நவீன மனோபாவம் சயாமில் பரவி வருவதின் பயனுக அவர்களுடைய செல்வாக்கும் குறைந்துள்ளது. "சூள கண்ட மங்களம்" (முடியிறக்கும் சடங்கு) ஊஞ்சல் விளையாடும் சடங்கு, பொன்னேர் கட்டி உழும் சடங்கு இவை போன்ற சில சடங்குகள் சயாமில் தொன்றுதொட்டு அனுஷ்டானத்திலிருந்து வந்தன. ஆனுல் நவீன கருத்துகளும் பௌத்த சமய சீர்திருத்தமும் சயாமில் தற்காலத்தில் ஓங்கவே மேற்சொன்ன சடங்குகள் ஹிந்து மதத்திலிருந்து காப்பியடிக்கப்பட்டவை யென்றும் பௌத்த சமயத்திற்கு ஒவ்வாதவையென்றும் கைவிடப்பட்டுள்ளன. எனக்கு சயாம் பாஷை தெரியாததால் நான் மேற்கூறிய அந்தணர்களுடன் உரையாட முடியவில்லை. குடுமியையும், பானுங் (மூலக்கச்சம்) ஐயும் தவிர அவர்களுக்கும் இதர சயாமியர்களுக்கும் தற்பொழுது வித்தியாசம் ஒன்றுமில்லை.

அரண்மனைக் கடுத்தாற்போல் தேசீயப் புத்தக சாலையுள்ளது. அதில் பழைய பாலி ஏட்டுச் சுவடிகளும் பல வடமொழி நூல்களும், இந்தியாவைப் பற்றிய பல

நவீன நூல்களும் அடங்கியுள்ளன. சுமார் பத்து தமிழ் நூல்களும் ஆங்கு உள. மன்னார்குடி வாசியொருவர் இந்த புத்தகசாலையின் அதிபதியாய் பல வருடங்களுக்கு இருந்துவந்தார்.

கொஞ்ச தூரம் தள்ளி கண்காட்சி சாலையுள்ளது. அதன் முகப்பில் அந்தமான கோதண்டராமர் வெண்கல சிலையொன்று மிகவும் பொருத்தமாய் நிறுவப்பட்டுள்ளது. அக் கண்காட்சி சாலையிலுள்ள பற்பல பொருள்களைப்பற்றி பக்கம் பக்கமாக வரையலாமெனினும் நான் நேயர்களை ஆயாசப்படுத்த விரும்பவில்லை. சிவன், விஷ்ணு, ஹரிஹரன், லக்ஷ்மி பார்வதி, நடராஜர், கணேசர், காளி, துர்க்கை, புத்தர் முதலிய விக்கிரகங்களும் அவைகளை வணங்குவதற்கான சாமகிரிகைகளும் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. 5-6. அடிகள் உயரமான வெண்கலத்தில் செய்யப்பட்ட மூல விக்கிரகங்களும் சிறு உற்சவ சிலைகளும் உள. சயாமிய சரித்திரத்தில் சுக்கோதாய் (கி. பி. 1257-1349), பிரிவையும் அயோத்தியா (கி. பி. 1350-1767) பிரிவையும் சேர்ந்தவை யென்று மூல விக்கிரகங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு பகுதியில் கிரந்தம் அல்லது சயாம் பாஷையில் வெட்டப்பட்டுள்ள புராதன கல்வெட்டுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. கிரந்த கல்வெட்டுகள் 12 வது நூற்றுண்டுடன் நின்று விடுகின்றன. அதற்குப் பின் சயாமிய கல்வெட்டுகள் ஆரம்பமாகின்றன.

பலவித இசைக்கருவிகளும், நாணயங்களும் ஆயுத வகைகளும், அரச உடுப்புகளும், அரச வாகனங்களும், சிம்மாசனங்களும், சித்திர வேலைப்பாடு நிரம்பிய மரப் பேழைகளும், சயாமிய பொதுமக்கள் முற்காலத்தில் தரித்ததும் இக்காலத்தில் தரிப்பதுமான பல

வித உடை வகைகளும், பழைய ஓவியங்களும், மண் பாண்டங்களும், தட்டுமுட்டு சாமான்களும், பௌத்த ஆராதனையில் உபயோகிக்கப்படும் சாம கிரிகைகளும், பெரும் தந்தங்களும் அரச தகனத்தின்போது உபயோகிக்கப்பட்ட ரதங்களும், குண்டங்களும், வெவ்வேறு பகுதிகளில் கண்காட்சியாய் வைக்கப்பட்டுள்ளன. பர்மியர்கள் அயோத்தியாபுரியை முற்றுகையிடுதல், வியன் சியனிலிருந்து பாங்காக்குக்கு மரகதபுத்தரை ஆற்றில் ஒரு உல்லாசப் படகில் எடுத்துச் செல்லும் பவனி, பாங்காக்கின் பெரிய அரமனையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து, பிரஞ்சு 14 வது லூயிமன்னரின் சபையில் சயாமிய ராஜதூதரின் வரவேற்பு, தென்சயாமிலுள்ள புக்கேட் அரணை பர்மியர்கள் தாக்கியபோது சயாமிய தளபதியின் மனைவி நடத்திய வீர எதிர்ப்பு, இவை போன்ற பல சரித்திர சம்பவங்கள் மேற்சொன்ன ஓவியங்களில் அழகாய் சித்தரிக்கப்பட்டுள்ளன: சுமார் எட்டு அடிகள் நீளமுள்ள யானைத் தந்தங்களும் அக் காட்சிசாலையில் உள்ளன.

மைதானத்தின் எதிர் புறத்தில் பெரிய 3 மெத்தை அய-சிமண்டு கட்டிடத்தில் "டிக்கா" அல்லது சுப்ரீம் கோர்ட்டும் அதன் பக்கத்தில் தற்காப்பு தலைமைக் காரியாலயமும் இதர முக்கிய ஆபீசுகளும் உள. பாங்காக்கின் நவ நாகரீக ராஜப்பாட்டையான "ராஜ-தமனன் அவென்யு" மேற் சொன்ன மைதானத்தின் ஒரு மூலையிலிருந்து பிரிகிறது. இந்த வீதியும் இதை யடுத்துள்ள மூன்று, நான்கு மெத்தை கட்டிடங்களும் அய-சிமண்டால் சில வருடங்களுக்குமுன், பீபுல் சொங்ராம் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்டன. பாங்காக் நகரை புதுப்பிக்கும் திட்டத்தில் இந்த வீதி ஆரம்பப்படியாகும். ஆனல் மகா யுத்தம் குறுக்கிடவே இத்திட்டமும் ஒத்திவைக்கப்

பட்டுள்ளது. ராஜதமனன் அவென்யுவில் கூட சில கட்டிடங்கள் பூர்த்தியாகாமல் அலங்கோலமாயுள்ளன. அந்த வீதிதான் பாங்காக்கின் நாகரீக வியாபார ஸ்தலமாகும்; சிறந்த ஓட்டல்களும் ஆங்குள்ளன. யுத்தம் முடியும் வரையில் அந்த வீதியில் அன்னியர்கள் குடிபுக சயாமிய சர்க்கார் அனுமதிக்கவில்லை. இப்போது அன்னியர்களுக்கு பாதகமாயிருந்த விதிகள் எடுபட்டுவிட்டன. பிரிட்டிஷாரும் அமெகக்கர்களும் சில ஆபீசுகளை இங்கு அமைத்துக்கொண்டுள்ளார்கள். அந்த வீதியின் நடுமையத்தில் பிரஜாதிபோக் மன்னர் 1932-ல் தம் பிரஜைகளுக்கு வழங்கிய புது ஆட்சி திட்டத்தின் ஞாபகார்த்தமாக ஒரு சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

பாங்காக்கில் புதுமையும் பழமையும் கூடியுள்ளதற்கத்தாட்சியாக அந்த நவநாகரீக வீதியின் சுற்றுப்புறத்தில் மரவீடுகளும்குடிசைகளும் சந்துபொந்துகளும் இன்றும்நிரம்பியுள்ளன. அவ்வீதியை யொட்டி ஒரு மண்மலையின்மீதுள்ளது வாட்ச்ரா—கேட்டும் நூற்றுக்கணக்கான பிக்ஷுக்கள் வசிக்கும் மடமொன்றும். நகரின் மிக உயரமான இடமும் இதுவே. இம் மலையின் உச்சியிலுள்ள ஸ்தூபியில் கபிலவஸ்துவின் அருகாமையில் கிடைத்த புத்தருடைய அஸ்தி வைக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் அக்டோபர் மாதத்தில் நடைபெறும் திருவிழாவின் போது பொதுமக்கள் இந்தஸ்தூபிக்குள்சென்றுவணங்க அனுமதிக்கப்படுகின்றனர். இந்த ஸதூபியிலிருந்து பாங்காக்கின் பூரண வடிவையும் காட்சிகளையும் நாம் பார்க்கக்கூடும். மீனும் நதி நகருக்குள்ளேயே பாம்பு வளைவது போல் இரண்டு மூன்று வளைசல்கள் வளைந்து ஓடுவதையும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மேடு பள்ளமில்லாத சமவெளியின் தோற்றத்தையும்,

நகரத்தின் சுற்றுப்புறத்திலுள்ள சோலையையும், பசுமையையும் நாம் ஆங்கிருந்து கண்டு களிக்கக்கூடும்.

சற்று தூரத்திற்கப்பால் தூசித் பூங்காவனத்திலுள்ள குளக்கரையில் 80 லட்சம் திக்கல்கள் செலவில் இத்தாலிய பாவனையில் முழுதும் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ள அரமனை மிக வசிகரமாயுள்ளது. சயாமிய சரித்திர சம்பவங்கள் பல அதன் உட் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளனவாம். ஆனால் உள்ளே பிரவேசிக்க எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. அந்த அரமனை இப்போது பார்லிமெண்டு மன்றமாக விளக்கி வருகிறது.

நகரின் மற்றுமொரு பகுதியில் சூலாலொங்கோர்ன் ஆஸ்பத்திரியும், பாஸ்சர் கழகமும், சூலாலொங்கோர்ன் சர்வ கலாசாலையும், அரசியலும் தத்துவ சாஸ்திரங்களும் போதிக்கப்படும் சர்வ கலா சாலையும் உள்ளன: பாஸ்சர் கழகத்தில் நாகங்களின் விஷயத்தை எடுத்து பாம்பு கடிக்கு மருந்து தயாரிக்கும் பொருட்டு நாகப் பண்ணை யொன்றுள்ளது. அங்கு வார மொருமுறை நாகங்களின் விஷப் பைகளிலிருந்து கண்ணாடி ஸ்லேடில் விஷம் எடுக்கப்படுகிறது. நாகங்கள் வெகு நேரம் தண்ணீரில் மூழ்கி நீந்துமென நான் அப் பண்ணையில் தான் முதன் முதல் பார்த்து தெரிந்து கொண்டேன். பாங்காக்கில் இரண்டு பூங்காவனங்களும் ஒரு பெரிய விளையாட்டு மன்றமும் உள.

நகரைச் சுற்றியுள்ள பங்களா பகுதியில் சாலைகளின் இருபுறமும் மரங்கள் சோலையா யுள்ளன. பாங்காக்கிலுள்ள சர்க்கார் கட்டிடங்களில் சிலவற்றைத் தவிர இதர கட்டிடங்கள் ஆடம்பரமாகவோ வசீகரமாகவோயில்லை, வர்ணம் வெள்ளைகூட வருடா வருடம்

புதிப்பிக்கப்படவில்லை. நகரிலுள்ள அழுக்கும் அசி யும் கவனமின்மையும் சர்க்கார் ஆபீசுகளிலும் படை யெடுத்துள்ளன. உள்ளே தளவாட சாமான்களும் அலங்காரமாயில்லை. ஒவ்வொரு ஆபீசுக்கு முன்பும் சயாமிய தேசியக் கொடி பறக்கிறது.

1943-ல் நான் முதலில் பாங்காக்குக்கு விஜயம் செய்தபோது மார்ஷல் பீபுல் சொங்ராம் சர்வாதி காரியாய் ஆட்சி புரிந்து வந்தார். அக் காலத்தில் சர்க்கார் கெடுபிடி அதிகமாயிருந்தது. உடையைப் பற்றி பல நிபந்தனைகள் இருந்துவந்தன. சுகாதார பழக்கங்களை நாட்டில் பரப்ப மிகவும் கடுமையான நடவடிக்கைகள் கையாளப்பட்டன. தேசிய கொடி வணக்கமும் அவர் காலத்தில் காலை 8 மணிக்கும் மாலை 6 மணிக்கும் தினந் தோறும் தடபுடலாய் செய்யப்பட்டு வந்தது. அவ்விரு மணி நேரங்களிலும் குண்டு சத்தம் கேட்டதும் வீதிக ளெங்கும் ட்ராம், மோட்டார், சாம்லோர் (மூன்று சக்கர ரிக்ஷா) ஆக எல்லா வாகனங்களும் இருந்த இடத்தில் நிறுத்தப்பட்டதுடன் கால் நடையாய் சென்ற ஜனங்களும் குண்டு சத்தம் கேட்டவுடன் நின்ற இடத் திலேயே நின்று விட வேண்டும். வீடுகளில் கூட ஜனங்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்தி வந்தார்கள். ஆனல் இரண்டு வருடங்கள் கழித்து நான் பாங்காக்கு திரும்பி வந்த போது கொடி வணக்கச் சடங்கு அமுலிலில்லை. சயாமின் எதிர் காலத்தைப் பற்றி ஒன்றுந் தெரியாமல் பெரிய மந்திரியிலிருந்து பாம ரர் வரையில் எல்லா சயாமியர்களும் தத்தளித்துகொண் டிருந்தார்கள். கொடி ஒன்று தங்குமோ என்று கூட சில வட்டாரங்களில் சந்தேகிக்கப்பட்டது.

பாங்காக் நகரில் கல் வீடுகளை விட மர வீடுகளே அதிகமிருப்பதால் நெருப்பு அபாயம் இடை யிடையே

ஏற்படுகிறது. ஓட்டு வீடுகளை விட துத்து நாகத் தகடு களால் மூடிய கூரைகளே அதிகமாயுள்ளன. முனிசிபல் சேவை திருப்திகரமென கூறமுடியாது. காரணமின்றி தெருக்களிலும் மூலை முடுக்குகளிலும் குப்பை கூளங்கள் வாரக் கணக்காக குவிந்து கிடக்கின்றன. கொஞ்சமும் கவனம் செலுத்தப்படாத சந்துகளிலிருந்து வெளிவரும் துர் நாற்றம் சகிக்கத் தகுந்ததல்ல. நெருப்பு அபாயம் சில மாதங்களுக்குமுன் ஒருமுறை பாங்காக்கில் ஏற்பட்ட போது குழாய்களில் அவ்வமயம் தண்ணீர் சப்ளை கூட இல்லை. அவ்வமயம் நகர சபையின் மீது பத்திரிகைகள் கடிந்து குற்றம் சாட்டி எழுதின. இருப் பினும் யுத்தத்துக்கு முன் கீழாசியாவிலேயே முதல் தரமான குடி தண்ணீர் சப்ளை பாங்காக்கில் தான் இருந்து வந்ததாக எழுதப்பட்டுள்ளது. நகர அமைப்புத் திட்டமும் புனர் நிர்மாணத் திட்டமும் பாங்காக்கில் சரிவர கையாளப்படவில்லை. அந் நகரி லுள்ள நூற்றுக்கணக்கான சந்துக்களில் நாம் நுழையும் போது நகர அமைப்புத் திட்டமொன்று பின்பற்றப்படு கிறதா என்ற சந்தேகம் நமக்கு தோன்றிவிடும். மிகக் குறுகிய இச் சந்துகளும் அவைகளின் ஓரமாக அமைந் துள்ள வீடுகளும் யாதொரு ஒழுங்கு திட்டமுமின்றியே அமைந்துள்ளன. இச் சிறு சந்து உலகங்கள் நகரத்தின் இடையிடையே யாதொரு கட்டுப்பாடுமில்லாமல் மனம் போன போக்கில் அமைந்துள்ளன. ஆங்கு மழை காலத் தில் எண்ணிறந்த வீடுகளின் முன்பு சேற்றுக் குட்டை கள் தான்.

தோன்புரிக்கும் பாங்காக்கும் இடையே ஓடும் மீனம் நதியின்மீது மெமோரியல் பாலம் என்னும் ஒரு தூக்குப் பாலம் கட்டப்பட்டுள்ளது. சக்ரி வம்சத்தினரின் ஆட்சி யின் 150-வது வருட விழாவின் ஞாபகார்த்தமாக இப்

பாலம் கட்டப்பட்டு 1932 புரட்சிக்கு இரண்டு மாதங்களுக்குமுன் பிரஜாதி-போக் மன்னரால் திறந்துவைக்கப்பட்டது. யுத்தத்தின் இறுதியில் விமானப் படையெடுப்பால் இப் பாலம் சேதமடைந்திருந்தமையால் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. பின்னர் நேசத் துருப்புகளுடன் வந்த இந்திய இஞ்சினீயர்களால் ஒரு சிறு போந்தூன் பாலம் பழுதான இடத்தில் போடப்பட்டு பாலம் செப்பனிடப்பட்டது. மெமோரியல் பாலத்தைத் தவிர பாங்காக்குக்கும் தோன்புரிக்குமிடையேயுள்ள பல படகு துறைகள் வழியாக நகரமாந்தர் அல்லும் பகலும் கடந்து செல்லுகின்றனர். நதிக்கரையில் எந்நேரமும் சுறுசுறுப்பாய் இருக்கிறது. நடுத்தர கப்பல்கள் நடு ஆற்றில் பிடிக்கின்றன; அவைகளின் இருபுறங்களும் நிற்கும் சோங்குகளில் சாமான்கள் இறக்கப்படுகின்றன. அல்லது சோங்குகளிலிருந்து ஏற்றப்படுகின்றன. நதியின் தென்பகுதியில் கட்டப்பட்டுள்ள துறைகளில் சில கப்பல்கள் அணைக்கப்படுகின்றன. ஆனால் பெரும் கப்பல்கள் ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள மணல் மேடுகளை கடந்து நதியினுள் பிரவேசிக்க இயலாது, கோ-சீ-சின் என்னுமிடத்தில் கடற்கரையோரமாய் பிடிக்கின்றன.

சயாமில் நிரந்தரமாக வசித்துவரும் இந்தியர்களின் ஜனத்தொகை 12,000 லிருந்து 14,000 வரையில். அவர்களில் சுமார் 4,000 நபர்கள் பாங்காக்கிலும் தோன்புரியிலும் வசித்து வருகின்றனர்; ஏனையோர் உள்நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மாகாண வரிசையாக பிரிக்கும்போது, ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம், சென்னை, பம்பாய், எல்லைப்புற மாகாணம் இவைகளைச் சேர்ந்தவர்கள் மேற்குறிப்பிட்ட வரிசைப்படி அதிகம் குறைவாயிருக்கிறார்கள்.

ஐக்கிய மாகாணவாசிகள் பெரும்பாலும் கோரக்பூரைச் சேர்ந்தவர்கள், பால் வியாபாரியாகவோ, காவற்காரனாகவோ அல்லது சில்லுண்டி வியாபாரியாகவோ ஜீவனஞ் செய்துவருகின்றனர். அவர்கள் அநேகமாய் ஹிந்துக்களாவர். உச்சிக் குடுமியையும் மூலக்கச்சத்தையும் காந்திக் குல்லாவையுங் கொண்டு பாங்காக் தெருக்களில் அவர்களை நாம் எளிதில் அடையாளம் தெரிந்து கொள்ளலாம். பீபுலின் கெடுபிடியான ஆட்சியிலும்கூட அவர்கள் மூலக் கச்சத்தை கைவிட்டு கால் சட்டையை தரிக்க மறுதளித்தனராம். ஏழைகளாயிருப்பினும் தேசப் பற்றுதல் அவர்களின் உள்ளத்தில் மங்காமல் குடிகொண்டுள்ளது. கல்வி-யறிவு அவர்கள் மத்தியில் சொற்பம். பெரும் தனவந்தர்களும் கற்ற அறிஞர்களும் சுதந்திர இயக்கம் சம்பந்தமாக சரணாகதிக்குப் பின் மனம் உடைந்தார்கள். தங்களுடைய கதி என்ன வாகுமோவென்று கலங்கினர். இயக்கம் நன்றாக நடந்து கொண்டிருந்த காலத்திலும் அவர்களில் பலர் சுயநலம் கருதி தங்கள் தேசீயக் கடமையினின்றும் வழுவினர். ஆனால் இந்த எளிய கோரக்பூர் சமூகத்தினர் எந்தக் காலத்திலும் தியாகம் செய்ய பின்வாங்கவேயில்லை; எந்தக் காலத்திலும் மனம் சோரவில்லை; தேசப் பற்றுதலையும் விடுதலை லட்சியத்தையும் மறைத்துப் பேசவுமில்லை. பிரிட்டிஷ் இந்திய துருப்புக்களுக்கு பால் வழங்க மறுத்து, காவலில் வைக்கப்பட்டிருந்த இ. தே. ரா. ஆட்களுக்கு அவர்கள் இலவசமாய் பால் வழங்கி வந்தார்கள்; பிரிட்டிஷ் இந்தியத் துருப்புகளை எங்கே கண்டாலும் சற்றும் தயக்கமின்றி அவர்களைஜெய்ஹிந்த்கோஷத்துடன் வரவேற்றனர். பதிலுக்கு ஜெய் ஹிந்த் கூறப்படவில்லையானால் பரிகசம் செய்தார்கள். சில வாரங்களுக்குள் பிரிட்டிஷ் இந்திய துருப்புகள், இ தே. ரா. நபர்

கள், இந்திய சிவில் நபர்கள் ஆக எல்லா வகுப்பினரின் மத்தியிலும் கூச்சமின்றி ஜெய் ஹிந்த் கோஷம் மறுபடியும் ஒலிக்க ஆரம்பித்தது. கோரக்பூர் வாசிகளின் தளரா ஊக்கமும் எளிய முறை பிரசாரமும் இப் புரட்சிகரமான மாறுதலுக்கு உதவிபுரிந்தன.

அவர்களுக்கு அடுத்தபடியாக மிகுந்த நபர்கள் கொண்ட பிரிவு சீக்கிய சமூகம். சீக்கியர்கள் மனைவி மக்களுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் ஜவுளி வியாபாரிகள். யுத்த காலத்திலும் பின்பும் கொழுத்த லாபத்தை சம்பாதித்துள்ளார்கள். இந்திய வியாபாரிகள் ரச்சவோங், வாட்சம்போங், வாட்கோ, அனுவோங்சீ, பௌராட் இப் பகுதிகளில் திரண்டுள்ளனர். சிறுவர்களின் கல்விக்காக ஒருஆரம்ப பள்ளிக்கூடத்தையும் பிரார்த்தனை செய்ய ஒரு குருத்துவாரத்தையும் சீக்கியர்கள் நடத்தி வருகிறார்கள். சீக்கியர்களைத் தவிர பாஞ்சாலத்தைச்சார்ந்த சில ஹிந்துககளும் ஜவுளி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரபல முஸ்லீம் வியாபாரிகள் ஒருவர் நீங்கலாக ஏனையோர் கூர்ஜர வாசிகள். தங்களுக்கென தனி மசூதியொன்றையும் அமைத்துக்கொண்டுள்ளார்கள். அவர்கள் பேப்பர் அலுமினிய சாமான்கள், வேறு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், பூஸ்திதி இவைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழர்கள் சயாமில் பெரும்பாலும் ஏழைகள்; அல்லது நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். பலர் அங்காடி வியாபாரம் செய்து பிழைக்கின்றனர். குறிப்பிட்ட மிகச் சிலர் நல்ல ஸ்திதியிலுமிருக்கின்றனர். சிலோம் வீதியில் ஒரு மாரியம்மன் கோயிலை கட்டிக்கொண்டுள்ளார்கள். பெருத்த ஜவுளி வியாபாரம் செய்யும் ஒன்றிரண்டு சிந்தி வியாபாரிகளும் இருக்கின்றனர்.

கடந்த ஒரு நூற்றுண்டுக்குமேல் இந்திய வியாபாரிகள் பாங்காக்கில் வியாபாரம் செய்து வருவதாகவும் அவர்கள் வியாபாரத் திறமை வாய்ந்தவர்களென்றும் நான் கேள்விப்பட்டேன். ஆனால் நிர்வாகத் திறமையும் ஒற்றுமையும் அவர்களிடம் குறைவெனக் கண்டேன். சு. இ. சங்கம் வேலை செய்துவந்த காலத்தில் சமூக சங்கங்களும், மதச் சங்கங்களும் ஒடுக்கப்பட்டிருந்தன. எல்லா வகுப்பினரும், எல்லா மாகாண வாசிகளும் பொது சங்கத்தில் கலந்துகொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டனர். மாகாண பற்றுதலும் குறுகிய வகுப்புப் பற்றுதலும் மழுக்கப்பட்டன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக சு. இ. சங்கம் 1945 பிற்பகுதியில் மூடப்பட்டபின் வகுப்பு சங்கங்கள் மறுபடியும் பாங்காக்கில் முளைத்துள்ளன. சீக்கியர் சபை, ஜமயத்-யுல்-இஸ்லாம் ஆரிய சமாஜம், ஹிந்து சபை என்றெல்லாம் வகுப்பு சங்கங்கள் வேலை செய்து வருகின்றன. பொது விஷயங்களைப்பற்றி இந்திய வியாபார சபை கூடியமட்டும் கவனித்து வருகிறது. வியாபார சபையின் முயற்சியால்தான் இந்தியர்கள் தாயகம் திரும்புவதற்கு இருந்துவந்த தடைவிதிகள் இறுதியில் அகற்றப்பட்டன இருப்பினும் சிவில் நபர், வியாபாரி இருவரையும் ஒன்று சேர்த்து இந்திய பொது நலன்களைப் பேணும் பொதுச் சங்கமொன்று பாங்காக்கில் அவசியம் தேவையாயுள்ளது.

சயாமிலுள்ள இந்தியர்கள் 125 லட்சம் திக்கல்கள் சு. இ. சர்க்காருக்கு நன்கொடையாக அளித்தார்களென சர்தார் இஷர்-சிங் என்னிடம் கூறினர். இந்தியர்களுக்கென விசேஷ குடியேற்றத் தடையெதுவும் சயாமில் இல்லை. 200 திக்கல்கள் பிரவேசக் கட்டணமும் வருடா வருடம் 4 திக்கல்கள் தலைவரியும் குடியேற விரும்புவோர் செலுத்தவேண்டும். அசல் சயாமியரும் தலைவரி

செலுத்தி வருகின்றனரென்று ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். (இந்த நூல் எழுதியபின், 1946ல், குடியேற்ற சட்டமொன்று சயாமில் பிறப்பிட்டிருப்பதாயும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் வருடா வருடம் இந்தியர்கள் புதிதாக இனி அச் சட்டபடி குடியேறலாமெனவும் அறிகிறேன்.)

மேல்குறிப்பிட்ட நிரந்தர இந்திய ஜனத்தொகையல்லாமல் மலேயாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் இருப்புப் பாதையை அமைக்கும் பொருட்டு ஜப்பானியர்களால் அழைத்து வரப்பட்ட இந்தியத் தொழிலாளிகள் சயாமெங்கும் சிதறிக் கிடந்தனர். பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கிய பின் அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டு இத் தொழிலாளிகள் சிறுகச் சிறுக மலேயாவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தாய்-பாரத கலாசார கழகமொன்று பாங்காக்கில் காலஞ் சென்ற சுவாமி சத்தியானந்த பூரி அவர்களால் அமைக்கப்பட்டு நல்ல தொண்டு புரிந்துவந்தது. யுத்தத்தால் கொஞ்சகாலம் மூடப்பட்டிருந்த இக்கழகம் மறுபடியும் 1946 ஜூலையில் திறக்கப்பட்டது. சயாம் பாஷையையும் இந்திய பாஷையையும் கற்பித்தல், அறிஞர்களை பரிமாறிக் கொள்ளுதல், மற்றும் பல வகைகளிலும் இந்து-சயாம் கலாசார உறவை அபிவிருத்தி செய்தல் முதலியவை இக்கழகத்தின் நோக்கங்களாகும். பிரபல சயாமியரும் இந்தியரும் இக்கழகத்தில் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர்.

அத்தியாயம் 17

I

கி. பி. 13 வது நூற்றாண்டு வரையிலுள்ள சயாமின் சரித்திரத்தைப்பற்றி ஆதாரமற்ற கட்டுக் கதைகள் அதிகமாகவும் நிச்சயமான சரித்திர விபரங்கள் குறைவாகவும் கிடைத்துள்ளன. அடியில் குறிப்பிட்டவை ஏறத்தாழ நிச்சயமான விபரங்களாகும்.

"மோன் அன்னும்" என்றொரு சாதியினர் சயாமில் கிருஸ்து பிறந்த காலந் தொட்டே வசித்து வந்தனர். அவர்களுக்கு முன் "செமாங்" என்னும் பூர்வ குடிகள் சயாமில் பரவியிருந்தனர். ஆனால் செமாங்மரபில் சில ஆயிரம் நபர்களே, தென் சயாமிலுள்ள அடர்ந்த காடுகளில், முன்போல் அநாகரீக வாழ்க்கையில் இன்னும் ஈடுபட்டுள்ளார்கள். மோன் அல்லது தலிங், கெமர் அல்லது கம்போஜீயர், லவா, யுவான் முதலியோர் மோன்-அன்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

இந்தியாவிலிருந்து நேர்முகமாகவும், கம்போஜியா, பர்மா, மலேயா மூலமாகவும் இந்திய நாகரிகமும் இந்து, பௌத்த சமயங்களும் சயாமில் பரவியிருந்தன. சுமார் 2000 வருடங்களுக்கு முன்பிருந்தே, தென் சயாமிலுள்ள புக்ககட் என்னும் தீவில், தென்னிந்தியர்கள் குடியேறி ஈய உலோகம் வெட்டி யெடுத்ததாகச் சொல்லப்படுகிறது. புராதன தமிழ் எழுத்துகளில் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டு தென் சயாமில் கிடைத்துள்ளது. அதன் வாசகத்திலிருந்து, கி. பி. 8, 9 வது நூற்றாண்டுகளில், தென்சயாமில் தமிழ்வணிகக் குடிகளிருந்து வந்ததாகவும் தமிழர் படை ஒன்று அப்பிரதேசத்தை பாதுகாத்ததாகவும்

தெரிகிறது. இந்து மதம் சயாமில் பரவியிருந்ததற்கு அத்தாட்சியாக, பாங்காக் கண்காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ள சிவன், விஷ்ணு, கணேசர், லக்ஷ்மி முதலிய விக்கிரகங்களும் மத்திய சயாமிலும் கிழக்கு சயாமிலுமுள்ள புராதன ஹிந்து கோயில்களுமே தக்க சான்றுகளாகும். ஆனால் இந்த விஷயத்தை சில ஆசிரியர்கள் தவருக வற்புறுத்துவதுபோல் நாம் அதிகம் வற்புறுத்தலாகாது. ஏனெனில் 300, 400 வருடங்களாகவே ஹிந்து மதம் சயாமிலிருந்து மறைந்துவிட்டது. ஹிந்து ஆசாரங்கள் மட்டும் ஓரளவு சயாமில் நீடித்துள்ளன. அவைகளையும் புத்தமதத்திற்குப் புரம்பானவையென்று சயாமிய சர்க்கார்களும் சயாமியத் தலைவர்களும் விலக்கிவருகின்றனர்.

அயுத்தியா மன்னர்களின் ஆட்சிகாலம் வரையில், சயாம் முழுவதும் ஒரு குடையின் கீழ் கட்டுப்படாமல் பல சிற்றரசுகளாகவே இருந்து வந்தது. ஆனால் கிழக்கு, மத்திய பிரதேசங்கள் உள்பட பெரும்பாகம் கம்போஜிய சாம்ராஜ்ஜியத்திற்கு கட்டுப்பட்டிருந்தது. மேற்கே பர்மியர் ஆட்சியும், தெற்கே நக்கோன் ஸ்ரீதாமரத் (லக்கோன் அல்லது லிகோர் என்றும் அந்நகர் அழைக்கப்படும்) என்னும் நகரில் ஒரு சிறு இராச்சியமும் இருந்துவந்தன.

இன்று சயாமில் மெஜாரிடி வகுப்பினராக விளங்கும் "தாய்" இனத்தார் சயாமின் பூர்வ குடிகள் அல்ல; அவர்கள் ஏறுகுடிகளே. சுமார் 2000 வருடங்களுக்குமுன் "தாய்" இனத்தார் மேற்கு சீனத்தைச் சேர்ந்த சேஷுவான் மாகாணத்தில் வசித்துவந்தனராம். ஆங்கு அசல் சீனரின் உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவர்கள் தென் சீனத்தை நோக்கிப் பெயர்ந்தனராம். எவ்வாருயினும், தாய் இனத்தார் கி. பி. 9 வது நூற்ருண்டிலிருந்து

13 வது நூற்றாண்டுவரையில், தென் சீனத்திலுள்ள யுன்னுன் மாகாணத்தில் நன்சாவ் என்றொரு பிரபல இராச்சியத்தை அமைத்துக்கொண்டு சுமார் 500 வருட காலம் சுகமாக வாழ்ந்து வந்தனர். இராச்சியத்தின் பாதுகாப்பிற்காக அக்காலத்திலேயே நன்சாவில் கட்டாய இராணுவ சேவைத் திட்டம் அமுலிலிருந்ததாம். நூல் நூற்பதிலும் பட்டுப் பூச்சிகள் வளர்ப்பதிலும் 'தாய்' மக்களுக்கு அக்காலம் தொட்டே பரிச்சியம் உண்டாம்.

கி. பி. 1254 இல் நன்சாவ், உலகப் பிரசித்திபெற்ற மங்கோலிய சக்கரவர்த்தியான குப்லேகானின் வசமாயிற்று, ஆங்குவசித்துவந்த தாய் இனத்தார் மீண்டும் குடிசையை தூக்கிக்கொண்டு புகலிடம் தேடலாயினர். சால்வின், மீனும், மிக்காங் இம்மூன்று நதிகள் பாவும் சமவெளிகளில் அவர்கள் திரள் திரளாகக் குடிபுகலாயினர்; காலக்கிரமத்தில் மோன்-அன்னும் வகுப்பினருடன் அவர்கள் கலந்து ஒன்றுபட்டனர். தாய் இனத்தாரின் சந்ததிகள் இக்காலத்தில் சயாமிலும், சீனத்தில் யுன்னுன் மாகாணத்திலும், இந்து சீனத்தைச் சேர்ந்த லவோஸ் சமஸ்தானத்திலும், பர்மாவைச் சேர்ந்த ஷான் சமஸ்தானங்களிலும் வசித்து வருகின்றனர்.

குப்ளேகான் நான்சாவின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொள்ளும் முன்பே, தாய் இனத்தார் சயாமில் குடியேறியிருந்தனர். ஆனால் அப்போது சயாமில் அவர்களுடைய ஜனத்தொகையும் குறைவு; வலிமையும் குறைவு. ஏறு குடிகளைத் திரள்திரளாக சயாமுக்கு அனுப்பி ஆங்கு தாய் இனத்தார் உன்னத நிலையைப் பெற குப்ளேகான் மறைமுகமாக உதவி புரிந்தாரென சரித்திர ஆசிரியர் W. A. E. உட் கூறுகிறார்.

II

13 வது நூற்றுண்டுக்குப் பின்னுள்ள சயாமிய சரித்திரத்தை ஆசிரியர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்துகூறுகின்றனர்.

(1) சுகோதாய் பிரிவு கி. பி. 1238-லிருந்து கி. பி. 1350 வரையில். இப்பிரிவில் சுகோதாய் சயாமின் சிறந்த தலைநகராக விளங்கிற்று.

(2) அயுத்தியா பிரிவு கி. பி. 1350-லிருந்து கி. பி. 1767 வரையில். இப்பிரிவில் அயுத்தியா சயாமின் சிறந்த தலைநகராக விளங்கிற்று.

(3) பாங்காக் பிரிவு கி. பி. 1768-லிருந்து நாளது தேதிவரையில். தனபுரி அல்லது தோன்புரி சில வருடங்கள் தலைநகராயிருந்த பின், 1782-லிருந்து பாங்காக் இராசதானியாக இருந்துவருகிறது.

சயாமின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்திற்கும் சுகோதாய்ப் பிரிவில் அஸ்திவாரம் போடப்பட்டது; அயுத்திய மன்னர்கள் அந்த அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி இராச்சிய எல்லையையும் கோலிக் கொண்டனர்; பாங்காக் பிரிவில் இராச்சியத்தின் நாலா பகுதிகளும், ஒன்றோடொன்று நன்கு இணைக்கப்பெற்றன. ஆனால் பாங்காக் பிரிவில்தான் மேனாட்டு ஏகாதிபத்திய முதலைகள் நாலுபக்கங்களிலும் சயாமின் பிரதேசங்களைப் பிடுங்கித் தின்றன. மிஞ்சிய பிரதேசத்தை வைத்துக் கொண்டு சயாம் திருப்தி அடையும் நிலைமை ஏற்பட்டது.

சுகோதாய்ப் பிரிவு: பாங்காக்கிற்கு சுமார் 200 மைல்கள் வடக்கே மே-யோம் என்னும் நதிக்கரையில் சுகோதாய் (சுகோதயா என்னும் வடமொழியின் திரிபு) நகரைத் தங்கள் இராசதானியாகக் கொண்டு கம்போஜிய சிற்றரசர்கள் வெகுகாலம் ஆட்சிபுரிந்துவந்தார்கள்.

கி. பி. 1238 வாக்கில் இரு "தாய்" இராணுவ வீரர்கள் அவர்களை வென்று ஆங்கு தங்கள் ஆட்சியை நிறுவிக்கொண்டனர். சரித்திர ஆதாரமான முதல் தாய் இராச வமிசம் சயாமில் இவ்வாறு ஸ்தாபிதமாயிற்று. முதல் தாய் அரசனின் பெயர் இந்தராதித்யா. அவருடைய தம்பி (?) ராம்கம்ஹெங் என்பவர் அவருக்குப்பின் பட்டம் பெற்று நாற்பது வருடகாலம் ஆட்சிபுரிந்தார். ராம்கம்ஹெங்குடைய ஆட்சியில்தான் சுகோதாய் மகோன்னத நிலையை அடைந்தது. கம்போஜிய ஆதிக்கம் சயாமிலிருந்து மறைந்தது மன்றி, அவர் காலந்தொட்டு சயாமியர் கம்போஜியாமீது சயாமியர் படையெடுக்கவும் துணிந்தனர்.

ராம்கம்ஹெங் தலைசிறந்த ஓர் போர் வீரர்; சுற்றியிருந்த இராச்சியங்களை ஒடுக்கி, தன் இராச்சிய எல்லையைப் பெருக்கிக் கொண்டார். வடக்கே நன் வரையிலும், தெற்கே நக்கோன் ஸ்ரீ தாமரத் வரையிலும், மேற்கே தவாய் வரையிலும் அவருடைய இராச்சியம் பரவியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் காலத்தில்தான் சயாமிய அரிவரியும் முதன் முதலாக தொகுக்கப்பட்டு அனுட்டானத்திற்கு கொண்டுவரப்பட்டது. எனவே சயாமியர் அவரை ஓர் சிறந்த தேசிய வீரராகக் கொண்டாடுகின்றனர். அவர்மீதுள்ள பொதுஜன பற்றுதலின் காரணமாக, அவருடைய வீரச் செயல்களைப் பற்றியும் அவருடைய பூர்வகோத்திரத்தைப் பற்றியும் எண்ணிறந்த கட்டுக் கதைகள் முளைத்துள்ளன. கி. பி 1294-லும் கி. பி. 1300-லும் அவர் சைனு சென்று அத்தேசத்துடன் நல்லுறவை வளர்த்து வந்தார்.

ராம்கம்ஹெங்கிற்குப் பின் சுகோதாயில் முடிதரித்த மன்னர்கள் பராக்கிரமசாலிகளாயில்லாமல் போகவே. படிப்படியாக, பலமிழந்தனர். இறுதியில், அண்டை,

இராச்சியமான அயுத்தியாவிற்கு கி. பி. 1378-ல் அடி பணிந்தனர். பின்னும் கொஞ்ச காலத்திற்கு சுகோதாய் மன்னர்கள் குற்றரசர்களாக சுக்கோதாயில் ஆட்சி புரிந்து வந்தார்களெனினும் முடிவில் அச் சிற்றரசர் பட்டமும் போயிற்று. சுகோதாய் அமிழ்ந்து அயுத்தியா பிர காசிக்கலாயிற்று.

சுகோதாய் அழிந்து நிர்மானுஷ்யமான வனக்தர மாக இன்று காணப்படுகிறது. ஆனல் கம்போஜிய சிற்ப முறையை அநுசரித்து கட்டப்பட்ட பல கட்டிடங்கள் நிரம்பிய சிறந்த கோட்டையாக அது முற்காலத்தில் பிரகாசித்தது.

சுகோதாய் பிரிவைவிட்டு நாம் விலகும் முன், ஆங்கு ஆட்சிபுரிந்த தாமராஜா (தர்மராஜா) என்னும் அரச ரைக் குறிப்பிடுதல் அவசியமாகும். இராச்சிய எல்லை குறுகியிருந்தபோதிலும் அவர் பிரசைகளின் லௌகீக ஆத்மார்த்த குறைகளைப் போக்கி வந்தார். பௌத்த சமயத்தை பெரிதும் தன் இராச்சியத்தில் பரப்பினர். சாலைகளையும் கால்வாய்களையும் அமைத்தார்.

III

அயுத்தியா பிரிவு (1350—1767)

இந்த நானூறு வருட காலத்தில் சயாம் தேசம் முழு வதும் படிப்படியாக, ஆயுத்தியா மன்னர்களுக்கு கீழ்ப் படியலாயிற்று. ஆயுத்தியா நகரும் (சயாம் பாஷையில் அயோத்தியா யென்று சொல்லுவதில்லை. ஆயுத்தியா யென்றுதான் சொல்வார்கள்) நாளாவட்டத்தில் சிறப் புற்று, சயாமியர், கம்போஜியர், பர்மியர், சீனர், ஜப்பா னியர், இந்தியர், ஐரோப்பியர் உள்பட பல சாதியினரும் வசித்து வியாபாரம் செய்துவந்த மிக மிக முக்கிய வியா

பார ஸ்தலமாகமாறிற்று. மீனும் நதிக்கரையில் பாங்காக்கிற்கு 42 மைல்கள் வடக்கே, அமைந்துள்ளது புது அயுத்தியா நகரம். அதை அடுத்துள்ளன, பழைய அயுத்தியாவின் சின்னங்கள். பாங்காக் இக்காலத்தில் கடலோரமாக இருப்பதுபோல் அயுத்தியா அக்காலத்தில் கடலோரமாக யிருந்தது.

கி. பி. 1350 இல் சாவ்–யு–தோங் என்னும் 'யுபோன்' இளவரசர் அயுத்தியாவை ஸ்தாபித்தார். அவர் ஸ்தாபித்தஇடத்தில் துவாரவதி என்னுமொருஇராச்சியம்முற்காலத்தில் இருந்துவந்தது. ப்ராராமாதி போதி (ராமாதிபதி) என்னும் பட்டப்பெயருடன் அவர் 19 வருடகாலம் ஆட்சி புரிந்தார். அயுத்தியா, லோப்பூரி, சுபான், பேட்சபுரி முதலியப் பிரதேசங்கள் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தன. அவர் ஆட்சிமுறையை சீர்திருத்தினர்; புதுச் சட்டதிட்டங்களை இயற்றினர். அவர் அமைத்த சட்டதிட்டங்களில் சில வெகு காலம் வரையில் சயாமில் அமுலிலிருந்து வந்தன.

14 வது நூற்றாண்டின் முடிவுக்குள், ராமாதிபோதிக்குப்பின் ஐந்து மன்னர்கள் அயுத்தியாபுரியில் சிம்மாசனமேறினர்; அவர்கள் 1352 இலும், 1393 இலும் (கம்போஜிய சரித்திரத்தின் பிரகாரம் இச்சண்டை 1357-ல் நடைபெற்றது) கம்போஜியர்களுடனும், 1382 இல் சியங்மாய் இராச்சியத்துடனும் வெற்றிகரமாகப் போராடினர். இச்சண்டைகளில் 90,000 கம்போஜியர்கள் கைதி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சுற்றியிருந்த லவோஸ் (சியங்மாய்), லுவங்பரபாங், கம்போஜியா, பெகு (பர்மா) முதலிய இராச்சியங்களுடன் சயாமிய மன்னர்கள் 15, 16, 17, 18 வது நூற்றாண்டுகளில் அடிக்கடி பொருதி வந்தனர். சில சமயங்

களில் வெள்ளை யானையைப்பற்றி தகராறுகள் முளைத்து போர்க்களத்தில் முடிவாயின; வேறு சமயங்களில் இவர் களில் எந்த மன்னர் பெரியவர் என்ற பிரச்னை போர்க்களத்தில் முடிவாயிற்று. மேலும் பழைய குரோ தங்களை நினைவுறுத்தி, எதிரி பலமிழந்திருப்பதாக வெண்ணி, தக்க தருணத்தில் ஒருவரை யொருவர் தாக்கி யும் வந்தனர். பட்டம் யாருக்கு உரித்தானது என்பதைக் குறித்தும் பிரசித்திபெற்ற புத்தர் சிலைகளைக் குறித்தும் சச்சரவுகளேற்பட்டன. லட்சக்கணக்கான காலாட்படை யும் நூற்றுக்கணக்கான யானைகளும் பீரங்கிகள் உள் படமற்றபோர் சாதனங்களும் இச்சண்டைகளில் உப யோகிக்கப்பட்டனவாம். கைதிகள் ஆயிரக்கணக்கில் ஒரு தேசத்திலிருந்து ஒரு தேசத்திற்கு பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மகுடாதிபதிகள் இவ் விதம் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டதின் பயனாக அத்தேசங்களிலிருந்த பாமரமக்கள் மிகவும் துன்புற்றனர் என்று சொல்லவேண்டிய அவசிய மில்லை. தென் கிழக்கு ஆசியாவில் பலத்த ஆதிக்கப் போட்டியும் இடை இடையே கொஞ்ச காலத்திற்கு அமைதியும் நிலவி வந்த காலம் அது. இறுதியில் சயாம் வெற்றிபெற்று தன் சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொண் டது. கம்போஜியா, சியங்மாய், லுவங்பரபாங் முதலிய இராச்சியங்கள் இத்தொடர் சண்டைகளின் பயனாய் வலியிழந்து இறுதியில் தோல்வியுற்றன.

15 வது நூற்றாண்டு இதன் முடிவுக்குள் பௌத்த சம யம் சயாமில் வேரூன்றிவிட்டது. ஹிந்து மதம் ஆங்கு வரவர க்ஷீணமடைந்தது.

1431 இல் கம்போஜியாவுடனும் 1442 இல் சியங்மா யுடனும் சண்டை மூண்டது. மீண்டும் 1474 இல் சியங் மாயுடன் சண்டை மூண்டு சுமார் 20 வருடங்கள் வரை

யில் நீடித்திருந்தது இந்நூாண்டில் அரசாண்ட தெரய்லோக் என்னும் அரசர் ஆட்சி முறையை சீர்திருத்தி அமைத்தார். இராசதானி பட்டணமும் சுற்றுப்புரமும் மட்டும் அவர் ஆட்சி காலம் வரையில் மன்னரின் நேரடியான ஆட்சியிலிருந்து வந்தன. தூரத்திலிருந்த மாகாணங்கள் கவர்னர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த கவர்னர்கள் சேனை திரட்டுவதிலோ, நிதி திரட்டுவதிலோ, மற்றபடி இராச்சிய பரிபாலனத்திலோ சுயேச்சையாகவே நடந்துகொண்டு வந்தார்கள் மன்னர் தெரய்லோக் இம்முறையை மாற்றி, இராச்சிய பரிபாலனத்தை நேரடியாக தன்வசம் வைத்துக்கொண்டதுடன், சிவில், இராணுவம் என்று இரண்டு இலாகாகளாகத் தனித்தனியே பிரித்தார். உள்நாடு, ஸ்தல ஆட்சி, நிதி, விவசாயம், அரமனையென்று ஐந்து உட்பிரிவுகள் கொண்டது சிவில் இலாகா. இராணுவ இலாகாவும் இதுபோல் சீர்திருத்தப்பட்டது.

தெரய்லோக், லாவ்காரர்களின் படையெடுப்பால் பிட்சனுலோக் (விஷ்ணுலோகம்) என்னுமிடத்திற்கு தன் இராசதானியை மாற்றிக்கொண்டார். பிட்சனுலோக் 25 வருட காலம் சயாமின் தலைநகராக விளங்கிற்று.

16-வது நூற்றுண்டு இந்நூற்றுண்டின் முற்பகுதியில் ஒரு மைனர் பட்டம் பெற்றார். அவருடைய தாயார் ரீசண்டாகயிருந்து அரசபரிபாலனம் செய்து வருகையில் அரமனை வேலைக்காரன் ஒருவன் மீது காமவெறி பிடித்து, பிரபுக்களின் ஆலோசனையையும் மீறி, அவனை அமைச்சனாக கொண்டனள். பின்னர் மகனைக் கொலை செய்யவும், அந்தக் கிராதகன் சிம்மாசனமேறவும் அவள் உடன்பட்டாள் ஆனால் அவர்களுடைய காமிய வாழ்க்கை நீடித்திருக்கவில்லை. அரமனையை அடுத்திருந்த பிரபுக்கள் ஓர்

தந்திரோபாயத்தைக் கையாண்டு, காதலர் இருவரையும் அவர்களுக்கு பிறந்திருந்த சின்னஞ் சிறு குழந்தையையும் கொலை செய்து, அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவருக்கு முடி சூட்டினார்கள்,

1545 இல் ஆயுத்தியாவில் பெரும் தீ விபத்தேற்பட்டு 10,000 வீடுகளும் கோயில்களும் அழிந்து போயின. ஏறக்குறைய நாலில் ஒரு பங்கு கட்டிடம் இத் தீ விபத்தில் அழிந்து போனதாகக் கூறப்படுகிறது. இப்புள்ளி விபரத்திலிருந்து அக்காலத்தில் ஆயுத்தியா லண்டனை விட பெரிய நகரமாகயிருந்ததாக சரித்திர ஆசிரியர் உட்மதிக்கிறார். 16 வது நூற்றாண்டில் பெகு (பர்மா) மன்னர் சயாம்மீது இருமுறை போர் தொடுத்தார். எல்லைப் பிரதேசங்களில் சயாமிய கொள்ளைக் கூட்டங்கள் உபத்திரவம் செய்து வந்ததால் புரோங்-நோங் என்னும் பெகு இளவரசரின் தலைமையில் ஒரு பர்மிய சேனை சுபான்புரி யென்னுமிடத்தில் சயாமியரை தோற்கடித்துவிட்டு அயுத்தியாவையும் முற்றுகையிட்டார்கள். ஆனால் ஆங்கு சயாமியர் கடுமையாக எதிர்ப்பு செய்யவே, புரோங்-நோங்கின் சேனை அதிகச் சேதமடைந்து பின்னடைந்தார்கள்.

சில வருடங்கள் சென்றபின் புரோங் அரசபதவி பெற்று மீண்டும் படையெடுத்து, 1569 இல், அயுத்தியாவைக் கைப்பற்றிக்கொண்டார். அந்நகரும் பர்மியர்களால் சூறையாடப்பட்டது. சயாம் மன்னரும் சயாம் பிரசைகள் ஆயிரக்கணக்கானவர்களும் பெகு நகருக்கு கைதிகளாக அழைத்துச்செல்லபபட்டனர் பின்கொஞ்ச காலத்திற்கு சயாம் பர்மியர் ஆட்சியிலிருந்து வந்தது. அக்காலத்தில்தான் மனு ஸ்மிருதி சட்டத்தை பர்மியர்கள் சயாமில் புகுத்தினார்கள்

பர்மியர்களை விரட்டி சயாமை மீண்டும் சுதந்திர தேசமாக மாற்றியமைத்த பெருமை சயாம் ரீஜண்டு

தாமராஜாதிராஜின் குமாரரான ப்ரா நாரெட் அவர் களைச்சாரும். சயாமியர் முக்கியமாக கொண்டாடும் மூன்று தேசிய வீரர்களில் இவரொருவர். 30வருட ஆட்சி காலத்தில் பர்மா, சியங்மாய், கம்போஜியா முதலிய இராச்சியங்களுடன் இவர் மாறி மாறி போர்தொடுத்து வெற்றிபெற்றார் கம்போஜியரின் தலைநகரான லோவக் அரணை அழித்தவர் இவரே. வடக்கே சியங்மாய், லுவங் ப்ரபாங், வியன்ஷியன் முதலிய லாவ் சமஸ்தானங்கள், மேற்கே தெனசிரிம், தவாய், மெர்கூய், தெற்கே மலாய் சமஸ்தானங்கள் இவைகள் அவருடைய இராச்சிய எல்லைக்குட்பட்டிருந்தனவாம்.

17-வது நூற்றுண்டு ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஏற்பட்டிருந்த பலத்த போட்டி சயாமிலும் பிரதிபலித்தது. மதம், மதம் என்று சொல்லிக்கொண்டு 14-வது லூயி மன்னரும் (பிரான்ஸ்) ஜெசுட் பாதிரிகளும் சயாமை விழுங்கப் பார்த்தனர் இம் மோச கருத்தை உணர்ந்த சயாம் பிரபுக்கள் எழுச்சியுற்று அரசரை பதவியிலிருந்து நீக்கி, தேச சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டனர்.

16-வது நூற்றுண்டிலிருந்தே ஐரோப்பியர்கள் சயாமில் குடியேறி வணிகத் தொழிலில் ஈடுபட்டுவந்ததுடன் பாதிரிகளை அனுப்பி நாட்டின் உளவையும் விசாரித்து வந்தனர். ஆசியா கண்டத்திலும் ஆபிரிகா கண்டத்திலும் ஐரோப்பிய வல்லரசுகள் பிற நாடுகளை ஆக்ரமித்து பிடித்துக்கொள்ளுவதற்கு ருத்திராக்ஷப் பூனைகளான பல பாதிரிகள் எவ்வளவு உதவி செய்திருக்கிறார்கள்! தங்களுடைய மோசக் கருத்துகளை அவர்கள் சன்னியாசி உடுப்பால் மூடிக்கொண்டனர். ஒற்றர்களாக வேலை செய்து வேண்டிய உளவுகளை தத்தம் அரசாங்கங்களுக்கு சேகரித்து கொடுத்தனர். சம்பந்தப்பட்ட

நாடுகளிலுள்ள பொது ஜனங்கள் அவர்களை வெறுத்து வந்ததில் ஆச்சரியமுண்டோ?

1518-இல் போர்ச்சுகேயர்களும் 1598-இல் உலாந்தர்களும், 1612-இல் ஆங்கிலேயர்களும், 1662-இல் பிரஞ்சுக்காரர்களும் அயுத்தியாவை அடைந்து ஆங்கு வியாபாரத்திற்கும் செல்வாக்கிற்கும் போட்டி போட்டு வந்தார்கள். பிரஞ்சுக்காரர்கள் ஆகக் கடைசியில் வந்தாலும், பல நொண்டி சாக்குகளைச் சொல்லி, மிரட்டி உருட்டி, சயாமிடமிருந்து பெரும் பிரதேசத்தை அபகரித்துக் கொண்டனர், அடுத்தபடியாக ஆங்கிலேயர் பிடுங்கிக்கொண்டனர். முதன்முதலில் சயாமை உருட்டி பயமுறுத்திய உலாந்தர்களுக்கு யாதொரு பங்கும் கிடைக்காமல் போயிற்று,

உலாந்தர்கள் மீறும் நதியின் முகத்துவாரத்தை முற்றுகையிட்டு, தங்களுக்குச் சாதகமான உடன்படிக்கை ஒன்றை சயாமிடம், 1664-இல்,பெற்றுக்கொண்டனர். ஐரோப்பிய நாடுகளுடன் சயாம் கையொப்பமிட்ட முதல் உடன்படிக்கை அதுதான் ஆனால் நிர்பந்தத்தால் ஒப்பந்தம் செய்துகொண்ட சயாமியர், அதை கழித்துவிட தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தனர். 1706-இல் இந்த ஒப்பந்தம் முடிவுற்றது.

தன் சகோதரர்களை கொன்றுவிட்டு ப்ரா நாராய் (நாராயணன்)என்பவர் சிம்மாசனமேறினார்.இவர்காலத்தில்தான் சயாமை கைப்பற்றிக்கொள்ள பிரஞ்சுக்காரர்கள் முதல் முயற்சி செய்தார்கள் கான்ஸ்டன்டின் பவுல்கோன் என்னும் கிரேக்கன் மன்னர் நாராயிடம் முதல் அமைச்சராகவும் அந்தரங்க ஆலோசனையாளராகவும் சேவித்து வந்தார். பவுல்கோனின் தந்தை கிரேக்க தேசத்தில் ஒரு ஓட்டல்காரன். பவுல்கோன் வாலிபத்தில் ஊரைவிட்டு ஓடி, நாடோடியாக பல தேசங்களில் திரிந்த

பின், 1659-இல் அயுத்தியாவை அடைந்து, அரசனின் நன்மதிப்பைப் பெற்று அரசாங்கத்தில் படிப்படியாக பதவி உயர்ந்து, இறுதியில் முதல் அமைச்சன் பதவியை பெற்றிருந்தார். அக்காலத்தில் பலதேச வியாபாரிகளும் சயாமில் ஒருவருடன் ஒருவர் வியாபாரத்திற்கு போட்டி போட்டுவந்தார்கள். ஆனால் மற்றெல்லோரையும்விட பிர தான வியாபாரியானவர் மன்னர் ப்ராநாராய் அவர்களே. பிரிட்டிஷ் கிழக்கிந்தியா கம்பெனியாருக்கு பிடித்தமில் லாத தனிப்பட்ட பிரிட்டிஷ் வியாபாரிகளை ஆதரித்து வந் தமையால் பவுல்கோன்மீது அக் கம்பெனிக்கு பெரும் கோபம். டட்ச்காரர்களும் சயாமியர்பால் சரிவர நடந்து கொள்ளவில்லையென்று முன்னரே குறிப்பிட்டேன். ஆகவே பவுல்கோன் பிரஞ்சுக்காரர்மீது அதிக விசுவாச மும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். பிரஞ்சுக்காரர்கள் ஆறு போர்க் கலங்களையும் 1400 படைவீரர்களையும் சயாமுக்கு அனுப்பிவைத்தனர். அப் படைவீரர்களில் சிலர்சயாம்மன்னரின் மெய்க்காப்பாளர்களாக இருந்துவந் தனர். ஏனையோர் பாங்காக்கிலும் மெர்கூயிலும் கோட் டைகள் கட்டிக்கொண்டு தங்கியிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக பவுல்கோனும் மன்னர் நாராயும் பிரஞ்சு வலையில் சிக்கிக்கொண்டனர். 'தாய்' தூதுகோஷ்டி ஒன்று 14-வது லூயி மன்னர் சபைக்கு அனுப்பப்பட்டது. சயாம் மன்னரை கிருஸ்துவ மதத்தில் சேர்த்துக் கொண்டு, பாதிரிகள் மூலம் அதிகாரத்தை சிறிது சிறி தாக தாங்கள் கைப்பற்றிக்கொள்ளலாமென பிரஞ்சு இராசதந்திரிகள் திட்டம் வகுத்திருந்தார்கள். ஆகவே ஒரு கதோலிக் பாதிரி கோஷ்டியை அவர்கள் அயுத்தியா விற்கு அனுப்பி, அரசரை மதம் மாறும்படி 1688இல் வற் புறுத்தினார்கள். (பவுல்கோன் முன்பே கிறிஸ்துவ மதத் தைத் தழுவி பிரஞ்சு பாதிரிகள் ஏவியவண்ணம் ஆடிவந்

தார்.) ஆனால் சயாமிலிருந்த பிரபுக்கள் இச்சூழ்ச்சியை காலத்தில் உணர்ந்து கொண்டு அரசருக்கு எதிராக புரட்சி செய்தார்கள். அதன்பயனாக அரசர் பதவியை இழந்தார்; பவுல்கோன் பதவியையும் உயிரையும் இழந்தார்; பிரெஞ்சு துருப்புகளும் சயாமைவிட்டு வெளியேறினர். பாதிரிகளின் ஒத்தாசையால் சயாமை ஒரு பிரஞ்சு பொரொடெக்டரேட்டாக மாற்றிவிடும் முயற்சி வீண் போயிற்று. ஐரோப்பிய நாடுகளின் உறவு போதும் போதும் என்று ஆகிவிட்டது சயாமியருக்கு. மறுபடியும் 19-வது நூற்றாண்டில்தான் ஐரோப்பிய வல்லரசுகளுடன் சயாம் உறவாடும் நிர்ப்பந்தமேற்பட்டது. ஆயினும் இடைக் காலத்தில் மேனாடுகளுடன் அரசாங்கத் தொடர்பு இல்லாவிடினும் தனிப்பட்ட ஐரோப்பிய வியாபாரிகள் அயுத்தியாவில் தங்கி வியாபாரம் செய்துவந்தார்கள்

18 வது நூற்றாண்டில் சயாமிய சரிதையில் முக்கிய நிகழ்ச்சியென்னவெனில் சயாம்-பர்மா யுத்தமும் (1759-1767) ஆயுத்தியாபுரியின் அழிவும்தான். மாரிகாலம் விட்டுவிட்டு எட்டு வருடகாலம் சண்டை நடந்தது. இறுதியில், 1767 இல், பர்மியர் ஆயுத்தியாவிற்குள் பிரவேசித்து அந்நகரை கொளுத்தி உருத்தெரியாமல் பாழாக்கினர்; கோயில் குளம் என்றுகூட அவர்கள் காருண்யம் காட்டவில்லை. தலைநகரிலிருந்த சயாமிய சரித்திர ஆதரவுகளும் அழிந்துபோயின. சயாம் பிரசைகள் பல்லாயிரக் கணக்கில் பர்மாவுக்கு கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். சயாமில் ஒரு பர்மிய வைஸ்ராயை நியமித்துவிட்டு அவருக்குதவியாக ஆங்கு சொற்ப படையையும் விட்டுச் சென்றனர் பர்மியர்.

பாங்காக்பிரிவு (1768—) தலைநகர் ஆயுத்தியா வீழ்ச்சியுற்றபின் சில வருடங்களுக்கு நாட்டில் நிலைமை தெளியா

மல் குழப்பமாகவேயிருந்தது. சுற்றுப்புறமிருந்த மாகாண கவர்னர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டை செய்து வந்தனர். ஆனால் அதிர்ஷ்டவசமாக சயாமை காப்பாற்ற, சயாமை ஐக்கியப்படுத்த, வெற்றி வாகை சூடிய பர்மியர்களை சயாமிலிருந்து துரத்தியடிக்க ஓர் வீரர் தோன்றினார். அவருடைய பெயர் ப்யா-தக்-சின். அவர் சுத்த 'தாய்'க்காரரல்ல; சீன இரத்தம்கலந்தவர். அதனால்தான் அவரை சயாமியர் அவருடைய ஆட்சியின் பிற்பகுதியில் இழிவாகப் பேசினார்கள்; அவர் சயாம் படையில் சேவகம் செய்தவர். தன்னைப்போன்று படையில் சேர்ந்திருந்த சில ஆயிரம் நபர்களை ஒன்றுதிரட்டிக் கொண்டு, வீரத்தாலும், திறமையாலும், சூட்சியாலும் அவர் முதலில் தென் கிழக்கு சயாமை தன்வசப்படுத்திக் கொண்டார். நாளடைவில் பர்மியரையும் நாட்டைவிட்டு துரத்தி, சயாம் மன்னரென்று தனக்கு மகுடாபிஷேகமும் செய்து கொண்டார். தோன்புரியை தலைநகராகக் கொண்டார். சூட்சிகளிலும் போர்க்களங்களிலும் அவர் வெற்றிக்கு மேல் வெற்றி கண்டதும், தான் எதோ ஒரு தேவதூதர் என்று மம்மதை கொண்டார். அவருடைய சூட்சிகளால் உருண்டுபோன மண்டைகள் பற்பல. புத்தபெருமானென்று தன்னை எல்லோரும் இனி வழிபடவேண்டுமென பொதுஜனங்களுக்கும் பிக்ஷுகளுக்கும் அவர் ஆணையிட்டார். வினை சூழ்ந்தது. முன்பே அவர்மீது புகார்கள் அனந்தம்; ஆழ்ந்த மனக் கசப்பு. ஆக்வே புரட்சி மூண்டது. ப்யாதக்-சின் இப்புரட்சியில் உயிரிழந்தார். பொதுஜனங்களின் அன்பிற்கு பாத்திரமான ஒரு பிரபு அரசரானார். அவர் சேனைத் தலைவராக வாலிபத்தில் கம்போஜியாவுடன் சண்டைபோட்டு கீர்த்திபெற்றவர்.

அவரை முதல் ராமாவென்றழைப்பர். அவருடைய வம்சத்தினர் இன்றும் சயாமை ஆண்டு வருகின்றனர்.

அவரைப்போல் அவருடைய வார்சுகளையும் அவரவர் பட்டப் பெயரால் அழைக்கப்படுவதுடன் இரண்டாவது ராமா, மூன்ருவது ராமாவென்றும் முறையே அழைக்கப்படுவர். இந்த வருடத்தில் மிகவும் வருந்தத்தக்க முறையில் உயிர் துறந்த மன்னர் ஆனந்த மகிடோல் சக்ரிவமிசத்தின் எட்டாவது மன்னராவர். பூமிபோல் அடுல்தேஜ் என்னும் பட்டப் பெயருடன் அவருடைய தம்பி இன்று சயாம் மன்னராக விளங்குகிருர்.

முதல் ராமா 27 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார் இராச்சியத்தைப் பலப்படுத்தினுர். பாங்காக்கைத் தலைநகராகக் கொண்டார். அவருடைய மகன் ப்ரா-புத்த-லொயஸ்-லா-நபலாய் 1807 லிருந்து 1824 வரையில் அரசாண்டார். மூத்ததாரத்தின் மகஞன மொங்குட் அவருக்குப்பின் நியாயமாக பட்டம் பெற்றிருக்கவேண்டும். ஆயினும் இளையதாரத்திற்குபிறந்த ப்ரா நங்க்ளாவ், மூன்ருவது ராமா, பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டு 27 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். அவர்காலத்தில் மேனுட்டு வல்லரசுகளுடன் தொடர்பு மீண்டும் வைத்துக்கொள்ளப்பட்டது. வியன்ஷியன் என்னும் 'லாவ்' சிற்றரசின் மீது அவர் 1828 இல் போர் தொடுத்தார். அந்நகரும் பாழடைந்தது. தோல்வியுற்ற அச்சிற்றரசரும் மிருகங்களைப்போல் ஒருகூண்டில் அடைக்கப்பட்டு பாங்காக்கில் கண்காட்சியாகவைக்கப்பட்டார். அதனுல் அவர் அடைந்தத் துன்பமும் அவமானமும் சொல்லற்பாலன. ஆனுல் நல்லகாலமாக அவர்சிறையில் நீடித்து உயிர்வாழவில்லை.

மூன்ருவது ராமாவிற்குப்பின், மொங்குட் 1851இலிருந்து 1868 வரையில் ஆட்சி புரிந்தார். சிம்மாசனம் ஏறும்பொழுது அவருக்கு வயது 47. தம்பி பட்டத்தை அபகரித்து ஆட்சிபுரிந்து வந்த 27 வருட காலமும் அவர் மஞ்சள் ஆடைதரித்து பிக்ஷுகளோடு பிக்

க்ஷுவாக வாழ்ந்து வந்தார். பாலி, லத்தின் ஆங்கிலம் முதலிய பாஷைகளைப் பயின்றார். சயாம் பௌத்த சபையில் சங்கராஜா பதவி வகித்து மத சம்பந்தமாக பல சீர்திருத்தங்களை செய்தார். சகோதரர் இறந்தபின் சன்னியாசி வாழ்க்கையை துறந்து முடிதரித்தார். மணம் புரிந்து கொண்டார்; குழந்தைகளையும் பெற்றெடுத்தார். பௌத்த மடத்திற்கும் அரச பரம்பரைக்கும் சயாமில் வெகுகாலம் தொட்டே நெருங்கிய சம்பந்தமிருந்து வருகிறது. மன்னர்கள் முடி துறந்து மடத்தில் சேர்ந்துகொள்வதுமுண்டு. மாறாக, காஷாயம் களைந்து அவர்கள் முடிதரிப்பதுமுண்டு. சயாமின் மன்னர்கள் அதன் அரசியல் சட்டப்படி பௌத்த மதத்தை அவசியம் கடைபிடிக்க வேண்டும்; அச்சமயத்தை ஆதரித்து காப்பாற்ற வேண்டும்.

1855 இல் மொங்குட் மன்னர் பிரட்டனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். எக்ஸ்ட்ரா டெரிடோரியாலிட்டி என்னும் முறைமை சீனத்தின் உயிரை வெகுகாலம் வரையில் வாங்கிற்றே அந்தக் கொள்கை, அந்தப் பாஷாணம், சயாமிலும் புகுத்தப்பட்டது. 1855 சயாம்-பிரட்டன் உடன்படிக்கையின் ஷரத்துப்படி, (இந்தியர்கள் உள்பட) பிரிட்டிஷ் பிரசைகள் அனைவரும் சயாம் கோர்ட்டுகளுக்கு கட்டுப்பட்டவர்களல்ல. அவர்கள் சம்பந்தபட்ட சிவில், கிரிமினல் வழக்குகளில் பிரிட்டிஷ் கான்சல்களே தீர்ப்பு கூறுவார்கள். பிரிட்டன், பிரான்ஸ் முதலிய முக்கிய வல்லரசுகள் தாங்கள் விசாரித்து தண்டித்த குற்றவாளிகளை தாங்களே சிறைசெய்ய தனித்தனி சிறைக்கூடங்களைக்கூட சயாமில் அமைத்துக் கொண்டன. சயாம் சட்டதிட்டங்கள் பிற்போக்காயிருந்தன வென்றும் சயாம் நீதிமன்றங்களில் நீதி சரிவர வழங்கப்பட வில்லையென்றும் இதற்கு

முகாந்தரங்கள் கூறப்பட்டன. பிரிட்டன் வழிகாட்டி யதுதான் தாமதம். உடனே பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, டென்மார்க், போர்ச்சுகல், ஹாலண்டு, ஜெர்மனி, பெல்ஜியம், இத்தாலி, நார்வே, சுவீடன் முதலிய வல்லரசுகள் மேற்சொன்ன தீயஷரத்தைப் புகுத்தி சயாமுடன் தனித்தனி உடன்படிக்கைகளை செய்துகொண்டன. ஆலைப் புரட்ச்சியால் மிகுந்த வலிமையைத் தேடிக் கொண்ட மேனாட்டு இராச்சியங்களுடன் பிற்போக்கான சயாம் சம அந்தஸ்தில் பேரம்பேசமுடியுமா? வாய்பேசாமல் அவர்கள் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான். 23 வருடங்களுக்குள், அதாவது 1878க்குள், இம்மாதிரி உடன்படிக்கைகள் எல்லாம் செய்து கொள்ளப்பட்டன. ஆனால் சயாமியரின் தீவிர முயற்சியால் இந்த ஷரா இப்போது சயாமில் அமுலில் இல்லை. அன்னியராயினும் சயாமியராயினும், யாராயிருப்பினும், சயாம் நீதி மன்றங்களுக்கு இப்போது கட்டுப்பட்டுள்ளனர். சட்ட திட்டங்கள் பிற்போக்கானவை யென்ற குறைபாடும் இன்றில்லை. சிவில் கோட், கமர்சியல் கோட், என்றெல்லாம் நவீன காலப் போக்கிற்கு ஏற்றவாறு சட்டதிட்டங்கள் சயாமில் புதிதாக இயற்றப்பட்டுள்ளன. மேற்சொன்ன தீயமுறைமையை அகற்றுவதற்காக சயாமியர் பெரும் தியாகங்களைச் செய்யவேண்டியதாயிற்று. எக்ஸ்டரா டெரிடோரியாலிட்டி உரிமை 1937ல் தான் கடைசியாக சயாமிலிருந்து பூரணமாக எடுபட்டது.

மொங்குட் மன்னர் காலத்தில்தான் (1867–இல்) கம்போஜியாவைப்பற்றி பிரான்சுக்கும் சயாமுக்கும் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. கம்போஜியா வெகுகாலமாகவே சுதந்திர மிழந்து சயாமியருக்கு கப்பம் கட்டுவதா அன்னுமியருக்கு கப்பம் கட்டுவதா வென்று ஒன்றும் புரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. இந்நிலை

யில்நோர்தம் என்னும் கம்போஜிய வேந்தர் பிரான்சுடன் 1863-இல் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் பிரன்சு உதவியைக்கோரி கம்போஜியாவை பிரன்சு ஆட்சிக்குஉட்படுத்தினர். ஆனல் ஒருவிசேஷம் என்னவெனில் நோர்தம் ஆரம்பத்தில் சயாமின் உதவிகொண்டு பட்டம் பெற்றவர். பிரான்சுக்காரருடன் 1863ல் உடன்படிக்கை செய்து கொண்ட முன்பும் பின்பும் தான் ஆயுளளவும், சயாம் மன்னருக்கு கட்டுப்படுவதாகவும், பிரஞ்சுக்காரர்களின் உபத்திரவம் தாங்கமாட்டாமல் தான் கையொப்பம் செய்ததாகவும் அவர் மொங்குட்குக்கு தெரிவித்திருந்தார். இந்த சந்தேகத்தை பூரணமாக அகற்றவே 1867 உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. கம்போஜியா மீது இனி தனக்கு எவ்வித பாத்யமுமில்லையென்றும் கப்பம் கேட்பதில்லை யென்றும், கம்போஜியா மீது பிரஞ்சு ஆதிக்கத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகவும் சயாம் அந்த உடன்படிக்கை மூலம் ஒப்புக்கொண்டது. 1867 லிருந்து பிரஞ்சுக்காரர்கள் சயாமிடமிருந்து படிப்படியாக பெரும் பிரதேசங்களை பிடுங்கிக் கொண்டார்கள்.

மொங்குட் மன்னரைப்பற்றி மேனுட்டு ஆசிரியர்கள் மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவர் ஐரோப்பியருக்கு பல வகைகளிலும் விட்டுக் கொடுக்காமலிருந்தால்இவ் விதம் புகழுறை கூறியிருப்பார்களா வென்பது சந்தேகமே.

மொங்குட்டுப் பின் அரசாண்டவர் அவருடைய மைந்தர் சூலாலொங்கோர்ன் ஐந்தாவது ராமா (1868—1910) அவர்களுடைய நீண்டகால ஆட்சியில் தான் பெரும் அபிவிருத்தி யேற்பட்டது. சயாமியர் அவரை மிக்க பய பக்தியுடன் கொண்டாடி வருகின்றனர். சயாமில் பல முக்கிய ஸ்தாபனங்களுக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது; சிவில் நிர்வாகமும் நீதி பரிபாலனமும்,

ஐரோப்பிய முறைகளை அநுசரித்து, சீர்திருத்தப்பட்டன. கடனுக்காக அடிமைகொள்ளும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட்டது. போஸ்டு, தந்தி, இருப்புப்பாதை முதலிய சாதனங்கள் அமைக்கப்பட்டன. வரி வசூல் முறையும் வரவு செலவு திட்டமும் நேர் செய்யப்பட்டன. ராணுவ சேவை கட்டாயமாயிற்று. ராணுவமும், காலத்திற்கேற்றவாறு, திருத்தி அமைக்கப் பெற்றது. சூதாட்டப் பழக்கத்தைப் போக்க தடைகள் விதிக்கப்பெற்றன. கொடிய அபின் பழக்கம் ஒடுக்கப்பட்டது. அவர் ஆரம்பித்துவைத்த சீர்திருத்த உற்சாகம்-சயாமை நவீனமாக்கும் நோக்கம்-இன்றும் சயாமில் அனுஷ்டிக்கப்படுகிறது. அன்னிய நாடுகளை சுற்றிப் பார்ப்பதற்காக சயாமை விட்டு புறப்பட்ட முதல் சயாம் மன்னரும் அவரே. தன் மைந்தனுக்கு மேல் நாடுகளில் கல்வி பயில்வித்தார். அது முதல் இன்று வரை முடிதரித்துள்ள சயாம் மன்னர்கள் மேல் நாடுகளில் கல்வி பயின்றுள்ளனர்.

ஆனால் அவருடைய ஆட்சியில் தான் சயாம் பெரும் நெருக்கடியை சமாளித்துக் கொள்ளவெண்டியிருந்தது. எந்த வகையிலும் ஒரு பெரிய காலனியை இந்து சீனத்தில் தேடிக் கொள்ள வேண்டுமென்று பிரான்ஸ் கங்கணம் பூண்டு சயாமிடருந்து பெரும் பிரதேசங்களைப் பிடுங்கி இந்து சீனத்துடன் சேர்த்துக் கொண்டது. "பிரான்ஸ் ஜெர்மனி உறவில் ரைன் நதி எவ்வளவு பிரதானப் பங்கு பெற்றிருந்ததோ அவ்வளவு முக்கியத்துவம் பிரான்ஸ் சயாம் உறவில் மிக்காங் நதி பெற்றது." இன்றும் பெற்றிருக்கிறது. சயாம் ராஜ்சியம் மிக்காங் நதிக்கு இடது கரையிலும் முன்னர் பரவியிருந்தது. கொச்சின் சைனுவிற்கும் கம்போஜியாவிற்கும் மிக்காங் நதி மிகவும் இன்றிமையாததுவென முன் அத்தியாங்களிலிருந்து வாசகர்கள் அறிந்து கொண்டிருப்

பர். பாசன வசதியைத் தவிர கப்பல் போக்கு வரத்து வசதியும் மிக்காங் நதியில் வெகு தூரம் வரையில் இருக்குமென பிரஞ்சுக்காரர்கள் ஆதியில் நம்பியிருந்தனர். இவ்விரு காரணங்களையும் கொண்டு வெகு தூரம் வரையில் மிக்காங் நதியின் இருகரைகளையும் தங்கள் வசம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று பிரஞ்சு ராஜ தந்திரிகளும் இராணுவ தலைவர்களும் முடிவு செய்தனர்.

பிரான்ஸ்-சயாம் சர்ச்சையின் முழு விவரங்களையும் எடுத்துக்கூறுவதென்றால் பல பக்கங்கள் பிடிக்கும். இந்த அத்தியாயம் வாசகர்கள் ஆயாசப்படுமளவு ஏற்கனவேயே நீண்டுவிட்டமையால் அத்தகராறின் முக்கிய அம்சங்களை மட்டும் ஈண்டு குறிப்பிடுகிறேன் (1) 1888ல் ஸிப்ஸோங் சூதாய் என்னும் சயாம் பிரதேசத்தை பிரான்ஸ் கைப்பற்றிக் கொண்டது. அப்பிரதேசத்திலிருந்துவந்த கொள்ளைக் கூட்டங்களை அடக்கி அமைதியை நிலைநாட்டுவதற்காக யென்று பிரஞ்சு தரப்பில் சாக்கு சொல்லப்பட்டது. ஆனால் கொள்ளைக் கூட்டங்களுக்கும் அமைதியை குலைத்துவந்தவர்களுக்கும் பிரான்ஸ் தான் மறைமுகமாக பின் உதவி அளித்து வந்தது. இப்பிரதேசம் இப்போது லவோஸ், தொங்கின் இவைகளில் ஒரு பகுதியாகும். (2) 3-10-1893-ல் பிரான்சுக்கும் சயாமுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி மிக்காங் நதியின் இடது கரையிலுள்ள பிரதேசங்களில் தனக்கு இனி யாதொரு பாத்யதையும் இல்லையென்று சயாம் ஒப்புக்கொண்டது. ஆனால் சயாம் அவ்விதம் வலியில் ஒப்புக்கொள்ளவில்லை. இப்பிரதேசங்களைப்பற்றி பல வருஷங்களாகவே இரு தேசங்களும் (அதாவது பிரான்சும் சயாமும்) சர்ச்சை செய்து வந்தன. சமாதானமாக கைபற்ற முடியாமல் போகவே பிரான்ஸ் கெடுபிடி முறையைக் கையாண்டது.

13-7-1893ல் சரக்கு கப்பல் ஒன்றுக்குத் துணையாக இரண்டு பிரஞ்சு யுத்தக் கப்பல்கள் மீறும் நதியுனுட் புகுந்து பாங்காக்கை நோக்கி விரைந்து சென்றன. கோட்டையிலிருந்து சயாமியர் சுடவே பிரஞ்சு சரக்கு கப்பல் சேதமடைந்தது. பதிலுக்கு பிரஞ்சுக்காரர்கள் ஒரு சயாம் யுத்தக் கப்பலை தாக்கிச் சேதமாக்கிவிட்டு பாங்காக்கில் பிரவேசித்தனர். உடனே, பாங்காக்கி லிருந்த பிரஞ்சு ஸ்தானிகர் தங்களுடைய நிபந்தனைகளை அவைகளே இறுதி எச்சரிக்கையென சயாம் சர்க்காருக்கு தெரிவித்தார். இந்த இறுதி அறிக்கை கிடைக்குமுன்பே, சயாம் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் காவடியெடுத் திருந்தது. பிரச்னையை மத்தியஸ்தரின் தீர்ப்புக்கு விட்டு விடுவதாக அறிவித்தது. ஆனால் காவடி யெடுத்தும் ஒன்றும் பயனில்லை. பிரஞ்சு நிபந்தனைகளை சமாதானத் தில் ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது போர் செய்யத் தயாராக வேண்டும்; இங்கிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் மிக்க பலம்பெற்ற பிரான்சுடன் சயாம் யுத்தம் செய்து எவ்வாறு வெற்றிபெற முடியும்? ஆகவே சயாம் பின் குறிப்பிடும் பிரஞ்சு நிபந்தனைகளை ஒப்புக்கொண் டது. மிக்காங் நதியின் இடதுகரையிலுள்ள சுமார் 50,000 சதுர மைல்கள் கொண்ட பிரதேசம் பிரான்சுக்கு சயாமால் விட்டுக்கொடுக்கப்பட்டது; இந்துசீனம்-சயாம் எல்லைப்புறத்தில் குறிப்பிட்ட இடங்களில் சயாம் இரா ணுவ ஸ்தாபனங்களை அமைத்துக்கொள்ளலாகாது. முன்னர் அமைத்திருந்த ஸ்தாபனங்களையும் தகர்த்து விடவேண்டும். பிரஞ்சு நாணயத்தில் 20,00,000 (இருபது லட்சம்) பிராங்குகளும் சயாம் நாணயத்தில் 30,00,000 (முப்பது லட்சம்) திக்கல்களும் சயாம் நஷ்டஈடாக பிரான்சுக்கு கொடுக்கவேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்வரையில் தென்கிழக்கு சயாமிலுள்ள

சந்தபூன் என்னும் முக்கிய பகுதியை பிரஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்து தங்கள் வசம் வைத்துக் கொள்வார்கள். (3) இந் நிபந்தனைகளை சயாம் உடனே நிறை வேற்றிவைத்தது. ஆனால் பல வருடங்கள் சென்றும் பிரான்ஸ் சந்தபூனை காலி செய்யவில்லை. அதற்கீடாக கொஞ்சம் பிரதேசங்களை சயாமிடமிருந்து பெற்றுக் கொண்டு மீண்டும் இராணுவத்தை சந்தபூனுக்கு கொஞ் சம் அப்பால் தள்ளி அமைத்துக்கொண்டது. திரும்பவும் கொஞ்சம் பிரதேசங்களைப் பெறவே பிரான்ஸ் இந்நட வடிக்கையைக் கையாண்டது. மறுபடியும் 1907-ல் பத் தம்பாங்—சியம்ரிப்-ஸிரிஸபோன் பிரதேசம் பிரான்சுக்கு சயாமால் விட்டுக்கொடுக்கப்பட்டது. திராட் யென்னும் சிறுபகுதியையும் சயாம் கரையோரமாயுள்ள சில தீவு களையும் சயாமுக்கு பதிலுக்கு பிரான்ஸ் விட்டுக்கொடுத் தது. இவைகளைப்பற்றிதான் பிரான்சுக்கும் சயாமுக்கும் மீண்டும் தகராறு முளைத்துள்ளது. எக்ஸ்ட்ரா டெரிடோ ரியாலிட்டியைப்பற்றி பிரஸ்தாபித்தேனல்லவா? சயா மிடம் பல சலுகைகளைப் பெறுவதற்காக பிரான்ஸ் மேற் சொன்ன உரிமையையும் ஒரு கருவியாக உபயோகித்து வந்தது. சயாமுக்கு இடைஞ்சல் தந்தவர்களையும் விரும் பத்தகாத நபர்களையும் தன்கான்சல் ஆபீசுகளில் பிரஞ்சு பிரஜைகளாக பதிவு செய்துகொண்டு அவர்களுக்குப் பிரான்ஸ் உதவியளித்து வந்தது. மூன்று வருடங்களுக் குள் பிரஞ்சு (ஆசியா) பிரஜைகளாக சயாமில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 200 லிருந்து 30,000 மாக உயர்ந்துவிட்டது. அவர்கள் ஏதாவது குற் றம் செய்தால் சயாம் நீதி மன்றங்களில் விசாரித்து தண்டிக்க முடியாது.

எக்ஸ்ட்ரா டெரிடோரியாலிடி உரிமையை ஆங்கி லேயர்கள் 1909-ல் விட்டுக்கொடுத்து சுமார் 15,000

சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தை (கெலந்தான், தெரங்கண்ணு செய்புரி, பெர்லிஸ், சியன்துங், முவங் பன்.) சயாமிடமிருந்து பெற்றது. இதைத்தான் ஜப்பானிய பிரதமர் டோஜோ சயாமுக்கு 1943-ல் விட்டுக் கொடுத்தார். இப்பிரதேசம் தனக்கு வேண்டவே வேண்டாமென்று சயாம் பிரிட்டனிடம் யுத்தம் முடிந்ததும் ஒப்புவித்துவிட்டது.

42 வருடம் ஆட்சி புரிந்துவிட்டு சூலாலங் கோர்ன் மன்னர் 1910ல் காலமானார். அவருடைய மகன் வஜிரவுத் காலத்தில் பல கலைகளும் மிகுந்த அபிவிருத்தியடைந்தன. அவரே பல நாடகங்களை உயர்ந்த நடையில் இயற்றுவித்தார். சயாம் 1917ல் நேசத் தரப்பில் முதல் உலக யுத்தத்தில்கலந்துகொண்டு ஒருசேனையையும் ஐரோப்பிய போர் முனைக்கு அனுப்பிற்று; சயாமியரனைவரும் தமக்கு குடும்பப் பெயர் ஒன்றைச் சூட்டிக்கொள்ள வேண்டுமென்று அவர் காலத்தில் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கல்வியும் அபிவிருத்தி அடைந்தது. சிவில் சட்டங்களும் வியாபார சட்டங்களும் மிக்க சிரமத்துடன் "கோட்"களாக தொகுக்கப்பெற்றன. பாங்காக் - சியாங்மாய், பாங்காக்-பினங் ரெயில் போக்குவரத்துகள் ஆரம்பமாயின.

வஜிரவுத்துக்குப் பின் அவருடைய தம்பி ப்ரஜாதிபோக் சிம்மாசனமேறி 1935 வரையில் ஆட்சிபுரிந்தார். அவர் காலத்தில் விவசாய நாடான சயாமை உலகப் பொருளாதார மந்தம் (1928-1934) பெரிதும் பாதித்தது. ஒரு அரசியல் புரட்சியுமுண்டது.

அத்தியாயம் 18

24-6-32, சில சயாமிய இராணுவ யூனிட்டுகள் பாங்காக் தெருக்களில் போர்க்கோலத்துடன் விரைந்து சென்று அந்நகரிலுள்ள முக்கிய இடங்களை யெல்லாம் பிடித்துக் கொண்டனர்; சயாம் உள்நாட்டு மந்திரியான கோமகன் நகோர் சுவர்கா உள்பட இராசகுலத்தினரும் இதர பிரமுகர்களுமாக மொத்தம் 40 தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையாளிகளாக மதிக்கப்பட்டனர். அவ்வமயம் மன்னர் ப்ரஜாதிபோக் கடற்கரை வாசஸ்தலமான உவா-ஹின் என்னும் ஊரில் தங்கியிருந்தார். பிரஜா கட்சியினரின் தாங்கள் தலைநகரில் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டதாகவும், உடனே தலைநகருக்கு திரும்பி சட்டவரம்புக்குட்பட்ட அரசராக இனி ஆட்சிபுரிய வேண்டுமென்றும் புரட்சிக்காரர்கள் மன்னருக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்தனர். விரும்பியிருந்தால் மன்னர் கடுமையான நடவடிக்கைகளைக் கையாண்டிருக்கலாம். புரட்சியையும் ஒருவேளை ஒடுக்கியு மிருக்கலாம். ஆனால் அவர் அந்நோக்கம் கொள்ளவில்லை. தம்முடைய கௌரவத்தை விட சமுதாயத்தின் நலனைப் பெரிதாக மதித்தார். கைதிசெய்யப்பட்ட சுற்றத்தாருக்கு ஆபத்தொன்றும் ஏற்படலாகாதெனவிரும்பினார். இரத்தம் சிந்தாமலிருக்கும் பொருட்டும், குழப்பமும் நஷ்டமும் தேசத்திலேற்படாமலிருக்கும் பொருட்டும் சட்டவரம்புக்குட்பட்ட அரசு ஒன்றை சயாமில் ஸ்தாபிக்க தாமும் ஒத்துழைக்கத் தயாரென்று மன்னர் கண்ணியமான பதிலொன்றை அனுப்பினார். தாம் மறுத்து விட்டால் புது சர்க்காரை அன்னிய வல்லரசுகள் ஒப்புக்

கொள்ளாத சங்கடமான நிலைமை ஒருவேளை ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடுமென்று மன்னர் தம் சம்மதத்திற்கு ஒரு காரணமும் காட்டியிருந்தார்.

பாங்காக் திரும்பியதும், அவர் புரட்சிக்காரர்களை மன்னித்தது மன்றி, ஜூன் 27-ம் தேதியன்று (அதாவது புரட்சியின் மூன்றும் நாள்) நிரந்தர அரசியல் சட்ட மொன்று புதிதாக வகுக்கப்படும் வரையிலும் ஒரு தற்காலிய அரசியல் ஒப்புக்கொண்டார்.

அரசரும், சட்டசபை மந்திரிசபை நீதிமன்றங்கள் இவைகளும் சேர்ந்து தேச பரிபாலனம் செய்யவேண்டுமென்று விதித்தது அந்த தற்காலிய அரசியல் திட்டம். பொதுமக்களிடையே கல்வி பரவி அவர்கள் வாக்குரிமையை சரிவர உபயோகிக்கும் நாள் வரையில் சட்டசபை மூன்றுகாலப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது: (1) முதல் பிரிவு 6 மாதம் நீடித்திருக்கும். இப்பிரிவில் சட்டசபை அங்கத்தினரனைவரும் பாங்காக் ராணுவ சபையால் நியமிக்கப்படுவார்கள் (2) இரண்டாவது காலப்பிரிவில் பாதி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பெறுவர்; மீதி பாதிப்பேர் நியமிக்கப்பெறுவர். (3) வாக்குதாரர்களில் பாதிப் பேராவது ஆரம்பக் கல்வி பயின்றவுடன் மூன்றுவது பிரிவு ஆரம்பமாக வேண்டும். இப்பிரிவிலிருந்து சட்டசபை மெம்பர்களனைவரும் தேர்ந்தெடுக்கப்பெறுவர். பாதி வாக்குதாரர்கள் ஆரம்பக் கல்வி யோக்கியதையை பெற்றிருந்தாலும் பெற்றிருக்காவிட்டாலும், எவ்விதத்திலும் 1942-லிருந்து அதாவது (புரட்சியிலிருந்து 10 வருடங்கள் கழிந்தவுடன) சகல மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 'பிரஜாதிபோக்' ஒப்புக்கொண்ட தற்காலிய அரசியல் அமைப்பு இதுவே.

அரசர் தற்காலிய அரசியலை ஒப்புக்கொண்டதும், கோமகன் நகோர்சுவர்கா நீங்கலாக, ஏனைய பிணையாளி கள் விடுவிக்கப்பட்டனர். நகோர் சுவர்கா அவர்களின் தூண்டுதலால் நாட்டில் கலகமேற்படுமென்று அஞ்சி, புரட்சிகாரர்கள் அவரை மட்டும் நாடு கடத்திவிட் டார்கள்.

புரட்சிகாரர்களிடையே நிர்வாக அனுபவம் முதிர்ந்த தலைவர்கள் ஒருவருமில்லாததால், பியாமனோபகோர்ன் என்னும் பழைய அதிகாரியொருவர் பிரதமராக நியமிக் கப்பட்டார். சாசுவத அரசியல் சட்டமொன்றும் தயா ரிக்கப்பட்டு 10-12-1932ல் அரசரால் கையொப்பமிடப் பட்டது.இச்சட்டத்தை சயாமியர் தங்களுடைய "மாக்னு கார்ட்டா" எனக் கருதுகின்றனர். அதிகாரம் அரசரிட மிருந்து உதயமாகிறதென்ற பழைய அரசியல் தத்துவம் கைவிடப்பட்டு "இராச்சியத்தில் சர்வ அதிகாரமும் சயாம் மக்களிடமிருந்து தோன்றுகிறது; சட்டவரம்புக் குட்பட்டு அரசர் தலைமைவகித்து இராச்சியத்தை பரிபாலிக்க வேண்டும்" என்று அச்சட்டத்தில் கண்டுள் ளது. பிரதிவருடமும்டிசம்பர் 10—ஐ அரசியல் சட்ட நாளென்று சயாமியர் திருநாளாகக் கொண்டாடி வரு கின்றனர்.

* * * *

சிறிதளவும் ரத்தம் சிந்தாமல், புரட்சி இவ்விதம் நிகழ்ந்தேறியது. ஆனால் புரட்சி சர்க்கார் சாசுவதமாக நிலைபெறுவதற்குமுன், 1932—33ல், இரு நெருக்கடிகள் மூண்டன. அவைகளை ஈண்டு பிரஸ்தாபிக்கும்முன் புரட் சியின் முக்கிய மூல காரணங்களையும் புரட்சியில் பங் கெடுத்துக்கொண்ட தலைவர்களைப் பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன்.

இப் புரட்சி பொதுஜனச்களின் நலனுக்காக செய் யப்பட்டதெனினும் பொதுமக்கள் தீவிர பங்கெடுத்துக் கொண்ட புரட்சியல்ல; புரட்சி வெள்ளம் சமுதாயத் தின் கீழ்ப்படிகளிலிருந்து பொங்கியெழவில்லை. கற் றுணர்ந்த தலைவர்கள்—முக்கியமாக இராணுவத் தலை வர்களும் கடற்படைத் தலைவர்களும்-செய்த 'பூர்ஜுவா' புரட்சியாகும். (1) மொங்குட் காலத்திலிருந்து சயா மில் மேனாட்டு முறைப்படி கல்வி பரவப் பரவ, அரசிய லில் பொதுஜனப் பிரதிநிதிகள் மேலும் மேலும் அதிகப் பங்கு பெறவேண்டுமென்ற விருப்பம் வேரூன்றியது (2) மன்னர் வஜிரவூத் காலத்தில் மொத்தம் 12 அமைச் சர்களில் 8 பேர் பிரசை வகுப்பைச்சேர்ந்த பிரமுகர்கள்; 4 பேர்தான் அரச வமிசத்தினர். ஆனால் ப்ரதிஜாதி போக் இந்த விகிதாசாரத்தை மாற்றி, பிரஜைகளுக்கு நான்கு ஸ்தானங்களை மட்டும் வழங்கி, மீதம் எட்டு ஸ்தானங்களை அரச வமிசத்தினரிடம் ஒப்படைத்தார். இம்மாற்றத்தை பிரஜா பிரமுகர்கள் வெறுத்தனர். (3) உலக பொருளாதார மந்தத்தால் சயாம் சர்க்கார் தன் செலவு நடைகளைக் குறைத்து வரவுக்கும் செலவிற் கும் திணரியடித்து சரிகட்ட வேண்டிய நிர்ப்பந்த மேற் பட்டது. அரசர் தம் சொந்த செலவுகளை பகுதியாக குறைத்துக் கொண்டார்; அதுபோல் சர்க்கார் ஊழி யர்களின் ஊதியத்தையும் குறைத்தார்; பலரை வேலையி லிருந்து நீக்கினார்; மேலும்சம்பள வரி யொன்றையும் விதித்தார்; இராணுவத்தையும் இராணுவச் செல வையும் குறைத்துவிட வேண்டுமென்று முயன்று வந் தார். இவையெல்லாம் சர்க்கார் ஊழியர்களின் மன தில் - முக்கியமாக இராணுவத்தின் மனதில் – புரட்சி தீயை மூட்டி விட்டது, (4) பத்திரிகைகளுடன் நல் லுறவாடி அவ்வப்போது ஆதாரமான செய்திகளை

பத்திரிகைளுக்கு சர்க்கார் அளிக்கவில்லை. சர்க்காரின் கொள்கைகளும் திட்டங்களும் பொது மக்களுக்கு சயாம் மொழியில் சரிவர எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே பத்திரிகைகள் வெறும்ஹேஷ்யங்களையும்கற்பனை செய்திகளையும் வெளியிடலாயின. இதை கண்டிக்க சர்க்கார் தணிக்கையை கையாண்டுதே தவிர, வேறொன்றும் செய்யவில்லை. (5) அரசரின் யதேச்சதிகார மொழிந்து பொதுஜன ஆட்சி வேண்டுமென்று சயாம் அறிஞர்கள் விரும்பினர். மேனாடுகளுக்குச் சென்று பயின்ற பல உயர்தர உத்தியோகஸ்தர்களிடையே இவ் விருப்பம் மேலோங்கி யிருந்தது. ஒவ்வொரு சர்க்கார் ஆபீசிலும் புரட்சி சபைகளை இரகசியமாக ஸ்தாபித்தனர். எல்லா புரட்சி சக்திகளையும் ஒன்று சேர்த்தார் ப்ரதிபனம் யோங்.

புரட்சியில் பங்கெடுத்துக் கொண்ட தலைவர்களில் இராணுவ வீரர்களே அதிகம். சிவில் தரப்பில் முக்கிய பங்கு பெற்றவர் ப்ரதிபனம்யோங். புரட்சி காலத்தில் அவருடைய பட்டப் பெயர் லுவங் ப்ரதிஸ்ட் மனுதர்ம். ப்ரதி அல்லது ப்ரதிஸ்ட் என்று அவரை சுருக்கமாக அழைப்பார்கள். பொருளாதார நூலிலும் சட்டத்திலும் ப்ரதி அபார நிபுணர். இணையற்ற ராஜதந்திரி; கட்சி பேதமின்றி சயாமியரிடையே தனி செல்வாக்கை பெற்றுள்ளார். சீன ரத்தம் கலப்புள்ளவர். தனவந்தர் குடும்பத்தில் பிறந்து பிரான்சில் பல்லாண்டுகள் சட்டம் பயின்றபின், புரட்சி காலத்தில் சட்டம் இயற்றும் இலாகாவில் வேலை பார்த்து வந்தார். பிரான்சில் மாணுக்கனுக யிருக்கும் போதே சயாமுக்காக புது அரசியல் திட்டமொன்றை தயாரித்தாராம். புரட்சியின்போது அவருக்கு வயது 30. பிழையுற திட்டம் வகுத்து, பல புரட்சி இழைகளையும் ஒன்றுசேர்த்து புரட்

சியை வெற்றிகரமாக முடித்த பெருமை முக்கியமாக அவரைச் சாரும். பின்னர் அவர் அன்னிய நாட்டு மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும், ரீஜண்டாகவும், பிரதம மந்திரியாகவும் பற்பல பதவிகளை வகித்துள்ளார். மன்னர் ஆனந்த மஹிடோலின் மரணத்திற்குபின் அவருடைய தனிச் செல்வாக்கு கொஞ்சம் பாதிக்கப்பட்டுள்ளதெனினும், இன்றும் சயாமின் முதல்தரமான தலைவர் அவர்தான்.

புரட்சியில் பங்கெடுத்துக் கொண்ட பல இராணுவ ஆபீசர்களில் பியா பஹோல் பல்லபயுஹா என்பவர்தான் மிக முக்கியமானவர். அவ்வமயம் அவர் உதவி சேனாதிபதி பதவியை வகித்துவந்தார். அரசருக்கு இறுதி எச்சரிக்கை அனுப்பிய மூவர்களில் இவரொருவர். 1933 ஜூன் புரட்சியை நடத்திவைத்தார், அதற்கு பின் 1938 வரையில் அவர் சயாமின் பிரதமராகவும் சேனாதிபதியாகவுமிருந்து வந்தார். சிவில் விஷயங்களில் அனுபவமில்லாததால் பிரதமராக அவர் நெடுநாட்களுக்கிருக்க விரும்பவில்லை. மற்ற புரட்சித் தலைவர்களைப் பார்க்கிலும் அவர்மீதுதான் பொது ஜனங்கள் அதிக நம்பிக்கை பூண்டிருந்தனராம்.

ஒருவர் தவருமல் யாவருக்கும் தக்க வேலையும் ஊதியமும் கிடைக்குமாறு ஒரு தேசிய பொருளாதார திட்டத்தை வகுக்கவேண்டுமென்று, பிரஜா கட்சி தன் லட்சியங்களில் ஒன்ருகக் கொண்டது. அந்த லட்சியத்தை நிறைவேற்றி வைப்பதற்காக தேசிய பொருளாதார திட்டமொன்றை 1933 மார்ச்சில் ப்ரதி தயாரித்தார். பொருள்களின் உற்பத்தியையும் அவைகளைப் பங்கிடும் பொறுப்பும் சர்க்கார் வசமிருக்க வேண்டுமென்பது அத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். விவசாயத் தொழிலை தேசியமய

மாக்கிவிடவேண்டும்; கடன் பத்திரங்களை வழங்கி சாகுபடியிலுள்ள நில புலன்களை சர்க்கார் விலைக்கு வாங்கி, நேராகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டோ சாகுபடி செய்ய வேண்டும். சர்க்கார் ஊழியர்களைப்போல் விவசாயிகளுக்கும் மாதாந்தரச் சம்பளம் கொடுக்கவேண்டும். 18 வயதிலிருந்து 55 வயது வரையில் எல்லா சுயாமியரும் வேலைசெய்யவேண்டும். 55 வயதுக்கு மேல் சாகுமளவும் பென்ஷன் பெருவர். 18 வயது வரையில் கல்வி பயில்வதுடன் இலேசான வேலையும் செய்ய வேண்டும். விவசாயத்தைப்போல் கைத் தொழில்களும் போக்குவரத்து சாதனங்களும் தேசிய மயமாக்கிவிட வேண்டும். சர்க்கார் எல்லோருக்கும்வேலையளித்து, சமூக இன்சூரன்ஸ் திட்டத்தையும் கையாளவேண்டும். உற்பத்தி கூட்டுரவு சங்கங்களும் பங்கீடு கூட்டுறவு சங்கங்களும் சர்க்காரால் நாடெங்கும் நிறுவப்படவேண்டும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் வருடா வருடம் வீணில் கழிக்கும் ஆறு மாதங்களை வேறு வகைகளில் சர்க்கார் உபயோகித்துக் கொள்ளலாமென்றும், நவீன முறைகளை அனுசரித்து சாகுபடி செய்யலாமென்றும், போக்குவரத்து சாதனங்களை அபிவிருத்தி செய்யலாமென்றும் எல்லோருக்கும் சௌகரியமான குடியிருப்பு முதலிய வசதிகளை செய்து கொடுக்கலாமென்றும் ப்ரதிபனம் யோங் யோசனை கூறினர்.

பொது வுடமை திட்டமென பலரும் இதை எதிர்த்தனர். பிரதமரான பியா மனோபகோர்ன் இதை பலமாகக் கண்டித்தார். ப்ரதி மனோபகோர்ன் உள்பட பல நிபுணர்களடங்கிய கமிட்டியொன்று இத் திட்டத்தை பரிசிலனை செய்ய நியமிக்கப்பட்டது. மனோபகோர்ன் பலத்த ஆட்சேபம் செய்தும், இத் திட்டத்தை படிப் படியாக நடத்தி

பார்க்கலாமென்று அக் கமிட்டி சிபார்சு செய்தது. ஆனால் மனோபகோர்ன் அதைரியப்படவில்லை. 1933 ஏப்ரலில் அவர் சட்ட சபையை திடீரென்று கலைத்து விட்டு, சட்ட சபை வசமுள்ள அதிகாரங்களை அரசரிடம் ஒப்படைத்தார். புது மந்திரி சபை யொன்றையும் அமைத்துக் கொண்டார்; இதற்கிடையில் தன் திட்டத்தை சர்க்கார் ஒப்புக்கொள்ளாது என்று தெரிந்துகொண்டதும் ப்ரதி மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஐரோப்பாவிற்கு பிரயாணமானார். அன்று முதல் இத் திட்டம் பூரணமாக கைவிடப்பட்டது யாரும் அதை அமுலுக்கு கொண்டு வர மறு முயற்சி செய்யவேயில்லை.

20–6–33-ல் மறு புரட்சி யொன்றேற்பட்டது. பிரதமர் மனோபகோர்ன் முதலிய மித வாதிகள் கைதுசெய்யப்பட்டனர். சட்ட சபை கூட்ட வேண்டுமென்பதற்காக தாங்கள் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டதாக அரசருக்கு அறிவிக்கப்பட்டது. இப் புது புரட்சியிலும் பியா பஹோல் முக்கிய பங்கு பெற்றார். புரட்சி முடிந்ததும் பிரதமராக நியமிக்கப் பெற்றார். பொது ஜன பீதியை குறைக்கும் பொருட்டு பொதுவுடமை தத்துவம் சயாமில் பிரவேசிக்காமல் தடுத்துக் கொள்ளுவதாக பியா பஹோல் ஓர் அறிக்கை விடுத்தார்.

இருப்பினும் குழப்பம் உள்ளூர குமுறிக் கொண்டிருந்தது. அரச வமிசத்தினரும் மித வாதிகளும் ஒன்று கூடி ஆட்சியை கைப்பற்ற இறுதியாக ஒரு முயற்சி செய்தனர். மாஜி இராணுவ மந்திரியான கோமகன் பவோரா டேஜ் அவர்களின் தலைமையில் அயுத்தியாவிலிருந்தும் கோரட்டிவிருந்தும் கலகப்படைகள் பாங்காக்கை நோக்கி 12—10—33-ல் புறப்பட்டன. இச் செய்தி தெரிய வந்

ததும், பாங்காக்கில் பியா பஹோல் சர்க்காரால் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 16-ம் தேதி யன்று பாங்காக்கிலிருந்து கலகத் துருப்புகள் விரட்டப் பட்டனர்; அக்டோபர் இறுதிக்குள் கலகம் நாடெங் கும் ஒடுக்கப்பட்டது. பவோராடேஜ் இந்து சீனத் திற்கு ஓடிப் போனுர். மற்ற கலகக்காரர்கள் மீது சர்க் கார் கொடூரமான சிட்சைகளை விதிக்காமல் கண்ணிய மாக நடந்துகொண்டனர். கலகத்தை ஒடுக்கும் முக்கிய கைங்கிரயத்தில் சர்க்கார் தரப்பில் பிரதமப் பங்கெடுத் துக் கொண்டார் பீபுல் சொங்ராம்.

கலகம் ஒடுங்கிய தெனினும் அரசருக்கும் மந்திரி சபைக்கு மிடையே பல தகராறுகள் முளைத்தன. சயா மில் நடைபெறுவது பொது ஜன ஆட்சியல்ல. ஒரு தனிப் பட்ட கட்சியின் ஆட்சியேயென்றும் நியமன அங்கத்தி னர்களை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தம்மை சர்க்கார் கலந்து கொள்ளவில்லை யென்றும் மன்னர் முறையிட் டார். மனோப கோர்ன், பவோராடேஜ் சம்பவங்க ளுக்கு பின் மன்னரை புரக்சிக்காரர்கள் அதிகம் நம்ப வில்லை. ஜனநாயக ஆட்சி யென்று சொல்லிக்கொண்டு ஒரு கட்சியினர் மட்டும் தம் பெயரால் ஆட்சி செய்வதை அரசர் வெறுத்தார். ஆகவே 1935 மார்ச்சில் அவர் அரசர் பதவியை ராஜிநாமா செய்தார்.

ஆனந்த மஹிடோல் அவருக்குப் பின பட்டம் பெற்றுர். அப்போது அவருக்கு வயது 10. புதுதாக அரசி யல் கட்சி யெதையும் மேலும் 4, 5 வருடங்களுக்கு அனுமதிப்பதில்லை யென்று 1937-ல் முடிவாயிற்று. 1946-ல் தான் புது அரசியல் கட்சிகள் சயாமில் முதல் முதலாக தோன்றியுள்ளன. 1937-ல் பொது தேர்தல் நடைபெற்றது. மீண்டும் பியா பஹோல் பிரதமரா

ஞர். ஆனால் சில விஷயங்கள் பற்றி மந்திரி சபையிலும் சட்ட சபையிலும் பிளவேற்படவே 1938-ல் புது தேர்தல் யொன்று நடை பெற்றது. தேர்தல் முடிவு தனக்கு பாதகமாகவே பியா பஹோல் ராஜிநாமா செய்தார். சோங்ராம் பிரதமராகி, தம் எதிரிகளை ஒடுக்கி நாளடைவில் அதிகாரமனைத்தையும் தம் வசம் வைத்துக்கொண்டார். இவரும் ஒரு இராணுவ ஆபீசர். பீல்ட் மார்ஷல் பட்டத்தை தமக்குத் தாமே சூட்டிக் கொண்டார். அவர் ஆட்சியில் சட்டசபையும் மந்திரி சபையும் பெயாளவில் தானிருந்து வந்தன. அதிகாரமனைத்தும் அவர் வசமிருந்தது. கட்டாய முறையை அனுசரித்தாகிலும் சயாமை நவீன மயமாக்கி விடவேண்டு மென்பது அவருடைய நோக்கமாகும். நிற்க, 1933 புரட்சியிலிருந்து, சயாமில் இராணுவத்தின் செல்வாக்கும் வலிமையும் அதிகரித்து வந்தன. சீனர்கள் சயாமில் குடியேறும் விஷயமாகவும் அவர்களுடைய கல்வி, வியாபாரம் விஷயங்களாகவும் பீபுல் சொங்ராம் ஆட்சியில் பல தடைகள் விதிக்கப் பெற்றன.

1940 ஜூனில் பிரான்ஸ் வீழ்ச்சியடைந்தது. முன் விட்டுக் கொடுத்த பிரதேசங்களை மீட்டுக் கொள்ள உத்த தருணம் கிடைத்ததென்றெண்ணி, சோங்ராம் இந்து சீனத்தின் மீது 1940 இறுதியில் பாய்ந்தார். சில வாரச் சண்டைக்குப் பின் ஜப்பானியர் மூலம் இரு நாடுகளுக்கும் 9—5—41-ல் ஒரு சமரச மேற்பட்டது. 1904-07-ல் சயாம் பிரான்சுக்கு விட்டுக் கொடுத்த பிரதேசத்தில் ஒரு பகுதியை சயாம் திரும்பப்பெற்றது. அவ் வமயம் சயாமியரின் உற்சாகத் திற்களவில்லை.

இந்த யுத்தத்திற்கு சில வருடங்கள் முன்னதாகவே சயாம் ஜப்பானை நாடி நின்றது; ஜப்பானை பிரதான நண்பரென்றும் உதவியாளரென்றும் கருதி வந்தது. சயாம் வியாபாரத் துறையிலும் ஜப்பான் பெரும் பங்கு பெற்றிருந்தது. இங்கிலையில் கிழாசியா யுத்தம் மூண்டது சயாம் வழியாக படை கொண்டுபோக அனுமதி வேண்டுமென்று ஜப்பான் கோரிற்று. சயாம் தர்ம சங்கடமான நிலைமை ஒன்றில் மாட்டிக்கொண்டது. எதிர்த்தாலோ தேசம் போர்க்களமாகி பாழாகிவிடும். ஜப்பானை எதிர்க்காவிட்டாலோ நாளை யார் ஜெயிப்பாரென்றுதெரியாது; பெயருக்கு கொஞ்சம் எதிர்ப்பு செய்து வழிவிட்டு விடுவதென இறுதியில் முடிவாயிற்று. பிரிட்டன்மீதும் ஐக்கிய அமெரிக்காமீதும் பிரதமர் சோங்ராம் 21-1-42ல் யுத்த பிரகடனம் செய்தார். இந்த யுத்தப் பிரகடனம் சயாம் சட்டசபையால் ஆமோதிக்கப்படவில்லையென்னும் ஆகவே செல்லத்தகாததென்றும் சயாமியரால் பின்னர் வாதாடப்பட்டது. அமெரிக்கா இந்த யுத்த பிரகடனத்தை சற்றும் பொருட்படுத்தவேயில்லை. அமெரிக்காவில் சயாம் ராஜப்பிரதிநிதியாக இருந்துவந்த மோன்சன் சேனிப்ரமோஜ் என்பவரின் தலைமையில் அமெரிக்கா ஒரு சுதந்திரதாய் இயக்கத்தை ஆரம்பித்துவைத்தது. மேனாடுகளிலிருந்த நூற்றுக்கணக்கான சயாமியர் இந்த இயக்கத்தில் கலந்துகொண்டு பல இராணுவ ரகசியங்களை நேசநாடுகளுக்கு சேகரித்துக்கொடுத்தார்கள். சயாமிலும் ரீஜண்டின் தலைமையில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கமொன்று ஆரம்பமாகி மறைமுகமாக தேசமெங்கும் வேலைசெய்து வந்தது. யுத்த மாறுதல்களை அனுசரித்து சிற்றரசான சயாம் சமயோஜிதம் போல் இங்குமங்கும்

பல்டி அடித்துக்கொண்டிருந்தது. யுத்தம் நேசநாடுகளுக்குச் சாதகமாக மாறி வருகிறதென்று தெரிந்துகொண்டு சயாமியர் சொங்ராமை 1944 ஆகஸ்டில் பதவியிலிருந்து தள்ளிவிட்டு நாய் குவாங் அபய்வோங்சி என்பவரை பிரதம மந்திரியாக்கினார்கள். ரத்தமெதுவும் சிந்தாமல் இந்த மாறுதலும் நிகழ்ந்தேறியது.

அத்தியாயம் 19

உடலமைப்பையும் அங்க லட்சணங்களையும் பொறுத்தமட்டில் நாம் சயாமியரை ஒரு தனி ஜாதியின ரென சொல்லமுடியாது. (இந்த அத்தியாயத்தில் "தாய்" இனத்தாரையே சயாமியரென குறிப்பிடுகிறேன்.) பல தேசத்தினரின் ரத்தமும் சயாமியரிடையே பல நூற்றுண்டுகளாகவே கலந்துள்ளது. ஆரம்பத்தில் மோன்-அன்னும் வகுப்பினரும் "தாய்" இனத்தாரும் ஒன்றுகலந்தனர்; பின்னர் அண்டைநாட்டுக் கைதிகளும் சயாமியரும் ஓரளவாகிலும் ஒன்று கலந்தனர்; இக்காலத்தில் சீனர்களும் சயாமியரும் அதிகம் ஒன்று கலந்துள்ளனர். ஆகவே சயாமியரின் அங்கலட்சணங்கள் மாறிவருகிறது. வடக்கேயும் வடகிழக்கேயுமுள்ள லாவ்காரர்கள் மத்திய பாகத்திலும் தென் பாகத்திலும் வசிப்பவரை விட சற்று உயரமாகவும் வெண்ணிறமாகவுமிருக்கின்றனர். தென் மத்திய சயாமில், ஆண்கள் நடுத்தரமான உயரம். ஆனால் பெண்கள் குட்டையென்றே சொல்லவேண்டும். பெண்கள் உயரத்திற்கு பதிலாக பருத்திருக்கின்றனர்.

தலை உருண்டை அல்லது முட்டை வடிவம்; முகம் அதிக சப்பையில்லை; இருப்பினும் கன்ன எலும்புகள் சற்று வெளிப்புறம் புடைத்துள்ளன; நடுத்தரமான மூக்கு; குழிவாக உள்ளே பதிந்துள்ள கருவிழிகள்; மயிரடர்ந்த புருவங்கள்; அழகான பற்கள்; மற்ற அவையவங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமாக அமைந்துள்ளன. நல்ல சிகப்பிலிருந்து சாக்கலேட் வர்ணம் வரையில் பல கலப்பு நிறங்களை நாம் சயாமி

யர்களிடையே காணலாம். பொதுவாக அவர்கள் லட்சணமானவர்களென்று சொல்லலாம். சீனர்களுக்கு பிறக்கும் கலப்பு குழந்தைகளும் மலாயக்காரர்களுக்கு பிறக்கும் கலப்பு குழந்தைகளும் நல்ல லட்சண முடையவர்கள்.

நகரப் பெண்கள் தலைமயிரை விதம் விதமாக 3, 4 மாதங்களுக்கொருமுறை சுருட்டிக் கொள்ளுகின்றனர். நாட்டுப்புறங்களில் மயிரை கொஞ்சம் நீளமாக விட்டுக் கத்தரித்துக் கொள்ளுகின்றனர்.

உடை விஷயத்தில், சென்ற 20, 30 வருடங்களாக. சயாம் முன்னேற்ற மடைந்துள்ளது. முற்காலத்தில் ஆணும் பெண்ணும் மூலை கச்சம் (பானுங் என்று சயாம் பாஷையில் சொல்வார்கள்) கட்டிக் கொண்டார்கள். இடுப்புக்கு மேல் சொற்ப ஆடையே யிருந்ததாம். முற்காலத்தில் வெற்றிலை போடும் பழக்கமும் நாடெங்கும் அதிகமாக பரவியிருந்தது. "வெற்றிலை சாரு வாயிலிருந்து ஒரு பக்கம் ஒழுகுதல்; காவி படிந்த பற்கள்; கண்டவிடமெல்லாம் வெற்றிலை சாரை உமிழ்தல்" இது முன்னர் சகஜமாயிருந்தது.

ஆனால் இவையெல்லாம் இப்போது பழம் கதையாகும். உலகிலேயே மிக அழகாகவும் கவர்ச்சியாகவும் சோடித்துக் கொள்ளும் பெண்கள் சயாம்பெண்களென்றும், உடை அலங்காரத்தில் பாரிஸ்கூட பாங்காக்கிற்கு பணிய வேண்டியதுதானென்றும் அமெரிக்க நிருபரொருவர் சயாமியரை சமீபத்தில் புகழ்ந்து பேசினார். இக்கூற்று மிகையெனினும் உடை விஷயத்தில் சயாம் பெண்கள் அதிக கவனம் செலுத்துகின்றனரென்று தெளிவாகும். ஆனால் அவர்களுடைய ஆடைகளுக்கு துணி அதிகம் தேவையில்லை. எல்லோரும் ஒரே

மாதிரியான உடுப்படை உடுத்திக்கொள்ளாமல் பற்பல விதங்களாக உடுத்திக்கொள்வார்கள், புதுப்புது வித மான உடைகளை சற்றும் லச்சையின்றி அணிந்து கொள் ளுகின்றனர்.

இடுப்புக்குக் கீழ் முழங்கால் வரையில் தொங்கும் சற்று பிடிப்பான பாவாடை; பாவாடை அநேகமாக நீலம் அல்லது கருப்பு வர்ணங்களிலிருக்கும். இடுப் புக்கு மேல் கழுத்துப்புறம் துறந்த சட்டை. சில சமயம் ஆண்களைப்போல் முழுக்கை ஷர்ட்டுகளையும், உடுப்புகளையும் தரித்து கொள்ளுகின்றனர். சலவை மடிப்பு கலையாமலிருக்கும் அவர்களுடைய உடுப்பு. தாங்களே வீட்டில் இஸ்திரி போட்டுக் கொள்ளு வார்கள். கையில் ஒரு கடிகாரம் கட்டியிருக்கும்; பை ஒன் றையும் கையில் பிடித்துக்கொண்டிருப்பார்கள். நூலிழை போன்ற மெல்லிய பவுன் சங்கலியொன்று கழுத்தில் தொங்கும். ஒன்றிரண்டு மோதிரங்களும் போட்டுக் கொண்டிருப்பார்கள். இடுப்பில் நூதனம் நூதனமான வார்களைக் கட்டிக்கொண்டிருப்பார்கள். கால்களில் செறுப்பு தரித்திருப்பர். இவை நகரப் பெண்களின் அலங்காரமாகும். பீபுல் ஆட்சி காலத்தில் தொப்பி தரிக்கும் பழக்கமும் இருந்துவந்தது.

காக்கி உடுப்புகளிலும் கண்ணைப்பரிக்கும் "யூனிபா ரங்"களிலும் ஆண்களுக்கு அதிக மோகம். வீடுகளிலிருக் கும்போது ஆண், பெண் இரு சாரரும் வர்ணத் துண்டு களையோ, கைலிகளையோ தரிக்கின்றனர். மாணவிகள் ஒருவிதமான உடையும், மாணவர்கள் ஒருவிதமான உடையும் உடுத்துகின்றனர். பள்ளிகளுக்கு செல்லும் போதும் திரும்பும்போதும் அவர்கள் ஒரேமாதிரியான உடுப்புடன் வரிசை வரிசையாகச் செல்லும் காட்சி நம்மை இன்புறச் செய்யும்.

பழைய உடுபாவனை நகரப்புறத்தில் அநேகமாக மறைந்துவிட்டது; நாட்டுப்புறங்களிலும் விரைவில் மறைந்து வருகிறது. சயாமில் துணி கஷ்டமில்லாதிருந்தால் முன்பே மறைந்திருக்கும். இம்மாற்றம் சீக்கிரம் ஏற்பட்டுவிட வேண்டுமென்று மாஜி பிரதம மந்திரியான பீபுல் சோங்ராம் பல கெடுபிடி முறைகளை அனுஷ்டித்து வந்தார். ஆனால் கெடுபிடி முறைகளொன்றும் இப்போது தேவையில்லை; உடை சீர்திருத்தம் பொது மக்களால் இப்போது பரிபூரணமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சிறு உதாரணம் மட்டும் தருகிறேன்: 1946-ல் மன்னர் ஆனந்தமகிதோல் இறந்ததும், சயாமியரனைவரும் ஒரு வருடகாலத்திற்கு துக்கம் கொண்டாட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்தனர். பிரசாரமெதுவுமின்றி, யாதொரு கட்டாயமுமின்றி ஒருவரைப் பார்த்தாற் போல் எல்லாப் பெண்களும், துணிபஞ்ச காலத்திலும் ஒரு வாரத்திற்குள் கருப்பு ஆடைகளை அணிந்துகொண்டனர். சயாமியரிடையேயுள்ள கட்டுப்பாட்டிற்கும் உடை சீர்திருத்த வேகத்திற்கும் இது ஓர் சிறந்த உதாரணமாகும்.

சயாமியர் பெரும்பாலும் மர வீடுகளில் குடியிருக்கின்றனர். பக்கா கல் வீடுகள் குறைவு. சயாமில் மரம் மலிவாததால் சுவர், தளம், எல்லாம் பலகைகளால் அமைந்திருக்கின்றன. அத்தாப்பு, துத்தநாகத் தகடு, ஓடு இவைகளால் மேல் கூரை மேய்ந்திருப்பர். வெள்ளப் பெருக்கு ஏற்படுமிடங்களில் வீடுகள் தூண்கள் மீது கட்டப்படுகின்றன. வீட்டைச் சுற்றி கொஞ்சம் காலி இடமும் அதைச் சுற்றி ஒரு முள்வேலியோ அல்லது பலகை அடைப்போ யிருக்கும். கிராமங்களில் எருமை, பன்றி, கோழி போன்ற மிருகங்களை வீட்டின்

அடிதளத்தில் கட்டியிருப்பார்கள். பெண்கள் பெரும்பாலும் மண்டிபோட்டுக் கொண்டு உட்காருகின்றனர். ஆண்கள் சம்மணம் கட்டிக்கொள்ளுகின்றனர். அதாவது நாற்காலி மேஜையில்லாத ஏழை குடும்பங்களில் காலை 7 அல்லது 8 மணிக்கும் மாலையில் அஸ்தமிக்கும் முன்பும் போசனம் செய்கின்றனர். அவர்கள் இடை வேளைகளில் புசிப்பதுமுண்டு. அவர்களுடைய முக்கிய உணவு சோறு, மீன். மாமிச வகை, காய்கறி, பழ வகைகளாம். அவர்கள் பௌத்தர்களெனினும் மாமிசம் புசிப்பர். ஆனால் ஜீவவதை செய்ய பலர் துணியார். பாங்காக்கில் நூற்றுக்கணக்கில் திரியும் சொறி பிடித்த நாய்களே இம் மனப்பான்மையை யெடுத்துக் காட்டும். உணவு வகைகளை மூன்று நான்கு விதங்களாக தயாரித்து நல்ல விதமாக சாப்பிடுவார்கள். கப்பி யென்னும் குடலைப் பிடுங்கும் மீன் துவையலொன்றை அநேகமாக உண்வு பதார்த்தங்களில் சேர்த்துக் கொள்வார்கள். மசாலை சாமான்களையும் உபயோகிக்கின்றனர். வட்டமாகச் சுற்றி உட்கார்த்து கொண்டு தட்டுகளிலிருந்து ஆகாராதிகளை கரண்டிகளா லெடுத்து சாப்பிடுகின்றனர். ஏழைகள் கைகளை உபயோகிக்கின்றனர். குச்சிகளை உபயோகிப்பதில்லை. அவர்கள் தயார்செய்யும் பலகாரங்கள் வாசனைக்காக ரோஜாப் பூ இதழ்களைத் தெளிக்கின்றனர். தேங்காயை எல்லா பதார்த்தங்களிலும் அதிகம் சேர்த்து கொள்ளுகின்றனர். சீனர்களுடைய உணவு வகைகளையும் பிரியமாக சாப்பிடுகின்றனர்.

எனக்குத் தெரிந்த வரையில் சயாமியரிடம் நாம் காணக்கிடைக்கும் குணாதிசயங்களில் அவர்களுடைய மட்டு மரியாதையும், தேசப்பற்றும் தான் மிகச் சிறந்தவையாகும். தாய், தந்தை, பெரியோர், பிக்ஷுக்

கள் முதலியவர்களிடம் பழகும் முறைமை ஒவ்வொரு சயாமியனுக்கும் அதி பாலியத்திலிருந்து கற்பிக்கப் படுகிறது. நம்மைப் போல் கைகூப்பி வணங்குகின்றனர். பெரியோரை வணங்கும்போது கை கூப்புவதுடன் நில்லாமல் தலையையும் கொஞ்சம் குனிகின்றனர். உரக்க வாள்வாளென்று அவர்கள் சம்பாஷிப்பதில்லை. மற்றுமொரு விசேஷம்; அவர்களுடைய மொழியில் தனிமைப் பெயர் சொற்களும் முன்னிலைப் பெயர் சொற்களும் மிகுந்திருக்கின்றன. எதிரியின் அந்தஸ்திற்கு தகுந்தவாறு மரியாதை சொற்களைப் பொறுக்கிப் பேசவேண்டும். அல்லேல் எதிரி மனம் நொந்து கொள்வார். நம் காரியமும் கைகூடாது.

1932 புரட்சிக்கு முன் சயாமிய சமுதாயத்தில் படிப்படியாக பலவித வகுப்புகளிருந்து வந்தன. இதை மேனுட்டார் உம்பளத் திட்டமென்பர். உச்சிப்படியில் அரசரும் அரச குடும்பமும்; அடுத்த படியில் இராச பரம்பரையைச் சேர்ந்த கோமகன்களும் கோமாட்டிகளும். அவர்களுக்கு கீழ் உத்தியோகத்திற்கு தக்கவாறும் சேவைக்கு தக்கவாறும் பட்டம் பெற்ற சாதாப் பிரசைகள். "பியா" "லுவாங்" யென்னும் உன்னதப் பதவியிலிருந்து ப்ரா, குவாங் முதலிய பட்டங்கள் வழங்கப்பட்டுவந்தன. ஆங்கிலேயரைப்போல் சயாமிரும் ஒவ்வொரு புது பட்டம் பெற்ற போதும் ஒரு புதுப் பெயரை வைத்துக் கொண்டார்கள். பட்டதாரிகளுக்கு கீழ் சாதாப் பிரசைகள். அடிமைகள் சமுதாயத்தின் ஆகக் கீழ்ப்படி. கடனுக்காக அடிமை கொள்ளும் பழக்கம் 1905-இல் ஒழிக்கப்பட்டது. 1932 புரட்சிக்கு பின், பட்டங்கள் வழங்கும் பழக்கம் நிருத்தப்பட்டது. பழைய பட்டதாரிகளில் சிலர் பட்டங்களை துறந்து, சாதாரண "நாய்" அல்லது ஸ்ரீ "........" ஆகி

விட்டார்கள். பிரபுக்களின் செல்வாக்கும் சயாமிய சமுதாயத்தில் இப்போது குறைந்துள்ளது. முற்காலத்தில் பிரசைகள் அரசரின் பெயரைக்கூட உச்சரிக்கக் கூடாது; அவரைப் பார்க்கவும் கூடாது. சூலாலங்கோர்ன் மன்னரின் முதல் மனைவியார் மூன்று இளவரசர்களுடன் படகில் கடந்துகொண்டிருந்த சமயமொன்றில் படகு கவிழ்ந்துவிட்டது. அவர்களுடைய உடலை பிரஜைகள் தொடக்கூடாதென்ற பயபக்தியால் கரையில் நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவரும் உதவியளிக்காமல் அவர்கள் மறித்தனர். இந்த மூட பய பக்தி சயாமில் இப்போது மலையேறிவிட்டதெனினும் இன்றும் பூரணமாக எடுபடவில்லை. சிற்சில சின்னங்கள் இன்றுமுள. உதாரணமாக எஜமானனிருக்குமிடத்தில் வேலைக்காரர்கள் இன்னும் நிமிர்ந்து நடப்பதில்லை. மிக்க வணக்கத்துடன் தலை குனிந்து செல்லுகின்றனர்; அல்லது மண்டிபோட்டு ஊர்ந்து செல்லுகின்றனர். உயர்தர உத்தியோகஸ்தர்களைப் பார்க்கும்போதும் அவர்களுடன் பேசும் போதும் மிதமிஞ்சிய மரியாதை செலுத்தப்படுகிறது.

சயாமியர் தமாஷாக காலம் கழிக்க விரும்புகின்றனர். தாமாஷாகப் பேசுபவர்களை சயாமியர் நேசிப்பதாகவும், பயமுறுத்துபவர்களை சயாமியர் மதிப்பதாகவும் சொல்லப்படுகிறது. வருடா வருடம் சில மாதங்களுக்கு கோயில் மாறி கோயிலில் உற்சவாதிகள் நடைபெறுகின்றன. இந்த உற்சவங்களில் குறிப்பிடத்தகுந்த விசேஷமெதுவுமில்லை. இருப்பினும் ஜனக்கூட்டம் மட்டும் அதிகமாயிருக்கும். அழகாக சிங்காரித்துக்கொண்டு வேடிக்கைப் பார்த்து அனுபவிக்க வேண்டுமென்ற சுபாவம்தான் இக் கூட்டங்களுக்கு மூல காரணமாகும்.

சயாமியர் அன்னியரை வெறுப்பதில்லை. தாராளமாக சினேக வாஞ்சையுடன் பேசிப் புழங்குகின்றனர். ஆனால் சீனர்கள் பிரஞ்சுக்காரர்கள் சம்பந்தமாக மட்டும் சில சிக்கல்களிருக்கின்றன. ஒரு பக்கம் சீனர்களுடன் நெருங்கிய ரத்தக் கலப்பால் அவர்கள் பால் தனி விசுவாசம். மறுபுறம் அவர்களுடைய வியாபார போட்டியாலும் குறுகிய ஜாதி அபிமானத்தாலும் மனக் கசப்பு. இவை இரண்டும் சயாமியர் உள்ளத்தில் கலந்துள்ளன. பிரஞ்சுக்காரர்களைப் பொருத்தவரையில் சயாமியர் பழைய ஆத்திரத்தை மறக்கவில்லை. தங்களை பயமுறுத்தி பெரும் பிரதேசங்களை பிரஞ்சுக்காரர்கள் தங்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனரென்ற ஆத்திரம் மறையவில்லை. அதன் பயனைத்தான் சயாம்-இந்து சீன தகராறு 1940-41 இல் மூண்டு அபிப்பிராய பேதமின்றி சயாம் பொது மக்களால் ஆதரிக்கப்பட்டது. ஆனால் பிரஞ்சுக்காரர்கள் பால், ஆத்திரம் உள்ளத்தில் குமுறினாலும் இப்போது வெளியிட வகையில்லாமல் சும்மாயிருக்கிறார்கள். அமெரிக்கர்கள் மீது மிக்க அன்பும் நம்பிக்கையும் சயாமியர் பூண்டுள்ளனர்.

சயாமியரில் பெரும்பான்மையோர் விவசாயிகள். கைத்தொழில் பயின்றவர்களும் வியாபாரிகளும் குறைவு. நகரவாசிகள் உத்ரயோக வேட்டையில் ஈடுபட்டுள்ளார்கள் சொற்ப சம்பளமாயினும் சர்க்கார் உத்தியோகங்களில் அதி மயக்கம். இந்த மனோபாவத்தை தான் ப்ரதி தம் பொருளாதார திட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார். ஒபார்சும் லஞ்ச பழக்கமும் அதிகம்.

சயாமியர் சோம்பேரிகளென்று பல அன்னிய எழுத்தாளர்கள் குறை கூறியுள்ளார்கள். அதற்கு காரணமும்

குறித்து காட்டியுள்ளார்கள். நாடு மிக வளப்பமானது; ஜன நெருக்கடியில்லை; உஷ்ண தேசமாதலால் கொஞ்சம் ஆடையும் சூர்ய வெப்பத்தை தடுத்துக்கொள்ள ஒரு குடிசையுமிருப்பின் போதும். இத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள வருடம் பூராவும் உழைக்கவேண்டிய அவசியமில்லை. இயற்கை வனம் சயாமியரின் உழைப்பின்மைக்கு காரணமென சொல்லுகின்றனர். இயற்கை வளமட்டுமல்ல; புத்த மதமும் ஒரு காரணமென எனக்குத் தோன்றுகிறது. "வாழ்க்கை ஒரு துன்பக் கடல்; அதனின்றும் ஈடேறவேண்டுமாயின் வாழ்க்கைத் தேவைகளை நிரம்ப சுருக்கிக்கொள்ள வேண்டும்" என்று புத்தமதம் போதிப்பதால் இக வாழ்க்கையை அபிவிருத்தி செய்து கொள்ளும் மனோவேகமும் முயற்சியும உண்மை பௌத்தர்களிடையே குறைந்து விடுகின்றன. ஆனால் இப்போது பழைய புத்த மதத்துடன் நவீன ஐரோப்பிய கருத்துகளும் லட்சியங்களும் சயாமில் பரவி வருகின்றன. மேனாடுகளைத் தழுவி, புதுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள மேலும் உழைக்கவேண்டி யிருப்பதால் சோம்பேறித்தனம் குறைந்து வருகிறது. சீன ரத்தம் கலந்த சயாமியர் இரு சாதியினரின் நற்குணங்களையும் பெற்றுள்ளனர். சீனர்களின் உழைப்பையும் ஊக்கத்தையும் சயாமியரின் மட்டு மரியாதையையும் அவர்கள் இரகித்துக் கொண்டுள்ளனர். விவசாயிகளுக் கடுத்தபடியாக, அவர்கள்தான் வியாபாரம், கைத்தொழில், அரசியல் முதலிய பற்பல துறைகளிலும் முக்கிய தொண்டாற்றி வருவதாகச் சொல்லவேண்டும்.

நவீன போக்கின் பயனாக நகரப்புறங்களில் குடும்ப பற்றுதல் வரவர குறைந்துவருகிறது. குழந்தைகள் விஷயத்தில் ஆணையினும் பெண்ணையினும் பெற்றோர்கள் அதிகம் தலையிடுவதில்லை.

பெண்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. பெண் கல்வி சமீபகாலமாக மிக்க அபிவிருத்தி அடைந்துள்ளது. பெண்கள் அநேகமாக எல்லா சர்க்கார் ஆபீசுகளிலும் வேலைபார்த்து வருகின்றனர். ஆரம்பக் கல்வி போதிக்கும் உபாத்தியாயர்கள் அநேகமாக பெண்மணிகள்தான். பெண்களுக்கு வாக்குரிமையுண்டு; சட்டசபைகளில் மெம்பர்களாகலாம். 1935 விவாக சட்டத்திற்கு பின், ஒரு ஆண் சட்டபூர்வமாக ஒரு மனைவிக்கு மேல் விவாகம் செய்துகொள்ள முடியாது. ஆணைப் போல் பெண்ணும் விவாகரத்து செய்துகொள்ளலாம். பெண்களுக்கு பாக உரிமையுண்டு.

குடும்ப பரிபாலனத்தில் சயாம் பெண்கள் ஆண்களுடன் சமபங்கு பெற்றிருக்கின்றனர். சமீபகாலமாக அவர்களுடைய அந்தஸ்தும் உரிமைகளும் அதிகரித்துள்ளன; சுயேச்சையாக இஷ்டம்போல் வாழ வேண்டுமென்று இச்சிக்கின்றனர். ஆனால் புது மாற்றங்களெல்லாம் நன்மையையே பயக்கவில்லை. முக்கியமாக நாகரிக மோகத்தால் நகரப் புறங்களில் விபசாரம் அதிகரித்துள்ளது.

1935 முதல் ஒவ்வொரு விவாகமும் (ராஜமங்களம் என்று சயாம் மொழியில் கூறுவர்) பதிவு செய்யப்பட வேண்டும்; அல்லேல் சட்டபூர்வமாகச் செல்லாது.

ஐதீக முறையில் விவாகச் சடங்குகள் சொற்பமே. மணவாளனும் மணவாட்டியும் ஒரு திண்டின்மீது மண்டி போட்டு உட்கார்ந்திருப்பார்கள். மணவாட்டிக்கு இடது கையிலும், மணவாளனுக்கு வலது கையிலும் திருநூல் கட்டப்படும். அடுத்தபடியாக, மந்திரித்த தண்ணீரை (நிம்மொன்) சுற்றத்தாரும் பெரியோரும் ஒரு சங்கில்

கொஞ்சம் எடுத்து ஒருவர் பின் ஒருவராய் தம்பதிகள் கைகளில் வார்த்து ஆசிர்வதிப்பர். இந்த வைபவத்திற்கு முன்பே பௌத்த பிக்ஷுகள் மணவீட்டிற்கு வந்து மங்களசூத்திரங்களை ஓதி, தண்ணீரையும் மந்திரித்து விட்டு போய்விடுவார்கள். மேற்சொன்ன சடங்கு முடிந்ததும், விருந்து, கூத்து, பாட்டு கச்சேரி முதலியன நடைபெறும்.

சஷ்டிஅப்த பூர்த்தியும் சயாமியரால் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. புது வீடு கட்டி குடி புகும்போது அவர்கள் கிரகப்பிரவேசமும் செய்கின்றனர். மத்தியில் ஒரு கலசத்தில் தண்ணீர் வைத்துக் கொண்டு பிக்ஷுக்கள் சுற்றி வட்டமாக உட்கார்ந்து கொண்டு மந்திரம் ஜெபிக்கின்றனர். கலசத்தின்மீது ஒரு மெழுகுதிரி எரிந்துகொண்டிருக்கும். ஜெபம் முடிந்ததும் மெழுகுதிரியை தண்ணீருக்குள் அணைக்கின்றனர். கொஞ்சம் மெழுகையும் உள்ளே சொட்டவிடுகின்றனர். இந்த தண்ணீரை அறை அறையாகத் தெளிக்கின்றனர்.

புது வருட விழா, மாகபூஜை, விசாக பூஜை, தோட்கத்தின், லோய்கட்டோங் முதலியவை சயாமியர் கொண்டாடும் முக்கிய திருவிழாக்களாகும்.

நமது தமிழ் வருட பிறப்பு தினம்தான் அவர்களுக்கு வெகுகாலமாக புது வருட பிறப்பு விழாவாகயிருந்தது. மேஷ சங்கராந்தியை சொங்ரான் என்று சொல்வார்கள். பிறகு கொஞ்சகாலத்திற்கு ஏப்ரல் முதல் தேதி புது வருட தினமாக கொண்டாடி வந்தனர். **1941**-லிருந்து ஜனவரி முதல் தேதி புது வருட தினமாக கொண்டாடப்படுகிறது. சொங்ரான் விழா இன்

னும் வட சயாமில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. புது வருடம் எல்லோருக்கும் நல் வருடமாக வேண்டுமென்று வயது முதிர்ந்த சாயாமியரொருவர் ஒவ்வொரு ஊரிலும் பிரார்த்தனை செய்வார். எல்லா திருவிழா நாட்களிலும் பொதுஜனங்கள் போட்டி போட்டுக்கொண்டு சாமியார்களுக்கு உணவு அளிப்பார்கள்.

''மாகபூஜா'' விழா மொங்குட் மன்னர் காலத்திலிருந்து பிப்ரவரி வாக்கில் கொண்டாடப்படுகிறது. இது புத்தர்பெருமான் தகனம் செய்யப்பட்ட தினமாகும். வைசாக பௌர்ணமியன்று ''விசாக பூஜா''. புத்தர் பிறந்ததும், ஞானோதையம் பெற்றதும், இறந்ததும் வைசாக பௌர்ணமியில். இவ் விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தோட்கத்தினைப் பற்றி 12-வது அத்தியாயத்தில் பிரஸ்தாபித்துள்ளேன். லோய் கட்டோங் என்னும் விழா நவம்பர் பௌர்ணமியன்று வடக்கே சியங்மாய் பக்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறதாம். விளக்கு திருவிழா வென்றும் (கார்த்திகை தீபமா?) இதை அழைப்பதுண்டு.

சூளகண்டமங்களா (முடியிறக்கும் சடங்கு) ரக்ஞ (பொன்னேர் கட்டி உழுதல்), ஊஞ்சலாடும் விழா, ''தியுநாட்'' அல்லது மந்திரித்த தண்ணீரைப் பருகி அரசருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தல் இந் நான்கு சடங்குகளும் இப்போது கைவிடப்பட்டுள்ளன. பௌத்த மதத்திற்கு புறம்பான ஹிந்து சடங்குகளை சயாம் சமுதாயத்திலிருந்து அகற்றிவிட வேண்டுமென்று சயாம் சர்க்காரும், பௌத்த மதத் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.

மற்ற சடங்குகளை விட ஈமச் சடங்குதான் மிக முக்கியமெனக் கருதப்படுகிறது. இறந்து போனவர்களுக்காக புண்ணியம் தேடி அவர்கள்மீது தாங்கள் கொண்டுள்ள அன்பையும். நன்றியறிதலையும் வெகுவாக காட்டும் சந்தர்ப்பமாகும் ஈமச் சடங்கு. இறந்துபோனவர்கள் ஆவி உலகில் கஷ்டப்படாமலும் அவர்கள் மறு ஜென்மம் எடுக்க வேண்டுமாயின் அவர்களுக்கு நல்ல பிறவி கிடைக்குமாறும் அவர்களுடைய உறவினர் சில சத்கர் மாக்களைச் செய்து உதவி புரியலாமென்பது பொது ஜன நம்பிக்கையாகும்.

பிணத்தைக் கழுவி, வெள்ளைத் துணியால் போர்த்தி பிரேதப் பெட்டிக்குள் வைக்கின்றனர். ஊதுவத்தியும் மெழுகுதிரியும் இரவு பகலாய் பக்கத்தில் எரிந்துகொண்டிருக்கும் பிரதிதினமும் பிக்ஷுக்கள் வீட்டிற்குவந்து "அபிதர்ம" சூத்திரங்களை ஓதுவார்கள். பெரும்பாலும் ஒருவாரத்திற்குள் தகனம் செய்யப்படும். இதற்காக ஒவ்வொரு பெரிய கோயிலிலும் தகன மேடைகள் கட்டப்பட்டுள்ளன. உடனே தகனம் செய்ய வசதியில்லாவிடின், பிணத்தை சில மாதங்களுக்கு கோயிலில் கொண்டு வைப்பார்கள். சந்தனமர இதழ்களை கொளுத்தி உறவினர்களும் சிநேகிதர்களும் கொள்ளி வைக்கின்றனர். தனவந்தர்கள் குடும்பத்தில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக பௌத்த சமய நூல்களை அச்சிட்டு ஜனங்களுக்கு இலவசமாக வழங்குகின்றனர் மற்றபடி தானதர்மம் செய்தும், இறந்தவர்களுக்கு புண்ணியம் அல்லது தம்புன் தேடுகின்றனர்.

இராச குடும்பத்தின் ஈமச் சடங்குகள் மிகவும் தடபுடலாய் நடைபெறும். ஏராளமான செலவை முன்னிட்டு இராச குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நபரை

யும் அவ்வப்போது தனித்தனியே தகனம் செய்வதில்லை. இரண்டு, மூன்று வருடங்களுக்கொருமுறை இறந்தவர்கள் எல்லோருக்கும் சேர்ந்தாற்போல் ஈமக்கிரியைகள் நடைபெறும். அதுவரையில் பிணங்கள் சம்மணம் கட்டிக்கொண்ட பாவனையில் பெரிய கலசங்களில் அடைத்து வைக்கப்படுகின்றன.

சயாம் மொழியில் 30 உயிரெழுத்துகளும் 56 மெய்யெழுத்துகளும் உள. பீபுல் சொங்ராம் சில எழுத்துகளை குறைத்து சீர்திருத்தம் செய்யப் பார்த்தார். ஆனால் அவர் புகுத்திய சீர்திருத்தம் நீடித்திருக்கவில்லை. பாலி, சமஸ்கிருத சொற்கள் ஏராளமாக சயாம் பாஷையில் கலந்துள்ளனவாம். சமஸ்கிருதமோ, பாலியோ நன்கு கற்றுணர்ந்தவர்கள் சயாம் மொழியை சீக்கிரம் கற்றுக்கொள்ளலாமென்று சொல்லப்படுகிறது. ஐரோப்பியர்கள் லத்தின், கிரேக்க மொழிகளை எவ்வளவு அபிமானத்துடன் பயின்று வருகிறார்களோ அவ்வளவு அபிமானத்துடன் சயாமியரும் பாலி பாஷையையும் சமஸ்கிருதத்தையும் பயின்று வருகின்றனர். இவ்விரண்டு மொழிகளும் அவர்களுக்கு வற்றா ஊற்றுக் கண்களாகத் தோன்றுகின்றன. விஞ்ஞான புதுமைகளுக்கும் புது கருவிகளுக்கும் மேனாட்டு பதங்களை சயாமியர் அப்படியே காபி அடித்துவிடாமல், பாலியிலும் வடமொழியிலும் தக்க மூலங்களைத் தேடி கூடியவரையில் புதுச் சொற்களை ஏற்படுத்திக்கொள்ளுகின்றனர்.

சங்கீதத்திலும் நாடகத்திலும் சயாமியர் மிக்க பிரியமுடையவர்கள். நாடகங்களில் ருசிகரமான சம்பாஷணைப் பகுதியே அதிகம் விரும்பப்படுகிறது. சினிமாகலை வளர்ச்சி பெறவில்லை சயாமியரிடையே நாட்டியம் (லக்கோன்) ஒரு தேசியபைத்தியமென்றே சொல்லலாம்.

இளமையிலிருந்து ஒவ்வொரு வீட்டிலும் நாட்டியம போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் வருடா வருடம் நாட்டியத்தில் போட்டிப்பந்தயங்கள் நிகழ்கின்றன. கம்போஜிய நாட்டியமும் சயாம் நாட்டியமும் ஒன்று தான், திருவிழாக் காலங்களல் நாட்டிய பந்தயங்களுடன் ராமாயணத்தைப் பற்றி பொம்மலாட்டமும் காட்டப் படுகிறது

பங்குனி, சித்திரை மாதங்களில் பட்டம் விடுவது ஒரு தேசிய பொழுதுபோக்கு. 40, 50 வயதுள்ளவர்கள் கூட பட்டம் விடுகின்றனர். குஸ்தி பந்தயங்களுக்கு ஏகக் கூட்டம். புட்பால், டென்னிஸ் முதலிய மேனாட்டு விளையாட்டுகளும் விளையாடப்படுகின்றன.

அத்தியாயம் 20

கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்தே ஹீனயானு, மகாயானு என்று இரு முக்கிய பிரிவுகளாக பௌத்த சமயம் பிரிந்துள்ளது.

கௌதமர் பேசிய மாகதப் பேச்சான பாலி மொழியில் ஹீனயானு கிரந்தங்கள் எழுதப்பட்டுள்ளன. நிர்வாண நிலையை அடைந்த பின்னரே பிறவியென்னும் பிணியிலிருந்து விலகலாமென்றும், அவரவரும் அவரவர் விடுதலைக்குப் பாடுபடுவதைத் தவிர வேறு வழியேயில்லை யென்றும் ஹீனயானு வற்புறுத்துகிறது. கி. மு. 20 வாக்கில் இலங்கையில் ஹீனயானு கிரந்தங்கள் தயாரிக்கப்பட்டன.

வடமேற்கிந்தியாவில் பரவியிருந்து வடமொழியை கையாண்டுள்ளது மஹாயானு. அவரவர் விடுதலைக்கு மட்டுமல்ல, பிறருடைய விடுதலைக்கும் உதவி செய்ய லாம்; உதவி செய்யவேண்டுமென்பது மஹாயானுவின் போதனையாகும். திபெத், சைனு, ஜப்பான் முதலிய தேசங்களில் பரவியுள்ளது மஹாயானு.

இலங்கை, பர்மா, சயாம், கம்போஜியா இந்நான்கும் ஹீனயானுவைத் தழுவியுள்ளன. ஆனுல் கம்பொஜியாவிலும் இலங்கையிலுமுள்ள பௌத்தர்களை விட சயாமில் மூன்று பங்கு அதிகமாக பௌத்தர்கள் வசித்து வருகின்றனர்.

சயாமில் ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் குறைவேயில்லை. 17,600 பௌத்த ஆலயங்களும், 3,50,000 பிக்

க்ஷுக்களும் சிடர்களும் சயாமிலிருப்பதாக 1939-ல் கணக்கிடப்பட்டுள்ளது; அதாவது சராசரி 800 நபர்களுக்கு சயாமில் ஒரு ஆலயமிருக்கிறது. முஸ்லிம்களான மலாய்க்காரர்கள் நீங்கலாக, ஏனைய சயாமியர் பெரும்பாலும் பௌத்தர்கள். சயாமில் எவ்வித மதத் தடைகளுமில்லை; சட்டவரம்புக்குட்பட்டு எந்த மதத்தையும் போதிக்கலாம்; அரசரொருவர் நீங்கலாக ஏனையோர் எந்த மதத்தையும் தழுவலாம். இருப்பினும் பெரும்பான்மையோர் பௌத்த மதத்தையே தழுவியுள்ளனர். அசோகர் காலத்திலேயே சயாமில் பௌத்த சமயம் பரவியிருந்ததாக சயாம் அறிஞர்கள் கூறுகின்றனர். ஹிந்து மதமும் மஹாயான பிரிவும் வெகுகாலம் வரையில் ஹீனயானவுடன் சயாமில் போட்டியிட்டன. இறுதியில் சயாமியர் ஹீனயான பிரிவையே தழுவி கின்றனர்.

சயாமில் பௌத்த சமயம் ஓர் கட்டுக் கோப்பான சமயமாகும். பிக்ஷு பிக்ஷுனி சிஷ்யர்கள் என்றும், லௌகியர்களென்றும் இரு பெரும் பிரிவுகளாக பௌத்தர்களை பிரிக்கலாம்.

கௌதமர் காட்டிய துறவறத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்து பிறவிப் பிணியிலிருந்து விலக பெரும் முயற்சி செய்யவேண்டும் முதல் வகுப்பினர்; அவர்களுக்கு வேண்டிய ஆடை, குடியிருப்பு, உணவு முதலிய முக்கிய தேவைகளையளித்து புண்ணியம் தேடிக்கொள்ள வேண்டும் லௌகியர்கள். ஆனால் பிறவி, வாழ்க்கை, வயோதிகம், மரணம் இவையெல்லாம் துன்பமென்றும், இவைகளிலிருந்து விலக வேண்டியதவசியமென்றும் பௌத்தனென்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொரு நபரும் உறுதியாக நம்ப வேண்டும்.

சயாமில் பௌத்த சமயம் படிப்படியான அதிகார வர்க்கத்தை கொண்டுள்ளது. மதத்தலைவரின் பெயர் சங்க ராஜா; அவருக்குதவியாக "மகாதேரசமசம" என்றொரு சபையிருக்கிறது. பௌத்த சமயம் சம்பந்தமாக சகல விஷயங்களுக்கும் சயாமில் இச் சபைதான் சட்ட திட்டங்களை வகுக்க வேண்டும். சயாம் சர்க்காருக்கும் பௌத்த மத ஸ்தாபனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. கல்வி இலாகாவிடம் மத விஷயங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கல்வி அதிகாரிகள் அநேகமாக பௌத்தர்களானபடியால் சர்க்காருக்கும் மதத்திற்கும் போட்டியில்லை; தகராறுமில்லை.

கம்போஜியாவிலும் சயாமிலும் புத்த ஆலயங்கள் ஒரேமாதிரியாக அமைக்கப்பெற்றுள்ளன. சாதாரண ஆலயங்களில் போட் அல்லது மூலஸ்தானம், விஹாரா அல்லது பிரசங்கமேடை, பிக்ஷுக்களின் குடியிருப்பு, ப்ராசெடி அல்லது ஸ்தூபி, அரசமரம், ஆலாசியமணி, தகனமேடை இவைகளைக் காணலாம். பெரிய கோயில்களில் புத்தகசாலை, பாடசாலை, சிறுவர் பள்ளிக்கூடம், தியான அறைகள் இவை போன்ற பிற வசதிகளுமிருக்கின்றன. சிற்சில இடங்களில் புனிதச் சின்னங்களடங்கிய ஸ்தூபிகள் கட்டப்பட்டுள்ளன. சயாமில் நக்கோன் பிரதோம் என்னும் ஊரில் கட்டப்பட்டுள்ள ஸ்தூபி இவைகளில் தலைசிறந்ததாகும். "போட்"டில் தான் ஆராதனை நடைபெறும். அதன் சுவர்கள் உயரமாகவும், மேன் கூறை செங்குத்தாகவுமிருக்கின்றன. பலவித வர்ணங்கள் தீட்டிய ஓடுகளால் மூடப்பட்ட கோயில் கூறைகள் பளபளவென்று பிரகாசிக்கின்றன. நான்கு கூடல்வாய்களிலும் நான்கு நாகங்கள் ஓடி வெளியே தலையை நீட்டிக்கொண்டிருக்கும் சிற்ப அலங்காரம்.

நான்கு நாகங்களின் வால்களும் நடுமையத்தில் ஒன்று சேர்ந்து இச் சுடர்போல் நீட்டிக் கொண்டிருக்கும் தோற்றம்.

மைனர்களும் மேஜர்களும் பிக்ஷுக்களாக மடத்தில் சேர்ந்துகொள்ளலாம். வாழ்நாளில் கொஞ்ச காலத்தையாவது மடத்தில் கழிக்க வேண்டுமென்று பொது மக்களால் கருதப்படுவதால் வருடா வருடம் குறிப்பிட்ட காலத்தில் அநேகர்மடத்தில் சேர்ந்துகொள்ளுகின்றனர். மடத்திலிருந்து விலகிக்கொள்ள கடுமையான தடை விதிகள் எதுவும் கிடையா. விலக விரும்புவதாக எழுத்து மூலம் தெரிவித்தும் மஞ்சள் ஆடையை கழட்டி வைத்தால் போதுமானது. சங்க கட்டுப்பாடுகளை மீறும் குற்றத்திற்காகவும் துர்நடத்தைக்காகவும் பிக்ஷுக்களை சங்கத்திலிருந்து விலக்கலாம். பிக்ஷுக்களின் நடத்தையை சரிவர கண்காணிக்கும் பொருட்டு சயாமில் ஒவ்வொரு பிக்ஷுவுக்கும் ஒரு குறிப்பு புத்தகத்தை வழங்கியுள்ளனர். அதில் அவருடைய கல்வி முதலிய யோக்கியதாம்சங்களும் அவர் செய்த குற்றம் குறைகளும் குறிப்பிடப்படுகின்றன.

கம்போஜியாவிலும் சயாமிலும் பிக்ஷுகளுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. கட்டாய ராணுவ சேவையினின்றும் அவர்கள்விலக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் தலைவரி செலுத்த வேண்டியதில்லை. ப்ரா (உத்தமர், சிரேஷ்டர்) என்று பொது ஜனங்களால் பூஜிக்கப்படுகின்றனர். பிரம்ம சரியத்தை யனுசரித்தல், குறைவான ஆகாராதிகளை உட்கொள்ளுதல், மந்திரங்களை ஜெபித்தல் இவவிதிகளை பிக்ஷுக்களில் பெரும்பான்மையோர் அனுஷ்டிக்கின்றனர். ஆனால் ஏதோ புராதன சடங்குகளென்று செய்கிறார்களே தவிர, உள் அன்புடன் மன உறுதியுடன் செய்வதாகத் தோன்றவில்லை.

ஒவ்வொரு பிக்ஷுவும் வறுமை நோன்பை மேற்கொள்ளவேண்டும். மஞ்சள் ஆடை, பிக்ஷை பாத்திரம், பாய், கத்தி, ஊசி, நூல், ஒரு துண்டு, விசிறி, காயம் புண் முதலியவைகளை ஆற்றிக்கொள்ள கொஞ்சம் துணியும் மருந்தும் ஒரு சிறு பை இவைகளை ஒவ்வொரு பிக்ஷுவும் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். மற்றவையெல்லாம் சங்கத்தின் பொது சொத்து. ஆனால் காலத்திற் கேற்ப பிக்ஷுகளின் தேவைகளும் அதிகரித்துள்ளன. நாவலும் கையுமாக யிருக்கும் பிக்ஷுகளை நாம் இப்போது சகஜமாக பார்க்கலாம். மடத்திலேயே காலம் கழிக்க அவர்கள் விரும்பவில்லை. வெளியே கூட்டம் கூட்டமாகச் சென்று சுற்றிப்பார்க்க விரும்புகின்றனர்.

அவர்கள் அதிகாலையி லெழுந்துகொண்டு நீராடி ஜெபம் செய்தபின் பிக்ஷை வாங்க ஊர்வலமாகச் செல்கின்றனர். பொது ஜன ஆதரவிருப்பதால் உணவு தேடும் இந்த வேலை கடினமில்லை. அவர்கள் மடம் திரும்பியதும் காலையில் ஒரு வேளையும் 11 அல்லது 12 மணிக்கு மறு முறையும் சாப்பிடுகின்றனர். மாமிச வகைகளை அவர்கள் புசிக்கலாம். ஆனால் அவர்கள் அறிய அவர்களுக்கென மிருகங்களை கொன்று சமையல் செய்திருக்கக்கூடாது. பிற்பகலில் அவர்கள் உண்பதில்லை. ஆனால் தேயிலை, இளநீர் முதலிய பானகங்களைப் பருகலாம்; அவர்கள் பிற்பகலில் கிரந்தங்களை வாசித்து தியானம் செய்யவேண்டும். சாயந்திரம், பொது ஆராதனையில் கலந்துகொள்ள வேண்டும். அவர்கள் அரசியல் விஷயங்களில் கலந்துகொள்ளக் கூடாது. சினிமா நாடகம் முதலிய காட்சிகள் பார்க்கக்கூடாது.

சமீப காலம் வரையில் சயாமில் ஆரம்பக் கல்வி அவர்களாலேயே பெரும்பாலும் போதிக்கப்பட்டு வந்தது. இப்போது எங்கும் சர்க்கார் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு விட்டன. இருப்பினும் இன்றும் பௌத்த சாமியார்கள் ஆரம்ப கல்வி விஷயத்தில் பெரும் சிரத்தை காட்டி வருகின்றனர்.

அத்தியாயம் 21

நாங்கள் வந்த சமயத்தில் (1945 ஆகஸ்டு) பாங்காக் ஒலியிழந்து சோபித்திருந்தது. திருட்டு அபாயத்தால் பிற்பகல் நாலு மணிக்கெல்லாம் கடைகள் மூடப்பட்டன. மாலை 6 மணிக்கெல்லாம் வீதிகளில் ஜனப் புழக்கமின்றி வெறிச் சென்றிருந்தன. சீனர்களைத் தவிர மற்ற நகரவாசிகளின் முகத்தில் அருளில்லை; சந்தோஷமில்லை. ஆனால் நாளாக நாளாக நகரம் புத்துயிர் பெற்றது. விமான படையெடுப்புக்கு பயந்து உள் நாடுகளுக்குச் சென்றிருந்த பல்லாயிரக் கணக்கான பாங்காக் வாசிகள் வீடுகள் திரும்பினர். முதலில் தண்ணீர் வசதியும் பின்னர் மின்சாரம், டிராம் வசதிகளுமேற்பட்டன. வீதி வெளிச்சங்கள் பிரகாசிக்க ஆரம்பித்ததும் இரவில் ஜனப் புழக்கமும் வியாபாரமும் அதிகரித்தன. பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கிய பின்னர் காபாரட்டுகளும் கூத்து மேடைகளும் நகரமெங்கும் ஈசல் பூத்தாற் போல் முளைத்தன.

சரணாகதி செய்தி பாங்காக்கில் பரவியவுடன், ஆங்கிருந்த இந்திய சுதந்திர சங்க ஊழியர்களில் (!) பலர் சங்கத்தின் சாமான்களை போட்டி போட்டு கொள்ளையடித்தார்கள். ஸ்டோர்களில் புகுந்து 'இது வரையில் என் பாகம்; இதுவரையில் என் பாகம்' என்று வளைத்துக் கட்டிக் கொண்டனராம்.

நாங்கள் வந்த சமயம் அரசியல் வானில் இருள் சூழ்ந்திருந்தது. இந்திய தேசிய இராணுவம், லீக் ஊழியர்கள் இவர்களின் கதி என்னவாகுமென்று ஒருவரு மறிந்திலர். நாங்கள் அடைக்கலம் புகுந்த தாய்

லந்தின் கதி என்னவாகும்? அதன் நாணயம் மதிக்கப் படுமா? அதன் சுதந்திரம் நிலைத்து நிற்குமா? இவை போன்ற பிரச்னைகளுக்கு யாரும் திட்டமான முடிவுகூற முடியவில்லை.

எங்கள் மெஸ் நண்பர்களில் சிலர் எந்த நேரமும் சிறை செல்ல தயாராக யிருந்தனர். சில நாட்கள் கழிந்தபின் அரசியல் வானில் வெளிச்சம் தோன்றலா யிற்று. இ. தே. ரா. நபர்கள் மீது பிரிட்டிஷ் சர்க்கார் குற்றம் சாட்டி விசாரிப்பின் பிரதிவாதம் செய்ய அவர் களுக்கு வசதி யளிப்பதென காங்கிரஸ் மகா சபை செய்த முடிவு கீழாசியாவிலிருந்த ஆயிரக் கணக் கான லீக் ஊழியர்களுக்கு ஊக்க மளித்தது. இருண் டிருந்த வானில் அவர்கள் கண்ட முதல் வெளிச்சம் அதுவே. இலவச வசதியை அவர்கள் பாராட்டினர்க ளெனினும், தாங்கள் மேற்கொண்டுள்ள லட்சியத்தை யும் தாங்கள் கையாண்டு வந்த போர் முறையும் காங் கிரஸ் வெறுக்காமல் உதவியளிக்க முன் வந்ததே அவர் களுக்கு மிக முக்கியமெனத்தோன்றிற்று. சுகம், தொழில், பொருள் இவைகளைத் துறந்து கஷ்டம் கருதா மல் தாங்கள் செய்து வந்த தேச சேவையை இந்திய பொது மக்கள் ஆதரித்திரா விட்டால் அவர்கள் பெரிதும் மனமுடைந் திருப்பார்கள். காங்கிரஸ் சபை யும் முஸ்லீம் லீகும் இதர அரசியல் கட்சியினரும் இந்திய சுதந்திர இயக்க பிரச்னையை கட்சிப் பிளவுக ளின்றி ஒரு பொது தேசப் பிரச்னையாகக் கொண்டது அவர்களுக்கு மேலும் உற்சாக மூட்டியது. கடும் தண்டனை பெற்ருலென்ன? உயிர் போனாலுமென்ன? யாருடைய நன்மதிப்பை பெரிதென விரும்புகிறோமோ அவர்கள் நம்மை குறை கூறவில்லை யென்று ஊழியர்கள் மனந் தெளிந்தனர்.

அடுத்தபடியாக சயாம்பால் அமெரிக்க சர்க்காரும் அமெரிக்க பொது மக்களும் காட்டி வந்த அனுதாபம் சயாமியரிடையே மட்டற்ற மகிழ்ச்சியை ஊட்டியது.

ரீஜண்டு ப்ரதிபனம்யோங் அவர்களால் தயாரிக்கப்பட்ட "சமாதானப் பிரகடன"மொன்று 16-8-45ல் சயாம் சட்டசபையில் வாசிக்கப்பட்டது. இதொரு நூதனப் பிரகடனம். சயாமியரின் அபிலாஷைகளுக்கும் சயாம் அரசியல் சட்டத்திற்கும் விரோதமாகையால் 1942ல் சயாம் செய்த யுத்தப் பிரகடனம் முற்றிலும் செல்லத்தகாததென்று ரீஜண்ட் கூறினர். உலகில் யுத்தம் முடிந்து விட்டபடியால் சமாதான நிலைமை சயாமில் ஏற்பட்டுவிட்டதென்றும் அறிவித்தார். நேச நாடுகளுடன் கூட்டுறவு கொள்ளும் பொருட்டு, ஜப்பானியர் தங்களுக்களித்திருந்த மலாய் சமஸ்தானங்களையும் ஷான் பிரதேசங்களையும் ஆங்கிலேயர் வசம் தாங்கள் திருப்பி ஒப்புவிக்க சித்தமென்றும், ஐ. அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிரிடையாக சயாமில் இயற்றப்பட்ட சட்டங்கள் உடன் ரத்து செய்யப்படுமென்றும், பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் அமெரிக்க பிரஜைகளுக்கும் யுத்தத்தாலேற்பட்ட நஷ்டங்கள் சயாம் சர்க்கார் ஈடு செய்துகொடுக்குமென்றும், ஐக்கிய நாடுகளுடன் சயாம் ஒத்துழைக்கத் தயாரென்றும் அச்சமாதான பிரகடனம் மேலும் கூறிற்று.

யுத்த காலத்திலிருந்த அபய்வோங்சி மந்திரி சபை நேச நாடுகளுடன் ராசி பேச்சுகளை சரிவர நடத்த முடியாதென்றுகருதி, மறு நாள் (17-8-45) ராஜிநாமா செய்து ஒரு இடைக்கால சர்க்கார் ஏற்பட்டது. சேனிப்ரமோஜ் வாஷிங்டன் நகரிலிருந்து புறப்பட்டு செப்டம்பர் 17ம் தேதி யன்று பாங்காக்கை

யடைந்து மறுநாள் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார்.

இதற்கிடையில் சயாம் வெளியிட்ட சமாதான பிரகடனத்தை அமெரிக்கா ஒப்புக்கொண்டது. சயாம் 1942ல் செய்த யுத்த பிரகடனத்தை அந் நாடு ஒப்புக்கொள்ளவில்லை யென்று முன்னர் கூறினேன். அமெரிக்கா அத்துடன் நிற்கவில்லை. தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக்கொண்ட சயாமுக்கு உதவி செய்யவும் முன் வந்தது. தாங்கள் கடந்த நான்கு வருடங்களாக சயாமை ஒரு விரோதி நாடாக பாவிக்காமல் விடுதலை செய்யவேண்டிய நாடாகவே பாவித்து வந்ததாகவும், சுதந்திர தாய் இயக்கம் நேச நாடுகளுக்கு சிறந்த உதவி யளித்துள்ளதென்றும் அமெரிக்க அன்னிய நாட்டு மந்திரி அறிவித்தார். சயாம் செய்த யுத்த பிரகடனத்தை அமெரிக்கா ஒப்புக்கொள்ளாததால், இரு நாடுகளும் மீண்டும் உறவாட எவ்வித தடையுமில்லை. திக்கு திசை தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த சயாமுக்கு அமெரிக்கா முதன் முதல் ஆதரவு யளித்தது; வழிகாட்டிற்று. ஆகவே சயாமியர் அமெரிக்காபால் மிக்க அன்பும் நன்றியறிதலும் பாராட்டுகின்றனர்.

ஆங்கிலேயர்களை பொருத்த மட்டில் நிலைமை சிக்கலாகவே யிருந்தது. அவர்கள் யுத்த பிரகடனத்தை புறக்கணிக்காமல் அசல் யுத்த பிரகடனமாகவே பாவித்தனர். ஆகவே திரும்ப சமாதானம் செய்துகொள்ள பல நிபந்தனைகளை விதிக்க முயன்றனர். சயாமிலிருந்து அரிசி, ரப்பர், ஈயம் இவைகளின் ஏற்றுமதி வியாபாரத்திலும், சாயம் மர வியாபாரத்திலும் தங்களுக்கு ஏகபோக உரிமைகள் வேண்டுமென்றும், சயாமிலுள்ள முக்கிய கேந்திர ஸ்தானங்களில் காலவரையின்றி தாங்கள்

படைவைத்துக் கொள்ளும் உரிமை வேண்டுமென்றும், பாங்காக் வழியாக சிவில் விமான போக்கு வரத்து சலுகையை தங்களுக்கு மட்டும் அளிக்க வேண்டுமென்றும், சயாமில் தங்களுக்கு கடற்படை நிலையங்கள் வேண்டுமென்றும், தாய் லண்ட் என்னும் பெயரை சயாம் என மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் மற்றும் பல நிபந்தனைகளையும் ஆங்கிலேயர் விதித்தனர். மொத்தம் 21 நிபந்தனைகள். அவைகளை சயாம் ஒப்புக்கொண்டிருந்தால் சுதந்திர மிழந்து 2, 3 மூன்று தலைமுறைக்காவது பிரிட்டிஷ் காலனி ஆகவேண்டியதுதான். மொத்தம் 21ல், 5 நிபந்தனைகளை மட்டும சயாமியர் ஏற்றுக் கொண்டனர். நிபந்தனைகளின் முழு விபரமும் அமெரிக்கர்களுக்கு தெரிய வந்த பின், அவர்கள் பிரிட்டன்-சயாம் பேச்சு வார்த்தைகளில் குறுக்கிட்டு நிபந்தனைகளை குறைத்துக் கொள்ளுமாறு பிரிட்டனிடம் வர்புறுத்தி வந்தனர். இறுதியில் 1-1-46ல் பிரிட்டன்-சயாம் உடன்படிக்கை கையொப்பமிடப் பட்டது. அன்றுவரையில் ஆங்கிலேயர் மீது சயாமியர் உள்ளத்தில் எரிச்சல் கொண்டிருந்தனர்.

யுத்தம் முடிந்ததும் சயாம்பால் சுங்கிங் சர்க்காருடைய மனோ நிலை முதலில் தெளிவாகவில்லை. சயாமிலுள்ள லட்ச கணக்கான சீனர்கள் சமயம் வாய்த்ததென்று பெரிய ஆர்பாட்டம் செய்தார்கள். சயாமுடைய கொடி அழிந்துபோய் விட்டதென்றும் சைனுவுடன் சயாம் இணைக்கப்படுமென்றும் அவர்கள் கனவு கண்டார்கள். சீனர்களை கட்டுப்படுத்த யுத்தகாலத்திலும் அதற்கு முன்பும் பல்லாண்டுகளாக சயாம் சர்க்கார் கையாண்டுவந்த நடவடிக்கைகள் சீனர்களின் ஆத்திரத்தை மூட்டி விட்டன. சயாமும் சீனுவும் அண்டை நாடுகளா யிருப்பினும் சயாமியரும் சீனரும் ஒரு குலத்தினராயினும் இரு நாடுகளுக்கு யிடையே ராஜதந்திர

உறவு வெகுகாலமாகவே யில்லை. சயாமியரின் தலைவலியில் சீனர் பிரச்னை முதன்மையானது.

1937-38 ஜன சஞ்சிகை கணக்குப்படி சயாமில் மொத்தம் 56 லட்சம் சீனர்கள் வசித்து வருகின்றனர். (ஆண் 336,000; பெண் 189,000). ஆனால் இப் புள்ளி விபரம் மிக்க குறைவென்றும், அயல்நாடுகளில் பிறந்த சீனர்களை மட்டும் சீனர்களாக பாவிக்காமல் சயாமில் சீன பெற்றோர்களுக்கு பிறந்து சீனர்களாக வளரும் நபர்களையும் கணக்கில் சேர்த்து கொண்டால், சயாமில் மொத்தம் 25 லட்சம் சீனர்களாவது வாழ்ந்து வருகின்றனரென்று சீனர்கள் சொல்லுகின்றனர். சயாமில் மொத்தம் ஜனத்தொகை 160 லட்சமென்றால், எண்ணிக்கையை பொறுத்த மட்டிலுமே சீனப் பிரச்னை பெரும் பிரச்னை யென்று வாசகர்களுக்கு புலனாகும்.

1911லிருந்தே சீன பிரச்னை அவசரமாக கவனிக்க வேண்டிய பிரச்னையாக மாறி விட்டது. அதுவரையில் சயாமியர் அதிகமாகவும் சீனர்கள் குறைவாகவும் தலை வரி செலுத்தி வந்தனர். சீனர்களும் சயாமியரைப் போல் 7 திக்கில் வருடா வருடம் தலைவரி கட்டவேண்டுமென்று 1911ல் உத்திரவிடப்பட்டது. இந்த உத்திரவை கண்டிக்கும் பொருட்டு சீனர்கள் பல நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர்; கலகமும் செய்தார்கள். அன்று முதல் சயாமியரிடையே சீன துவேஷமும் பரவ ஆரம்பித்தது.

பொருளாதாரத் துறையிலும் கைத்தொழில் துறையிலும் சீனர்கள் சயாமிய சமுதாயத்தில் அளவுக்கு மிஞ்சிய பங்கு பெற்றுள்ளனர். 1932 புரட்சிக்குப் பின் ஏற்பட்ட சயாம் சர்க்கார்கள் சீனர்களின் பங்கை குறைத்து சயாமியரின் பங்கை உயர்த்த முயன்றார்கள்.

சில கைத்தொழில்கள் சயாமியரைத் தவிர அன்னிய ரொருவரும் செய்யக்கூடாதென்று சட்டம் பிறப்பிக்கப் பட்டது. இச்சட்டம் சீனர்களைத்தான் முக்கியமாக பாதித்தது.

சயாமை தங்கள் தேசமென்றும் தாங்கள் சயாமிய ரென்றும் சயாமில் பிறந்து வாழும் சீனர்கள் கருத வேண்டுமென்பது சயாம் சர்க்காரின் கொள்கையாகும். சீன பிரச்னையைக் குறித்து சயாமியரிடையே கட்சி பேத மெதுவுமில்லை. சயாமிலுள்ள சீனர்கள் 1, 2 தலைமுறை கழிந்த பின்னராவது தங்களை சயாமியராக கருதா விட்டால், சயாம் சமுதாயத்திற்கு பெரும் கஷ்டங்க ளேற்படும். ஆகவே கல்வி விஷயத்தில் சயாம் சர்க்கார் கண்டிப்பான கொள்கையை அனுஷ்டிக்கலாயினர். பள்ளிகளில் சயாம் மொழியை பிரதான பாஷையாகவும் சீன பாஷையை உபபாஷையாகவும் கற்பிக்க வேண்டு மென்று சயாம் சர்க்கார் கட்டளையிட்டனர். இந்த சட் டத்தின் மீது சீனர்கள் கொண்ட ஆத்திரம் சொல் லற்பாலது. ஆயினும் இருநாடுகளுக்குமிடையே ராஜ தந்திர உறவுயில்லாமையால் வெறும ஆட்சேபம் செய்த தைத் தவிர வேறொன்றையும் சீனர்கள் அக்காலத்தில் செய்ய முடியவில்லை.

யுத்தம் முடிந்ததும் இந்த ஆத்திரமெல்லாம் ஒன்று சேர்ந்து பொங்கி யெழுந்தது. 1945 ஆகஸ்டு-செப்டம் பரில் பாங்காக்கில் அவர்களுடைய ஆர்பாட்டம் அதிகம். சைனு, அமெரிக்கா, பிரட்டன், ருஷ்யா இந்நாடுகளின் கொடிகளை உயர்த்தி திருவிழா கொண்டாடினர். ஆனல் சயாம் தேசத்திலிருந்து கொண்டே சயாம் கொடியை உயர்த்த அவர்கள் சம்மதிக்கவில்லை. பிரிட்டிஷ் சிப்பாய் களை கண்டவுடன், மனம் பூரித்து, வேறொன்றும் பேசத் தெரியாவிடினும் "ஓ. கே" "ஓ கே" என்ருயினும் கூவி

அழைத்தனர். ஆனால் சில மாதங்கள் சென்றபின் இதே சீனர்கள் ஆங்கிலேயர்களை வெறுக்க ஆரம்பித்தனர்.

பலநாட்களாகவே முதிர்ந்து வந்த சீன-சயாம் துவேஷம் 1945 செப்டம்பர் பிற்பகுதியில் வெளியாயிற்று. சீனர்களுக்கும் சயாம் போலீசுக்கும் பாங்காக் தெருக்களில் பீரங்கியுத்தம் சில நாட்கள் நடந்தேறியது. அதை அடுத்து 1945 செப்டம்பர் 26-ம் தேதியிலிருந்து 6 நாட்கள் சீனர்கள் கடைகளையடைத்தார்கள். நல்ல வேளையாக பிரதமர் செனிப்ரமோஜின் தலையீட்டாலும், மார்ஷல் சியாங்-கை-ஷேக்கின் தலையீட்டாலும் இச்சண்டை நிறுத்தப்பட்டு இருதரப்பிலும் நல்ல புத்தி தோன்றலாயிற்று. சீனர்களுக்கு விரோதமாக இயற்றப்பட்ட சட்டதிட்டங்கள் ரத்து செய்யப்படுமென சயாம் பிரதமர் வாக்களித்தார். இனி சீனர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சீன பாஷையை பிரதானபாஷையாக போதிக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டது. இரு நாடுகளும் பின்னர் ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ளன. ராஜ தந்திரிகளை பரிமாறிக்கொண்டுள்ளன. பழைய குரோதங்களை மறந்து உலகபோக்கை அனுசரித்து நேசமாக வாழ வேண்டுமென்று இரு நாடுகளின் தலைவர்களும் உணருகின்றனர். சயாமின் விளைபொருள்கள் சைனாவுக்குத் தேவை. சைனாவின் ஆதரவு சயாமுக்குத் தேவை.

5—9—47-ல் பிரிட்டிஷ் துருப்புகள் பாங்காக்கிலிறங்கினர். மற்ற ஏஷியா நாடுகளைப்பார்க்கிலும் சயாமில் ஜப்பானியரின் ஆயுதபரிகாரணம் சீக்கிரமாகவும் யாதொரு விபத்துமின்றி முடிந்தேரியது. சயாமியரின் மனமார்ந்த ஒத்துழைப்புதான் இதற்கு காரணமாகும். சிங்கப்பூர் வீழ்ச்சியுற்றதும் 15—2—42-ல் அங்கிருந்த பிரிட்டிஷ் தளகர்த்தர் சரணாகதிபத்திரமொன்றில் கையொப்பமிட்டார். இந்த வைபவத்தை படம்பிடித்து

ஜப்பானியர் காட்டாத ஊர் பாக்கியில்லை. பதிலுக்கு ஆங்கிலேயர்கள் சும்மா விட்டார்களா? ஒரு சரணாகதி பத்திரத்திற்கு பதிலாக, டஜன் கணக்கில் சரணாகதி வைபவங்களை நகரம் நகரமாக நடத்திவைத்தார்கள். சயாமிலிருந்த மொத்தம் 1,14,000 ஜப்பானியர்களில் ஒரு லட்சம் பேர் 1946 ஜூனுக்குள் ஜப்பானுக்கு திருப்பி அனுப்பபட்டனர்.

தாய்லண்ட் இனி அன்னிய பாஷைகளில் சயாமென அழைக்கப்படுமென்று 8-9-45ல் சர்க்கார் அறிக்கை ஒன்று வெளியாயிற்று. அன்னிய நாடுகளில் வெகு காலமாக சயாமென்று வழங்கி வந்ததால், பழைய பெயர் மறுபடியும் அனுசரிக்கப்படுமென நொண்டிச் சாக்கு கூறப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் நிபந்தனை தான் இதற்கு உண்மையான காரணம். சயாம் மொழியில் மட்டும் சயாமியர் தங்களை "தாய்" யென்றும் தங்கள் தேசத்தை "மூங்தாய்" யென்றும் இன்றும் அழைத்து வருகின்றனர். "தாய்" யென்றால் சுதந்திர மக்களென்று பொருள். ஷான் பிரதேசத்திலுள்ள "தாய்" இனத்தார் ஏதும் சுதந்திர கிளர்ச்சி செய்யக்கூடுமென்று ஆங்கிலேயர் பெயரை மாற்றிவிடச் சொன்னார்களாம். ஜப்பானுடன் சயாம் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகள் 11-9-45ல் ரத்து செய்யப்பட்டன.

16-8-45 சமாதான பிரகடனத்தைப் போல் மற்றொரு தமாஷாவும் சயாமில் நடைபெற்றது. அதுதான் யுத்த குற்றவாளிகளென்று பீபுல்சொங்ராம், ப்ரா சாரசட் முதலிய மாஜி மந்திரிகளின் விசாரணை. யுத்தம் முடிந்த பின்பு, நேசநாடுகளின் வற்புறுத்தலின் காரணமாக, "யுத்தகுற்றங்கள் சட்ட"மென்று ஒரு சட்டம் சயாமில் இயற்றப்பட்டு அதன்கீழ் பீபுல்சொங்ராம் வகையறா விசாரிக்கப்பட்டனர். வழக்கு ஆரம்பத்தில்

மிக தடபுடலாக நடைபெற்றது. யுத்தம் செய்த குற்றம் என்று சொல்லுகிறீர்களே, சயாம் ஜெயித்ததா தோல்வி யடைந்ததா?" என்ற கேள்விக்கு ஜெயிக்கவுமில்லை, தோற்கவுமில்லை யென்று சர்க்கார் தரப்பில் கோர்ட்டில் வாதாடப்பட்டது. மேற்சொன்ன சமாதான பிரகடனப் படி யுத்தமே செய்யவில்லை. முடிவில் சயாம் டிக்கா கோர்ட்டு மேற் சொன்ன சட்டம் செல்லத்தகாதென்று கூறி சர்க்கார் தொடுத்த வழக்கை தள்ளுபடி செய்தது. நேசநாட்டாரை திருப்தி செய்யவே பெயரளவில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டதென்று அன்னியர்களின் அபிப் பிராயமாகும்.

பிரிட்டன்-சயாம் ராசி உடன்படிக்கை 1-1-46ல் கையொப்பமிடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இந் திய சர்க்காரின் சார்பாக திரு. M. S. ஆனே கலந்துகொண் டார். சயாம் இந்தியாவுடன் ஏதும் யுத்த பிரகடனம் செய்யாதிருந்த நிலைமையில் ஏன் இந்தியா வலியில் சமா தான உடன்படிக்கையில் கலந்து கொண்டு கை யொப்பம் போட வேண்டுமென்றுதான் நமக்கு புரியவில்லை. இந்திய சுதந்திர சங்கத்தை சயாமியர் மனப்பூர்வமாக ஆதரித்து வந்தமையால், இந்தியரைக் கொண்டே சயா மியரை அவமானம் செய்ய வேண்டுமென்ற கருத்தா? இந்த உடன்படிக்கையைப் பற்றி இரண்டு விபரீதங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். (1) பிற வல்லரசுகளெல்லாம் கிரியாம்சையில் சயாமிலுள்ள தங்கள் பிரசை களின் நலன்களை பேணி வந்தன. ஆனால் வெற்றிக் கொடி நாட்டிய இந்தியாவுக்கு சயாமில் யாதொரு ராஜப்பிரதிநிதியும் (அக்காலத்தில்) இல்லை. இந்திய சிவில் நபர்களின் நலன்களும் பேணப்படவில்லை. (2) சமாதான வைபவமொன்று சயாமில் 1946 ஜனவரியில் மிக சிறப்பாக நடந்தது. எல்லா தேசக் கொடிகளையும்

உயர்த்தி கொண்டாடினார்கள். ஆனால் சமாதான ஒப்பந்தத்தில் தனி கையொப்பம் வைத்த இந்தியாவுக்கு மட்டும் கொடி எதுவுமில்லை. ஆகவே அதன் சார்பாக கொடியொன்றும் உயர்த்தப்படவில்லை.

ராஜி உடன்படிக்கையின் முக்கிய சாரம் வருமாறு:— (1) பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு விரோதமாக சயாமில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளெல்லாம் ரத்தாக வேண்டும். (2) யுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரஜைகளிடமிருந்து சர்க்கார் கைப்பற்றிக் கொண்டிருந்த சொத்தை வாபஸ் செய்ய வேண்டும்; சம்பளம் முதலியன யுத்த காலத்தில் கிடைக்காமல் அவர்கள் நஷ்டமடைந்துள்ளபடியால், நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும். (3) பிரிட்டனுக்கு திருப்பி கொடுத்த சமஸ்தானங்களில் சயாம் வெளியிட்டிருந்த நோட்டுகளை சயாம் சர்க்கார் பவுன் நாணயத்தில் மாற்றி கொடுக்க வேண்டும். (4) சயாம் பிரிட்டனுடைய சம்மதமின்றி கிரா பூசந்தியில் கால்வாய் எதுவும் வெட்டக் கூடாது. (5) சயாம் பிரிட்டனுக்கு இலவசமாக 15 லட்சம் டன் அரிசி ஒரு வருடத் தவணைக்குள் கொடுக்க வேண்டும். மற்ற ஷரத்துகளை விட இந்த கடைசி ஷரத்தான் சயாமை பெரிதும் பாதித்தது. விவசாயக் கருவிகள், துணி, ரெயில்வே தளவாடங்கள் முதலிய முக்கிய பொருள்களை இறக்குமதி செய்ய சயாமிடம் பொருள் வசதி இல்லை. சயாமில் விவசாயமும் போக்குவரத்து சாதனங்களும் சீரானால்தான் அரிசி அதிகம் ஏற்றுமதி செய்து அண்டை நாடுகளிலுள்ள பஞ்சத்தை ஓரளவாகிலும் தணிக்கலாம். ஆனால் சயாம் அரிசியை இனமாக பிரிட்டனுக்கு கொடுத்துவிட்டால் அதன் முக்கிய தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்து கொள்வது? மேலும் பிரஜைகளிடமிருந்து தேவைப் பொருள்களை

தொல்லைகளிக்காமல் அரிசியை மட்டும் அவர்களிடமிருந்து வாங்குவது மிகக் கடினமாயிற்று. இவைகளை பிரிட்டிஷார் காலத்தில் உணர்ந்து கொண்டு, இனம் சப்ளை ஷராவை மிக்க தயாளமாக விட்டுக் கொடுத்தனர். இந்த ஷரா ஏற்பட்டதின் மூலம் சயாமுக்கு 60 கோடி திக்கல்கள் மிச்சமாயின. அரிசி சப்ளை சம்பந்தமாக அமெரிக்கா, பிரிட்டன், சயாம், ஆக மூன்று நாடுகளும் புது உடன் படிக்கை ஒன்றை செய்து கொண்டன. அதன்படி, சயாம் 1947 மே-க்குள் 12 லட்சம் டன் அரிசி குறிப்பிட்ட விலைக்கு சப்ளை செய்ய வேண்டும்.

சயாம் புனர்நிர்மாண வேலைகளை சரிவர செய்து கொள்ளும் பொருட்டு அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் யுத்த காலத்தில் முடக்கப்பட்டிருந்த சயாம் ஆஸ்திகள் விடுவிக்கப்பட்டன. மேலும் அமெரிக்கா ஒரு கோடி டாலர் சயாமுக்கு கடன் கொடுத்தது. புது நாணய மாற்று விகித மொன்றும் சயாமுக்கு கொஞ்சம் சாதகமாக விதிக்கப்பட்டது. (1945-ல் ஆங்கிலேயர் சயாமில் இறங்கியவுடன் ராணுவ நாணய மாற்று விகிதம் 1-ரூபாயிக்கு 4½ திக்கல்; புது உடன்படிக்கைபடி 3 திக்கல்).

புது அரசியல் சட்ட மொன்றில் மாஜி மன்னர் ஆனந்தமஹிடோல் 10-5-46ல் கையொப்பமிட்டார். சயாமில் ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்கும் முயற்சியில் இப் புது சட்டம் மற்றுமொரு படியாகும். இச் சட்டத்தின் முக்கிய அமிசங்கள் வருமாறு:—

1932 அரசியல் சட்டத்தில் கீழ்சபை மேல்சபை யென்று இரண்டு சபைகளில்லாமல் ஒரே ஒரு சட்ட சபைதானிருந்தது, இராச குடும்பத்தினர்கள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாதென்ற தடைவிதியுமிருந்

தது (1) புது சட்டத்தில் கீழ்சபை மேல்சபை யென்று இரண்டு சபைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கீழ் சபைக்கு நேர்முகமான தேர்தல்; நியமன முறை ஒழிக்கப்பட்டது. மேல் சபைக்கு மறைமுகமான தேர்தல். எல்லா முக்கிய விஷயங்களைப்பற்றியும் இரு சபைகளும் ஒன்றுகூடிதான் தீர்மானிக்க வேண்டும். (2) இராச வமிசத்தினர் அரசியலில் இனி கலந்துகொள்ள லாமென அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (3) புது அரசியல்கட்சிகள் முதன் முதலாக அனுமதிக் கப்பட்டுள்ளன. சகஜீப் (சகஜீவன்), கான்ஸ்டிடுஷ னல் பிரண்ட், டெமோகிராட் என்று 3 கட்சிகள் தோன்றியுள்ளன. முதல் இரண்டு கட்சிகளும் ஒன்று கூடி மந்திரி சபையை அமைத்துள்ளன. அபய்வோங்சி தலைமையிலுள்ள டெமோகிராட் கட்சி எதிர் கட்சியாக யிருக்கிறது. ஆனால் கட்சி பிளவுகள் சயாமில் இன்னும் ஸ்பஷ்டமாக தோன்றவில்லை. பொது ஜனங்கள் கொள்கைகளுக்காக வோட் போடவில்லை; அபேக்ஷகர் களை உத்தேசித்தே வோட் போடுகின்றனர்.

சயாமில் முற்காலத்தில் கொலை, களவு, அடிதடி முதலியகுற்றங்கள் குறைவாகயிருந்தனவாம். ஆனால் நிலைமை இப்போது முற்றிலும் வேறு. நகரப் புரங் களில் ஜோபடியும் திருட்டும் சர்வசகசமாயிருக்கிறது. துப்பாக்கி சுழல் பீரங்கி முதலிய நவீன கருவி களுடன் வீடு புகுந்து கொள்ளையடிப்பது சகச மாகிவிட்டது. சர்க்கார் ஊழியர்களின் ஒழுக்கமும் சீர்குலைந்து விட்டது. கஜானா ஆபீசர்கள் லட்சக்கணக் கான திக்கல் நோட்டுகளை கஜானாவிலிருந்து திருடிக் கொண்டதாக ஆறுமாதங்களுக்குள் இரண்டு மூன்று முறை பத்திரிகையில் படித்தேன். கிராமங்களில் கால் நடை திருட்டும் அதிகம். சயாமின் மொத்த

ஜனத்தொகை 140 லட்சம்; ஆனால் சயாமில் 200 லட்சம் திருடர்கள் வசிக்கிறார்களென்று ஜப்பானிய தளகர்த்தரொருவர் ஒருசமயம் முறையிட்டார். அவ்வளவுக்கு ஜப்பானிய சாமான்கள் வழிப்பாதையிலும் ஸ்டோர்களிலும் களவு போயின.

இந்த யுத்தம் ஏற்பட்டதிலிருந்து சயாமில் பொது ஜன ஒழுக்கம் சீர்குலைந்துள்ள தென்பதில் சந்தேகமேயில்லை. சயாமிய சர்க்காரும் இதை நன்கறிவர்; சமீப காலமாக குற்றங்களை ஒடுக்க பெரு முயற்சி செய்து வருகின்றனர். ஆனால் விலைவாசி உயர்வு, தேவைப் பொருள்கள் வேண்டுமளவு கிடைக்காமை, வேலையில்லா திண்டாட்டம், சர்க்கார் ஊழியர்களின் ஊழல், இவையெல்லாம் சேர்ந்து இப் பிரச்சனையைசிக்கலாக்கி விட்டன. "யுத்தம் முடிந்து சமாதானம்மேற்பட்டதும், விலைவாசிகள் குறையுமென்றும் தேவைபொருள்கள் அதிகம் கிடைக்குமென்றும் எதிர் பார்த்தோம். ஆனால், நேர்மாறாக, விலைவாசிகள் மேலும் மேலும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. பொருள்களும் சரளமாக கிடைக்கவில்லை. எங்களுடைய சம்பளம் மூன்று பங்கு அதிகரித்துள்ளது; உணவுப்பொருள், மற்றமுக்கிய தேவைப் பொருள் இவைகளின் விலை வாசியோ 10 பங்கு அதிகரித்துள்ளது" என்று சயாம் உத்தியோகஸ்தர்கள் குறை கூறிவருகின்றனர்.

பிரிட்டிஷாரின் ஆக்ஞைபடி சயாம் இராணுவத்திலிருந்து பல்லாயிரம் சிப்பாய்கள் விலக்கப்பட்டனர் ஆனால் அவர்களுக்கு பொருளுதவியோ, புது வேலையோ கொடுக்கவில்லை. ஜப்பானியரிடமிருந்து திருடிய துப்பாக்கிகளும், சுழல் பீரங்கிகளும், மருந்தும் பெறக்கூடிய வசதியுமிருந்தது. விலக்கப்பட்ட சிப்பாய்கள் நகரப்

புரங்களிலேயே சுற்றித் திருட்டுக் கூட்டங்களிலே பெரும் பங்கெடுத்துக் கொண்டனர்.

சீனக்கலவரம், பிரிட்டிஷ் நிபந்தனைகள், பிரான்சுடன் எல்லைத் தகராறு முதலிய பல நெருக்கடிகள் யுத்தம் முடிந்தபின் சயாமில் மூண்டன. இவை போதாவென்று, 20 வயதுள்ள மன்னர் ஆனந்த மஹிடோலின் திடீர் மரணமும் பெரும்நெருக்கடியொன்றை மூட்டி விட்டது.

சுவிட்ஜர்லண்டில் சட்டம் பயின்று வந்த ஆனந்த மஹிடோல் 1945 இறுதியில் தயாகம் திரும்பினர். பாங்காக் முழுதும் திரண்டு அவரை குதூகலமாக வரவேர்த்தது. ஆனந்தா சொற்ப காலம்தான் பிரஜைகளுடன் நெருங்கிப் பழகினர். இருப்பினும் இந்த குறுகிய கால அளவில் தம் குணத்தாலும் நடைத்தையாலும் பிரஜைகளின் அழியா அன்பை அவர் பெற்று விட்டார். லாசேனுக்கு அவர் திரும்பிப் புறப்படுவதாக ஏற்பாடாகியிருந்தது. பயணத்திற்கு 2-தினங்களுக்கு முன்—அதாவது 9—6—45 காலையில்—மன்னர் ஆனந்தா ரிவால்வர் சூடால் திடீரெனக் காலமானர். அன்றிரவே சட்டசபை அவசரம் அவசரமாகக்கூடி ஆனந்தாவின் தம்பியான மைனர் பூமிபோல் அடுலேஜ் என்பவரை மன்னராக நியமித்தது.

தற்செயல், தற்கொலை, கொலையென மூன்றுவித அபிப்பிராயங்கள் அவர் மரணத்தை யொட்டி வெளியிடப்பட்டன. போலிஸ் அறிக்கை மற்ற இரண்டு அபிப்பிராயங்களையும் புறக்கணித்து விபத்து தற்செயலாக நடந்திருக்க வேண்டுமென்று கூறிற்று. ரிவால்வர்களை வைத்துக்கொண்டு இறந்த மன்னர் விளையாடுகிறவரென்றும் அவ்விதம் விளையாடிக்கொண்

டிக்ருக்கும் போது ஏதோ தற்செயலாக குண்டு பாய்ந்து அவரை கொன்றிருக்கவேண்டுமென்று போலீஸ் ஆரம்பத்தில் கயர்திரித்தனர். ஆனுல் பொது ஜனங்களும் பத்திரிகைகளிலும் இக்கூற்றை ஒப்புக்கொள்ளாமல் பாரபக்ஷமற்ற விசாரணை வேண்டுமென்று வற்புறுத்தி வந்தனர். இவ்வாறு வற்புறுத்தி வந்தவர்களில் முக்கியமானவர்கள் சட்டசபையில் எதிர் கட்சியாயிருந்த டொமொகிராட்கட்சியினர். புது தேர்தலில் இச்சம்பவத்தை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தீவிர முயற்சி செய்தார்கள்.

ஒருமாதம் வரையில் நிலைமை மிகவும் குழப்பமாகவேயிருந்தது. இது தக்க தருணமென்று பிரன்சுகாரர்கள் எல்லைத்தகராறு சம்பந்தமாக சயாமுக்குள் பிரவேசித்தனர். தென்சயாமில் மலாய்க்காரர்கள் வசித்து வரும் பகுதியை பிரிட்டிஷ் மலேயாவுடன் இணைத்துவிட வேண்டுமென்று சிங்கப்பூரில் பிரசுரமாகும் பிரபல பிரிட்டிஷ் பத்திரிகை யொன்றும் இதுசமயம் பிரசாரம் செய்யலாயிற்று. இந்நெருக்கடியையும் சயாம் வெற்றிகரமாக சமாளித்துக் கொண்டதெனில் அவர்களுடைய தேசபப்பற்றுதான் முக்கியகாரணமாகும். உள் நாட்டு கொள்கையை பற்றி தீவிர அபிப்பிராய பேதங்களிருப்பினும் சர்க்காரும் எதிர் கட்சியினரும் அன்னிய நாட்டுக் கொள்கை பொறுத்தமட்டில் ஒன்று பட்டனர். அரசர் மரணத்தைப் பற்றி விசாரித்து முடிவுகூற ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. தாம் பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்தால் தேசத்தில் எதிர்ப்பு கொஞ்சம் தணியுமென்று உணர்ந்து ப்ரதிபனம்யோங் ராஜிநாமா செய்தார். அவருடைய மந்திரி சபையில் நிதி இலாகா மந்திரியாயிருந்தவர் பிரதமராஞர். யுத்தம் முடிந்தபின் சயாமில் ஏற்பட்ட 6வது மந்திரி சபை இப்புது சபை.

சயாமுக்கும் இந்து சீனத்திற்கு முள்ள எல்லைத் தகராறு சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளப்பட்டதாக சமீபச் செய்தி யொன்று அறிவித்துள்ளது. 1941ல் விஷி சர்க்கார் தனக்கு விட்டுக் கொடுத்த பிரதேசங்களை (சுமார் 15,000 சதுர மைல்கள் கொண்டது) சயாம் மறுபடியும் பிரான்சுக்கு வாபஸ் செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தை பிரான்சுக்கு விட்டு கொடுக்க சயாமுக்கு கொஞ்சமும் மனமில்லை. சர்வதேச மத்தியஸ்திற்கு விட்டு விடுவோ மென்றும் அல்லது சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் வாழும் பிரஜைகளின் முடிவிற்கு விட்டு விடுவோ மென்றும் எவ்வளவோ வாதாடி பார்த்தார்கள். ஆனல் அவர்களுடைய பேச்சுக்கு ஆதரவில்லை. ஒன்றும் பேசாமல் கப் சிப்பென்று வாபஸ் செய்தால் தான் சயாம் ஐக்கிய நாடுகளில் ஒன்ருக சேர்ந்து கொள்ள முடியுமென்று பிரான்ஸ் சயாமுக்கு திட்டமாக அறிவித்து விட்டது. ஐ.நாவில் பிரான்சுக்கு நிராகரிப்பு உரிமையிருப்பதால் சயாம் ஐ. நாவின்சபையில் சேராதபடி தடுத்து விடலாம். நிற்க, அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் மேற்சொன்ன பிரதேசத்தை திருப்பி கொடுத்துவிடும்படி சயாமுக்கு ஆலோசனை கூறி வந்தமையால் சயாம் அவர்களுடைய நோக்கத்திற்கு இசைய வேண்டியிருந்தது. பிரான்சு எல்லைத் தகராறு நீங்கிய பின்னர் சயாமுக்குஇனி அன்னிய நாட்டு சிக்கல்கமௗதுவுமில்லை. அது கூடிய சீக்கிரம் ஐக்கிய நாடுகளில் ஒன்ருக சேர்த்துக் கொள்ளப்படு மென்று எதிர்பார்க்கிரேும்.

மன்னர் மரணத்தைப்பற்றி விசாரித்து வந்த கமிஷன், டாக்டர்களின் ரிபோர்டை அனுசரித்து, அரசர் தற்செயலாக சாகவில்லை யென்றும், தற்

கொலையா கொலையா என்பதை முடிவு செய்ய போதிய சாட்சியமில்லை யென்றும் கூறி விட்டனர். புனர் விசாரணை செய்ய மறு கமிஷன் ஒன்று நியமிப்பதாக இப்போது அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது சயாமில் முக்கிய உள்நாட்டு பிரச்னை பொருளாதாரப் பிரச்னையே. சக்காரின் வரவு செலவு திட்டத்தை சீர் செய்தல், நாணயத்தின் மதிப்பை ஸ்திர படுத்தல், போக்கு வரத்து சாதனங்களையும் வேளாண் மையும் அபிவிருத்தி செய்தல், பவர் உற்பத்தி, இரும்பு, எஃகு முதலிய உலோகங்களை உற்பத்தி செய்யும் சாலை களை அமைத்து தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி செய்தல் இவை அவசியம் கையாள வேண்டிய திட்டங் களாகும். உடைந்துபோன பாலங்களை செப்பனிடக் கூட கைவசம் சாமான்களில்லாமல் அன்னிய நாடுகளை எதிர்பார்க்கும் நிலைமையில் சயாம் இருந்து வருகிறது. ஆனல் நாம் வசிப்பதோ மிஷின் நாகரிக உலகம். ஆகவே துணிகரமான பொருளாதாரத் திட்டமொன்றை சயாம் கையாண்டால்தான், சயாமியரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளலாம்; சயாமின் இயற்கை வளத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்,

அத்தியாயம் 21

ஜப்பானியர் சரணாகதி யடையும் போது இந்து சீனத்தில் அரசியல் நிலைமை மிகவும் குழப்பமாக யிருந்ததென 2,10 அத்தியாயங்களில் குறிப்பிட்டேன். ஆங்குள்ள 2 கோடி 20 லட்சம் சுதேசிகள்-முக்கியமாக அன்னுமியர்கள் — சுதந்திரமடைய வேண்டுமென்று விரும்பினர். பிரஞ்சுக்காரர்களோ, தங்கள் ஏகாதிபத்திய ஆட்சியை மீண்டும் அவர்கள் மீது சுமத்த வேண்டுமென்று தீர்மானித்தனர்.

இந்து சீனத்தில் 16வது வட குருக்கைக்கு வடக்கில் சீனர்களும், அதற்கு தெற்கில் ஆங்கிலேயர்களும் ஜப்பானியரிடமிருந்து சரணாகதி ஒப்புக்கொள்ளுவதென நேசநாட்டார் முடிவு செய்தனர். அதாவது தொங்கின், தூரானிலிருந்து அன்னுமின் வட பாகம், லவோஸ் இப்பகுதிகளில் சீனர்களும், கொச்சின்சைனுவிலும் கம்போஜியாவிலும் ஆங்கிலேயர்களும் ஜப்பானியரை ஆயுத பரிகரணம் செய்வதென முடிவாயிற்று. 1945 செப்டம்பரில் சீனர்களும் ஆங்கிலேயர்களும் தத்தம் பகுதிகளில் படைகளை யிறக்கிக் கொண்டனர்.

பிரஞ்சு-சுதேசி சண்டையில் சீனர்கள் அதிகார பூர்வமாக நடுநிலை வகித்தாலும், மறைமுகமாக சுதேசிகளை ஆதரித்து வந்தனர். அதற்கு காரணமுண்டு. சீனர்களுக்கும் அன்னுமியர்களுக்குமிடையே மத, கலாசார தொடர்புகளிருக்கின்றன. அன்னுமியர்கள் சீனர்களை சித்தப்ப னென்று அழைப்பார்கள். நிற்க அன்னும் தேசம் தங்களுடைய சிற்றரசென சீனர்கள் வெகுகாலம் வரையில் பாவித்து வந்தார்கள்;

சென்ற நூற்றுண்டில் பிரான்ஸ் சைனுவை மான பங்கம் செய்ததும் சீனர்களின் ஞாபகத்தில் இருக்கக் கூடியதுதான். மேலும் இந்த யுத்தத்தில் பிரஞ்சுகாரர் கள் கொஞ்சமும் போரிடாமல் ஜப்பானியருக்கு இந்து சீனத்தில் வழியளித்ததும் சீனர்களுக்கு மிகக் கடுப்பா யிருந்தது.

கந்தலைக்கட்டிக்கொண்டு பசியோடு சீன துருப்பு கள் இந்துசீனத்தில் இறங்கினர். மிகவும் மதிப்புகுறை வான சீன நோட்டுகளை கொடுத்து அகப்பட்ட துணி மணியையும் சாமான்களையும் வாங்கிசுருட்டிக் கொள்ளு வதில்தான் சீனர்கள் முழுகவனத்தையும் செலுத்தி வந்தனர்.

தென் இந்துசீனத்தில் ஆங்கிலேயர் படை யிறக் கியதும் பிரஞ்சுகாரர் தாமதமின்றி தலை தூக்கினர். ஆபத்து வேளையில் ஏகாதிபத்தியங்கள் ஒன்றுக் கொன்று உதவி செய்துகொள்ளுகின்றன. அடிமை மக்களிடமுள்ள ஐக்கியத்தைவிட ஏகாதிபத்தியங்களின் ஐக்கியம் உறுதியானது. ஆகவே, இந்துசீனத்தில் பிரஞ்சு ஆட்சி மீண்டும் தோன்றி வலிமைபெற, பிரட் டன் தன்னுல் இயன்ற உதவி செய்தது. நிராயுதபாணி களாக யிருந்த பிரஞ்சுகாரர்கள் ஆங்கிலேயர் இறங்கி யதும் எப்படியோ ஆயுதங்களை சேகரித்துக் கொண்டு 24-9-45ல் செய்கோனை திடீரென கைப்பற்றிக்கொண் டனர்; பிரான்சிலிருந்து பிரஞ்சு படைகளும் பின்னர் தொடர்ச்சியாக செய்கோனி லிறங்கினர், கொச்சின் சைனுவை தாங்கள் திரும்பி கைப்பற்றிக் கொள்வதற்கு பிரஞ்சுகாரர்கள் செய்யாத அட்டூழியம் பாக்கியில்லை. பிரஞ்சு அட்டூழியங்களையும் மிருகத் தன்மையும் கண் டித்துநேச யுத்த நிருபர்களில் சிலர் கொஞ்சம் செய்தி களை வெளி யிட்டுள்ளார்கள். அன்னுமியரும் பதிலுக்கு

படுகொலை செய்தனர். இந்த ரத்த களறியில் நம் இந்திய சகோதரர்கள் சுமார் 50 நபர்கள் கொச்சின் சைனுவின் உள் நாட்டு பகுதிகளில் அன்னமியரால் கொல்லப் பட்டனர். பிரஞ்சு ஆட்சியை மீண்டும் ஸ்தாபிக்க பிரிட்டிஷ் இந்திய படைகள் உதவுகின்றன வென்ற ஆத்திரமும், தங்கள் கைவசம் சிக்கிக்கொண்ட இந்தியர்கள் உயிருடன் தப்பி விட்டால் பிரஞ்சுகாரர் களுக்கு உளவு சொல்லுவார்களென்ற அச்சமும் தான் இப்படுகொலைக்கு காரணங்களாகும். சுதந்திர இந்திய சங்கச் சின்னங்களை வைத்துக் கொண்டிருந்த இந்தியர் கள் அன்னமியரால் பாதுகாக்கப்பட்டது இச்சந்தர்ப்பத் தில் குறிப்பிடத் தக்கதாகும்.

கொச்சின் சைனுவிலிருந்த குழப்பமான நிலைமையை குறித்து ஒரு நண்பர் பின் வருமாறு தம் கடிதத்தில் வரைந்துள்ளார்:—“24-9-45ல் செய்கோன் வீழ்ச்சிக்கு பின்னர் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த தேசாவேசம் பொங்கி எழுந்தது. கோர யுத்த தளவாடங்களின் கர்ச்சனையுடன் காதைத் துளைக்கும் பிரலாபங்களும் கலந்தன. ரத்த வெள்ளம் ஓடியது. தேச துரோகி களின் சடலங்கள் ஆறுகளில் மிதந்தன. தேச பக்தர் கள் பீரங்கி வாயில் நின்று தண்டனை யேற்றனர். பெரும் தலைகள் மறைந்தன. கூன், குருடு, பெண்டு பிள்ளைகள் உள்பட சுதேசிகள் அனைவரும் நகரங்களை சுத்தமாக துடைத்துவிட்டு காலி செய்தனர். எதிரிகளுக் காகாவண்ணம் சகல சாதனங்களும் அழிக்கப்பட்டன. பாதைகளும் பாலங்களும் அழிக்கப்பட்டன. தீக்கிரை யான கட்டிடங்கள் பல. நகரங்களும் கிராமங்களும் ஒன்றின்பின் ஒன்ருக வீழ்ச்சி யுற்றன. ஆனல் புரட்சி வெள்ளம் தேசமுழுவதும் பரவி யிருந்ததால் அதன் வேகம் தணிந்து விட்டதாக கூறுவதற்கில்லை. நிற்க

வெற்றி வாகை சூடிப் புகுந்த சைனியங்களின் அட்டூழியங்கள் கூறத்தரமன்று. பகற்கொள்ளை, சூறையாடல், பஞ்சமக்களின் குடிசைகளில், தீ மூட்டல், அனுதைகளை இம்சித்தல், கற்பழித்தல் போன்ற குற்றங்களுக்கு அளவு கிடையா......'' கொச்சின் சைனுவில் பிரன்சு ஆட்சி இப்போது பரிபூரணமாக ஸ்தாபிக்கப்பட்டாலும் அன்னுமியர்களில் பெரும்பான்மையோர் அவர்களுடன் ஒத்துழைக்கவில்லை யென்று தகவல் கிடைத்துள்ளது. கொச்சின் சைனுவில் இந்திய மூலதனம் சுமார் 7 கோடி பியாஸ்தர்கள் முடக்கப்பட்டுள்ளதாக யுத்தத்திற்கு முன் மதிக்கப்பட்டது.

கம்போஜியாவை பிரஞ்சுகாரர்கள் எளிதில்கைப் பற்றிக் கொண்டனர். ஆங்கு சுதந்திர உணர்ச்சி மிகக் குறைவென முன் அத்தியாய மொன்றில் குறிப்பிட்டுள்ளேன். தொங்கினேயும் அன்னுமையும் கைப் பற்றிக் கொள்வதற்காக முதலில் சீனர்களுடன் 1946 பிப்ரவரி இறுதியில் அவர்கள் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டனர். சைனுவில் அனுபவித்து வந்த விசேஷ உரிமைகளை யெல்லாம் பிரான்ஸ் விட்டுக் கொடுத்ததுமன்றி, யுன்னுன் ரெயில்வேயில் சீன தேசத்திலிருக்கும் பாகத்தை சைனுவிற்கு விற்றது. பதிலுக்கு சீனர்கள், இந்துசீனத்தில் தாங்கள் காலி செய்யுமிடங்களை யெல்லாம் பிரஞ்சுகாரர்கள் உடனடியாக பிடித்துக் கொள்ளலாமென்று சம்மதித்தனர்.

இருப்பினும் வட இந்துசீனத்தை ஆக்கிரமித்து பிடித்துக் கொள்ளுவது எளிதல்லவென்று பிரஞ்சுகாரர்கள் உணர்ந்தனர். எதிர்பாராதளவு எதிர்ப்பையும் வெறுப்பையும் கொச்சின் சைனுவில் கண்டனர். வட இந்துசீனத்தில் ஹோ-சி-மின் என்பவர் தலைமையில் ஒரு சுதேசி சர்க்கார் அமைக்கப்பட்

டிருந்தது. வியட்நம் சர்க்காரென்று அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோமே அதுதான் இந்த சுதேசி சர்க்கார். வியட்நம் என்றால் அன்னமியரின் தேசமென்று பொருள். அன்னமியர்களும் அச்சர்க்காருக்கு பரிபூரண ஆதரவளித்து வந்தனர். அதன் வசம் ஒரு தேசியபடையுமிருந்தது. நிற்க, ஹனோய் பட்டினத்தில் சுமார் 20,000 பிரஞ்சு சிவில் நபர்கள் வசித்து வந்தனர். தாங்கள் ஏதும் முறட்டு நடவடிக்கைகளை கையாண்டால் இந்த சிவில் நபர்களின் கதியென்னவாகுமோவென பிரஞ்சுக்காரர்கள் பயந்தனர். ஆகவே அவர்கள் ஹோ-சி-மின் சர்க்காருடன் சமரசபேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தனர். பின்னவர்களும் தங்களுக்கு கிரியாம்சையில் சர்வதேச ஆதரவில்லை யென்றும், தாங்கள் தனியே பிரஞ்சுக்காரர்களை எதிர்த்து ஜெயிக்க முடியாதென்றும் உன்னி சமரசத்திற்கு ஒப்புக்கொண்டனர். இரு சாரரும் 6-3-46ல் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டனர்:

வியட்நம் குடியரசை ஒரு சுதந்திர சர்க்காராக பிரஞ்சுகாரர்கள் அந்த உடன்படிக்கை மூலம் ஏற்றுக் கொண்டது அன்னமியர்களுக்கு ஒரு மகத்தான வெற்றி யென்று சொல்லலாம். நடைமுறையிலும் அதுதான் உண்மையான நிலைமை; வியட்நம் குடியரசுதான் அரசாங்க அதிகாரங்களை யெல்லாம் வட இந்துசீனத்தில் செலுத்தி வந்தது.

6-3-46 உடன்படிக்கைபடி பிரஞ்சு துருப்புகள் சமாதானமாக தொங்கினில் பிரவேசித்தன. ஆனால் மனஸ்தாபங்கள் அனைத்தும் பூரணமாக அகற்றப்படவில்லை. கொச்சின் சைனு வியட்நம் குடியரசுக்குள் சேரவில்லை யென்று பிரஞ்சுகாரர்கள் சாதித்துவந்தனர். பொம்மை சர்க்காரொன்றையும் ஆங்கு அமைத்

தனர். இந்துசீன சமஷ்டியில் தனி உறுப்பாக வாழ விரும்புவதாக இப்பொம்மை சர்க்கார் அறிவித்தது. கொச்சின்சைனு வியட்நம் குடியரசில் சேர்ந்த உறுப்புத்தானென்று பதிலுக்கு வாதாடினர் வியட்நம் சர்க்கார்.

இச் சர்ச்சை அற்பமானதல்ல. கொச்சின்சைனு இந்துசீனத்தில் மிகவும் வளப்பான பகுதி. தொங்கினுக்கும் அன்னுமுக்கும் அன்னிய நாடுகளுக்கும் அரிசி சப்ளை செய்யும் பகுதி. ரப்பர் விளையும் பூமி. முதல்தரமான துறைமுகத்தை கொண்ட பிரதேசம். பிரஞ்சு மூலதனம் அதிகம் முடக்கப்பட்ட பிரதேசம். அதை அன்னுமியர்களுக்கு விட்டுக்கொடுக்க பிரஞ்சுகாரர்கள் சம்மதிக்கவில்லை.

அன்னுமியர்களுக்கும் பிரஞ்சுகாரர்களுக்கும் பரிபூரண சமரசமேற்பட்டு விட்டால் இந்துசீன சமஷ்டி திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிடும். பிரஞ்சுஏகாதிபத்திய ஆசை அதற்கு பெரும் இடையூறாக யிருக்கிறது. அன்னுமியர்கள் பிரஞ்சு ஆட்சியைத்தான் வெறுக்கின்றனர். பிரஞ்சு கலாசாரத்திலும். நாகரீகத்திலும் அவர்களுக்கு மிக்க மோகம் உண்டு நாட்டில் அமைதி ஏற்பட்டு சுதேசிகளின் அபிமானத்தை பெற்றுல்தான் பிரஞ்சு வியாபாரம் இந்துசீனத்தில் ஓங்கும். தற்போதுள்ள குழப்பமான நிலைமையால் யாருக்கும் சாதகமில்லை. ஆகவே எல்லா வகுப்பினருக்கும் நியாயம் கிடைக்கும் முறையில் சமஷ்டி திட்டமொன்று இந்துசீனத்தில் சீக்கிரம் தோன்ற வேண்டும்.

முடிவு.

நூல்களின் ஜாபிதா,

இந்துசீனத்தையும் சயாமையும் பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்பும் வாசகர்கள் அடியில் கண்டுள்ள நூல்களைப் படிக்கலாம். இச் சிறு நூலை யெழுதுவதற்கு நான் அவைகளைப் படித்து உபயோகித்துக் கொண்டேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சென்னையில் உள்ள பெரும் புத்தகசாலைகளிலும் கூட இந்த ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள சிற்சில நூல்களே கிடைக்கின்றன.

ANDREWS, J. M.—Siam, Second eco omic survey, Bangkok, The Bangkok Times Press, Ltd., 1935.

AYMONIER—Le Cambodge, Paris, 1900-1904, 3 Vols.

BELL, H.—Foreign colonial administration in the Far East, London, 1928.

BOSE, P. N.—The Indian colony of Siam, Lahore, 1927.

BOWRING, J.—The Kingdom and people of Siam, London 1857. (2 vols.)

CAMILLE, N.—The chronicle of the Emerald Buddha, Bangkok, 1933.

CHATTERJI, B. R.—Indian influences in Cambodia, Calcutta 1928.

COEDES, G.—Histoire des Etates Hindouiscs d' Extreme Orient, Hanoi, 1944.

CROSBY, J.—Siam at the crossroads, London, 1945.

CULTRU, P.—Histoire de la Cochinchine Française Paris, 1910.

DIGUET, E.—Les Annamites, Paris, 1906.

DOUMER, P.—L' Indochine Francaise, Paris, 1900.

FLEESON, K. N.—Laos Folk-lore of Farther India, New York, 1899.

FRANCK, H. A.—East of Siam, New York, The Century Co., 1926.

GRAHAM, W. A.—Siam 2 vols., London, 1924.

HISTOIRE SOMMAIRE DUROYAUME DE CAMBODGE'

How Thailand lost her territories to France, a brochure issued by fhe Siamese Government in 1940.

KORNERUP, E.—Friendly Siam, London, 1929.

KRINAMURTHI, D.—Indochina (in Tamil), Madras, 1946.

LANDON, K. P.—Thailand in Transition, Chicago, 1939.

LECLERE—Le Buddisme au Cambodge, 1899 ; Histoire du Cambodge, 1914.

LE MAY, R. S.—An Asian arcady ;

Siamese Tales old & new, London, 1930 ; Siamese art.

LOUBERE—De la Description du Royaume du Siam, Paris, 1688.

MAJUMDAR, R. C.—Ancient Indian colonies in the Far East, vol. 1 Champa, Lahore, 1927 ; Kambuja Desa, Madras.

ARMCEL—Guide archeologique aux temples d' Angkor.

MORSE & MACNAIR—Far Eastern International relations.

NAG, K.—India and the Pacific world, Calcutta, 1941.

PHAM QUYNH—L' evolution intellectuelle et morale des Annamites, Paris, 1922.

SIAM—Physical and natural features, 1926.

TCHEOU-TO-KOAN—Memoires sur les coutumes du Cambodge. Translated by P. Pelliot, Bulletin D' Ecole Francaise D' Extreme Orient, Vol. II, 1902, pp. 141-147,

THE DIRECTORY FOR BANGKOK AND SIAM (or THAILAND)—The Bangkok Times Press, Ltd., 1931-1941.

THOMPSON, Virginia:—French Indochina, London, 1937.

TURPIN, M.—History of the Kingdom of Siam, Bangkok, 1908.

VIGNON—Programme de politique coloniale.

VIOLLIS, A.—L' Indochine S. O. S. Paris, 1935.

WALES, H. G. Q.—Siamese state ceremonies, London, 1931.

WOOD, W. A. R.—A History of Siam, Bangkok, 1933.

WELLS, K. E.—Thai Buddhism, The Bangkok Times Press, Ltd., 1939.

ZIMMERMAN, C. C.—Siam Rural economic survey (1930-31). The Bangkok Times Press, Ltd., 1931.

Oriental Printing Works, Madras. Q.H. No. MS. 511,
For Tamil Nad Publication Q.H. No. MS. 39.

		விலை		
		ரூ.	அ.	பை.
1.	வீ. ஓ. சி. கண்டபாரதி—கவிப் புதுமை காட்டிய தமிழனைக் குறித்துக் கப்பலோட்டிய தமிழன் எழுதியது ...	0	12	0
2.	மஹாதேவ தேசாய்—புகழ்மாலை (வார்தா ஹிந்தி வெளியீட்டின் தமிழ் மொழி பெயர்ப்பு) ...	1	8	0
3.	தேச ஜோதி (சரித்திரக் கதைகள்) ...	1	8	0
4.	இன்பத்துளி (சிறு கதைத் தொகுதி) ...	1	8	0
5.	கைலாஸம்—மானஸரோவர் (யாத்திரைப் புத்தகம்)	1	8	0
6.	ஸ்வர்ண லதா (பிரசித்தமான வங்காளி நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு) ...	4	0	0
7.	சித்திரமும் சொற்சித்திரமும் (83 படங்களுடன்)	5	0	0
8	(Pictures and Pen-pictures (83 pictures)	5	0	0
9.	Research in languages	1	0	0
10.	சுதந்திரமா, பாகிஸ்தானா?	1	8	0
11.	ஸெலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம்	1	8	0
12.	புரட்சி செய்த பேனா வீரன்	3	0	0
13.	நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ...	4	0	0
14.	பாப்பாவின் காந்தி (காந்திஜியின் சரித்திரம்)	0	12	0
15.	Just a Peep into the Muslim Mind! ...	3	0	0
16.	Freedom or Pakistan?	1	8	0
17.	முத்தையா பாகவதர்	0	12	0
18.	கதர் மலர்	0	12	0
19.	யுத்தகால சீனமும் சயாமும்	3	0	0